# வாழும் போது வாழ்த்தும் மலர்





## பன்முக வியாபகன்

## திரு.கார்த்திகேசு நாகலிங்கம் (அதிபர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து..

உருத்திரபுரமே உயர்வுடன் வாழ
உழைத்த பெருந்தகை வாழியவே!
கருத்துடன் வாழ்ந்து கண்ணியமாக
வாழ்வித்தவரே வாழியவே!
மருதநிலத்தெழு மாமணிவிருதை
மனமார்ந்தளித்தோம் வாழியவே!
விருதுடன் பன்முக வியாபகன் என்னும்
பட்டமளித்தோம் வாழியவே!
பெருமைகள் சேர்ந்து வருடங்கள் நூறு
பேறுகள் பெற்று வாழியவே!
குருவென இந்த குவலயம் வாழ
பெரும்பணி செய்தவா வாழியவே!

அருமையாய் வாய்த்த அன்பிணை மனையாள்
தவமாய் பெற்றவர் வாழியவே!
பெருவரமாக பெற்ற நற்பிள்ளைகள்
பேறுகள் பெற்றீர் வாழியவே!
விருப்புடன் உருத்திரபுரமே வாழ்த்தும்
சரித்திரம் படைத்தீர் வாழியவே!
தரும் எம் அன்பு 'பா'மலர் தூவினோம்
தழைத்து நல்குடும்பம் வாழியவே!
மருத நிலத்தெழு மாமணியே எம்
பன்முக வியாபகன் வாழியவே!

– கவிஞர் கலா கணேசன் –

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்முக வியாபகன்

கார்த்திகேசு நாகலிங்கம் அதிபர்

# வாழும் போது வாழ்த்தும் மலர்

உருத்திரபுரம் -2015

## மலர்க்குழு

1. திரு. நீ.குலேந்திரதாசன்
2. திரு.க. பவானந்தன்
3. திரு.மா.பேரம்பலம்
4. திரு.க. கணேசலிங்கம்
5. திருமதி.சூ.இராசேந்திரம்
6. திரு.ம. மோகனப்பிரியன்
7. திருமதி. மீ. இதயசிவதாஸ்
8. திரு.A.சிம்சன்போல்

## விழாக்குழு

1. திரு.நீ. குலேந்திரதாசன்
2. திரு. க.பவானந்தன்
3. திரு.மா.பேரம்பலம்
4. திரு.இ.பத்மகுமார்
5. திரு.க. பிரபாகரன்
6. திரு.ஸ்ரீ.பிரதீஸ்
7. திருமதி. மீ.குகநாதன்
8. திருமதி. வி.குலஞானசுந்தரம்
9. திருமதி. பி.ஷாமினி

மலர் வெளியீடு :

உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகமும்,

உருத்திபுரம் மக்களும்.

பதிப்பு: யூலை 2015

அச்சுப்பதிப்பு : வேழன் பதிப்பகம், கிளிநொச்சி. 021 228 5579

கணணி வடிவமைப்பு : திருமதி விஜிதா ரமேஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பும் ஆசியும் கிடைப்பதாக
## ஆசிச்செய்தி





Thavathiru
Vadivel Swamy



Srimath Ganeshanantha
Mahadeva Swamy

**மகாதேவ ஆச்சிரமம்**
**MAHADEVA ASHRAMAM**

திருவாளர் கார்த்திகேசு நாகலிங்கம் அவர்கள் ஓய்வுபெற்ற அதிபர், இவர் ஒரு மகாமனிதர் அன்னார் மக்களின் துயர் துடைப்பதிலும் , சமூகசேவையிலும் , அரசசேவையிலும் , சமய சேவையிலும் இன்னல் பட்டவர்களுக்கு நன்னெறி காட்டுவதிலும் சிவனடியார்களைப் போற்றி பணி செய்வதிலும் அன்னாரின் சேவை சொல்லில் அடங்காது. தன் பிள்ளைகளையும் சான்றோன் ஆக்கிய பெருமைக்குரிய உத்தமன் ஏழைகளிடத்தில் இறைவனைக்கண்ட மகான்.

அடியேனுடன் இணைந்து உருத்திரபுரம் சிவாலயத்தை திருத்தி அமைத்து முன்னேற்றுவதற்கு தன் சக்திக்கு அப்பாற்பட்டு ஒத்துழைத்த பெருமைக்குரியவர். அப்புஜீ (கதிரவேலு ஐயா) சிவபதமடைந்த பின்னர் எம்முடன் இணைந்து செயற்பட்டு ஆச்சிரமம், குருகுலம் இரண்டிற்கும் அவற்றின் வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். குருகுலத்தின் தலைவராகவும் , அதனை முற்றுமுழுதாக நிர்வகிக்கும் நிர்வாகி ஆகவும் இருந்தார். மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் உருத்திரபுரத்தின் ஆரம்ப காலத்தலைவராகவும் , தொடர்ந்து ஏனைய பதவிகளிலும் இருந்து அதன் வளர்ச்சியில் அதீத கவனம் செலுத்தி வளர்த்த உத்தமர் ஐயப்பாடின்றி "மாமனிதன்"என்று அழைக்கப்பட வேண்டிய சேவையாளர். இவரையும் இவரின் குடும்பத்தாரையும் போற்றி புகழ்ந்து வணங்கி நிறைவு செய்கின்றேன்.

இறைபணியில்

**-கணேசானந்த மகாதேவா சுவாமிகள்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



உருத்திரபுரம் எனும் கிராமத்தில் சமூகத்தின் சிறந்த தூணாகவும் , குடும்பத்திற்கு ஒரு குத்துவிளக்காகவும் , வாழ்வியலுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்ந்துகொண்டிருப்பவர் எங்கள் பெருமைக்குரிய தந்தை - கார்த்திகேசு நாகலிங்கம் அவர்கள்.

இவரை நாங்கள் ஓர் அந்தணன் என்று வர்ணிக்கலாம். எமது சமூகத்தில் கற்போருக்கு ஓர் இல்லிடமாக இன்று விருட்சமாக வளர்ந்திருப்பது 7ம் வாய்க்காலில் உள்ள இந்துக்கல்லூரி. அன்று அது ஒரு சிறிய பாடசாலை. இன்று அது கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப்பெரும் சொத்து. இப்பாடசாலைக்கு முதல் அதிபராக இருந்து பாடசாலையை நிர்வகித்து அதனை உருவாக்கி வளர்த்த பெருமை எங்கள் அன்புக்குரிய தந்தையையே சாரும். அவரால் உருவான வாழ்வியர் கட்டடங்கள் அவரை நெஞ்சார நினைக்கின்றன.

இவரது வாழ்வு சமூகத்திற்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் நன்மக்களைப் பெற்று , நலமோடு அவர்கள் வாழ ஊட்டம் கொடுத்து வளர்த்தது மட்டுமல்ல இன்று அவர்கள் தங்கள் தந்தையை சந்தோச உணர்விலே நினைக்க வழிகாட்டிய ஒரு பாசத்தந்தை.

கனடாவில் தன் குடும்பத்தோடும் , பிள்ளைகளோடும் வாழ்ந்தாலும் தம் சொந்த மண்ணில் வாழவேண்டும் என்ற நாட்டுப் பற்றுடன் மீண்டும் இந்த ஊரில் தம் முதிர்ந்த வயதில் வாழ்ந்து கொண்டிருப்பது எம் அனைவருக்கும் ஓர் உயர்ந்த எடுத்துக்காட்டு .

தன்பிள்ளைகளின் பாசம் மலர அவர்களின் அன்பில் என்றும் மகிழ எல்லாம் வல்ல இறைவனின் ஆசீர் தந்தையின் வாழ்வில் நிலைக்க எனது உயர்வான ஆசியினைக் கூறி நிற்கின்றேன்.

**ம. அன்ரன் அமலதாஸ்**
(பங்குத்தந்தை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுந்தீவு மண் ஈன்ற கனவான்



**கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் செயலகம்**
வடக்கு மாகாணம், 124, ஆதியபாதம் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

OFFICE OF THE MINISTER OF EDUCATION, CULTURAL AFFAIRS, SPORTS & YOUTH AFFAIRS
Northern Province, 124, Adiyapatham Road, Kalviyankadu, Jaffna.

எனது இல / My No. } வமா / அஅ / கடவிஇ / வா    உமது இல / Your No }    திகதி / Date } 2015.06.17

இவ்வுலகில் தாய் தந்தையின் அரவணைப்பிலிருந்து முதன் முதலில் குழந்தை வேற்று இடத்தில் தடம் பதிக்கின்றான். குழந்தையின் எதிர்பார்ப்புக்களை புரிந்து சமுதாயத்திற்கு சிறந்த வெளியீடாக அவனை மாற்றி வழங்கும் ஆசிரியர்களின் பங்கு மகத்தானது. மூன்று தசாப்தங்களுக்கு மேலாக கிளிநொச்சி மண்ணிற்கு கல்விச் சேவையாற்றி கிளி பட்டணத்து வாழ் மக்களின் மனங்களில் தடம்பதித்த நெடுந்தீவு மண் ஈன்ற கனவான் திருவாளர் .கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களின் சேவையினைப் பாராட்டும் நிகழ்வின் போது வெளியிடப்படும் " வாழும் போதே வாழ்த்துகிறோம்" மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

1950 களில் ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளியேறி இரு வருடங்கள் சமூகசேவைதனைப் புரிந்து 1952ல் சைவ சமயத்தை தழைக்கச் செய்யும் நோக்கில் உருத்திரபுரம் பகுதியிலே சைவப் பாடசாலையை எட்டு மாணாக்கருடன் ஸ்தாபித்து தலைமை ஆசிரியராக, கல்விச் சேவைதனை ஆற்றும் இவரின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்கட்ட பயணம் ஆரம்பமாகியது. இப்பாடசாலையே இன்று கிளி/ இந்துக்கல்லூரியாகப் பரிணமித்து நிற்கிறது. இவரின் முதல் நியமனமே தலைமை ஆசிரியர் நியமனம் இது அவருக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி என்றே கொள்ளலாம். 38 வருடங்கள் 14 பாடசாலைகளில் தலைமை ஆசிரியராக வலம் வந்தவர். கிளி /உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில் தனது இறுதிச்சேவை காலத்தைக் கழித்து 1995.05.05ம் திகதி ஓய்வு பெற்றார்.

அமரர் பொன். சபாபதி அவர்களின் காலத்திலே கொத்தணியின் தலைவராக திகழ்ந்த பெருமை திருவாளர். கார்த்திகேசு நாகலிங்கம் அவரையே சாரும் . இவரது சேவை சமூகப்பணியூடாகவும், சமயப்பணியூடாகவும் பரந்து அனைவர் மனங்களிலும் வியாபித்துஉள்ளமை வாழும் போதே வாழ்த்துகின்றோம். விழாவினூடாகப் புலனாகின்றது. புலம்பெயர்ந்து சென்றாலும் தாய் மண்ணின் மீது கொண்ட பற்று மாறாது அந்திய நாட்டிலும் தமிழ் விழுதை விதைத்து, "உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகத்தை" ஸ்தாபித்து உருத்திரபுர பிரதேசத்து மாணவர்களின் உயர்கல்விக்கு உதவிக்கரம் நீட்டுபவர்.

இவரது சேவை இன்று நீண்டு வளர்ந்து வடபுலத்தை வியாபிக்க வேண்டும் எனவும் , நீடிய ஆயுளையும் , நோய் நொடி அற்ற வாழ்வையும் ஆண்டவர வழங்க வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் இறைவனை வேண்டுவதோடு, பாராட்டு விழா சிறப்புற நடைபெறவும், விழாவின் போது வெளியிடப்படும் மலர் சிறந்த ஆவணப்படுத்தலாக எதிர்வரும் காலத்தில் மிளிர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.


**திரு.த.குருகுலராசா**

கௌரவ கல்வி பண்பாட்டலுவல்கள்,

விளையாட்டுத்துறை ,

மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்,

வடக்குமாகாணம்.

அமைச்சர் / ඇමතිතුමා / Minister: 021-205 4094

அலுவலகம் / කාර්යාලය / Office: 021-205 4091(Private Secretary), 021-205 4093(P.R.O), 021-205 4092(General)


தொலை நகல் / ෆැක්ස් / Fax: 021-205 4093

email: edumin.14@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனித்துவமான கிராமத்தின் அடையாளம்




சிவஞானம் சிறீதரன் பா.உ.
M.Ed., B.A., PGDE(Me), Sp.Tr(Ag)
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்.
882, ஆறுமுகம் வீதி
வட்டக்கச்சி, கிளிநொச்சி, இலங்கை
தொலைபேசி : +94 21 3207584, +94 21 2280024
தொலைநகல் : +94 21 2221595, +94 21 2280024
கைபேசி : +94 77 6913244
மின்னஞ்சல் : shritharan08@hotmail.com
இணையத்தளம் : www.shritharan.com

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
PARLIAMENT

SIVAGNANAM SHRITHARAN M.P
M.Ed., B.A., PGDE(Me), Sp.Tr.(Ag)
Jaffna Electoral District.
882, Arumugam Road,
Vaddakachchi, Kilinochchi, Srilanka.
Tel. : +94 21 3207584, +94 21 2280024
Fax. : +94 21 2221595, +94 21 2280024
Mob. : +94 77 6913244
E.mail : shritharan08@hotmail.com
Web : www.shritharan.com


கிளிநொச்சியின் மூத்தகுடிமகன்களில் ஒருவரும் முன்னோடியுமான உயர்திரு. கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களை இந்தக் கிளிநொச்சி உருத்திரபுரம் சமூகத்தின் இந்தத்தலைமுறையும் மூத்தவர்களும் மதிப்பளிப்பது கண்டு உவகை அடைகின்றேன். கிளிநொச்சியில் குடியேற்றங்கள் உருவாகிய காலத்தில் உருத்திரபுரத்தில் குடியேறி அங்கேயே தமிழ் முறைப்படி தன் திருமணத்தையும் நிகழ்த்தி உருத்திரபுரம் மண்ணிலும் , கிளிநொச்சியிலும் எல்லோரும் மதிக்கத்தக்க ஆசிரியராக அதிபராக திகழ்ந்து இன்றும் தன் சமூகப்பணிகளை தொடருகின்ற நாகலிங்கம் மாஸ்ரர் அவர்களின் பணிகளையும் பண்புகளையும் இந்தச்சந்ததி அறிந்திருக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுரம் கிராமம் இன்று கல்வி, கலை, இலக்கிய விளையாட்டுத் துறைகளில் முன்னோடியான கிராமங்களில் ஒன்று. அது தனக்கென ஒரு தனித்துவத்தை கொண்டுள்ளது. இந்த தனித்துவத்தை உருவாக்க உருத்திரபுரம் கிராமம் மீதான பற்றுதலை கிராமவாசிகள் மத்தியில் உருவாக்க கா.நாகலிங்கம் அவர்கள் அரும்பாடுபட்டுள்ளதை இச்சமூகம் நினைவு கொள்கின்றது. உருத்திரபுரம் கிராமத்தில் அன்றைய காலத்தில் கிராம வாசிகள் மத்தியில் பொருளாதார ரீதியில் மேம்பாடு காணக்கூடிய சேமிப்புப் பழக்கம் கூட்டுறவு சங்கங்களினூடாக சமூக மயப்படுத்தல் என்பதை உருவாக்க நாகலிங்கம் மாஸ்ரர் அவர்கள் பாடுபட்டிருக்கின்றார். அதன் சமூகப்பெறுமதி காரணமாக கூட்டுறவுச் சங்கங்களின் தலைமைப்பதவியையும் வகித்துள்ளமை இங்கே குறிப்பிடவேண்டும். சகல துறைகள் உடனான நெருக்கம், ஈடுபாடு இவரை ஒரு பன்முகப்பட்ட ஆளுமைமிக்க மனிதராக இனங்கானப்படுகின்றது. இன்றுவரை இவர் ஒரு தனித்துவமான அதிபர்கள் வரிசையில் பேசப்படுகின்ற ஒருவர். இன்று கிளிநொச்சியின் பிரபல பாடசாலைகளான கிளிநொச்சி இந்துக்கல்லூரி, கிளிநொச்சி உருத்திரபுரம் மகாவித்தியாலயம் என்பன நாகலிங்கம்மாஸ்ரர் அவர்களின் உயர் ஆளுமைகளை பெற்றுக்கொண்ட பாடசாலைகள், ஆலயங்கள், விளையாட்டுக் கழகங்கள் , சனசமூக நிலையங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட்ட பொதுப்பணி சார்ந்தவைகளில் தன்னை ஈடுபடுத்தி மற்றவர்களையும் அதன்பால் ஊக்குவித்து உருத்திரபுரத்தில் ஒரு ஆளுமை மிக்க தலைமுறையை உருவாக்கிய பெருமை உயர்திரு நாகலிங்கம் மாஸ்ரர் அவர்களுக்கும் உண்டு. அவர் சமூகப்பணிகளை நானும் வாழ்த்துவதில் மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.


நன்றி

சிவஞானம் சிறீதரன்
பாராளுமன்ற உறுப்பினர்
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்
கிளிநொச்சி.

S. Shritharan,
Member of Parliament,
Jaffna Electoral District,
Kilinochchi.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்மான் நுழைபுலம் மிக்க மாமனிதன்





" நெடுந்தீவு மண்ணைப் பிறப்பிடமாகவும் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களை வாழும் போதே வாழ்த்துகின்றோம்"என்ற நிகழ்வில் அவரது அளவிடற்கரிய சேவைகளைப் பாராட்டுவதற்கு எனக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

இளம் பருவத்திலேயே பொதுச்சேவையில் பெரிதும் நாட்டம்கொண்ட அவர் பல பொதுப்பணிகளில் தன்னை அர்ப்பணித்து செயலாற்றி வருகிறார். அவரது பிரதான பணி ஆசிரியர் பணியாகும். 1952ஆம் ஆண்டில் இருந்து ஆசிரியப்பணியை 7ம் வாய்க்கால் சைவப் பாடசாலையில் ( தற்போதைய இந்துக்கல்லூரி) அதிபராக ஆரம்பித்து பல பாடசாலைகளில் அதிபராக இருந்து ஓய்வுபெறும் போது கிளி / உருத்திரபுரம் மகாவித்தியா லத்தில் இருந்து ஓய்வுபெற்றார்.

இவர் கரைச்சி பிரதேசசபையின் தவிசாளராகவும் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் கிளிநொச்சி மாவட்ட சைவ ஆலயங்களில் தலைவர், செயலாளராகவும் சைவப்பணியாற்றியவர். கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் ஆரம்பித்து உருத்திரபுரம் , நெடுந்தீவு உட்பட சைவ ஆலயங்களோடு இணைந்து சைவமும் தமிழும் வளர பெரும்பணியாற்றி வருகிறார்.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தாய்மண்ணில் கொண்ட பற்றால் இம்மண்ணிலே நடக்கின்ற பலநல்ல நிகழ்வுகளிற்கு நிறைந்த நிதியுதவியும் செய்து வருகின்றார். உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகத்தின் காப்பாளராக இருந்து பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி வழங்கி வருகின்றார்.

உறவுகளை மதித்து, சமூகத்தை நேசித்து உளத்தூய்மையால் உரிமையோடு தாய் மண்ணில் வாழும் மக்களுக்கு உதவும் திரு.கார்த்திகேசு நாகலிங்கம் அவர்கள் நீண்ட ஆயுளும், ஆரோக்கியம் பெற்று நீடூழி வாழ எல்லாம் வல்ல உருத்திரபுரீச்சரர் அருள்புரிய வேண்டி வாழ்த்துவதுடன் இந்நிகழ்வை ஏற்பாடு செய்த ஏற்பாட்டுக்குழுவினருக்கும் எனது மன மார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

**சு.பசுபதிப்பிள்ளை**
வடக்கு மாகாண சபை உறுப்பினர்,
கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்களின்

# நற்பணிகள் தொடரட்டும் நாமும் கற்றுக்கொள்வோம்...





30 வருடங்களுக்கு முன்னர் ஆசிரியர் நாகலிங்கம் அவர்கள் கிளிநொச்சி இந்து மகாவித்தியாலயத்தின் அதிபராக கடமையாற்றியுள்ளார். அன்று தொடக்கம் இன்று வரை பல காரணங்களுக்காக அடிக்கடி சந்தித்த போது எப்போதும் முயற்சியோடும் தனது கடமைகளில் சரியான முறையில் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதைக் காண்கின்றேன்.

அக் காலப்பகுதியில் பலருக்கு உதாரணமாக வாழ்பவர் திரு நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் இவருடைய சிந்தனையும் செயலும் பலருக்கு வழிகாட்டியாக இருக்கின்றது. அந்த வகையில் 1946ம் ஆண்டு அவருடைய அப்பா திரு. கார்த்திகேசு (அப்பு என அழைக்கபடுபவர்) அவர்களுடன் கிளிநொச்சி பகுதிக்கு வருகை தந்தார். அப்போது அவர் கொழும்புத்துறை பாடசாலையில் கல்வி கற்று வரும் மாணவன். அப்போது கிளிநொச்சி நகரில் முதலாவது குடியேற்றமாகிய கணேசபுரம் குடியேற்றத் திட்டம் மாத்திரம் காணப்பட்டது. பரந்தன் பகுதிக்கு அப்பாவுடன் வந்து விவசாயம் மேற்கொண்ட ஆசிரியர் நாகலிங்கம் அவர்கள் மீண்டும் மேற்படிப்புக்காக யாழ்ப்பாணம் சென்றார்.

1949ம் ஆண்டு உருத்திரபுரம் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அப்போது அங்கு அவரது அப்பா குடியேறினார். 1952ம் ஆண்டு பட்டப்படிப்பை முடித்து ஆசிரியராக கிளிநொச்சியில் கடமைப் பொறுப்பை ஏற்ற பின்னர் கிளிநொச்சி மாவட்டத்திலும் பிற மாவட்டங்களிலும் ஆசிரியராக கல்வி கற்பித்து அதிபராகவும் கடமைபுரிந்து வந்துள்ளார்.


அவரது 40 வருடகால சேவையில் பல மாணவர்களை வழி நடத்தியிருக்கின்றார் அவருடைய சரியான திட்டமிடல். விடா முயற்சி ,கடின உழைப்பு என்பன அவரையும் அவரது குடும்பத்தினரையும் உயர் நிலைக்கு கொண்டு வந்துள்ளது.

பாடசாலை கல்வி வளர்ச்சிக்கு அப்பால் சமய பணிகளையும், சமூக பணிகளையும் ஆற்றி வந்தார். கிளிநொச்சி மாவட்டத்தின் பல வளர்ச்சி மாற்றங்களையும் கடந்த 70 வருடங்களுக்கு மேலாக தெரிந்த ஓர் மனிதர் ஆசிரியர் நாகலிங்கம் அவர்கள். அவருடைய பல்வேறு ஆக்கங்களுடாக அவரது அன்றைய செயற்பாடுகளை அறியக் கூடியதாக இருக்கின்றது. அப்போது சமயம் மற்றும் அறப் பணிகளில் அமைதியாக ஈடுபட்டதைக் காணக்கூடியதாக இருக்கிறது. அவருடைய வழிகாட்டல் கிளிநொச்சி சமூகத்தின் வளர்ச்சிக்கு அளப்பெரிய பங்களிப்பு செலுத்தியுள்ளது. அவருடைய நற்பணிகள் தொடரட்டும் நாமும் கற்றுக் கொள்வோம். அவருடன் இணைந்து கொள்வோம். சமூகத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுவோம்.

வாழ்க வளமுடன்

Dr. த. சத்தியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அன்புக்கும் பண்புக்கும் ஒரு பாசறையாக
விளங்கும் திரு.கா.நாகலிங்கம்
அவர்களது சேவைநலன் பாராட்டு
விழாவிற்கான வாழ்த்துரை**



வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வளரும் சமுதாயத்திற்கு அறிவொளியூட்டி நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க அயராது உழைத்து நின்ற வள்ளல் திரு.கா.நாகலிங்கம் ஐயா அவர்கள். நல்லுள்ளம் கொண்ட மகானின் நற்புகழ் நாடெங்கும் பரவவேண்டும்என்ற அனுபவமொழிக்கிணங்க உலகெங்கணும் கருணை யுள்ளம் கொண்ட தியாகிகளை நினைவேந்தி துதித்து வருகையில் தங்களின் புகழ் இலைமறைகாயாக இருந்து பற்பல நற்காரியங்களை எம்மண்ணில் சாதித்தமையை நாம் எடுத்தியம்புவதில் பெருமையடைகின்றோம்.

எம்மண்ணில் எம்மவர்களிடையே அதிகமாக பழக்கத்திலுள்ள ஒரு செயற்பாடு ஒருவருடைய புகழை அவரது மறைவின்பின்பே கூறித் துதிப்பது. எனினும் இன்றைய இந்த கதாநாயகனுக்கோ ஒரு பாக்கியம் இன்றே அவர்புகழ் பாடுவது. ஒருவரின் மறைவின் பின்னான புகழால் அவருடைய சேவையையும் திறனையும் எம்மால் தொடர்ந்தும் பெற முடியாதே என்ற துர்ப்பாக்கிய நிலையினை எவரும் சிந்தித்துப் பார்த்ததில்லை. தட்டிக்கொடுத்துப்பார் தர்மம் வெல்லும் என்ற கொள்கையை நன்குணர்ந்த இன்றைய விழாவின் ஏற்பாட்டாளர்கள் எடுத்த இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருங்கைங்கரியம் பெரிதும் வரவேற்கத்தக்கது. ஏனெனில் ஒருவர் தான் செய்த சேவையை எண்ணிப் பார்த்து மண்ணில் பிறந்தேன். பிறந்த மண்ணில் என்னால் முடிந்தவற்றை சாதித்து விட்டேன் என்று மனநிறைவுடன் மாண்புபெற வேண்டும். இதனை செய்ய முனைந்த அனைவருக்கும் எனது பாராட்டுக்கள்.

காலநேரம் அறிந்து சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தன் பணியாற்றும் உள்ளப் பெருந்தகை திரு.கா.நாகலிங்கம் ஐயா அவர்களது செயல் என்றும் எமக்கு முன்னோடியாகத் திகழ வேண்டும். 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற கொள்கைக்கிணங்க ஆரம்ப கால கட்டங்களில் எம் மண்ணில் பிறந்த இவர் சமூகம், கல்வி, கேள்விகளில் சிறந்து விளங்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டனர். இந்நேரத்தில் தனது அயராத முயற்சியின் பயனாக எமது இல்ல வளாகத்திற்கு அருகேயுள்ள இந்துக்கல்லூரியின் தொடக்க ஆசானாக பரிணமித்து தன்சேவையை ஆரம்பித்தார். அவரது கொள்கைக்கு தகுந்தாற்போல சமூக ஆர்வலர் குருகுலபிதா அப்புஜீ அவர்களும் தோள்கொடுத்தார். இவ்வுலகில் எத்தனையோ மாந்தர்கள் தாம் உண்டு தம்பாடுண்டு என எக்காளத்துடன் வாழ்ந்து தம் காலத்தை கழித்துவர அன்புள்ளம் கொண்ட கருணையாளன் நாகலிங்கம் அவர்கள் ஆதரவற்ற ஏதிலிகளையும் , ஏழைகளையும் மனத்தில் கொண்டு அவர்களும் எம் சமூகத்தில் நற்பேற்றுடன் மிளிர அரும்பாடுபட்ட பண்பாளன் குருகுல முதல்வர் அப்புஜீ அவர்களுடன் இணைந்து இல்ல ஆரம்பகாலம் முதல் சிறார்களின் நலனுக்காக பாடுபட்ட வள்ளல் என்று குறிப்பிடுவதில் நான் பெருமையடைகின்றேன்.

இவரது இல்லத்திலேதான் குருகுலம் தனது விடுதியை ஆரம்பித்தது. நலிவுற்ற குழந்தைகளது வாழ்வுக்கு பெருவித்திட்ட பெருமகன். புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது உறவுகளை மறவாது கனடா அபிவிருத்தி நிறுவனத்தினை நிறுவி எமது மாணவச் செல்வங்கட்கு உதவியவர். உருத்திரபுரீச்சுவரர் ஆலயத்தின் பணிகளிலும் பங்கு பற்றிப் பணியாற்றிய ஆன்மீகவாதி. இவரது சேவை தொடர்கிறது. இது யாம் பெற்ற இறைபலன். இவர் தொடர்ந்தும் சேவையாற்றி மக்கள் வாழ்வு வளர எல்லாம் வல்ல உருத்திரபுரீச்சுவரரது தாழ்பணிந்து வணங்குகின்றேன்.

வாழ்க ! வளமுடன்

இவ்வண்ணம்,

தி.இராசநாயகம்
தலைவர்,

மகாதேவா ஆச்சிர சிறுவர் இல்லம்
முன்னைநாள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறியாமை இருளை அகற்ற அயராது உழைக்கும் பெரியார்



உலகம் அறியாமையை அகற்ற எல்லோருக்கும் கல்வி என்ற எண்ணக் கருவுடன் செயற்பட்டு வருகின்றது. தான் வாழ்ந்த சூழலில் தான் அதிபராக கடமை யாற்றிய சுற்றுப்புறத்தில் அறியாமை இருளை அகற்ற ஆழ்ந்து சிந்தித்து செயற் படுகின்ற பெரியார் திரு.கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களை "வாழும்போதே வாழ்த்தும்" வைபத்தின் அடையாளமாக வெளியிடப்படும் மலரின் ஊடாக தங்களை வணங்கி வாழ்த்துகின்றேன். தனக்கென வாழாப் பிறருக்குரியர் ஒரு சிலரே. அவர்களை மகான்களாக மதித்தல் தமிழர் சால்பு. மண்ணில் நல்ல வண்ணம் வாழுதல் என்பது தான் வாழுதல் அல்ல. தன் சுற்றமும் வாழுதலாகும்.

அந்த மனப்பாங்குடன் தான் ஏற்றுக்கொண்ட பதவிகளுக்கெல்லாம் பெருமை சேர்த்துக்கொண்டு ஒரு முத்தாய்ப்பான , முன்மாதிரியான மனிதனாக விளங்கும் நீங்கள் காலத்தால் நீடித்து நிற்பீர்கள். உயர் பண்பாளர்கள் அருகிச்செல்லும் இக்காலத்தில் கலியுகத்தின் பேராசைத்தனங்களுள் அகப்பட்டுப்போகாமல் ஒருயுகம் கடந்த சிந்தனையுடன் வாழும் "மாமனிதர்" நீங்கள். கண்டாங்கள் கடந்து , கடல்கள் கடந்து சென்றபோதும் தான் வாழ்ந்த மண்ணின் குழந்தைகளின் கல்விக்கு, கற்றலுக்கு வறுமை ஒரு தடையாக அமைந்துவிடக்கூடாது என்ற நல்நோக்குடன் 5ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் தகுதிபெற்ற மாணவர்களுக்கும், பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற மாணவர்களுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய துணையாய் நான் இருக்கின்றேன். கற்றுக்கொள்ளுங்கள் என்று அரும்பணியாற்றும் தங்களின் பணி உலகம் உள்ளளவும் பேசப்படும்.

பல்துறை ஆளுமையை குறிப்பாக சமூக, அரசியல், பொருளாதார, ஆன்மீக , கல்விச்சேவைகளை சமநிலையில் நின்று நிதான சிந்தனையுடன் உணர்ச்சிகளுக்கு அடிமைப்படாது தாங்கள் மேற்கொள்ளும் செயல்திறன் மற்றவர்களுக்கு முன் மாதிரியாக அமையும். ஒரு உயர் சிந்தனையாளனாகிய நாங்கள் வாழுங்காலத்தில் நாங்களும் வாழ்கின்றோம் என்பது எங்களுக்குப்பெருமை . உருத்திரபுரம் சிவன்கோவில், மகாதேவா ஆச்சிரமம், குருகுலம், காந்தி நிலையம், கரைச்சிப் பிரதேச சபை , பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் , மாதாஜீ தபோவனம் இவ்வாறே எந்த நிறுவனத்தை எடுத்தாலும் தங்களின் போதனைகளையும், சாதனைகளையும் ஆங்காங்கே காண்கின்றோம்.

தாங்கள் படிப்பித்த பன்வில தமிழ்க்கலவன் பாடசாலை,பூநகரி பொன்னாவெளி பாடசாலை , உருத்திரபுரம் மகாவித்தியாலயம், கிளி / இந்துக்கல்லூரி போன்றவற்றில் கல்வி கற்ற மாணவர்கள் மாணவர் மையக்கல்விக்கு மகுடமிட்டு மகிழ்ந்தவர் நீங்கள் என்று குறிப்பிடுகின்றார்கள். இவரைப்போலயார் என்று போற்றுமளவிற்கு தங்கள் உயர்நிலைப் பண்புகளால் தாம் வாழும் பிரதேசம் எங்கும் உள்ள மக்களின் இதயங்களில் அரியாசனமிட்டு இருப்பவர் நீங்கள்.

தாங்கள் வாழும்போது வாழ்த்தப்படுவதால் வாழ்த்துவிப்பவர்கள் பெருமை அடைகின்றார்கள். தங்கள் முன்மாதிரியை சுயநலமற்ற பரோபகாரங்களை, தங்கள் தனிநடத்தைக் கோலங்களை, பிறர் ஈனநிலைகண்டு பொங்கும் உளப்பாங்கை எதிர்காலச் சந்ததி தங்களின் குணாதிசயங்களாக மாற்றிக்கொள்ள இவ்வைபவம் ஒரு சந்தர்ப்பத்தை தரும் என்பது உறுதி.

"பண்புடையோர் பட்டுண்டு உலகு"என்ற பொய்யா மொழிக்கேற்ப தங்களைப் போன்ற பண்பாளர்களால்தான் இன்னமும் தமிழ்ச்சமூகம் தன்னை உயர்திக்கொள்ளப்பார்க்கின்றது. நீங்கள் நீடூழி வாழவேண்டும் உங்களை வாழ்த்தும் வயது எனக்கில்லை. தங்களின் உயர் பண்புகளை வணங்குகின்றேன்.

"நன்றி"

**மா.கணபதிப்பிள்ளை**

முன்னாள் பிரதி அதிபர் றோயல் கல்லூரி

முன்னாள் பணிப்பாளர் மும்மொழி அபிவிருத்தி

சனாதிபதி துரித செயலணி

கொழும்பு- 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் தாகம் கொண்ட எனது குரு



பொருள்தாகம் மனிதனைப் புண்படுத்துகின்றது. அருள்தாகம் அவனுக்கு ஆறுதலளிக்கின்றது. கருணைக் கடலாகிய இறைவன் கற்பக விருட்சம் யார் எதைக் கேட்கின்றார்களோ அதை நல்கின்றது. எனது குரு திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்கள் கற்பக தருவின் கீழே சகல சம்பத்துக்களையும் பெற்று இறையுணர்வடன் வாழ்ந்து வருபவராவார். கருத்துடன் தன் கடமையைச் செய்வதே கடவுள் வழிபாடு என்று கருதி அவ்வழியே வாழ்ந்து வந்தார். பொறிகள் வாயிலாக புறவுலகில் போவதெல்லாம் பாழ். அங்குள்ள கூச்சல் நிறைந்த களியாட்டமும் குழப்பமும் நிறைந்த போராட்டமும் துன்பத்தைத் தருகின்றன. ஆற்றலை அழித்து விடுகின்றன. உள் முகமாகத் திரும்பி மனத்தின் உள்ளே கர்ப்பக கிரகத்திற்குப் போகும் பொழுது புத்துயிர் வருகின்றது. உள்ளே உள்ள அமைதி ஆனந்தத்தைக் கொடுக்கின்றது. ஆறுதல் அடைதற்கு உள்ள இடம் மனது என்னும் கர்ப்பக் கிரகமாகும் என மதித்து இறைவனை அகத்திலே கண்டு வழி பட்டதுடன் ஆலய வழிபாட்டிலும் ஆர்வமுடையவராகக் காணப்பட்டார்.

தனது இல்லத்திற்கு முன்பாகவுள்ள மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தின் காண்டாமணியின் ஒலியினை அதிகாலை ஐந்து மணிக்கு அடித்து சூழவுள்ள கிராம மக்களின் இறையுணர்வைத் தூண்டி தான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம் என்ற பெருநோக்கோடு வாழ்ந்த பெருங்கருணையாளர் இவர்.

" நிலையிற் திரியாது அடங்கியான் தோற்றம் மலையினும் மாணப் பெரிது"

என்றார் தெய்வப் புலவர். அடக்கமும் எளிமையும் அன்பும் அருளும்கொண்ட இவர் மலைபோன்று திண்ணிய செஞ்சுடையவராவர். எடுத்த கருமத்தை திறம்படச்செய்து முடிக்கும் பேராற்றாலை எல்லாம் வல்ல பரம்பொருள் இவருக்கு கொடையாக வழங்கியுள்ளார். இறை விசுவாசமும் பக்தியும் நிரம்பிய எனது குரு ஏழைக்கிரங்கு இறைவனுக்குக் கடன் கொடுக்கிறாய் என்றங்கு ஏழைகளின் வாழ்வு வளம் பெற வழிகாட்டி அவர்களது மகிழ்விலே இறையைக் கண்டு வாழ்ந்த பெரும் குணவான் ஆவார். தாழ்ந்த நிலத்திற் தண்ணீர் தேங்கி நிற்கும் பணிவுடையார் உள்ளத்திலே அருள்வெள்ளம் ததும்பி நிற்கும். தன்னைத்தான் உயர்வாகச் சிந்தியாது சகலர்க்கும் தொண்டு செய்யும் பணிவுடைய தன்மை கொண்டவர்.

பழமையும் பெருமையும் மிக்க உருத்திரபுரீசுவரர் மீது அளவற்ற அன்பு கொண்டவர் . அவ்வாலயத்தின் வளர்ச்சிக்காக அரும் பெரும் சேவை செய்தார். சித்த சுத்தியை உண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணுவது சேவை. அகங்காரத்தை அகற்றுவது சேவை, ஜீவ போதத்தை ஒடுக்குவது சேவை. எவ்வுயிரையம் தன்னுயிராகப் பார்ப்பது சேவை., பரபோகத்தை வளர்ப்பது சேவை பணிவிடை பண்ணுபவன் வள்ளல் ஆகின்றான். அவனது வாழ்வைப் பெரு வாழ்வாக அது மாற்றும் என்பதை உணர்ந்து சேவை செய்வதிலே ஆத்ம திருப்தியைப் பெற்றுக்கொண்டார். பத்தாவிற்கேற்ற பதிவிரதையான குணநாயகி அக்கா அவர்களும் முழுமுதற் பொருளாம் இறைவன் மீது ஆராக் காதலுடையவராவார். பதியின் பலதரப்பட்ட சேவைகட்கும் இறை வழிபாட்டிற்கும் உறுதுணையாக மிளிர்ந்தார். அவரது வதனத்தில் எப்பொழுதும் ஓர் தெய்வீக சிரிப்பு தவழ்ந்த வண்ணமிருக்கும் " இல் வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றி நின்ற துணை"

கிருகஸ்தன் , வானப் பிரஸ்தன் , சன்னியாசியாகிய முத்திறந்தார்க்கும் இச் சதிபதிக்கே துணையாக நின்றார்கள். அவர்களது பக்தி வலிமையினாலேயே சிறந்த புத்திரச் செல்வங்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. அத்துடன் ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் நல்கும் கலைமகளின் அருட் பார்வையால் இவர்கள் ஈன்றெடுத்த செல்வங்கள் யாவரும் கல்வி கேள்விகளிற் சிறந்தவர்களாக வரமுடிந்தது. இஃது சிறந்ததோர் அறுவடையாகுமெனின் மிகையல்ல.

அவ்வண்ணமே இவர்கட்குக் கிடைத்த மருமகள்மார், மருமகன்மார் யாவரும் கல்வியிலும் ஒழுக்கத்திலும், இறையுணர்விலும் மேலோங்கிய நிலையிலுள்ளமை கிடைத்தற்கரிய பேறாகும். உலகனைத்துமாய் வடிவெடுத்திருப்பவர் கடவுள் அவரை அங்குமிங்கும் தேடுவது வீண். அவரைக் காணுதற்கான பான்மையுடையவர் பார்க்குமிடமெங்கும் அவரையே காண்பர். அவரைக் காண இயலாதவர் குருடனுக்கு ஒப்பாவர் குருடன் எங்கு தேடினாலும் சூரிய வெளிச்சத்தைக் காணமுடியாது. ஞானக்கண்ணில்லாதார் தெய்வத்தை எங்கு தேடியும் காணமாட்டார்.ஞானக்கண்டுடையவர்கள் அவரைத் தேடுவதில்லை யாண்டும் கடவுளையே காண்கின்றனர். எனது குரு இயல்பாகவே ஞானக் கண்ணுடையவராகவே திகழ்கின்றார். எனவே தான் அவரை நாடி ஆலய பரிபாலன சபையினரும் சமய நிறுவனங்களை நிர்வகிக்கும் நிர்வாகிகளும் ஆலோசனை கேட்க வருகை தருகின்றனர். அவர்களது அறியாமையை நீக்கும் ஞான ஒளியாகத் திகழ்கின்றார்.

உருத்திரபுர மகா வித்தியாலய அதிபராக இருந்த காலத்தில் பொறிக்கடவை அம்மன் ஆலயத்தில் வருடாவருடம் இடம்பெறும் பங்குனித் திங்கள் பொங்கல் நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தை கலந்து தொண்டாற்றவும் வழிபடவும் கலங்கரை விளக்காக நின்று வழிகாட்டியதுடன் தானும் கலந்து அம்பிகையின் அருள் பெற்றுள்ளார்.

"மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே"


கலாபூக்ஷணம்

**திருமதி.செல்வராணி சோமசேகரம்பிள்ளை**

செயலாளர், கிளி மாவட்ட சைவ மங்கையர் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பணி நல்கும் பெருந்தகை..

கிளிநொச்சி மாவட்டத்தில் உருத்திரபுரம் பகுதியில் வாழ்ந்து பல சமூக சேவைகள், அபிவிருத்தி வேலைகளை முன்னின்று பாடுபட்டுழைப்பவர் மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய ஆசிரியர் நாகலிங்கம் ஐயா அவர்களாவார். கிளிநொச்சி மாவட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டவர், சைவசமய எழுச்சிக்கு ஊன்றுகோலாக இருந்தவர். 1952 ம் ஆண்டு கிளிநொச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினால் ஆரம்பிக்கப்பெற்ற இந்து தமிழ்க்கலவன் பாடசாலையில் பண்டிதமணி கணபதிப்பிள்ளை ஐயாவின் ஆசீர்வாதத்துடன் முதல் அதிபராகக் கடமையேற்றவர். இவரது ஆரம்பம் இப்போது ஆலமரவிருட்சமாக இந்துக்கல்லூரி என்னும் நாமத்துடன் திகழ்கின்றது.


இவரது ஆசிரிய சேவைக்கும் எனது பின் தங்கிய கிராமமான பொன்னாவெளிக்கும் ஒரு தொடர்பு உண்டு. போக்குவரவுகள் எதுவுமற்ற காலத்தில் தனது ஊரிலிருந்து துவிச்சக்கரவண்டி மூலமாக எனது கிராமத்திற்கு வந்து அரும் பணியாற்றிய பெருந்தகை. இவரது நல்லெண்ணம் எம் கிராம இளைஞர்கள், யுவதிகள் அரச பதவிகள் பெற்று சீருடனும் சிறப்படனும் வாழ்ந்துவருகின்றனர். 1972 ம் ஆண்டில் நான் அரச சேவையில் கிராம அலுவலராக இணைந்து கிளிநொச்சியில் பதவியேற்ற போது என்னை குருகுல முகாமைக்குழுவில் ஓர் உறுப்பினராகச் சேர்த்து இன்றுவரை அம் முகாமையில் இணைந்து சேவையாற்ற வழிவகுத்த பெருந்தகை. அந்நாட்களில் கிராஞ்சியில் உள்ள குருகுல தென்னந்தோட்டத்திற்கு நானும் கரைச்சி பிரதேச சபைத் தலைவர் நாவை.குகராசாவையும் அழைத்துச்சென்று தோட்டத்தில் துப்பரவுப் பணிகளையும் வேலியடைப்பு வேலைகளையும் செய்தமையும் குருகுலப் பெண் பிள்ளைகளினால் சமைக்கப்பெற்ற புட்டினைச் சுவையாகச் சாப்பிட்டு மகிழ்ந்தமையும் இன்றும் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது. மகிழ்விற்குரியது.

திரு. கா.நாகலிங்கம் ஐயா அவர்கள் கிளிநொச்சியில் பல சமூக சேவைகள் நிறுவனங்களின் முகாமைத்துவப் பதவிகளை ஏற்று அரும் பணிகள் ஆற்றிய பெருமகன். அவர் இன்னும் பன்னெடுங்காலம் பல பணிகளை நிறைவேற்றி மக்களின் வாழ்வாதாரம் உயரப் பாடுபட எல்லாம் வல்ல இறைவன் பேரருள் புரிவாராக. நானும் இறைவனை இறைஞ்சுகின்றேன்.

**திரு-பொன்- நித்தியானந்தம்**

பிர இல: ச.நீ ,கௌரவ பொதுச்செயலாளர்
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பன்முக வியாபகன் தன் இனிய துணையுடன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேன்மையான சிந்தனைக ளுடன் எளிமையாக வாழ்தல் (Simple Living with high thoughts) பின் நவீனத்துவ காலங்களில் உருவாகிய மிகச் சிறப்பான வாழுதலின் கோட் பாடாகும். முதலாளித்துவ பொருளா தாரக் கட்டமைப்புக்களில் "காந்தியம்" கோட்பாடாக அது சிறப்பானதான தொரு இடத்தைப் பெற்றிருந்தது. அதேபோன்று சமதர்மப் பொருளாதாரக் கோட்பாடுகளிலும் அதற்கென்றொரு மாண்பு மிக்க முன்னுதாரண இடம் ஒன்று இருந்தது.



# A Living legend of our era.

மேன்மையான சிந்தனைகளுடன் எளிமையான வாழ்வு என்பதற்குரிய வாழும் உதாரணமாக என்னுடைய வாழ்நாளில் நான் சந்தித்த மிகச்சிறப்பான மனிதர் எங்களுடைய அதிபர் திரு.கா. நாகலிங்கம் அவர்களே. எத்தகைய வாழும் சூழலிலும் அவருடைய வாழும் முறைமை மாறாதிருந்தது.

இவருடைய வாழும் முறைமையின் சாட்சியம் சொற்களால் அல்ல, செயல்களாலேயே பதிவு செய்யப்பட்டவை. இவருடைய சொற்கள் மிக அரிதானவை, வலிமை யானவை, மிக மிகத் தெளிவானவை. இன்றைய மனிதர்களின் சொற்களைப் போல் அவை குழப்பமானவை அல்ல. இந்த இடத்தில் மனித வார்த்தைகளின் குழப்பம் பற்றிய கவிஞர் இந்திரனின் கவிதை வரிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வர வர வார்த்தைகள் மீதே எனக்கு,
நம்பிக்கை அற்றுப் போச்சு
நான் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் வேறொன்றைப் புரிந்துகொள்ள

விளக்கம், மறுவிளக்கம்
விளக்கத்திற்கு விளக்கமெனப்
புதராய் மண்டி புற்றாய் வளரும்
வார்த்தைகள்.

தொடரும் இன்றைய உலகில் செயல்களால் தனது வார்த்தைகளுக்கு வலுவூட்டும் அதிபர் நாகலிங்கம் அவர்களுடைய இயல்புமிக்க சிறந்த வாழ்வின் உதாரணமாகும்.

என்னுடைய முதல் அதிபராக அவர் அமைந்திருந்து என்னுடைய வாழ்வின் மிக முக்கியமான விடயமாகக் கருதுகிறேன். அலுவலக முறைகளில் அவருடைய நேர்த்தி, மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அவருடைய மேலதிகாரிகளிடையே அவருடைய ஆளுமையின் வெளிப்பாடு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. ஒவ்வொருவருடைய இயல்பு, திறமைகள் குறித்த செயற்பாட்டில் அவருடைய விருப்பு என்பவற்றைத் துல்லியமாக உய்த்துணர்ந்து பொறுப்புக்களை அவர் வசம் ஒப்படைப்பதும் அவர்களை முகாமை செய்து வழிகாட்டல் ஆலோசனை வழங்குவதிலும் அவருடைய ஆளுமை மிக்க பெரிய பங்களிப்பை வழங்கியிருந்தது.

உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தில் இணைந்த அடுத்த நாளே விளையாட்டிற்குரிய பொறுப்பை என்னிடம் வழங்கியிருந்தார். வரவு இடாப்பை பூரணப்படுத்தும் வேலையில் நான் காட்டிய அசமந்தப் போக்கை தினமும் என்னை அழைத்து தனது முன்னிலையில் அதனை முழுமைப் படுத்தும் செயற்பாட்டின் ஊடாக, எனக்குள் அதன் முக்கியத்துவத்தை உணர வைத்தார். ஒவ்வொரு விடயங்களும் செம்மையுற நடைபெற வேண்டும் என்பதை தனக்குக் கீழ் பணிபுரிந்தவர்களுக்கும், மேலதிகாரிகளுக்கும் தனது ஆளுமைமிக்க நடைமுறையின் ஊடாக வலியுறுத்தி நடைமுறைப் படுத்தும் வாண்மை மிக்கவராக அவர் திகழ்ந்தார். அவரின் வாழ்வின் சிறப்பே அவரின் ஆளுமை மிகு செயல் முறையாக இருந்தது.

ஒரு முறை புதிதாக கிளிநொச்சி மாவட்டத்தில் பொறுப்பேற்றிருந்த பிராந்திய கல்விப்பணிப்பாளர் மூன்று மாதங்களின் பின்பு கிளி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற விழாவொன்றில் இவரை யார் என அன்றைய கொத்தணி அதிபர் அமரர் திரு. பொன் சபாபதியிடம் கேட்டுள்ளார். மூன்று மாதங்களாக கல்விப் பணிப்பாளரைச் சந்திக்காத அதிபராக அவர் இருந்திருக்கிறார். ஆனால் மாதந்தோறும் தவறாது பாடசாலையின் நிலவர அறிக்கையை எழுத்துமூலம் சமர்ப்பித்த ஒரே ஒரு அதிபராகவும் இவரே திகழ்ந்தார். மிகச் சிறந்த அதிபர் திரு. நாகலிங்கம் என திரு.க.கந்தசாமி பின்நாட்களில் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். கிளிநொச்சியில் மிகச் சிறந்த ஆளுமை மிக்க கல்விப்பணிப்பாளர்களாகத் திகழ்ந்தவர்களில் திரு.க.கந்தசாமி, திரு. பொன்.சபாபதி என்பவர்கள் எம்மால் மறக்கப்பட முடியாதவர்கள்.

அதிபர் நாகலிங்கம் அவர்கள் மிகச்சிறந்த தலைமைத்துவப் பண்பைக் கொண்டவர். அவர் கட்டளைகள் மூலம் செயல்களை நடைமுறைப்படுத்தியவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்ல. அவர் தனது முன்னுதாரணத்தின் மூலமே அதனை நடைமுறைப் படுத்தியவர். ஏறக்குறைய 20 வருடங்களுக்கு முன்பு கொட்டகைகள் மரம், கிடுகு மூலமே உருவாக்கப் பட்டன. மாணிக்கப்பிள்ளை யார் ஆலய திருவிழாக் காலங்களிலும் இவ்வாறான கீற்றுக் கொட்டகைகள் அமைக்கப்படும். அதனை அமைப்பதற்கு அவர் யாரையும் அழைப்பதில்லை. தானே தனியாக வேலைகளை ஆரம்பிப்பார். வீதியால் செல்பவர்கள், குறிப்பாக விளையாட்டு மைதானத்தில் விளையாடிக்கொண்டிருப்பவர்கள் எல்லோரும் விரைவில் அவரோடு இணைந்து விடுவார்கள்.

இதேபோன்று கரைச்சி தெற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பொறுப்பை அவர் நீண்ட காலம் ஏற்றிருந்தவர். அந்த நாட்களில் கூழாவடியில் அமைந்திருந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளை தொடர்ச்சியாக நட்டத்தில் இயங்குவதாகச் சுட்டிக்காட்டப்பட்டது. இந் நிலையில் ஒரு பாடசாலை விடுமுறைக் காலத்தில் அந்தக் கிளையைப் பொறுப்பேற்று இலாபத்தில் நடத்த முடியும் என்பதை நிரூபித்த தலைவராகத் திகழ்ந்தவர். உருத்திரபுரம் ஐக்கிய நாணயசங்கமும் மிகச் சிறப்பாக செயற்பட வைத்த மிகச் சிறந்த கூட்டுற வாளராகத் திகழ்ந்தவர்.

குருகுலம், அகில இலங்கை காந்தி சேவா சங்கம் என்பவற்றில் ஆக்கமிகு பங்குவகித்தவர். அரசியலிலும் கரைச்சி கிராம சபைத் தலைவராக, உறுப்பின ராக பங்காற்றியவர் என்பதை அவருடைய சகாவான எங்கள் பாடசாலை யின் முன்னாள் சிரேஷ்ட ஆசிரியர் அமரர் வே. பாலசுந்தரம் அவர்கள் என்னுடன் பல தடவைகள் பகிர்ந்து கொண்டார். தமிழரசுக் கட்சி மூலம் தனக்குக் கிடைத்த பாராளுமன்ற வேட் பாளர் சந்தர்ப்பத்தை திரு. சிவசுந்தரம் அவர்களுக்கு மனமுவந்து விட்டுக் கொடுத்தவர்.

இவரின் வாழ்வை, செயற்திறனை, நன்மனப்பாங்கை, உயரிய விழுமியங் களை பதிவு செய்வதென்றால் அது ஒரு விரிந்த புத்தகமாகவே அமையும். சுருங்கச் சொல்லின் அவர் ஒரு Living legend of our era.

**திரு.அ. அன்ரன் அன்பழகன்**
ஆசிரியர்.

---

<u>**சிந்திக்க சில துளிகள்**</u>

**உங்களுக்கு மதிப்பில்லை என்று நீங்கள் உணரும் இடங்களில் மௌனமாக இருக்க பழகுங்கள் காலப்போக்கில் உங்கள் மௌனம் உங்களுக்கான மதிப்பை அங்கே ஈட்டித்தரும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " நாகலிங்கம் என்ற ஆளுமை"

**" தோன்றில் புகழொடு தோன்றுக - அஃதிலார்**
**தோன்றலில் தோன்றாமை நன்று "**

என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க தனக்கென வாழாப் பிறர்குரியனாய், எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய ஆற்றல் கொண்டவராய் , மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து கொண்டிருக்கும் மிகச்சிறந்த ஆளுமையாளர் அதிபர் கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களாவார்.

**"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் - தத்தம்**
**கருமமே கட்டளைக்கல்"**

என்ற பொய்யா மொழிக் கிணங்க தன் சொல்லாலும் செயலாலும் உயர்சிந்தனை யையும் செயலையும் வெளிப்படுத்தி , தலை சிறந்த சமூக அரசியல் , பொருளாதார ஆத்மீக வெளிப்பாடு களை மிகச்சிறப்பாக செய்துவரும் அதிபர் கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களின் செயல்பாடு பற்றி வாழும்போதே வாழ்த்துதல் எம் தலையாய கடமையாகும்.

"நெடுந்தீவு"பல்துறை ஆளுமையாளர் களை இவ்வுலக் குத்தந்துள்ளது. அந்த வகையில் நெடுந்தீவின் கிழக்கே சைவ வேளாளர் மரபில் உயரிய வாழ்க் கை வாழ்ந்த அம்பலவாணர்- கார்த்திகேசு அவர்களுக் கும் , கார்த்திகேசு கதிராசிப்பிள்ளை அவர்களுக் கும் ஏழாவது பிள்ளையாக 6ம் திகதி ஆவணி 1930ம் (1930.08.06) ஆண்டு பிறந்தார். இவருக்கு நாகமுத்து , சேதுப் பிள்ளை ,வள்ளியம்மை என்ற மூத்த சகோதரி கள் மூவரும் கணபதிப்பிள்ளை நாகமணி , அம்பலவாணர் என்ற அண்ணன் மாரும் , பசுபதிப்பிள்ளை என்ற தம்பியும், சின்னம்மா என்ற ஒரு தங்கையும் சகோதரர்களாகக் கொண்டு நல்லதொரு குடும்பம் பல்கலைக் கழகம் என்ற வகையில் இளமை வாழ்க்கை யை ஆரம் பித்தார். இவர் ஆரம்பக்கல்வியை நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியா சாலையில் அதிபர் உயர்திரு சின்னையா அவர்களிடம் கற்றார். 3ம் வகுப்புப் படிக்கும் பொது தந்தையார் கார்த்திகேசு அவர்களுக்கு காலில் முறிவு ஏற்பட்ட காரணத்தினால் குடும்பமே யாழ்ப்பாணத்தில் உள்ள கொழும்புத்துறைக்கு புலம்பெயர்ந்து சுவாமி யார் வீதியிலே வசித்து வந்தனர். எனவே 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைவரை கொழும்புத்துறை சைவப்பிரகாச வித்தியா சாலையில் இளமைக் கல்வியைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தார். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த அவர் யாழ்ப்பாணத்தின் புகழ்பெற்ற மத்திய மகாவித்தியாலயமாக இருந்த கனகரத்தினம் மகாவித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்ந்தார்.

இப்பாடசாலையில் போதிய ஆசிரிய வசதி அக்காலத்தில் இருக்கவில்லை. எனவே மீண்டும் கொழும்புத்துறை மகாவித்தியாலயத்தில் படிக்கத் தொடங்கினார். 8ம் ஆண்டுவரை கொழும்புத்துறை சாதனா பாடசாலையில் கல்வி கற்ற அவர் பின் நெடுந்தீவு மேற்கில் இந்துபோட் இராசரத்தினம் அவர்களால் உருவாக்கப்பட்ட சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வியைத் தொடர்ந்தார்.

உண்மையில் நெடுந்தீவில் கற்றல் சூழல் மிகப்பொருத்தமாக அமைந்திருந்தது. படமாளிகைகளோ வேறு கவனக்கலைப்பான்களோ நெடுந்தீவில் இல்லை. கற்கக் கூடிய பிள்ளைகள் கற்பதற்கான பௌதீக சூழல் அங்கு இருந்தது. அங்கு சிரேஷ்ட தராதரம் வரை கற்ற இவர் சி.த.ப. பரீட்சை மத்திய நிலையம்நெடுந்தீவில் அமையாததால் ஊர்காவற்றுறை நாரந்தனை மகளிர் கல்லூரியில் அப்பரீட்சைக்குத் தோற்றினார்.

பரீட்சையில் திறமையுடன் சித்தியடைந்த இவரின் பரீட்சைப் பெறுபேற்றைக் கண்டு சந்தோசமடைந்த இவரின் சகோதரர் கணபதிப்பிள்ளை அவர்கள் ஒரு புதிய துவிச்சக்கரவண்டியை வாங்கிக்கொடுத்து வண்ணார் பண்ணை ஆசிரிய பயிற்சி கலாசாலையில் படிப்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தார். இதே வேளை திருநெல்வேலி பரமேஸ் வராக் கல்லூரியின் அதிபர் பண்டிதர் வகுப்பு நடாத்துகின்றார் என அறிந்து அங்கு படிப்பதற்கு ஆர்வம் காட்டினார். பாலபண்டிதர் வகுப்பி லும் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி வகுப்பிலும் பகலிலும் , இரவிலுமாக கல்வி கற்றார். இரண்டு பரீட்சைக் கும் விண்ணப்பித்திருந்தார்.

ஆசிரிய கலாசாலை பரீட்சை மார்கழி மாதம் நடைபெற்றது. அகில இலங்கை மட்டத்தில் நான் காவது ஆளாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் 1950-1951ம் ஆண்டு காலப்பகுதியில் ஆசிரிய கலா சாலையில் கல்விகற்றார். இவருடன் 25 ஆண்களும் , 25 பெண்களும் கல்வி கற்றனர். 1952ம் ஆண்டு ஆசிரிய கலாசாலையிலிருந்து வெளியேறிய அவர் கரைச்சி சைவ வித்தியாவிருத்திச் சங்கம் கிளி நொச்சியில் ஒரு பாடசாலையை ஆரம்பித்தபோது 22.09.1952ல் அப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றத் தொடங்கினார். பின் னர் 1957ல் கிளி / பன்னங்கண்டி இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக் கும் பின்னர் வரணி தாவளை இயற்றாலை அரசினர் மிசன் தமிழ்க்கலவன் பாடசாலைக் கும் தொடர்ந்து இரத்தினபுரியில் உள்ள பலாங்கொடை காவத்தை ஆகிய இடங்களில் உள்ள அரசினர் பாடசாலை களிலும் அதன்பின் பூநகரி பொன்னாவெளி அ.த.க. பாடசாலையிலும், தம்பிராய் அரசினர் பாடசாலையிலும், உருத்திரபுரம் சிவநகரில் உள்ள அ.த.க பாடசாலையிலும், பின் பரந்தன் குமரபுரத்தில் உள்ள பாடசாலையிலும், கண்டியில் உள்ள பன்வில அ.த.க பாடசாலையிலும், கிளி / இந்துக்கல்லூரியிலும் இறுதியாக உருத்திரபுரம் மகாவித்தியாலயத்திலும் தனது கல்விச் சேவையை தொடர்ந்து மிகச்சிறந்த அதிபர் என்ற நற்பெயருடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990 இல் ஓய்வுபெற்றார்.

இன்று மாணவர் மையக்கல்வியை பற்றி பேசுகின்றார் அதிபர் கா.நாகலிங்கம் அவர்கள் தான் கற்பித்த பாடசாலைகளில் எல்லாம் மாணவர் மையக் கல்வியையே மேற்கொண்டார். பாடசாலைகள் மாணவர்களுக்கு உரிய இடம். பாடசாலையைப் பயன்படுத்தி மாணவர்கள் உயரவேண்டும் என்று அயராது உழைத்தார்.

ஆசிரியன் முன்மாதிரியானவனாக , ஒழுக்க சீலனாக இருக்கவேண்டும் என்ற காந்திய கல்விச் சிந்தனைக்கேற்ப தன் சொல் , செயல், பாங்கு என்பவற்றை மாற்றிக் கொண்டார். இவர் வேலை செய்த எல்லா இடங்களிலும் நல்லாசன் நாகலிங்கம் என்ற நற்பெயரை ஆழமாகப் பதிவு செய்துள்ளார்.

**சமய சேவை**

ஒழுக்கத்திற்கு உறுதுணையாக இருப்பது சமயம் சைவ சமயம் திரு.கா.நாகலிங்கம் ஆசிரியரின் உயர்ந்த நடத்தைக் கோலத்தை உருவாக்கித் தந்தது எனலாம். வெள்ளை வேட்டி , வெள்ளைச் சேட்டுடன் எந்த நேரமும் புன்னகைத்த முகத்துடன் இனிய சொற்களால் வரவேற்கும் உயர்ந்த பண்பு அவருக்குரியது. கிளிநொச்சியில் சைவ நற்சிந்தனைகள் உயர்வடைய வேண்டும் என்பதற்காக பல்வேறு சேவைகளைச் செய்தார். 1957ம் ஆண்டில் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தை உருவாக்கும் சபையின் முதல் செயலாளராகப் பணியாற்றினார்.

**" உள்ளத்தனையது உயர்வு"**

என்பார் வள்ளுவப்பெருந்தகை, திரு.கா.நாகலிங்கம் அவர்களின் உள்ளத்தைப் போல் இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயம் இன்று இலங்கையின் புகழ்பெற்ற அம்மன் ஆலயங்களில் ஒன்றாக விளங்குகின்றது. உருத்திரபுரம் மாணிக்க விநாயகர் ஆலயத்தில் 1958 முதல் தலைவராக , செயலாளராக நிர்வாக உறுப்பினராக பல நிலைகளில் இருந்து இப்பிரதேச மக்களும் , கோயில் நடாத்துவோருக்கும் முன்மாதிரியாக செயல்பட்டுக் காட்டியதுடன் கோயில் வளர்ச்சியிலும் பெரும்பங்காற்றினார்.

உருத்திரபுரம் உருத்திரபுரீச்சுவரர் ஆலயத்தின் நிர்வாக சபைத் தலைவராக மற்றும் முக்கிய உறுப்பினர் பதவிகளில் எல்லாம் இருந்து சேவையாற்றினார். யோகர் சுவாமிகளின் வழிகாட்டல் அடிப்படையில் காடடர்ந்து கிடந்த உருத்திரபுரம் சிவன் கோயில் பகுதியை தவத்திரு வடிவேல் சுவாமி அவர்களுடன் கூடிச்சென்று ஆலயத்தைத் தரிசித்து பின் புனருத்தாரணம் செய்து இன்று இவ்வாலயம் புகழ்பெற்ற சிவாலயமாக ஆக்கித்தந்த பெருமையில் இவருக்குப் பாரிய பங்குண்டு. அதைப்போலவே கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலிலும் தலைவராக, செயலாளராக, நிர்வாக உறுப்பினராக பல்வேறு காலங்களில் இருந்து தனது பல்துறை ஆளுமையால் அக்கோயிலைச் சிறப்புற வைத்தார். உருத்திரபுரத்தில் தவத்திரு பரமானந்தவல்லி (மாதாஜீ) சமாதிக்கோயில் அமைப்பதற்கும், தொடர்ந்து அதனைப் பராமரிப்பதற்கும் வேண்டிய சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டவர் " அம்மா" என்ற உணர்வோடு மாதாஜீ அவர்களை திருநிலைப்படுத்த அவர் எடுத்த நடவடிக்கைகள் எழுத்தில் அடங்காதவை. அது பற்றிய விரிவான தகவல்கள் இந்நூலில் வெறொரு கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருகுலத்தின் சர்வசக்தி பீடத்துடன் அதிபர் அவர்கள் மிக நெருங்கிய தொடர்பைச் கொண்டிருந்தார். சைவர்களுக்குரிய கலா சார விழுமியங்களுடன் சக்திபீடம் தூய்மை யாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டார் உயர்திரு கதிரவேலு "அப்புஜீ " அவர்களும் திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்களும் சேர்ந்து செயல்பட்ட காலம் குருகுலம் என்ற பெயர் தனியாக குருகுல ஆச்சிரமத்திற்கு மட்டுமல்ல 7ம் வாய்க்கால் இந்துக்கல்லூரிக் கும் அப்பெயரே நிலைத்து நிற்கும் அளவிற்கு , குருகுலம் பாடசாலை என்று அழைக்குமள விற்கு ஒத்த குறிக்கோளுடன் இருவரும் செயற்பட்டனர்.

" மறந்தும் பிறன் கேடு" செய்யாத மனப்பாங்கு மனிதனை மதிக்கும் பாங்கு, பிறன் பொருளில் பேராசை கொள்ளாத உளப்பாங்கு , பண்பாகப் பேசும் மொழிநடை, கண்டோர் கையெடுத்துக் குடும்பிடும் நடை உடை பாவனை தான் ஏற்றுக்கொண்ட பதவிக்கெல்லாம் பெருமை சேர்த்த மாமனிதர் இல்வாழ்க்கையில் ஒரு சைவ நெறியாளன் என்கின்ற உயர்பண்பைப் பெற்றவர்.

**அரசியல்**

பிறர் ஈனநிலைகண்டு பொங்காதவன் மனிதனில்லை ஏழ்மைப்பட்ட மக்களையும், வறுமையினால் வாடி மலையக மக்களையும் கண்டு மனம் வெதும்பினார். அரசியலால் இவர்களுக்கு ஒரு தீர்வு வேண்டும் என்ற உள விருப்புக் கொண்டவராகக் காணப்பட்டார். 1952 ல் மலையகத் தமிழர்களின் வாக் குரிமை பறிக்கப்பட்டபோது அவர்களின் துயர்கண்டு உருவாக்கப்பட்ட இலங்கை தமிழரசுக் கட்சியில் இவர் இணைந்து கொண்டார். 1956ம் ஆண்டு திருகோண மலையில் நடைபெற்ற கட்சியின் பொதுக் கூட்டத்திற்கு கிளிநொச்சியிலிருந்து செயலர் அமரர் அமிர்தலிங்கம் அவர்களின் தலை மையில் நான்கு நாட்கள் நடந்து சென்று மகாநாட்டில் கலந்து கொண்டார்.

காடைத்தனமும், அச்சுறுத்தல்களும் நிறைந்து காணப்பட்ட கரைச்சிக் கிராம சபைக்கு 1957ல் காந்தீய அகிம்சை வழியில் தலைவரானார். எந்தவொரு தனிமனிதனை யும் தன் அரசியல் நடவடிக்கைகளால் உளரீதியாகவோ உடல் ரீதியாகவோ, பாதிக் காத பண்புசார்ந்த அரசியலை மேற்கொண் டார். எனக்கு அரசியலில் யாரும் எதிரி யில்லை சரியானதை சரியாகச் செய்வதில் அக்கறை காட்டுகின்றேன் என்ற மனப்பான் மையில் அவர் அரசியலுக்கு புது விளக்கம் கொடுத்தார். கொண்ட கொள்கையின் மீது இறுக்கமான பற்றுக்கொண்டவராகக் காணப்பட்ட இவர் அன்றிலிருந்து இன்றுவரை எங்களுக்கு குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கு சமஷ்டி முறைதான் தீர்வு என்பதில் அசையாத நம்பிக்கை உள்ளவராக அகில இலங்கை தமிழரசுக்கட்சியின் மீது பரிபூரணமான நம்பிக்கை கொண்டவராக தன் அரசியலை நெறிப்படுத்தி வந்தார்.

அவரது அரசியல் நடத்தையில் பல துன்பங்களை எதிர்நோக்க வேண்டியிருந்த போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் கொண்ட கொள்கையில் இம்மி அளவே னும் விலகாத விட்டுக்கொடுக்காத சால்பு அவருக்குரியதாகும். காலத்திற்கேற்ப வகை யில் பல சாதனைகளையும் நிலைநாட்டிய செயல் வீரனாகவும் திகழ்ந்தார்.

**கூட்டுறவு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் கூட்டுறவுச் சங்கங்கள் உச்சநிலை வளர்ச்சி அடைந்த பிரதேசம் யாழ்ப்பாணம் ஆகும். 1956 களை அண்மித்த காலத்தில் கூட்டுறவாளன் " என்று தம்மை சொல்லிக்கொள்வதில் பெருமை உள்ளவர் களாக மக்கள் இருந்தார்கள். இந்த அடிப்படை யில் திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்களும் 1956ம் ஆண்டுமுதல் 1994ம் ஆண்டுவரை உருத்திரபுரம் ஐக்கிய நாணய சங்கத்தின் தலைவராகவும் , செயலாளராகவும் இருந்து மிகப்பாரிய பங்காற்றினார். அக்காலத்தில் யாழ்ப்பாணம் ஐக்கிய நாணய சங்க சமாசத்தின் நிர்வாகி உறுப்பினராகவும் இருந்தார். ஐக்கிய நாணய சங்கங்கள் சிக்கன கூட்டுறவு சங்கமாக மாற்றப்பட்டபோது கிளிநொச்சி மாவட்டத் தலைவராகவும், அகில இலங்கை சிக்கன கூட்டுறவு சமாசத்தின் நிர்வாக உறுப்பின ராகவும் இருந்தார். கூட்டுறவு வங்கிகளை மக்கள் வங்கிகளுடன் இணைத்தபின் மக்கள் வங்கியின் பொதுச் சபை உறுப்பினராகவும் நிர்வாகச்சபை உறுப் பினராகவும் இருந்து அளப்பரிய சேவைகளை ஆற்றி உள்ளார்.

உருத்திரபுரம் ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராக இருந்தார். கரைச்சியில் உள்ள சங்கங்கள் அனைத்தையும் கரைச்சி வடக்கு கரைச்சி தெற்கு என பிரித்த காரணத்தினால் 1965ம் ஆண்டு முதல் 1994ம் ஆண்டு வரை கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கத்தின் இயக்குனர் சபை உறுப்பினராகவும் பின் தலைவராகவும் இருந்து சேவை செய்தார். கூட்டுறவுச் சங்கங்கள் எவ்வாறு சேவை செய்ய வேண்டும் என்பதை திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்கள் உதாரண புருஷராக நடத்திக் காட்டினார். தன்நேர்மையான நடத்தையாலும் உயர்ந்த பண்பாலும் சங்கப் பணிகள் சாதுரியமாக அமைய வழிசெய்து கொடுத்தார். இவரின் கூட்டுறவுக்காலத்தில் எத்தனையோ புதிய கிராமங்களில் கூட்டுறவுக் கடைகளை ஆரம்பித்து மக்களின் மனங்களில் இடம்பெற்று விட்டார்.

**பொதுச்சேவை**

மக்கள் சேவையே மகேசன் சேவை என்று விருப்புக்கொண்டிருந்த திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்கள் எந்தப் பிரதி பலனும் இல்லாது தான் வாழும் சமூகம் உயர்வடைய வேண்டும் என்ற நோக்கில் பொதுப்பணிகளில் ஈடுபட்டார். பொதுச் சேவைக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டுமானால் பரவலாக எல்லோராலுமே குறிப்பிடப்படுகின்ற பெயர் திரு.கா.நாகலிங்கம் அதிபருடையதாகத் தான் இருக்கும். திரு.சி.க. வேலாயுதப்பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்ட அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தில் தலைவராகவும் , செயலாள ராகவும் , நிர்வாக உறுப்பினராகவும் திரு.சி.க வேலாயுதப்பிள்ளை அவர்கள் காலமாகும் வரை திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்கள் கடமைபுரிந்தார். திரு. வேலாயுதப்பிள்ளை அவர்கள் இறையடி சேர்ந்த பின் காந்தி நிலையத்தில் வாழ்ந்த ஆதரவற்ற குழந்தை களின் விடுதியை பொறுப்பேற்று நடாத்தி வந்தார்.

உயர்திரு. கதிரவேலு அப்புஜீ அவர்கள் குருகுலத்தை ஆரம்பித்த போது அதன் உபதலைவராக தெரிவு செய்யப்பட்டார். அப்புஜீ அவர்கள் இயற்கை எய்தியபின் 1994ம் ஆண்டு வரை அதனைச் சிறப்பாக எந்தவொரு மனிதனதும் பிழையான விமர் சனத்திற்கு உள்ளாகாது தலைமையேற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடாத்தி வந்தார். இலங்கையின் குருகுலத்தை ஒத்த காந்திய வரதாக் கல்வித் திட்டத்தை முன்னெடுப்பதில் தன்னாலான உயர் பங்களிப்பை நல்கினார். குருகுலத்தைப் பார்த்து ஆதரவற்றோர். இல்லங்களை நடாத்துபவர்கள் என்று சொல்மளவிற்கு அந்த நிறுவனத்தை உயர் அந்தஸ்துடன் நடாத்தினார்.

1952ம் ஆண்டுமுதல் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தை உருவாக்கி அதன் செயலாளராக இருந்து ஒரு விளையாட்டுக் கழகத்தின் வகிபாகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைச் செய்து காட்டினார். இதன் உறுப்பினர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் மிகச்சிறந்த விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் என்ற பெயர் பெற்றார்கள். தற்புகழ்ச்சி இல்லாது, பெருமையில் நாட்டம் கொள்ளாது தன்னை விளையாட்டுக் கழகத்திற்கு அர்ப்பணித்து அவர் ஆற்றிய சேவை அக்காலத்தில் வாழ்ந்த பெரியவர்களால் இன்றும் போற்றப்படுகின்றது. தற்போதும் கூட அந்த விளையாட்டுக் கழகத்தின் போசகராக இருந்து அளப்பரிய பங்காற்றி வருகின்றார்.

உருத்திரபுரத்தில் சிரமதான சபை ஒன்றை உருவாக்கினார். மாதத்தில் இரண்டு நாட்கள் சிரமதானம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். எமது கிராமத்தை நாம் தானே தூய்மையாக வைத்திருக்க வேண்டும் . சிரமதானம் என்ற காந்தீய சிந்தனையில் அக்கறைகாட்டிய அவர் தானே முன்மாதிரியாக நின்று சிரமதான முயற்சிகளில் ஈடுபட்டார். உருத்திரபுரத்தில் எண்ணற்ற பொது நிலையங்கள் வளர்ச்சி அடைய இப் பெரியரின் பங்களிப்பு மிக முக்கியமாக இருந்தது எனக்குறிப்பிடலாம்.

அத்தோடு மட்டுமல்லாமல் உருத்திரபுரம் சனசமூக நிலையம் வாசிகசாலை ஆகிய வற்றை உருவாக்கி பொதுமக்களின் அறிவியல் கண்களை திறக்கச்செய்தார்.

1985ம் ஆண்டு வைகாசி 15ம் திகதி நெடுந்தீவு நடுக்கடலில் குமுதினிப் படகில் வைத்து கடற்படையினரால் 36பேர் வெட்டிக் கொல்லப்பட்டனர். உறவுகளின் இழப்பால் துயருற்ற மனதுடன் அவர்களுக்கு ஒரு நினைவுதூபி எழுப்பிட நெடுந்தீவின் மகாவித்தியாலய முன்னாள் அதிபர் இரா.சின்னத்தம்பி அவர்களின் தலைமையில் ஒருகுழு ஏற்படுத்தப்பட்டது. அந்தக் குழுவில் வன்னிப்பிரதேச பிரதிநிதியாக சேர்ந்து அல்லல்பட்டு ஆற்றாது நடுக்கடலில் மடிந்துபோன 36 பேருக்காகவும் மனம் வெதும்பி மக்களுக்கு விளக்கி நெடுந்தீவின் துறைமுகப் பகுதியில் ஒரு பெரிய தூபியை அமைப்பதற்கு தம்மாலான பங்களிப்பு முழுவதையும் நல்கினார். மற்றவர்களின் துயர் கண்டு துடிக்கும் உளப்பாங்குடன் வாழும் அவர் எல்லாப் பொதுப்பணியிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதைக் காணலாம்.

தான் குடும்பத்தினருடன் கனடா சென்ற தன் பிற்பாடும் தான் வாழ்ந்த உருத்திரபுரம் பிரதேசத்தின் மாணவர்கள் கற்றலில் பின் நிற்பதற்கு வறுமை காரணமாக இருக்க கூடாது என்ற மனோநிலையில் திறமை சாலிகளாக 5ம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் துலங்குவோர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேலான புள்ளிகளைப் பெறுவோர் ஆகியோரையும் இப்பிரதேசத் திலிருந்து ஆண்டு தோறும் பல்கலைக்கழத்தினுள் நுழைவோருக்கும் கொடுப்பனவுகள் வழங்கி பிரதேச கல்வி வளர்ச்சிக்கு உதவும் தூணாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்று பணியாற்றும் அதிபரின் பொதுச் சேவை குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல. தான் தன்குடும்பம், தம்வாழ்வு என்று சுய நலத்துள் சுருங்கிக்கொள்ளும் சமூக கட்டமைப்பு வளர்ந்துவரும் இன்றைய காலகட்டங்களை விட்டு கடல் கடந்து சென்ற போதும் தன் கிராமத்து மக்களை நேசிக்கும் அந்த உறவு மனம் நீடூழி வாழ வேண்டும் என்று ஒவ்வொருவரும் வாழ்த்த வேண்டும்.

ஆறுமுக நாவலர் அவர்கள் பிடிஅரிசி பெற்று கஞ்சித்தொட்டி வைத்து தமிழையும் சைவத்தையும் வீழவிடாது காத்தார்கள். எமது அதிபர் அவர்கள் சர்வோதயத்தின் சிரமதானப் பணியினால் ஈர்க்கப்பட்டு மாதம் ஒரு ரூபாய் அங்கத்தவர்களிடம் இருந்து பெற்று சிரமதானப் பணிக்கே அதனை செலவு செய்து கோவில்கள், பாடசாலைகள், மயானம், பாலங்கள், வீதிகள் போன்றவற்றைப் புனருத்தாரணம் செய்த அறப்பணிகள் அன்றும் இன்றும் பலராலும் பாராட்டப்படுகின்றது. மதமாற்றம் உச்ச நிலையில் காணப்பட்ட 1952 களை அண்மித்த காலப்பகுதியில் மகாதேவா ஆச்சிரமத்துடன் சேர்ந்து தமிழையும் சைவத்தையும் வளர்க்க அருந்தொண்டாற்றினார். திருநெறிக் கழகத்தை நிறுவி நாம் பிறந்த மதம், உலகத்தில் மூத்த மதம் , அன்பே சிவம் என்று போதித்த மதம், அறிவுக்கு வழிகாட்டிய மதம் அழிவுறாது பாதுகாப்பதில் ஆர்வத்தோடு செயற்பட்டார். அதில் பெருவெற்றியும் கண்டார்.

இத்தகைய பொதுப்பணிகளால் கிளிநொச்சி மாவட்டத்தின் பொதுப்பணிபற்றி ஆராயும் எவரும் அதிபர் உயர்திரு கா.நாகலிங்கம் அவர்களைப் புறந்தள்ளி விட்டு ஆராயமுடியாத அளவிற்கு தன் பெயரை ஆழப்பதித்துள்ளார்.

**பொருளாதாரம்**

சோர்வுற்று தொழில் இல்லை என்று சோம்பி இருப்பவர்களைத் தட்டி எழுப்பி "இலம் என்று சொல்லி இருப்பாரைக் காணின் நிலம் என்ற நல்லாள் நகும்" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க தன்னாலான வழி காட்டல்களை அக்கால இளைஞர், யுவதிகளுக்கு வழங்கினார். காந்திசேவா சங்கத்திலும் கஸ்தூரிபாய் இல்லத்திலும் அப்பளத் தொழிற்சாலை , நெசவுத் தொழிற்சாலை என்பவற்றை ஏற்படுத்திய பெரியார்களுடன் இணைந்து மிகப்பெரிய அளவில் செயலாற்றினார். அத்தோடு கோணாவில் ஆச்சிரமத் திற்குரிய காணியில் தச்சுத் தொழிற்சாலையும் உருத்திரபுரத்தில் தும்புத்தொழிற்சாலையும் ஏற்படுத்தி .இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்பை வழங்கினார்.

அத்துடன் தான் கரைச்சிக் கிராம சபை அக்கிராசனராக இருந்த காலத்திலும் கரைச்சி தெற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைவராக இருந்த காலத்திலும் நூற்றுக்கணக்கான ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வாய்ப்பை பெற்றுக்கொடுத்தார். குருகுல அச்சகத்தில் அப்புஜீ அவர்களுடன் இணைந்து பலர் வேலை செய்வதற்கு வாய்ப்பை வழங்கினார். எங்கெங்கு வறுமை நிலையில் இளைஞர்கள் காணப்பட்டார்களோ அவர்களுக்கு முறையான ஆலோசனைகளும் வழிகாட்ட லும் வழங்கி அவர்களை நல்வழிப்படுத்திய பெருமை அதிபர் அவர்களுக்கு நிறையவே உண்டு

**சந்தோஷத்திற்காக**

மாணவர்கள் , ஆசிரியர்களை பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் சென்று அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களின் சந்தோசப்படுத்தலை மன நிறை வாகக் கொள்வார். சிவனொளிபாத மலைக்கு இரண்டு முறை மலை உச்சிக்கு நடந்து சென்று தனது சந்தோசத்துடன் உடன் சென்றோரையும் மிகவும் சந்தோசப்பட வைத்தார். 1957ம் ஆண்டு திரு. குமாரவேலு ஆசிரியர் அவர்களுடன் சேர்ந்து பதினான்கு (14) நாட்கள் 840 மைல் தூரத்தை துவிச்சக்கரவண்டி மூலம் பிரயாணம் செய்து கிளிநொச்சியிலிருந்து பூநகரி ஊடாக மன்னார் , மதவாச்சி, அநுராதபுரம், புத்தளம், ராஜகடளுவ, கொழும்பு, காலி, மாத்தறை அம்பாந்தோட்டை, கதிர்காமம், வெள்ளவாய, போத்துவில், திருக்கோயில், மட்டக்களப்பு , வாகரை ,திருகோணமலை , ஓமந்தை ஆகிய இடங்களில் தங்கி கிளிநொச்சி திரும்பினார் கள். உண்மையில் இந்தப் பிரயாணம் இலங்கையைச் சுற்றி வந்தது மட்டுமல்ல ஒவ்வொரு இடத்திலுள்ளவர்களின் வாழ்க்கை முறை , சமூகப் பொருளாதார நிலைமைகளை அவதானித்து தனது பிரதேச மக்களுக்கு என்ன செய்யலாம் என்ற உள ஆர்வத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. அதன் பின் அவரது சேவையில் ஆர்வம் பல மடங்காக அதிகரித்து. பொழுது போக்கிலும் கூட கற்றுக்கொள்ளும் திறன் அவரிடம் காணப்பட்ட காணப்படுகின்ற சிறப்பம்சமாகும். மாணவர்களையும் சக ஆசிரியர்களையும் சேர்த்துக்கொண்டு சுற்றுலா செல்லும் போது ஆசிரியர் மாணவர் உறவு, அதிபர், ஆசிரியர் உறவு என்பவை இறுக்கமடையும் , அதிகார வர்க்கம் என்கின்ற " பணிக்குழு" முறைமையில் அலுவலகங்களில் இருந்து விட்டு சுற்றுலாக் கள் செல்லும்போது ஒவ்வொரு மனிதனி டமும் காணப்படும் மனிதாபிமானத்தை அறியக்கூடியதாக இருக்கும். ஒருவருக் கொருவர் உதவி ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டி வாழுகின்ற மானிட வாழ்வை அவர் விரும்பி ஏற்றுக்கொண்டார். அதில் அவர் பெருவெற்றியும் கண்டார்.

**குடும்ப வாழ்க்கை**

ஒரு ஆளுமையாளரின் வெற்றிக்குப் பின் அவரது குடும்பம் இருப்பதை அறிந்து கொள்ள முடியும். குடும்ப உறுப்பினர்களின் பூரண ஆதரவே ஒரு சமூகவாளனை, ஒரு ஆத்மீக வாதியை, ஒரு பண்பாளனைப் புடம்போட்டு வெளிப்படுத்தி நிற்கின்றது. அதனால்தான் வள்ளுவன் இல்வாழ்வான் பற்றி ஒரு சிறப்பான அதிகாரம் வைத்தார். தானும் வாழ்ந்து , தன் குடும்பமும் வாழ்ந்து சுற்றத்தையும் வாழவைக்கும் இயல்பு சிறந்த இல்வாழ்வானுக்குரியதாகும். அந்த அடிப்படையில் தன் 27 வது வயதில் அதிபர் கார்த்திகேசு நாகலிங்கம் அவர்கள் தன் இல்லற வாழ்வில் நுழைந்தார்.

சமூக மதிப்பு மிக்கவர்களாக அக்காலத்தில் விளங்கிய இராமநாதர் வைத்திலிங்கம், வைத்திலிங்கம் நாகாத்தைப்பிள்ளை ஆகியோரின் புதல்வி செல்வி குணநாயகி அவர்களை 26.08.1957 ல் தமிழ்முறைப்படி திருக்குறள் ஓதி தேவார பாராயணங்கள் ஓதி தமிழ்த்திருமணமாக உருத்திரபுரத்தில் நடந்தேறியது. பிராமணரைக் கொண்டு திருமணம் நிகழ்த்தக் கூடாது என்ற கொள்கையிலும், தமிழரின் பாரம்பரிய கொள்கைப்படியே தனது திருமணம் நிகழவேண்டும் என்பதிலும் மிகவும் பிடிவாதமாக இருந்தார். பண்பாலும் பழக்க வக்கத்தாலும் அயலவரை அணைத்து நடக்கும் திறந்தாலும் பேசும் வார்த்தை களாலும் அதிபர் நாகலிங்கம் அவர்களுக் கென்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைக்கப்பட்டவராக குணநாயகி அம்மையார் விளங்கினார். அதிபர் நாகலிங்கம் - குணநாயகி தம்பதிகளின் நல்லறத்தின் வழி ஆறு குழந்தைகளை அவர்கள் பெற்றெடுத் தனர்.

அவர்களின் முதல் பெண் முத்தாக 26.11.1958ல் ரதி பிறந்தார். செல்லக் குழந்தையாய் உற்றார் உறவினர் அனை வருக்கும் ஆசைக்குழந்தையாய் வாழ்ந்த ரதி மிகச் சிறப்பாகக் கல்விகற்று தேறி கிளி நொச்சி பிரதேச செயலகத்தில் உயர்பதவி வகித்துக்கொண்டிருக்கும் காலத்தில் இலங் கையில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக தாய் தந்தையருடன் கனடா நாடு சென்றார். அங்கு சின்னராசா பாலசுப்பிரமணியம் எனும் அன்பிற்கினியவரை மணமுடித்து மிகச்சிறப் புடன் கனடாவில் அரச சேவையாற்றி வாழ்ந்து வருகின்றார். மங்கலம் என்ற மனைமாட்சி யின் அடையாளமாய் நன்கலன்களாக கோகுல், கபில் ஆகிய இரு மக்களைப் பெற் றெடுத்தார். அதிபர் நாகலிங்கம் அவர்களின் எல்லாம் நல்ல குணங்களையும் தன்னகத்தே கொண்ட " ரதி " எல்லோருடனும் அன்பாகப் பழகி தன் உறவினரையும் , சுற்றத்தாரையும் , அயலவரையும் அரவணைத்து வாழும் வாழ்க்கையும், எதையாவது கண்டிக்க வேண்டியவரின் காய்தல் உவத்தலின்றி கண்டித்து சரியானதை தேர்ந்து சரி என்று சொல்கின்ற நேர்மைத்தன்மையும், எல்லோ ராலும் பாராட்டப்படவேண்டியதாகும். இத னால் தான் அவரின் தாயார் "ரதி" அவர் களை அப்பாப்பிள்ளை என்று அடிக்கடி சொல் வதை அவதானிக்கலாம்.

இவருக்கு அடுத்த பிள்ளையாக 17.10.1961ல் லதா பிறந்தார். சிறப்புடன் கல்வி கற்று விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியையாகி கிளி / மத்திய கல்லூரியிலும், உருத்திரபுரம் இந்துக்கல்லூரியிலும் கற்பித்து சிறந்த விஞ்ஞான ஆசிரியை என்ற நற்பெயரைப் பெற்றார். மாணவர் மையக் கல்வியில் ஆர்வம் காட்டிய இவர் தன்னிடம் கல்விகற்ற எல்லா மாணவர்களாலும் விரும்பப்பட்ட ஒரு சிறந்த ஆசிரியையாகவும், இவரிடம் கல்வி கற்ற பல மாணவர்கள் வைத்தியர்களாக , எந்திரிகளாக மற்றும் உயர் நிலைகளில் பலர் உள்ளதைக் காணலாம்.

இவர் மார்க்கண்டு மோட்சலிங்கம் என்கின்ற பட்டதாரி ஆசிரியர் அவர்களைத் திருமணம் செய்து ஷனாதனன், மிதுஜா, பவிந்தி என்ற மூன்று குழந்தைகளைப் பெற்றெடுத்து மிகச் சந்தோசமாக வாழு கின்றார். இவர்களையும் கொடிய யுத்தம் கனடா வரை துரத்திவிட்டது. பல்துறை ஆளுமையாளர்களைத் தமிழ் சமூகம் இழந்ததற்கு இவர்களும் ஒரு நல்ல உதாரண மாகும். இருந்தபோதும் தாம் வாழ்ந்த சூழலோடு வாஞ்சையுடன் தொடர்புகொண்டு தம்மால் இயலக்கூடியவை எல்லாவற்றையும் செய்துகொண்டிருக்கும் அவர்களின் பணி பாராட்டுதற்குரியதாகும்.

இரு பெண்குழந்தைகளின் பின் இறைவன் அருட்கடாட்சத்தால் 10.08.1964ல் குணசேகர் என்ற ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தனர். குணசேகர் மிகச் சிறப்புடன் கல்வி பயின்று பன்முக நுண்மதியுடன் விளங்கினார். அன்பாகப் பேசி அயலவருடன் பழகுவதில் தந்தையை விஞ்சியவராகக் காணப்பட்டார். கால் பந்துப் பிரியரான இவர் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தின் மிகமுக்கிய பங்காளராயும், பணியாளராயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை மாற்றிக்கொண்டு அதன் வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தார். திருமண வயதில் சுஜாத்தா என்பவரை திருமணம் செய்து சுரேன் என்ற குழந்தை யுடன் கனடாவில் சந்தோசமாக வாழ்ந்து வருகின்றார். தந்தையார் போல் தான் வாழ்ந்த உருத்திரபுரம் பிரதேசத்தின் அபிவிருத்தியில் மிக ஆர்வத்துடன் உழைத்து வருகின்றார். உருத்திரபுரம் அபிவிருத்தி கழகத்தின் தாய்ச்சங்கமாக கனடாவில் இயங்கும் கனடா அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவராக பல ஆண்டுகள் இருந்து பணி யாற்றி எம் பிரதேச மாணவர்களின் கல்விப் பணிக்கு தன்னாலானவற்றை எல்லாம் செய்துள்ளார். இவரை ஒத்த வயதினர் தாம் சென்ற நாடுகளில் சொந்தக் கலாசாரத்தை தொலைத்துவிட்டு நிற்கும் போது தான் பிறந்து வளர்ந்த கிளிநொச்சியின் மண்வாசனையை தாம் செல்லும் இடமெல் லாம் எடுத்துச் செல்லும் தம்பி குணசேகர் வாழ்த்திற் குரியவர்.

அதிபர் நாகலிங்கம்- குணநாயகி தம்பதிகளின் நான்காவது குழந்தையாக ஜெயா 01.08.1969ல் பிறந்தார். முறைப்படி கல்வியைக் கற்ற இவர்கள் சங்கீதத்தில் ஆர்வங்கொண்டு கற்று பல்கலைக்கழகம் வரை சென்று தனது பட்டப்படிப்பை முடித்தார். இவர் தனது பெற்றோருடன் கனடா சென்று அங்கு இராசையா - நாகேஸ்வரன் என்பவ ரைத் திருமணம் செய்து ஆரபி, சுருதி என இருகுழந்தைகளைப் பெற்று சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றார். பெற்றோர்கள் போல் உற்றார் உறவினர் சுற்றத்தாரை அரவ ணைத்து கனடாவில் ஜெயா குடும்பம் சந்தோச மாக வாழுகின்றது.

இவர்களின் ஐந்தாவது குழந்தையாக 02.02.1971ல் சுதா பிறந்தார். இவர் முறைப்படி கல்வியைக் கற்று க.பொ.த உயர்தரம் படித்துக் கொண்டிருக்கும் போது பெற்றோருடன் கனடா செல்லும் படி ஏற்பட்டு விட்டது. இவர் உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தின் ஒரு சிறந்த வீராங்கனை என்பதும் குறிப்பிடக் கூடியது. இவர் கனடாவில் இளையதம்பி ஐங்கரன் என்பவரைத் திரு மணம் செய்து கவின், ஷரிணி என்ற இரண்டு குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வருகின்றார். பெற்றோரின் செல்லமகளாக அன்பு மகளாக அவர்களின் குணங்களைக் கொண்ட மகளாக தாய்நாட்டுப் பற்றுடன் வாழும் இவரது பணி பாராட்டத்தக்கது.

6வது குழந்தையாக 04.10.1973ல் ஜெயசேகர் பிறந்தார். இவர் மிகச் சிறப்புடன் கல்வி கற்றதுடன் இணைப்பாட விதான செயல்பாடுகளில் சிறந்து விளங்கினார். உருத்திரபுரம் விளையாட்டுக்கழகத்தின் முக்கிய பங்காளராக விளையாட்டு வீரராகக் விளங்கினார். யுத்தத்தினால் இடம்பெயர்ந்து பெற்றோருடன் கனடா சென்ற இவர் அங்கு சாருமதி என்பவரைத் திருமணம் செய்து இலக்கியா, அகல்யா ஆகிய இரு குழந்தை களைப் பெற்று இன்பமாக வாழ்கின்றார். தந்தையாரின் வழிநின்று உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகத்தின் பணிகளுக்கு உதவிகொண்டிருக்கும் அவரின் சேவை பாராட்டுதற்குரியதாகும்.

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்

என்பார் வள்ளுவனார் அதிபர் நாகலிங்கம் - குணநாயகி தம்பதிகளின் பிள்ளைகள் அனைவரும் மிகச் சிறப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் வாழ்க்கை அதற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. எல்லா முயற்சிகளிலுமே அதிபருக்கு பின்புலமாக நின்று அவரைத் துலங்கச் செய்த பெருமை திருமதி குணநாயகி அம்மா அவர்களையே சாரும். திரு.கா.நாகலிங்கம் அதிபர் வாழ்த்தப்படு கின்றார். புகழப்படுகின்றார். என்றால் அத்தோடு பிள்ளைகள் யாவரும் போற்ற சிறப்பாக இருக்கின்றார்கள் என்றால் இச் சிறப்பான வாழ்விற்கு வழிகாட்டியாக தாயார் திருமதி குணநாயகி அம்மாவின் வகிபாகம் குறைந்து மதிப்பிடக் கூடியதன்று.

வாழும் போது கௌரவிக்கும் எமது முன்னாள் அதிபர் கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களின் முழு ஆளுமைத் தன்மையும் வெளிப்படுவதற்கு தன்னாலான எல்லா உதவிகளையும் நல்கிக் கொண்டிருந்த, இப்பொழுதும் நல்கிக்கொண்டிருக்கும் அம்மையார் திருமதி குணநாயகி நாகலிங்கம் அவர்களும் இவ்விடத்தில் வாழும்போது வாழ்த்தப்பட வேண்டிய வராவார்.

**"நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம்"**

என்பான் கண்ணதாசன் பல்கலைக் கழகமாக ஒற்றுமையுடன் ஒத்த குறிக் கோளுடன் தான் வாழ்ந்த பிரதேசத்தை நேசிக்கும் நீங்கள் ஒவ்வொருவரும் நீடூழி வாழவேண்டும் என்று இறையாசியை வேண்டுகின்றோம்.

நன்றி


---

**திரு.மா.பேரம்பலம்**
பொருளாளர்
உருத்திரபுரம் அபிவிருத்திக்கழகம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உருத்திரபுரத்தின் ஒவ்வோர் மனங்களும்
விரும்புடன் வாழ்த்தும் வியத்தகு மாந்தன்
கருத்துடன் வாழ்ந்து கண்ணியமாக
அரும் பணியாற்றும் அற்புதமனிதன்

வாழ்வும் வார்த்தையும் இரண்டறக்கலந்து
வையம் தன்னில் வாழ்வாங்கு வாழ்பவர்
தாழ்வுச் சிக்கல் , தன்னலம் இன்மை
தன்பெரும் குணமாய் கொண்ட மா மனிதன்

ஆளுமை , ஆற்றல், அறிவும் திறனும்
அதனிலும் மேலாய் நல் மனப்பாங்கும்
சூழும் சமூகப் பற்றோடு பல்துறை
வியாபகராக விளங்கிடும் ஆசான்

# நற்பணிகள் ஆற்றும் நல்லாசான் நாகலிங்கம்



எல்லோர் மனங்களும் ஏற்றுக்கொள்ளும்
வல்லான் இவரின் பணிகள் இவ்வூரில்
சொல்லார் சொல்லில் சொன்னதைச் செய்வார்
எல்லாப் பணியிலும் இவர் எம் முதல்வர்

அன்று தொட்டு இன்று வரையிலும்
நன்றே பணிகள் நல்கிடும் நல்லோன்
என்றும் நன்றாய் குடும்பத்தோடு
நின்று நிலைத்து நீண்ட நல்லாயுள்
பெற்றிட வாழ்த்தினோம்

கிராம சபைதனில், கீர்த்திமிக்க
கிராம பிதாவாய் பல பணியாற்றியோன்
சிரமதானங்கள் சிறப்பாய் எங்கும்
சிரமம் இன்றி கிராமமாய் செய்தவர்
கரம் பல இணைத்து கண்ணியமாக
காரிய மாற்றிடும் காந்தியவாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரம் இவர் எங்கள் கிராமத்தின் வாத்தியார்
வாழ்க்கை நெறிமுறைகாட்டிய வித்தகர்
அறப்பணியோடு ஆலயப்பணியும்
அன்னதானமும் அருள்பணியாக
சிறப்பாய் இந்த ஊரின் முதல்வராய்
சிந்தனையோடு செயல்படுவீரர்

மறக்காதிந்த மகாத்மா காந்தியை
மாவட்டம் போற்றும் நல்லதோர் உத்தமர்
நறுக்காய் பேசும் வல்லமை அறிந்தவர்
பொறுக்கார் எதிலும் களவினை மட்டும்

வெறுக்கார் எவரும் இவரது உள்ளம்
வெள்ளை வேட்டிபோல் உள்ளமும் வெள்ளை
பொறுப்பாய் நின்று எதிலும் பொறுமையாய்
பொதுப்பணி பலதிலும் போற்றிட வாழ்பவர்

சறுக்கார் நல்ல கடமைகள் யாவிலும்
சாதனை படைத்திடும் சத்திய வரனிவர்
மறுக்கார் இங்கே மக்கள் பணி எனில்
மனநிறைவோடு மகிழ்வொடு உழைப்பவர்

பன்முக வியாபகர் பரந்த நல்லாற்றலர்
இன்முக இன் சொலர் ஈகையின் வள்ளலர்
பொன்மனச் செம்மலர், பொறுமையின் காவலர்
அன்பினில் சிவனிவர் அனைவரின் நெஞ்சிவர்

நற்பணி நாயகர், நம் உளம் நிறைபவர்
உற்ற நல் சேவையர் உதவிடும் பாங்கினர்
மற்றவர் போற்றிடும் மாசிலா மாதவர்
கற்றவர் காமுறும் கலங்கரை விளக்கிவர்

உருத்திரபுமெனும் உன்னத ஊரிது
கருத்துடன் வாழ்ந்திடும் கமத்தொழில்
உழவர்கள்
வருத்திடும் உடல்வலி உழைத்திடும்
மாந்தர்கள்
விருப்புடன் போற்றிடும் வியத்தகு நாயகர்.

தரமாய் வாழும் தனித்துவம் மிக்கவோர்
தன்னிலை தளரா தனிக்பெரும் தலைவர்
உரமாய் இந்த ஊருக்காக
உயிராய் உழைக்கும் உன்னத மனிதர்
மரமாய் வாழும் மனிதர்கள் மத்தியில்
வரமாய் வந்த தெய்வக் கொடையிவர்
சிரமும் கரமும் இணைத்து எம் இதயம்
இந்த மாமனிதனை சிந்தையில் வாழ்த்துது

அச்சம் அறியா ஆழ்ந்த நற்பார்வை
அன்பு கலந்த அழகிய புன்னகை
மெச்சும் மேன்மைப் பண்புகள் மிகுந்த
இச்சைகள் இல்லா இனியதோர் இறையிவர்

கொச்சையற்ற வார்த்தைகளாலே
நச்சர்கள் தன்னையும் தன் வசமாக்கிடும்
அச்சம் நிறைந்த உயர் பண்பாளர்
உள்ளங்கள் தோறும் வாழ்ந்திடும் அன்பினர்
கச்சைகட்டி முகட்டிலும் ஏறி
கச்சிதமாய் பல காரியமாற்றிடும்
அச்சமறியா அதிசய மாந்தனை
நிச்சயம் கிளிநொச்சியும் வாழ்த்திது.

பொருள்திரட்ட வேண்டும்மெனும் ஆவல்
கொண்டோ
புகழ்சேர்க்க வேண்டுமெனும் நோக்கத்தோடோ
வரும் பதவி விருதுகளை மனதில் வைத்தோ
வளர்ந்தவரோ இல்லை இல்லை இவர் தான்
இங்கே
இருள்நிறைந்த சமூகத்தின் துயரம் தீர்க்க
இதயத்தால் இவர் குடும்பம் இணைந்தே
நின்றார்
ஒருநோக்கு பொதுநோக்கு என்று வாழ்ந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கி வைத்தவைகள் சொல்லிடங்கா

வரமாக வந்த மனையாளோ நல்லாள்
தரமான பணிகளுக்கு உதவி நின்றாள்
கரம் கோர்த்து காரியங்கள் பலவும் செய்து
சிரம் தாழ்த்த வைத்த குண நாயகியாள்
உரமான நெஞ்சுறுதி எதிலும் நேர்மை
உத்தமியாள் இவர் உயர்வுக்குக்கெல்லாமானாள்
அக்கா என்றார்கள் அழைக்க வாய்த்தாள்
பக்க பலமாக நிற்கும் பிள்ளைச் செல்வ
பாக்கியங்கள் பெற்றெடுத்துப் பழக்க வைத்தார்
தக்க சபை நடுவினிலே சான்றோராக
தகமை பல பெற்றவர்கள் உயரவைத்தார்
பக்கத்து வீடெமக்கு என்பதாலே
பாக்கியங்கள் செய்தவர், நாம் என்று அறிவோம்
இக்கவிதை பாடுமொரு பாக்கியத்தை
தந்த பேரிறைவனுக்கு, தலைகள் தாழ்த்தி
வைக்கின்றேன் வணக்கங்கள் – வாழ்க வாழ்க.

உருத்திரபுரத்தின் உதயசூரியன்
உலகம்முழுக்க வியக்கும் ஆதவன்
கருத்துடன் வாழும் கண்ணியவானை
காலம் முழுக்க வாழ்த்துதல் நலமே.

உம் சித்தத்துள் இச் சிற்றூரைத்
தத்தெடுத்த உத்தமரே!
வித்தகராய் இவ்வூரை விளைவித்தீர்
அறிவினிலே!
புத்தகங்கள் பல சேர்த்து
நூலகங்கள் தந்தவரே!
நித்தம் எம் நிலங்களிலே நல்லவற்றை
விளைவிக்க வைத்தவரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதவிகளால் மனிதர்கள் மேன்மை பெற்றனர்**
**இந்த மனிதனால் பதவிகள் மேன்மை பெற்றன**


முற்றத்தரங்கினிலே
விளையாட வைத்தவரே!
சுற்றமாய் கூட்டுறவாய்
வாழ வழி வகுத்தவரே!
பற்றோடு பல சங்கப்
பாதை வளர்த்தவரே!
சற்றேனும் இவ்வூரின்
சிந்தனைகள் மாறமல்
நற்பணிகள் ஆற்றுகிற
நல்லாசன் வாழியவே
சித்தமெலாம் உம் நினைவில்
சிரம் தாழ்த்தி வணங்குகிறோம்

மருநிலத்தெழு மாமணி விருதினை
பொருத்தமாய்க் கொண்ட பொன் மனச்செம்மலை
உருத்திரபுரமிது உவகையாய் வாழ்த்திது
விருப்புடன் இங்கிவ் விழாவெடுத்தது
இச்சையுடன் இவ்வூரார் விழாவெடுக்கும் வேளையிது
நற்செய்கை நாயகனார் நாகலிங்கச் செம்மலுக்கு
இச்சமயம் எம்மிதயப் 'பா'சரங்கள்
உச்சமாய் வைத்தேன்
உயர்விருதாய் அவர் பாதம்
வாழும் போதே எமை வாழ்விக்கும் மாந்தனை
வாழும் போதே வாழ்த்திடும் விழாவிது
பெருத்த விழாவிது பேசும் நாளிது
வருத்தமிலாது அனைவரும் கூடியே
வாழும் போதே வாழ்த்தும் விழாவிது
உருத்திரபுரத்தின் உன்னத விழாவிது
உண்மை விழாவிது
உபரியல்லவே
வாழும் போதே வாழ்த்தும் மனிதனாய்
ஆளும் அன்பினால் ஆண்ட அரசனை
நீளும் ஆயுளும் நிறைந்த நல்லாசியும்
சூளும் குடும்பமாய் வாழ்க பல்லாண்டுகள்
வாழ்க வளமுடன் மேகம் தொட்டு
வானம் வசப்படும்.

பணிவுடன் வாழ்த்தும்
**கு.க. கணேசலிங்கம்**
மேனாள் வேளாண் பண்ணை
மேலாளர்
(பயிற்சி)
ஆனந்தம் பண்ணை, உருத்திரபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



" நல்லாரைக் காண்பதுவும்
நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும்
நன்றே
நல்லார் குணங்கள்
உரைப்பதுவும் நன்றே
அவரோடிணங்கியிருப்பதுவும்
நன்று "
என்பது ஔவையார்
கூற்றாகும்.



நல்லவரைச் சந்திப்பது அவரின் கருத்துக்களைக் கேட்பது, அந்த நல்லவரின் குணங்களைப்பற்றி மகிழ்வுடன் பேசுவது, அவர்களின் அன்புக்கு பாத்திரமாகியிருப்பது, என்பது நமது வாழ்வை சீர்மைப்படுத்திக் கொள்வதற்கான வழி என்பது மூதுரையின் கருத்தாகும். இந்த வழியிலே அன்பிற்கும் மதிப்பிற்குரியவர்கள் வரிசையிலே கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் முன்னைநாள் அதிபர் உயர்திரு. கா.நாகலிங்கம் அவர்களைக் காண்கின்றேன்.

# வேரோடு விழுதுவிட்ட விருட்சமாய்...!

இவ்வுலகத்தில் பல்லாயிரக்கணக்கான மனிதர்கள் பிறக்கின்றர்கள் இறக்கின்றார்கள். அவர்களுள் நாம் ஒரு சிலரைப் பற்றி மாத்திரம் சிந்திக்கிறோம். அந்த வகையில் முன்மாதிரியாக வாழ்ந்து, சமூகத்திற்கு அளப்பரிய சேவைகள் செய்த உத்தமனை "வாழும் போதே வாழ்த்துதல்" சாலச்சிறந்ததாகும்.

நான் ஆசிரியராகக் கடைமையாற்றுவதற்காக முதல் நியமனம் கிடைத்து பாடசாலைக்கு காலடி எடுத்துவவைத்த காலத்தில் அவரிடம் கற்றுக்கொண்ட பாடங்கள் ஏராளம் ஏராளம். அவற்றின் சில துளிகளை, உணர்வுகளை இம் மலரினூடாக பகிர்ந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

அதிபர் அவர்கள் கையில் கைக்கடிகாரம் அணியாத வேளையிலும் உரிய நேரத்தில் பாடசாலைக்கு சமூகமளித்து ஆசிரியர் வரவுப்பதிவேட்டில் சரியான நேரத்தை இடுவது எம் எல்லோரையும் ஆச்சரியமூட்டும் ஒரு விடயமாகும். தினமும் வீட்டில் இருந்து உரிய நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறப்பட்டு பாடசாலையில் முதற்கையொப்பம் இடுவதும், சரியான நேரத்தைப் பதிவதும், நேர முகாமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அதிபர் எனலாம். பாடசாலை ஆசிரியர்களை அன்பாக அழைப்பது என்பது அவரிடம் காணப்பட்ட நற்பண்புகளுள் ஒன்றாகும். குறிப்பாக நான் ஆசிரியர் கடமைக்கு முதல் நாள் சென்ற போது எனது பெயர் சொல்லி அழைக்காமல் "தம்பி" என்று அழைத்தது இன்றும் என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. மேலும் இன்னுமொரு துளியாக 1990 ம் ஆண்டு பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தை தலைமையேற்று நடைபெற்ற வேளையில் நிர்வாகசபை உறுப்பினர் ஒருவர் கூட்டத்தில் எழுந்து ஒரு ஆசிரியரின் பெயரைச் சொல்லி அவ்வாசிரியர் கற்பிக்கவில்லை என்று அவ்வாசிரியரை விமர்சனம் செய்த போது " ஆசிரியரை விமர்சனம் செய்யக்கூடாது" எனத் தடுத்து, அவ்வாறு விமர்சித்தால் அவரது கற்பித்தல் மேலும் பாதிப்படையும் என்று கூறிய கூற்று எனது அதிபர் சேவைக்கு வழிகாட்டியாக அமைந்துள்ளது எனக் கூறினால் மிகையாகாது.

எமது அதிபரின் செயற்றிறன் பற்றி நோக்குவோமாயின், தன் அலுவலக அறையில் இருந்துகொண்டே சகல விடயங்களையும் தன்னந்தனியாக சரிவர செய்வது மட்டுமன்றி அலுவலகத்தில் கோவைகளை, ஆவணங்களை எக் காலத்திலும் எந்நேரத்திலும் எவருடைய உதவியும் இன்றி கையாளும் வல்லமை படைத்த முகாமையாளன், நிர்வாகி, கணக்காளன் எனப் பல பெயர் சூட்டுவது மிகப் பொருத்தமானதாகும். மேலும் கிளிநொச்சி மாவட்ட முன்னைநாள் கல்விப்பணிப்பாளர் உயர்திரு.க. கந்தசாமி ஐயா அவர்கள் தனது ஆய்வுக்கட்டுரையில் நான் கண்ட சிறந்த அதிபர் வரிசையில் யாழ் மாவட்ட ஒரு சில அதிபரைக்குறிப்பிட்டு, கிளிநொச்சி மாவட்டத்தில் சிறந்த அதிபர் உயர்திரு. கா. நாகலிங்கம் என தனது கட்டுரையில் சுட்டிக்காட்டியமை அவருடைய ஆளுமைப் பண்பிற்கு மேலும் வலுச்சேர்த்துள்ளது. அவருடைய நிமிர்ந்த நடை, வெள்ளை உடை, கள்ளமில்லா வெள்ளை மனம் அத்துடன் பள்ளி விழாக்களில் நாயகனாய், ப்றி (Free) பாட வேளைகளில் ஆசிரியனாய், மைதானத் தில் கிரிக்கட் வீரனாய், ஆலயங்களில் பக்தனாய், நிர்வாகக் கடமைகளில் அதிப ராய், நல்ல தொடர்பாடலாளனாய், கூட்டுறவு சங்கங்களின் தலைவராய், விளையாட்டுக் கழகங்களில் போசகராய், முன்மாதிரியான மனிதனாய் திகழ்ந்ததை கிளிநொச்சி மாவட்டம் கண்டு வியந்து கொண்டது.

இவருடைய செயற்பாடுகளில் மட்டுமல்ல பெயரிலும் தனித்துவம் காணப்படுகின்றது. தமிழில் லிங்கம் உறுதியானது, முதன்மை யானது, முழுமுதற்கடவுள், போற்றுவதற் குரியது போன்ற பல வடிவங்கள் எடுத்தது போல ஆங்கிலத்திலும் அவரது பெயரின் எழுத்துக்கள் பல்வேறு சிறப்புக்களைக் கூறி நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் உருத்திரபுரம் மகாவித்தியாலயம் மட்டுமல்ல மாணிக்கப்பிள்ளையார் ஆலய வளர்ச்சிக்கும் பெரிதும் பங்காற்றியவர். புல வருட காலமாக மாணிக்கப்பிள்ளையார் ஆலய பரிபாலனசபையின் தலைவராகப் பணியாற்றியவர். அவருடைய தலைமையின் கீழ் பல வருடங்களாக செலலாளர், பொருளாளர் வேலைகளைக் கூட எங்களுடன் இணைந்து செயற்படுவது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரையும் ஆச்சரியப்படுத்தும் குறிப்பாக பற்றுச்சீட்டுப் போட்டால் அதன் புத்தகத்தில் சரியான தொகைப்பணம் இருப்பது மாத்திர மல்லாமல் உடனுக்குடன் காசேட்டில் பதியும் வழக்கம் மற்றவர்களைக் கவர்ந்தெடுக்கும்.

முன்னைய காலங்களில் குறிப்பாக 1980 ம் ஆண்டுகளில் மாணிக்கப்பிள்ளையாரின் வருடாந்த மகோற்சவ காலத்தில் பெரிய கொட்டகைகள் போடுவது வழக்கமாக இருந்தது. பெரிய கப்பு நட்டு தடிகளினால் பந்தல் போட்டு கிடுகினால் மேய்வது வழக்கம். இந்த கொட்டகை அமைப்பதற்கு உருத்திரபுர விளையாட்டுக்கழக உறுப்பினர்கள் உதவி செய்வது வழக்கமாக இருந்தது. கப்பை நட்டு தடி கட்டுவதற்கு இளைஞர்கள் தயங்கிக் கொண்டிருந்த வேளையில் அந்த உயரமான கப்பில் அதிபர் அவர்கள் ஏறி தடி கட்டிய சம்பவம் எம் உள்ளத்தை அதிர வைத்தது. இவர் ஏறி தடி கட்டத் தொடங்கியதும் இதனை பார்த்துக்கொண்டிருந்த விளையாட்டுக்கழக இளைஞர்கள் தாங்களும் ஏறிக் கட்டத் தொடங்கி விட்டார்கள். இவ்வாறான சுவை யான சம்பவங்கள் என் மனதில் இன்றும் "முன்மாதிரியான செயல்வீரன்" என்பதை எடுத்துக்காட்டி நிற்கின்றது.

நாம் வீட்டிற்குச் செல்லும் பொழுது எல்லோரையும் இன்முகத்துடன் வரவேற்று விருந்தோம்பல் செய்யும் வழக்கம் இவருடைய பாரியாருக்குரியதாகும். அவரது பெயருக்கு அமைவாக குணத்தின் நாயகியாக விளங்கும் குணநாயகி அக்கா . அவரது செயல்களுக்கெல்லாம் தோள் கொடுப்பது இனிமையான ஒரு குடும்பம் என்பதற்கு எடுத்துக்காட்டாகும்.

"இல்லது என் இல்லவள் மாண்பானால்
உள்ளது என் இல்லவள் மாணாக்கடை"

என்பதற்கிணங்க இவர் தம் துணைவியார் அமைந்துள்ளார்.

"நன்கலம் நன்மக்கட் பேறு" என்பதற்கமைய இவருடைய பிள்ளைச் செல்வங்கள் விளங்குகின்றன. இவர்க ளுடைய மூத்த மகள் றதி எல்லோரிடத்தும் அன்பாகப் பழகும் பண்புடையவர். இரண்டாவது மகள் லதா கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் பிரதியதிபராகக் கடமையாற்றி மாணவச் செல்வங்களுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தவர். அதே போல மருமகன் திரு. மா. மோட்சலிங்கம் விஞ்ஞானக் கல்வியை கிளிநொச்சி மாவட்ட மாணவர்களுக்கு சிறந்த முறையில் வழங்கியவர். அதே போல ஏனைய பிள்ளைகளான சந்திரன், ஜெயா, சூட்டி நற்பிள்ளைகளாக வாழ்ந்தவர்கள். இளைய மகன் கண்ணன் உருத்திரபுரம் விளை யாட்டுக் கழகத்தில் சிறந்த உதைபந்தாட்ட விளையாட்டு வீரனாக திகழ்ந்தவர். மொத்தத் தில் இவரது மனைவி, மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கியதன் காரணமாக இவர் தனது சேவைகளை, பணிகளைத் திறம்பட நிறைவேற்றக்கூடியதாக இருந்தது.

உருத்திரபுரம் கிராமத்தின் வரலாற் றினை மட்டுமல்ல கிளிநொச்சி மாவட்டத்தி லுள்ள சகல கிராமங்களின் வரலாற்றைக் கூறக்கூடிய வல்லமை படைத்தவர் உயர் திரு.கா. நாகலிங்கம் அவர்களே ஆவார். அப்படி தனிச்சிறப்பு பொருந்திய மனிதன்,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற திருக்குறளுக்கு அமைவாக வாழ்ந்து காட்டிய பெருமகன். பிறர் உள்ளங்களை வென்று அவர்தம் உள்ளங் களில் வாழ்தல் என்பதில் வெற்றிபெற்றவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனாலேயே எம் மனங்களில் உயர்ந்து நிற்கின்றார்.

"எழுத்தறிவித்தவன் இறைவன்" என்ற பொன்மொழிக்கிணங்க அன்று தொட்டு இன்று வரை ஆயிரமாயிரம் மாணவச் செல்வங்களை வளர்த்தெடுத்து எல்லோர் மனங்களிலும் இடம் பிடித்த அகல்விளக்கு எங்கள் அதிபர். கிளிநொச்சி மாவட்டத்தில் அவர் சேவையாற்றிய காலம் அழகிய நிலாக்காலம். எங்கள் மனங்களில் அதுவொரு பொற்காலம். சமூகத்திற்கு கொடுத்ததை நீங்கள் மறந்தாலும் வாங்கியதை மறக்காமல் விழா எடுப்பதும், மலர் வெளியீடு செய்வதும் பாராட்டுக்குரிய தாகும். நூற்றாண்டுகாலம் தம் குடும்பத் தினருடன் மகிழ்வோடு வாழ எல்லாம் வல்ல மாணிக்கப்பிள்ளையாரை வேண்டி வாய்ப்புத்தந்த மலர் குழுவினர்க்கும், விழா குழுவினருக்கும் நன்றி தெரிவித்து நிறைவு செய்கிறேன்.

**திரு.சு.கணேசதாசன்**
SLPS-II
(முன்னைநாள் அதிபர்
கிளி / உருத்திரபுரம் ம.வி)

NAGALINGAM

| | | | |
|---|---|---|---|
| N-N | For | Noble – | பெருமகன் |
| A-A | For | Ambitious Man- | இலட்சியவாதி |
| G-G | For | Generous Person- | தாராள |
| A-A | For | Active- | செயற்றிறன் கொண்டவர் |
| L-L | For | Leader- | சிறந்த தலைவர் |
| I-I | For | Intelligent- | நுண்ணறிவுள்ளவர் |
| N-N | For | Neutral- | நடுநிலையாளன் |
| G-G | For | Gentleman- | நற்புண்புகளோடு கூடியவர் |
| A-A | For | Affectionate- | அன்புள்ளவர் |
| M-M | For | Mercy- | கருணையுள்ளவர் |

**"தன்னம்பிக்கை துளிகள்"**

நேற்று என்பது
முடிந்து விட்டது!
நாளை என்பது
இனிவரும் நாள்!
இன்று என்பது உன்கையில்

**தோல்வி
ஏற்படுவது,
" அடுத்தச்
செயலைக்
கவனமாகச் செய்"
என்பதற்கான எச்சரிக்கை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அகவை எண்பதில்...


மாதாஜீ தபோவன பூசையின் போது...


மாதாஜீ ஆலயத்தில் சிரமதானம்
திருமதி நாகலிங்கம் அவர்கள் தலைமையில்...


மாதாஜீ சமாதி வைக்கப்படுகின்றது....


பரிசில் வழங்கல் விஞ்ஞானக்கல்வி நிலையம்
ஜெயந்திநகர்.


அப்புஜீயின் ஓராண்டு நிறைவு நினைவில்
இந்துக்கல்லூரியில்...


நூல் நிலையம் திறத்தல்
விஞ்ஞானக்கல்வி நிலையம் ஜெயந்திநகர்..


பிரதம விருந்தினராக ஆங்கில
கல்வி நிலையம் ஜெயந்திநகர்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி. கதிரவேல்
உருத்திரபுரம்.

# நானறிந்த நாகலிங்க மாஸ்ரர்

**வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்தனையது உயர்வு–குறள்**

**மேற்படி குறளுக்கு இலக்கணமாய் விளங்கியவர் , கிளிநொச்சி உருத்திரபுரத்தைச் சேர்ந்த திரு.நா.நாகலிங்கம் ஆசிரியராவார். ஆசிரியத் தொழிலை பிரதான தொழிலாளாகக் கொண்டு சமூக சேவையில் ஈடுபட்டவராய் , சிறந்த சேவையாளனாய் சமூகவியலாளனாய் அரசியல் வாதியாய் நேர்மைக்கும் , நீதிக்கும் முதலிடம் கொடுத்து விளங்கி வருகின்றார் என்றால் மிகையாகாது.**

எனக்கும் அவருக்குமிடையில் ஏற்பட்ட தொடர்பு சமூக சேவை ஊடாக என்றே கூறலாம். நாங்கள் இருவரும் ஒரே இடத்தைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தாலும் ஒருவரை ஒருவர் அறிமுகமானது நான் நினைக் கின்றேன். 1962ம் ஆண்டளவில் தான் இருவரும் பொதுச் சேவையில் நாட்டம் கொண்டமையால் எமது கிராமத்தி லுள்ள பொது நிகழ்வுகளில் சந்திப்பது மிகவும் கூடுதல் கிராம அபிவிருத்தி வேலைகளிலும் சரி கல்வி அபிவிருத்தி யிலும் சரி சமயப் பணிகளிலும் சரி, விளையாட்டுத்துறைகளிலும் சரி இருவரும் பங்குகொள்வோம். 1950 முற்பகுதியில் திரு.கா. நாகலிங்கம் ஆசிரியர் அவர்கள் தனது ஆசிரியர் பயிற்சியை திருநெல்வேலி சைவாசி ரியர் கலாசாலையில் முடித்துவிட்டு உருத்திரபுரம் வந்திருந்தபோது தற்போ தைய கரைச்சி பிரதேச சபை முன்னர் பச்சிளைப்பள்ளி , துணுக்காய் என்று ஒன்றாக இருந்து பின்னர் பச்சிலைப் பள்ளி, கரைச்சி, துணுக்காய் என மூன்று கிராம சபைகளாகப் பிரிக்கப்பட்டன. இதில் கிளிநொச்சிப் பகுதி கரைச்சி எனவும், பளைப்பகுதி பச்சிளைப்பள்ளி எனவும் பிரிக்கப்பட் டன. கிளிநொச்சிப் பகுதி – உருத்திரபுரம் உட்பட கரைச்சிக் கிராம சபைக்குள் வந்தபடியால் , உருத்திரபுரம் ஒரு தனி வட்டாரமாகப் பிரிக்கப்பட்டு ஒரு அங்கத்த வரையனுப்பும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. அப்போது இச்சபையின் தலைவரா யிருந்த அன்ரன் பொன்னம்பலம் எனப்படும் . ".....பொன்னம்பலத்துடன்" போட்டியிட்டு தலைவராகி சபையை நன்நிலைக்குக் கொண்டு வந்தது குறிப் பிடத்தக்கது. இதேபோன்று கரைச்சி தெற்குப் ப.நோ.கூ.சங்கத்தின் உருத்திர புரம் கிளையின் அங்கத்தவராகச் சென்ற திரு.கா .நாகலிங்கம் ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கும் தலைவர் பதவியை ஏற்று ஊழலும் மோசடிகளும் நிறைந்த சங்கத்தை நல்ல நிலைக்குக் கொண்டு வந்தார்.

அரசியலில் மிக்க ஈடுபாடுடைய இவர் செல்வநாயகம், வன்னியசிங்கம், நாகநாதன் காலம் தொட்டு இன்றுவரை தமிழினத்தின் விடிவுக்காக பாடுபட்ட அரசியல்வாதிகளுடன் தோளோடு தோள் கொடுத்துப் பாடுபட்டு வந்தவர்களில் இவருமொருவர் என்றால் மிகையாகாது. தமிழ் மக்களைப்போல சிங்கள மக்களையும் நேசிக்கும் இவர் சிங்களப் பகுதிகளுக்குச் சென்று அவர்களின் விடிவுக்கான பல அபிவிருத்தித்திட்டங்களில் சிரமதான முறையில் பங்கு பற்றியுள்ளார்.

இவற்றை விட உருத்திரபுரம் கிராமத்தில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் இவரின் பங்களிப்பு கூடுதலாகக் காணப்படும். பண உதவி மட்டுமன்றி உடல் உழைப்பும் கிடைக்கும் கோவில் திருவிழாக்கள், கலாசார நிகழ்வுகள் , விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை நடத்துவதற்கு இளைஞர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து உதவுவார். பல அமைப்புக்களை உருவாக்கி அதன்மூலம் கிராமத்தை அபிவிருத்திச் செய்வதற்கு அரும்பாடு பட்டார். மாதந்தோறும் சிரமதானப் பணிகள் செய்வதற்கு சிரமதான சபை ஒன்றை உருவாக்கி குறிக்கப்பட்ட நாட்களில் சிரமதானம் செய்து கிராமத்தை அபிவிருத்தி செய்துள்ளார். இதில் கிராம மக்களை பங்குகொள்ளச் செய்வதில் ஆர்வம் காட்டுவார். வீடு வீடாகச் சென்று வீட்டிற்கு ஒருவரையாவது வரும்படி செய்து கிராம வீதி, பொது இடங்கள் போன்றவற்றை துப்பரவு செய்து சுத்தம் பேணப்படும் . இதனால் கிராம மக்கள் விழிப்புணர்வு ஏற்பட்டு நாட்டையும் வீட்டையும் சுத்தமாக வைத்திருப்பார்கள்.

இப்படியாக பல சேவைகளைச் செய்து தற்போது ஆசிரியத் தொழிலில் இருந்து ஓய்வுபெற்று புலம் பெயர் தமிழராய் கனடாவில் இருக்கின்றார். அப்படி இருந் தாலும் அவருடைய எண்ணமும் சிந்தனை யும் உருத்திரபுரத்தையே சார்ந்தி ருக்கும் அங்கிருந்து கொண்டு உருத்திரபுரம் அபிவிருத்திக்காக நிதி சேகரித்து , குறிப்பாக கல்வி, சுகாதாரம் போன்றவற்றை மேம்படுத் திக் கொண்டிருக்கின்றார். இவை எல்லாவற் றிற்கும் ஊன்றுகோலாக இவரது இல் வாழ்க்கை அமைந்துள்ளது.

"மணவாழ்க்கை மலர்வதற்கு நல்ல மனைவி வாய்க்க வேண்டும் . குலமகளாய்த் திகழ்வதற்கு கொடுத்து வைக்க அவள் வேண்டும் என்று கவிஞர் கண்ணதாசன் பாடியது போல குணத்தால் நாயகியாய் விளங்கும் குணநாயகி மனை வியாய் அமைந்துள்ளார். சிரித்த முகத்தோடு பக்கபல மாக , நான்கு பெண்கள் இரண்டு பிள்ளை களுடன் தோளோடு தோள் கொடுக்க நன்று பணியை ஆற்றி வருகின்றார்.இவரது பணிக்கு எமதன்பும் ஆசியும் வாழ்க அவர்பணி – வளர்க அவர் சேவை

நன்றி

**"தன்னம்பிக்கை துளிகள்"**

கவலையை நினைத்து கண்ணீர் சிந்துவதை விட ... இலட்சியத்தை நினைத்து வியர்வை சிந்துங்கள்... உங்களாலும் சாதிக்க முடியும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மா. பேரம்பலம்** J.P
பொருளாளர்
உருத்திரபுரம் அபிவிருத்திக்கழகம்



# அதிபர் திரு.கா.நாகலிங்கம் அவர்களும் உருத்திரபுரம் அபிவிருத்திக்கழகமும்

அதிபர் கார்த்திகேசு நாகலிங்கம் அவர்கள் இலங்கையை விட்டு கனடா சென்றாலும் தான் வாழ்ந்த மண்ணை மறந்து விடாது உருத்திரபுரம் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு வறுமை தடையாக அமைந்துவிடக் கூடாது என்ற நல்நோக்கில் அதிபர் அவர்களின் பெருமுயற்சியில் உருவாக்கப்பட்டதே உருத்திரபுரம் அபிவிருத் திக் கழகமாகும். பல பிரதேசங்களில் , பல பிரதேசங்களின் பிரதேச குழுக்களால் உருவாக் கப்பட்ட சங்கங்கள், ஒன்றியங்கள், கழகங்கள் ஒரு சில ஆண்டுகளில் அழிந் தொழிந்து போயிருப்பது பலரும் அறிந்த விடயமாகும்.

பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்கள் "குலம் சுரக்கும் ஒழுக்கம்" என்று குறிப்பிடுவார். பெரிய மனிதனுக் கான ஒழுக்கமும், பண்பும் பெரிய மனிதனுக்கே ஏற்படும். தான் ஆசிரியராக, அதிபராக இருந்த இடங்களில் எல்லாம் " வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாரைப் போல வறுமையில் வாடிய மாணவர்களின் வறுமையை அகற்ற கண்ணுக்குப் புலப்படாத, வார்த்தைகளால் பேசப்படாத பல காரியங் களை மேற்கொண்டவர். பல மாணவர்களின் படிப்புச்செலவைத் தானும், தன் குடும்பமும் ஏற்றுக்கொண்டவர். இன்றுவரை அந்தப் பணியை விட்டுவிடாது செய்து வருபவர். தான் ஆசிரியராக, அதிபராக கடமையாற்றியபோது தனது அனுபவத்தில் கண்ட பல மாணவர்கள் படிப்பைத் தொடர்வதற்று வறுமை காரணமாக அமைந்ததனையும் அதனால் அவர்களின் வாழ்வு சிதைந்து போனதனை யும் தெளிவாக உணர்த்தியிருந்தார். தான் வாழ்ந்த உருத்திரபுரம் பிரதேசத்தில் வாழும் மக்கள் ஒருவர்கூட மேற்படிப்பு படிக்க முடியாமல் வறுமை தடையாக இருந்தால் அத்தடையை அகற்ற வேண்டும் என்பதை ஆணித்தரமாகச் சிந்தித்திருந்தார். இதற்கான பல திட்டங்களை யும் உள்ளூரில் உள்ளவர்களுடன் கலந்தா லோசித்திருந்தார். கால ஓட்டத்தால் இவரது குடும்பமும் கனடா செல்ல வேண்டி ஏற்பட்டது.

தன் தாய் நாட்டைவிட்டு வேறு நாடு சென்றபோதும் அந்த ஒழுக்கம் அவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுவிடவில்லை. பல இலட்சக்கணக்கான ரூபாக்களை வங்கியில் வைப்புச்செய்து அந்தப் பணத்தின் மூலம் உருத்திரபுரம் கிராமத்தில் படித்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் மாணவர்கள், 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தும் மாணவர்கள் அனைவருக்கும் உதவியளித்து வரக்கூடிய ஒரு நிர்வாகத்தை உருவாக்கத் திட்டமிட்டார். இப்பணியைச் செய்வதற்கு கனடாவில் சமூக நலன் விருப்புள்ள உருத்திரபுரம் வாசிகளை ஒரு நிர்வாக அலகாக ஒழுங்குபடுத்தினார். அவர்கள் மூலம் உருத்திரபுரம் பிரதேசவாசிகளிடம் சிறுகச்சிறுக சிறு தொகைகளாகச் சேர்த்து சேர்த்தவற்றை உடன் வங்கியிலிட்டு நிதியம் ஒன்றை உருவாக்கினார். அதிபர் திரு கா. நாகலிங்கம் அவர்களே இந்நிர்வாகக் குழுவின் மூல விசையாக இருந்து செயற்பட்டு வந்தார். இலங்கையில் இக்கொடுக்கல் வாங்கல் செயல்பாட்டை செவ்வையாகவும் நேர்மையாகவும் ஆற்றுவதற்கு ஆரம்பத்தில் திரு மா.பேரம்பலம், திரு.வை.குகராசா, திரு.சு.கணேசதாசன் ஆகிய மூவர்கொண்ட குழுவை உருவாக்கி அவர்களின் கூட்டுக் கணக்கில் பணத்தினை அனுப்பி கல்வி நடவடிக்கையைத் தொடரச் செய்தார்.

கடிதங்கள் ஊடாகவும், தொலைபேசி ஊடாகவும் தான் இலங்கைக்கு வரும் போது நேராகவும் ஆலோசனைகளையும், ஒழுங்கு விதிகளையும் அறிவுறுத்தி வந்தார். இவரின் இடைவிடாத அந்த முயற்சி தற்போது பூரணத் துவம் பெற்று விருட்சமாக வளர்ந்துபலனைத் தந்துகொண்டிருக்கின்றது. தற்போது உருத்திரபுரம் மகாவித்தியாலயம், சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, புனித பற்றிமா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், குஞ்சுப் பரந்தன் அ.த.க பாடசாலையில் இருந்து 5ம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்தும் மாணவர்கள் அனைவருக்கும் ஒவ்வொரு வருக்கும் ரூபா பத்தாயிரம் (10,000/=) வீதம் ஒவ்வொரு வருடமும் கொடுத்துதவி வருகின்றது. இந்நடவடிக்கை கடந்த 2004 ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றது. (இடம்பெயர்வின் போது இரண்டு வருடங்கள் தடைப்பட்டிருந்தது) இதே போன்று உருத்திரபுரப் பிரதேசத்தில் கற்றுப் பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களுக்கு அவர்கள் தமது பட்டப்படிப்பை முடித்து வெளியேறும் வரைக்கும் அவர்களுக்கு மாதாந்தம்

2,000/=, 2,500/=,3,000/= வரை அவர்களின் படிப்பிற்கேற்ப வழங்கப்பட்டு வருகின்றது. இக்கழ கத்தின் உதவியைப் பெற்ற ஏழு மாணவர்கள் தங்கள் படிப்பை முடித்து தற்போது அரச சேவையில் இணைந்தும் உள்ளனர். தற்போது மூன்று மாணவர்கள் இக்கழகத்தில் உதவி பெற்று படித்து வருவதுடன் 2015 ம் வருடம் 11 மாணவர்கள் புதிதாக விண்ணப்பித்தும் உள்ளனர். இவர்களுக்கும் நாம் உதவியை வழங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றோம். இதைவிட விளையாட்டுக் கழகம் பாடசாலை என்பவற்றிற்கும் சிறு உதவிகளை அவ்வப்போது செய்து உதவி உள்ளது.

இத்திட்டங்களை உருத்திரபுரம் மக்கள் அனைவருமே வரவேற்பதுடன் பக்கச்சார் பற்ற நேர்மையான நடவடிக்கை அனைத்தையும் திரு கா.நாகலிங்கம் அதிபர் அவர்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டியாக நின்று செயற்படுத்தி வருகின்றார். பணத்தை வழங்கும் பகுதிக்கும் (கனடா) பணத்தைப் பெறும் பகுதிக்கும் (உருத்திரபுரம்) இரு பகுதியினருக்கும் ஆலோசனை வழங்கு பவராக இருந்து ஒரு தொய்வுநிலை ஏற்படாத வண்ணம் கழகத்தை வழிநடாத்திச் செல்லுகின்றார். கனடாவில் திரட்டிய பணத்தின் ஒரு பகுதியை யுத்த காலத்தில் பாதுகாக்கவேண்டிய தேவை அறிந்து கொழும்பில் இரு முக்கியஸ்தர் களைத் தனது தற்துணிவின் பேரில் திரு.மா. கணபதிப்பிள்ளை திரு.வே.கனகலிங்கம் என்பவர்களின் கூட்டுக்கணக்கில் நிரந்தரச் சான்றிதழ் இட்டு பாதுகாத்திருந்தார். யுத்தம் முடிவுற்ற பின் 2014ம் ஆண்டு அங்கு வைப்பில் இருந்த பணம் முழுவதும் உருத்திரபுரம் அபிவிருத்திக்கழக வங்கிக் கணக்கிற்கு மாற்றப்பட்டது. கழகப் பணத்தில் ஒரு சதம் கூட குறைவின்றி முழுமையாக மாற்றப்பட அதிபரின் தற்துணிவும், சமயோசித புத்தியுமே சங்கத்தில் பல லட்சங்களை பாதுகாத்த தென்பதை சம்பந்தப்பட்டோர் யாவருமறிவர்.

கனடாவில் உள்ள சிலர் இப்பணத்தை தமிழீழ வைப்பகத்தில் இடவேண்டுமென வற்புறுத்தி அதிபர் அவர்களுக்கு அழுத்தத் தையும் கொடுத்திருந்தனர். யாவற்றையும் தள்ளி தனது தற்துணிவினால் சங்கம் முழுமூச்சுடன் இயங்க வழிவகுத்தவர் திரு கா. நாகலிங்கம் அதிபர் அவர்களேயாகும். மேற்படி சங்கமானது 2015 ம் வருடம் புதிய நிர்வாக அமைப்பை அறிமுகப்படுத்தி இச்சங்கம் வலிந்து உதவுகின்ற சங்கமாக பதிவு செய்யப்பட்டு நிர்வாக கட்டுக்கோப்புடன் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் உறுப்பினர்களென 15 பேர் கொண்ட அமைப் பாக இயங்கி வருகின்றது.

எப்பொழுதும் சிரித்த முகம், சாந்தமான முகபாவம், எந்த நேரமும் யாருடனும் கோபப்படாத பண்பு, தான் சொல்ல வருவதை ஆணித்தரமாகச் சொல்லுகின்ற பாங்கு, மற்றவர்களிடம் இருந்து சேவைகளைப் பெறும்போது தானே சேவகனாக மாறி ஏனை யோரையும் கொண்டு சேவை செய்விக்கும் திறன் அவருக்கென்று தனித்துவமானவை. திரு.கா. நாகலிங்கம் என்ற ஆளுமை கடந்த 15 வருடங்களாக எந்த ஆட்ட அசைவுகளு மின்றி சங்கத்தை வழிநடத்தும் திறன் சொல்லுவதற்கு எளிதான தொன்றல்ல. இப்பெரியாரின் முயற்சிகளெல்லாம் செவ்வனே நிறை வேற்றப்படுவதற்கு பல்வகையிலும் உறுதுணையாக நின்ற திருமதி நாகலிங்கம் குணநாயகி அம்மா, பிள்ளைகள் அனைவரின் அர்ப்பணிப்பான மனப்பாங்கை இவ்விடத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக் கின்றோம். அவரின் புனித பணி தொடர நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் குடும்பத்தினரின் உதவியும் கிடைக்க வேண்டும் என எம்பெருமான் உருத்திரபுரீச்சுவரனை வேண்டுகின்றோம். தங்களின் புனிதப்பணி பெரு விருட்சமாகி உருத்திரபுரம் பிரதேச ஒவ்வொரு மாணவனுக்கும் உதவி நிற்கும் என்பதில் எமக்கு எவ்வித ஐயமுமில்லை.

தங்களின் பெரும் பணியை வாழும் போதே வாழ்த்துவதில் நாம் பெருமகிழ்வடை கின்றோம். "பண்புடையார் பட்டுண்டு உலகம்"

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ. சிவநாதன்
அதிபர்
யா/புற்றாளை மகா வித்தியாலயம்,
புலோலி.

# உள்ளத்தால் உயர்ந்த உத்தமர்

- கா. நாகலிங்கம் (அதிபர்)


நான் சிறுவனாக அமைந்திருந்த போது கிளிநொச்சியில் நடைபெற்ற திருக்குறள் போட்டியில் சான்றிதழ் பெற்ற போது அதில் இருவர் கையெழுத்திட்டிருந்தனர். ஒருவர் அமரர் திரு.கா.பொ.இரத்தினம் மற்றவர் திரு.கா. நாகலிங்கம். இவ்வாறு கையெழுத்தைப் பார்த்தே எனது மனதில் இடம்பிடித்துக் கொண்டவர் திரு.கா. நாகலிங்கம் அவர்கள். பின்னர் 7ம் தரத்தில் பரீட்சை ஒன்றுக்காக உருத்திரபுரம் மகா வித்தியாலயத்திற்குச் சென்ற போது அங்கு மேற்பார்வையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்தவர் திரு.கா.நாகலிங்கம் அவர்கள். இவ்வாறு என் மனதில் நின்றவர் நான் படித்து பல்கலைக்கழகம் சென்று வந்த பின்னர் கிளிநொச்சி விஷ்வ இந்து பரீஷத் அமைப்பின் செயலாளராக நான் செயற்பட்ட போது அவரும் ஒரு அங்கத்தவராக இருந்தமையால் நெருங்கிப் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. வாழ்க்கையில் கல்வியில், சமூக மேம்பாட்டில் ஈடுபாட்டில் அனுபவமும் திறனும் படைத்திருந்த போதும் வயதில் குறைந்த அனுபவமற்ற எங்களையும் மதித்த உயர்ந்த உள்ளம் என் மனதில் இன்றும் நிலைத்து நிற்கின்றது.

பின்னர் எனக்கு ஆசிரியத்தொழில் கிடைத்த போது நான் முதன் முதலாக அவருடன் க.பொ.த [சாதா] பரீட்சையில் நோக்குனராக கடமையாற்றும் வாய்ப்புக் கிடைத்தது. பரீட்சை நடைபெற்ற போது வினாத்தாள்கள் பறிக்கப்பட்டு குழப்பம் நிறைந்ததாகக் காணப்பட்டது. அப்பொழுது திரு.கா.நாகலிங்கம் அதிபர் செயற்பட்ட முறைமை என் மனதில் பதிந்தது. அன்று பெற்ற அனுபவம் இன்று பரீட்சை மேற்பார்வையாளராக, இணைப்பாளராக கடமையாற்றும் போது எவ்வித இடையூறுமின்றி நடாத்தும் ஆற்றலைத் தந்தது என்பதை நினைக்கும் போது அவரின் மேன்மை என் உள்ளத்தில் உறைந்து நிற்கின்றது.

அவரது மேன்மையை மதிக்கும் நான் அவரது பாராட்டு விழாவில் மனதார வாழ்த்துவதில் பெருமை அடைகின்றது. ✷



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்ந்து காட்டிய வரலாறு

**1964ம் ஆண்டின் ஓர் நாள் அப்புஜீ அவர்களின் "குருகுலம்" நிறுவனமயப்படுத்தலின் பிதாமகர்களில் முதன்மையானவராக " மேன்மையாளர்" நாகலிங்கம் வாத்தியாரை குருகுல மகனாக அன்று பார்க்கிறேன். (றோம்) குருகுலம் என்ற அமைப்பின் நிர்வகிப்புச் சங்கமாக சைவவித்தியா அபிவிருத்திச் சங்கம் அமைக்கப்படுகிறது. அதற்கான குழுமம் உருவாக்கப்படுகின்றது. அதன் தலைவராக திரு.கா.நாகலிங்கம் வாத்தியார் செயற்பட்டு வருகின்றார்.**

தாய் தந்தையற்ற, வறிய , கல்விக்கான பிற்படுத்தப்பட்ட குழந்தைகளின் (மாணவர் களின்) வாழ்வு நோக்கிய குருகுலம் நிறுவனத்துக்கான சிந்தனையோடு அதற் கான வாழ்விடத்துக் (வீடு) கான ஜெயந்திநகர் காணியை வழங்கி ஆரம்பித்த அந்த எண்ணிய எண்ணியாங்கு எய்திய உள்ளத் தின் உள்ளொளியை எண்ணிப்பார்க் கின்றேன். (றோம்)

அன்றைய காலத்தின் தேவை, உள்ளார்ந்த சிந்தனை குருகுலம் என்ற பல்துறை பரந்த வளாகத்தையும் ; கிராஞ்சி வரையுமான 'பூதான' நிலப்பெறுகையையும் இன்றான போர் மீட்சி வாழ்வுக்காக உருவாக்கி வைத்த அடையாளமாகவும் செயற்படும். ( மகாதேவா ஆச்சிரம சைவ சிறுவர் இல்லம், கிளிநொச்சி.) நிலையை 'அப்புவினது' திரு.கா.நாகலிங்கத்தினதும் காலக்கட்டளையின் தீர்க்க தரிசினமாக பார்க்கின்றேன் (றோம்) 1974ம் ஆண்டு பகுதிகளுக்குப் பின் கரைச்சி தெற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அங்கத்துவம் கிளைக்குழு நெறியாளர்குழு தலைமை என்பவை தொடர்பான தொடர்புகளோடு சைக்கிள்களில் வன்னேரி அக்கராயன் பகுதிகளிலும் ; கல்மடுநகர் வட்டக்கச்சி பகுதிகளிலும் கிளிநொச்சிப் பிரதேசத்திலும் கூட்டுறவாளர்களைச் சந்தித்து சிறந்த மக்கள் அமைப்பான கூட்டுறவை அதன் உறவாளர்களை இணைத்திருந்து அரசியல் எதிர்நிலை களிலும் பலமான வெற்றிகளைக் கண்டு கொண்ட உறுதி கூட்டுறவாளரை கண்டு கொண்டேன்.(டோம்)

கூட்டுறவுச் சபையின் தலைமை, சிக்கன கூட்டுறவுச் சங்க சமாச உருவாக்கமும் ;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமையும் இதுவரை அடையப்பட்டிராத கூட்டுறவின் பரிமாண வியாபகத் தலைவ னின் அடையாளமாகப் பார்க்கின் றோம்.

1970 களின் பின் உருத்திரபுரம் மகாவித்தியாலயம் மூன்று (3) வருடங்களின் எட்டு (8) அதிபர்களை காட்டிய அரசியல் பழித்தனம் நிகழ்ந்து " ஐந்தாம் (5) வகுப்பிற்கு கீழ் போகமல் பார்க்கலாம்" என்று கூட்டத்தில் சங்க(ற)ர அதிகார பேச்சுக்களைத் தடுத்து துரத்திய உருத்திரபுரம் மக்கள் இந்நிலைகளை மாற்ற திரு.கா.நாகலிங்கம் அவர்களோடு கருத்துரைத்து ஒழுங்கு படுத்திய பின் தான் அதிபராகப் பொறுப்பேற்று மீள உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தை நிமிர்த்திய நெடுஞ்செழியனாக மாணவர்களும் மக்களும் நெஞ்சார நினைப் பதையும் இந்த அடித்தளம் - முதல்வர் மு. சண்முகராசா , முதல்வர் கணேசதாசன் , முதல்வர் .திருமதி மீனலோஜினி இதயசிவதாஸ் அவர்களை தந்துள்ளதையும் உணர்கின்றோம்.

1950 களில் வைச வித்தியா விருத்திச் சங்கம் அமைக்க ஒரு சிறிய கொட்டிலில் முதல் சைவப் பாடசாலையும் தொடக்க முதல் ஆசிரியராக இப்போதைய இந்துக்கல்லூரிக்கு கால்கோள் இட்ட கல்வியாளன் திரு.கா.நாகலிங்கம் அவர்கள் என அறியமுடிகின்றது.

வன்செயல்களால் துரத்தப்பட்ட உறவுகள் குடியேறிய, குடியேற்றிய புதுமுறிப்பு விக்னேஸ்வரா , ஊற்றுப்புலம் அ.த.க பாடசாலை, காந்திக்கிராமம் ஆகியவற்றின் பள்ளிகளையும் , முன்பள்ளிகளையும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் ( T.R.RO) உதவியுடன் குருகுல நிர்வகிப்புடன் நான் திட்ட ஒருங்கிணைப்பாளராக செயற்பட்ட போது எனக்கு வழிகாட்டிய கல்விப்புலச்சிந்தனைகளை நினைத்துப் பார்க்கின்றோம்.

இடம்பெயர்வுகளால் பாதித்து அழிந்த உருத்திரபுரம் மகாவித்தியாலய ஆரம்ப பாடசாலையை மீள அமைக்க கனடா உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகம் மூலம் நிதி வழங்கி அவற்றை அமைக்கவும் கல்வி உதவிகள் அற்ற பல்கலைக்கழக கிளிநொச்சிப் பகுதி மாணவர்களுக்கு முதன் முதலாக பல்கலைக்கழக உதவி நிதியை வழங்குதலை ஏற்படுத்தித் தந்த முதன்மை எண்ணங்களை மீள் வாழ்வு பற்றிய கல்வி நிலைச் சிந்தனையை இன்றுவரை தொடர்கின்ற உயர்வை இவரிடம் பார்க்கின்றோம்.

கிளிநொச்சியின் அரசியல் நிர்வகிப்புக் குள் மிகச் சிறிய வயதில் , தமிழரசுக்கட்சியின் உறுதிமிக்க பேராளராக செயற்பட்டதையும் இருபத்திநான்கு (24) வயதில் கல்வி நிலை பலம் மிக்கவர்களோடு போட்டியிட்டு கரைச்சிக் கிராம சபைக்குத் தலைவராக செயற்பட்ட மையும், அரசியல் சவால்கள், போட்டித்தனம் ஏமாற்றகளுக்கு சோரம் போகாத நேராளராக செயற்பட்டதையும் அறியமுடிகின்றது.

உருத்திரபுரம் குடியேற்றத்தின் பின்னான காலத்தில் - இப்பகுதிகளில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம், உருத்திரபுரம் சனசமூக நிலையம் கிளிநொச்சி விளையாட்டுக்கழகம் என்பவற்றையும் உருத்திரபுரம் மாணிக்க பிள்ளையார் கோவில் உருத்திரபுரீச்சுவரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவன்கோயில் , பொறிக்கடவை அம்மன் கோயில் என்பவற்றின் ஆரம்ப வழிகாட்டியாக செயற்பட்டதையும் மகாதேவா ஆச்சிரமம் மாதாஜீ நினைவாலயம் என்பவற்றின் இயங்கு தொண்டராக செயற்பட்டமையும் இப்போது அறிகின்றோம்.

இந்த மண் தந்தவர்களில் திரு.கா.நாகலிங்கம் வாத்தியார் ஓர் காலத்தின் அடையாளம் என்றே உணர்கின்றோம். இவர் தடம் பதிக்காத துறைகள், சமூகவிழுமியங்கள் எதுவும் இல்லை. ஓர் முழுமை மனிதனாக மனிதம் நிறை மனிதனாக 'வாழ்ந்து காட்டிய வரலாறு' ஏகதலைவன் நிலையில் என் வாத்தியாராகவும் நினைக்கின்றேன். கிளிநொச்சி மண் திரு.கா.நாகலிங்கத்துக்கு வழங்கிய தலைமை நினைவுகளுக்குரியது.

வாழ்ந்து காட்டிய வரலாறு
நிழல் தேடாத விருட்சம்
வணங்கி வாழ்த்துகின்றோம்

**நா.வை. குகராசா** J.P
'மணியண்ணா'
கரைச்சிப்பிரதேச சபை,
கிளிநொச்சி.

---

*1)* உலகில் உள்ள பறவைகளில் மிகப்பெரியது எது?

தீக்கோழி

*2)* வெறும் கண்களால் பார்க்க முடியாத கோள்?

யுரேனஸ்

*3)* ஜப்பானின் தலைநகர்?

டோக்கியோ

*4)* பாம்பு எதன் மூலம் வாசனையை உணர்கிறது?

நாக்கு

*5)* திரை அரங்குகளே இல்லாத நாடு?

பூட்டான்

*6)* உலகில் மிக நீண்ட நாள் வாழும் மிருகம்?

முதலை

*7)* எந்த கண்டத்தில் கங்காரு, பணிக்கரடி உள்ளது ?

அவுஸ்திரேலியா

*8)* நள்ளிரவு சூரியன் உதிக்கும் நாடு ?

நோர்வே

*9)* உலகிலேயே உயரமான சிகரம் ?

எவரெஸ்ரட்

*10)* மரத்தின் கிளைகளிலிருந்து வேர்களைத் தோற்றுவிக்கும் தாவரம் ?

ஆலமரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்விப்பணியின் கலங்கரை விளக்கு

## திரு.கா.நாகலிங்கம் எனும் ஆசான்

பசுமை நிறைந்த வயல்வெளியும் பாய்ந்தோடும் இரணைமடுக்குளத்தின் நீரும் அருள் பாலிக்கும் உருத்திரபுரீச்சரத்தானும், மாணிக்க விநாயகரும் , பொறிக்கடவை அம்மனும், முருகனும் விரும்பியுறைந்து தென்றலாய் வருடும் மருதமரங்களின் நிரைகளும் வந்தாரை வரவேற்கும் காராளர் குடும்பமும் நிறைந்த உருத்திரபுரம் பதியின் உயரிய சொத்தாக விளங்குபவர்களில் உயர்திரு கா.நாகலிங்கம் ( ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களும் மறக்கப்பட முடியாத ஒருவராவார்.

சப்த தீவுகளில் ஒன்றான நெடுந்தீவின் மைந்தனாய் 06.08.1930 உதித்து உருத்திரபுரத்தில் வாழ்பவர். கல்விக்கு இலக்கணமாய் , ஆசிரியத் தொழிலுக்கு உதாரணமாய்த் திகழ்பவர்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் வள்ளுவன் வாக்கிற்கிணங்க வாழ்வாங்கு வாழ்ந்த, அப்பணியில் பல ஆசான்களை உருவாக்கி எம்மோடு வாழ்ந்து கொண்டிருக்கும் அதிபர் திரு.கா.நாகலிங்கம் அவர்களிடம் கல்வி கற்ற ஒரு மாணவியாய் அவர் கல்விப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் இன்றைய அதிபராகவிருந்து அவரது கல்விப்பணியின் தேடலைப் பதிப்பதில் பெருமையடைகின்றேன்.

1950 களில் கல்விப் பாரம்பரியத்தில் ஆசிரியர் நியமனம் என்பது ஆசிரியர் கலாசாலைகளில் ஆசிரியப் பயிற்சியைப் பெற்றவர்களுக்கும் வழங்கப்பட்டது. பட்டதாரிகளாக வெளியெறுபவர்கள் கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் ஆங்கில மொழியில் கற்பித்தனர். இவர்களிடம் கல்வி கற்பவர்கள் காசு கட்டியே கற்கமுடியும். இலவசப் பாடசாலைகளில் கற்பிப்போர் ஆசிரிய பயிற்சி பெற்றவர்களாகவும் ஆசிரிய தராதரப் பத்திரம் பெற்றவர்களாகவும் , ஆசிரிய தராதர பத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறாத 8ம் வகுப்பு சித்தி பெற்றவர்களுமே ஆசிரியர் நியமனங்களைப் பெற்றனர்.

அந்த வகையில் அதிபர் திரு.கா.நாகலிங்கம் அவர்கள் 1950 களில் ஆசிரிய கலாசாலைப் பயிற்சியை இரண்டு வருடம் பூர்த்தி செய்யும் அரசினர் பாடசாலைகளில் இணையுமாறு பலர் கோரிய போதும் அப்பணியை ஏற்காது, தன் கிராமத்தின் சமூகப் பணிக்காக இளைஞர்களை ஒருங்கிணைத்து சேவையில் கால்பதித்தபோது கல்விப்பணியின் பால் கால் பதிக்கவைத்தவர், கிளிநொச்சி வைத்தியசாலையின் மருந்துக்கலவையாளராகக் கடமையாற்றிய திரு.த.நல்லதம்பி அவர்களாவர்.

பிரித்தானியர் ஆட்சிக்குட்பட்டிருந்த இலங்கை மக்களிடம் சுதந்திரம் தந்துவிட்டோம் என நாட்டை ஒப்படைத்துச் சென்ற போதும், என்ன நோக்கத்திற்காக இங்கு காலடி வைத்தார்களோ அவர்களது நோக்கமான மதமாற்றம் "புற்றீசலாய்"பரவி அற்ப சொற்ப நலனுக்காக இந்துக்கள் மதம்மாறிய வேளை திரு.க.நல்லதம்பி போன்ற பெரியோர்களால் மதமாற்றத்தைக் தடுப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட சைவப் பாடசாலையின் அதிபராக திரு.கா.நாகலிங்கம் அவர்கள் "28.09.1952"இல் பொறுப்பேற்றார். அதிபர் பதவி என்பது ஆசிரிய சேவையின் மூப்பின் அடிப்படையில் நியமிக்கப்படும் இன்றைய நிலைக்கு விதிவிலக்காக அதிபர் அவர்கள் தனது முதல் கடமையையே அதிபராக ஏற்றுக்கொண்டமை சிறப்பான ஒன்று எனலாம்.

"வயிற்றிற்குச் சோறிட வேண்டும் – இங்கு
வாழும் மாந்தர்க்கு எல்லாம்
பயிற்றிப் பல கல்வி தந்தே – இந்தப்
பாரை உயர்த்திட வேண்டும்"

எனும் பாரதி வாக்கிற்கிணங்க கல்விப் பணியை ஆரம்பித்த அதிபர் திரு.நாகலிங்கம் அவர்களது சேவையும் மகத்தானது. எந்தவொரு சேவையும் அதனை நிர்வகிக்கும் தலைமையின் அர்ப்பணிப்பான சேவையால் தான் அழகு பெறும். அந்த வகையில் திரு.கா.நாகலிங்கம் அவர்கள் தனது சேவையை பண்டிதமணி சி.கணபதிப் பிள்ளை அவர்கள் முன்னிலையில் பாதம் தொட்டு வணங்கி ஆரம்பித்தது மட்டுமன்றி கற்பித்தல் உபகரணங்களோடு முதல் நாளே கற்பித்த பணியையும் தமிழ்ப் பேராசான் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்களே மேற்பார்வை செய்ததும், அதிபர் அவர்களைப் பொறுத்த வரை மறக்கமுடியாதது எனப் பல இடங்களிலும் குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் பதவி என்பது , இன்றைய காலகட்டத்தில் மேற்பார்வையும் , தரவுகளை அனுப்புவதுமாயிருக்க அன்றைய காலத்தில் கற்பித்தலே பிரதானமாக இருந்தது. இனம், மொழி கடந்த பணியாக இவரது பணி அமைந்தது. ஐந்து தமிழ் மாணவர்களையும் , மூன்று சிங்கள மாணவர்களையும் இணைத்து தமது கல்விப் பணியை ஆரம்பித்து இன்று ஆலமரமாகப் பல விருட்சங்களை உருவாக்கியுள்ளார். உருத்திரபுரம் குடியேற்றத்தின் போது 1950 களில் உருத்திரபுரம் அ.த.க பாடசாலை இயங்கிக் கொண்டிருந்த சமயம் இச் சைவப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது கணேசபுரம் 8ம் வாய்க்கால் பகுதிகள் குடியேற்றம் செய்யப்பட்ட நிலையில் அதிபர் திரு.கா.நாகலிங்கம் அவர்கள் வீடு வீடாகச் சென்று பெற்றோருடன் கலந்துரையாடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்து வந்ததாக இன்றும் பலர் நினைவு கூருகின்றனர்.

போக்குவரத்துப் பாதைகள் சீரற்ற நிலை, குடியேற்றத்திட்டம் மூலம் குடியமர்த்தப்பட்ட மக்களிடம் கல்வி பற்றிய விழிப்புணர்வு இல்லாதிருந்த நிலையில் , பாடசாலையை ஏற்று நடத்துவது என்பது சாதாரண விடயம்அல்ல. தனது வீட்டிலிருந்து பிரதான வீதியூடாகப் பாடசாலை செல்லாது 8ம் வாய்க்கால் முதலாம் குறுக்கு வீதியூடாக துவிச்சக்கரவண்டியை உருட்டியபடி வீட்டுவாச லில் காத்திருக்கும் மாணவர்களை அழைத்துக் கொண்டு நடந்து செல்வது அதிபரின் வழக்கமாகும். மாணவர்கள் பாடசாலைக்கு வருகை தராது விட்டால் மாலை வேளையில் அவர்களின் வீடுகளுக்குச் சென்று காரணங்களைக் கேட்டறிவார்.

குடியேற்றம் செய்யப்பட்ட மக்கள் என்பதால் வருமானம் குறைவு எனவே கற்றலுக்கான செலவுகளை ஈடுசெய்ய முடியாத பெற்றோர்கள் பிள்ளைகளை வீட்டிலேயே மறித்து விடுவார்கள். இந் நிலையில் அவர்களுக்குக் கல்வி பற்றிய புத்திமதிகளைக் கூறிக் கற்றல் உபகரணங்களையும் வாங்கிக்கொடுத்து பிள்ளைகளைப் பாடசாலைக்கு அழைத்து வந்து வீடுவார். இத்தகைய இவரது பன்முகப் பார்வையே இப்பகுதியின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பேறாக அமைந்தது.

அன்றைய நாட்களில் மாணவர்களது சித்தி வீதத்தைப் பார்த்தே ஆசிரியர்களுக் கான சம்பள உயர்ச்சிகள் வழங்கப்படும். மதமாற்றும் கருமத்தைத் தடுக்கும் வகையில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஆக இருப்பினும் மாணவர்களது அதிகரித்த எண்ணிக்கை , சித்தி வீத உயர்வு, சிறந்த நிர்வாகத்திறன் இவை காரணமாக மிகக்குறுகிய காலத்தில் அதாவது 1952 இறுதிப் பகுதியில் இவர் பொறுப்பேற்ற முதலாவது பாடசாலை அரச பதிவிற்குட்பட்ட பாடசாலையாகி இன்றைய இந்துக்கல்லூரி யாக நிமிர்ந்து நிற்கக் காரணமாக இருந்த "முதல் அதிபர்"என்ற வரலாற்றுப் பதிவும் திரு.கா.நாகலிங்கம் அவர்களுக்கே உரியது. இன்றுவரை சைவப் பாரம் பரியத்தைப் பாது காக்கும் இந்துக்கல்லூரியின் அடித்தள மானது சிறந்த சைவசமய ஒழுங்க விழுமியங் களை உடைய அதிபரிடமிருந்து கட்டியெழுப் பப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்துக்கல்லூரியிலிருந்து ஆரம்பித்த அவரது கல்விப் பயணம் எல்லை கடந்த சேவையை நிலை நிறுத்தியுள்ளது. அவரது சேவைக்காலத்தில் பதின்நான்கு பாடசாலை களில் தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய பெருமை நான் அறிந்த வகையில் வேறு எவராலும் முறியடிக்கப்பட முடியாத சாதனை என்றே கூறுவேன்.

1981 இல் க.பொ.த.சாதாரண தரக் கல்வியைக் கிளி / உருத்திரபுரம் மகாவித்தி யாலயத்தில் கற்றுக்கொண்டிருந்த பொழுது எனது அதிபராக மட்டுமன்றி சிறந்த தமிழ் ஆசானாகவும் என் மனதில் நிலை நிறுத்திக் கொண்டேன். தமிழில் ஆர்வத்தையும் வாசிக்கும் ஆற்றலையும், தமிழை உச்சரிக்கும் தன்மையையும் இவரிடம் கற்றுக்கொண்டேன். சரஸ்வதி பூஜையின் போது ஏடு தொடக்கும் நிகழ்வில் மடியில் குழந்தைகளை இருத்தி "அ" "ஆ"எனக் குறில் , நெடில் வேறுபாட்டிற்கமைய எழுத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சரித்துக்காட்டும் பாங்கு இப்பொழுதும் என்னை வழி நடத்துகின்றது. கம்பராமாயணப் பாடல்களில் அனுமான் இலங்கை புகுந்த காட்சயை சுவைபடக் கற்பிப்பது இவருக்கு நிகர்யாருமில்லை. இலக்கணத்தைச் சந்தி பிரித்து நன்னூல் சூத்திரங்களின் உதாரணத்தோடு விளக்கும் பாங்கு தனித்துவமானது.

இவை இவரிடம் நான் கற்றுக்கொண்ட கல்வியில், தமிழ்மொழி பற்றிய பார்வை மறக்கமுடியாதவை.

பாடசாலையில் ஆசிரியர்கள் வராவிடில் ஏதாவதொரு வகுப்பிற்குள் நுழைந்து எண்ணோடு, எழுத்தையும், சமயத்தையும் கற்பிப்பார். அதிபர் என்ற பயம் எமக்கு இருக்காது. சுவைபடக்கதை கூறும் அவரின் பாங்கானது நாமே வகுப்பிற்குள் சென்று அழைக்கும் நிலையைத் தந்தது. உயர் கல்வியை முடித்து ஆசிரியத் தொழிலிற்காக 1988 இல் கிளி / பரந்தன் அ.த.க பாடசாலையின் நியமனத்தைப் பெற்ற நான் அதிபர்களுக்கான கூட்டத்திற்குச் அதிபர் சார்பாக சென்றிருந்த போது அன்றைய உருத்திரபுரக் கொத்தணி அதிபராக இருந்த அமரர் பொன்சபாபதி அவர்களால் அடிக்கடி எமது அதிபரை பற்றிக் குறிப்பிட்டதை இன்றும் என்னால் மறக்கமுடியாது. அதாவது ஒரு அதிபர் தனது நிர்வாகத்தைச் சரியாக நடத்தினால் கேட்கப்படும் விடயங்கள் உடனுக்குடன் அனுப்பமுடியும். அத்தகைய ஒருவர் கூட்டத்திற்குக் கூட வரவேண்டியதில்லை. அலுவலகத்திலிருந்தே அனைத்தையும் எழுத்து மூலம் தெரிவிக்கும் நிர்வாகத் திறனை உருத்திரபுர மகா வித்தியாலய அதிபர் திரு.கா.நாகலிங்கம் அவர்களிடம் கற்றுக்கொள்ளுங்கள் என்ற உதாரணம் என்னையும் ஒரு தடவை இறுமாப்புடன் தலை நிமிர்ந்து உட்கார வைத்தது. முழுமையாக இல்லாதவிடத்தும் இத்தகைய பண்புகளை ஓரளவிற்குகேனும் என்னுள்ளே வளர்த்துள்ளேன் என்பதில் நிறைவடைகின்றேன்.

1990 இல் எங்கள் அதிபர் ஓய்வுபெற்றுக் கொண்ட நிலையில் 1991 இல் உருத்திரபுரம் மகாவித்தியாலய ஆசிரியராக இடமாற்றத்தில் கடமையேற்ற என்னை நிர்வாகத்திற்கான பல பொறுப்புக்களை அமரர்.மு.சண்முகராசா - அதிபர் அவர்கள் எனக்கு வழங்கியபோது , என்னையும் ஒரு நிர்வாகியாக உருவாக்க உதவியது அதிபரது கடந்தகால செயற்பாட்டு ஒழுங்குவிதிகளே! பாடசாலை வசதிக்கட்டண பதிவேட்டில் ஒரு நேர்த்தியிருக்கும் பதிவேடுகளைப் பார்த்த எவரும் பிறரின் உதவி இன்றிய அச் செயற்பாட்டைக் கொண்டு செல்லமுடியும்.

ARR எனும் வருடாந்தத் திரட்டு விபரத்தை இன்றுவரை சிறப்பாகச் செய்யும் ஆற்றலை தந்தது இவரது பதிவேட்டு ஒழுங்கமைப்பே.

அலுவலகத்தில் பேண வேண்டிய அத்தனை கோவைகளும் பேரிடப்பட்டு நேர்த்தியாக இருக்கும் அவரது தோற்றத்திலுள்ள வெண்மையே தொழிலிலும் ஒலித்தது. பிறரை நோகடிக்காத செயற்பாடுகள், கடும்சினம் கொண்டவராக நாம் என்றுமே அவரைப் பார்த்ததில்லை. பிரம்பிற்குப் பதிலாக எப்பொழுதும் ஒரு புத்தகம் கையிலிருக்கும். சிறந்த நிர்வாகியாகக் கல்விப் பணி ஆற்றியவர். அதிபர் அவர்கள் வடக்கில் மட்டுமன்றி இரத்தினபுரி, கண்டி முதலிய பகுதிகளிலும் அதிபராகக் கடமையாற்றியுள்ளார். அவரது சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபரத்தை பின்வரும் அட்டவணை மூலம் காட்டலாம்.

| தொ இல | பாடசாலை | நியமனம் | முதல் / வரை |
|---|---|---|---|
| 01. | யா / கிளிநொச்சி இ.த.க பாடசாலை | அதிபர் | 22.11.1952 முதல் 31.03.1958 வரை |
| 02 | யா / பன்னாங்கண்டி இ.த.க. பாடசாலை | அதிபர் | 01.04.1958 முதல் 14.06.1963 வரை |
| 03 | யா/ தாவளை யற்றாலை | | |
| | அ.யி.த கலன் பாடசாலை | அதிபர் | 15.06.1963 முதல் 31.12.1963 வரை |
| 04. | இர / பலாங்கொடை அ.த.க பாடசாலை | அதிபர் | 01.01.1964 முதல் 14.05.1965 வரை |
| 05. | இர / கஹவத்தை அ.த.க பாடசாலை | அதிபர் | 15.05.1964 முதல் 30.05.1965 வரை |
| 06. | யா / பொன்னாவெளி அ.த.க பாடசாலை | அதிபர் | 01.06.1965 முதல் 31.01.1966 |
| 07. | யா/ தம்பிராய் அ.த.க பாடசாலை | அதிபர் | 15.01.1966 முதல் 14.01.1966 வரை |
| 08. | யா / சிவநகர் அ.த.க பாடசாலை | அதிபர் | 01.02.1966 முதல் 30.05.1968 வரை |
| 09. | வவு / விவசாய பயிற்சிப் பாடசாலை | அதிபர் | 01.06.1968 முதல் 31.12.1968 வரை |
| 10. | யா / குமரபுரம் இ.த.க பாடசாலை | அதிபர் | 01.07.1969 முதல் 01.10.1969 வரை |
| 11. | யா / சிவநகர் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை | அதிபர் | 01.11.1969 முதல் 31.12.1971 வரை |
| 12. | க / பன்விலை அ.த.க பாடசாலை | அதிபர் | 01.01.1972 முதல் 14.05.1981 வரை |
| 13. | கிளி / கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம் | அதிபர் | 15.05.1981 முதல் 31.07.1981 வரை |
| 14. | கிளி / உருத்திரபுரம் மகாவித்தியாலயம் | அதிபர் | 01.08.1981 முதல் 05.05.1990 வரை |

கடமையேற்றது முதல் ஓய்வு பெறும் காலம் வரை அதிபராகவே கடமையாற்றிய பெருந்தகை திரு.கா.நாகலிங்கம் அவர்கள் ஆன்மீக , சமூக , சமய , அரசியல் எனப்பன்முகப் பார்வையுடைய ஒருவர். அவரது நிமிர்ந்த நடை, தெளிவான உச்சரிப்பு, கனிவான பார்வை, பதட்டமில்லாத நடை, தமிழ் பாரம்பரிய வெண்ணிற வேட்டி சட்டை முற்றிலும் "ஆசிரியர்" என்ற தொழிலுக்கே வரைவிலக்கணமானவர். அவர் வாழும் காலத்தில் அவரை கௌரவிக்கும் இக்கல்விப் பணிக்கான எனது தேடலை இயன்றவரை முயற்சித்துப்பெற்றதோடு அதிபர் அவர் களிடமே நேரடியாகவும் பெற்றுக்கொண்டு இக்கட்டுரையை எழுதியுள்ளேன். இன்று வரை கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வரலாற்றைக் கூறக்கூடிய ஞாபக சக்தியுடைய ஒருவராக திகழும் திரு.கா.நாகலிங்கம் ஐயா அவர்கள் இன்னும் நிறைவான காலம் கல்வித் தொழிலின் கலங்கரை விளக்காக ஒளிரவேண்டுமென வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி . மீனலோஜினி இதயசிவதாஸ்
அதிபர் SLPS- II
B.A PGD, M.Ed
கிளி/உருத்திரபுரம் ம.வி
உருத்திரபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுரம் பல இந்து நிறுவனங்களைத் தன்னகத்தே கொண்ட பிரதேசமாகும். இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட சிவாலயம் எனப்படும் உருத்திரபுரத்தில் வாழும் உருத்திரபுரீச்சர ரதம் அதிர்வினாலோ அல்லது உருத்திரபுரம் வாழ் மக்களின் முற்பயனினாலோ இப்பிரதேசத்தில் குருகுலம், மகா தேவா ஆச்சிரமம், காந்தி நிலையம், பரமானந்தவல்லி மாதாஜீ தபோவனம் என்ற பல சைவ நிறுவனங்களைக் காண முடிகின்றது. இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட வடமேல் சுவாமிகள் யோகர் சுவாமிகளின் ஆசீர்வாதத்துடன் மகாதேவா ஆச்சிரமத்தை உருத்திரபுரத்தில் நிறுவினார். அவரால் ஆற்றப்பட்ட ஆன்மீக உரைகள், பக்திப் பஜனைகள், பிரசங்கங்கள், கதாப் பிரசங்கங்கள் மக்களைக் கவர்ந்தது. பலர் வடிவேல் சுவாமிகளின் மகாதேவா ஆச்சிரமத்தில் பங்காளராயும், பணியாளர்களாயும் இணைந்தனர்.

# உருத்திரபுரீச்சரம் ஸ்ரீமத் பரமானந்தவல்லி தபோவனமும் அதிபர் கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களின் வகிபாகமும்

ஆச்சிரமத்தைச் சேர்ந்தோர் பல ஆலயங்களுக்கும், அறநெறி நிலையங்களுக்கும் சென்று சித்தாந்த வகுப்புக்கள். புராணபடனங்கள், பஜனைகள், பிரசங்கங்கள் செய்தனர்.

இவ்வடிப்படையில் வடிவேல் சுவாமிகளின் கதாப்பிரசங்கங்களினாலும் பஜனைகளினாலும் கவரப்பட்ட சாவகச்சேரியில் நுணாவில் பகுதியில் 1914ம் ஆண்டு அவதரித்த சகோதரி பரமானந்தவல்லி மகாதேவா ஆச்சிரமத்தோடு இணைந்து கொண்டார். வடிவேல் சுவாமிகளின் தொண்டுகளில் பங்கெடுத்தார். அவரின் நடத்தையாலும், ஒழுக்க சீல உரைகளாலும் சிறுவர்களையும், பெண்களையும் அருட் சகோதரி கவர்ந்தார். தனது அர்ப்பணிப்பான சேவைகளால் மகாதேவா ஆச்சிரமத்தில் பெண் துறவியாக இவர் விளங்கினார். மகாதேவா ஆச்சிரமத்தோடு அக்காலத்தில் இணைந்திருந்த உருத்திரபுரம் சார் பெரியவர்கள் எல்லோரும் சகோதரி பரமானந்தவல்லியை பெண் துறவியாகவே வழிபட்டனர். இவ்வடிப்படையில்

அதிபர் கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களும் மாதாஜீயின் தொண்டுகளால் கவரப்பட்டு மாதாஜீயின் தொண்டன் ஆனார்.

வடிவேல் சுவாமிகள் சமாதிநிலை எய்தும் வரை மகாதேவா ஆச்சிரமத்திலேயே தனது தொண்டுகளை இயற்றிவந்த சகோதரி பரமானந்தவல்லி அவர்கள், வடிவேல் சுவாமிகள் சமாதி அடைந்த பின் தனது சேவையை உருத்திரபுரம் சிவன் கோயிலை அண்மித்த பகுதிகளில் மேற்கொள்ள மனங்கொண்டார். அவ்விருப்பத்தை அதிபர் திரு. கார்த்திகேசு நாகலிங்கம் அவர்களிடம் தெரிவித்த போது மாதாஜீயின் விருப்பப்படியே சிவாலயத்திற்கு அண்மித்த பகுதியில் பொருத்தமான ஆச்சிரமம் ஒன்றை அமைத்துக் கொடுத்தனர். இவ்வுதவிக்கு வேறு பல அன்பர்களும் உதவி இருந்தனர். ஆச்சிரமத்தில் குடியேறிய பின் அவ்விடத்தை உருத்திரபுரம் மக்கள் 'மாதாஜீ தபோவனம்' என்றும் அருட்சகோதரியை 'மாதாஜீ' என்றும் அழைத்துவரலாயினர். மாதாஜீயின் ஆலோசனைகளாலும், வழிபாடுகளாலும், தியானத்தாலும், முன்மாதிரியான நடத்தைகளாலும் அப்பிரதேசத்து மக்களையும், பெரும்பாலும் பெண்களையும் கவர்ந்தார். ஆன்மீக உரைகளாலும் பஜனைகளாலும் அறநெறி வகுப்புக்களாலும் மாணவர்களைக் கவர்ந்தார். தபோவனம் ஒரு கலைக்கூடமாக மாறியது. அருளொளி பரப்பும் இடமாக அது காணப்பட்டது. எங்கள் கிராமத்தின் வழிபாட்டுக்குரிய ஆத்மீகப் பெரியாராக மாதாஜீ மாறினார். மாதாஜீயின் வார்த்தைகள், அருளுரைகள், ஆற்றுப்படலுக்காக செல்வோரிடம் அவர் காட்டிய பரிவு, பாசம், ஆற்றுப்படுத்தும் பரிவுரைகள் இவரை சித்தர்களின் வரிசையில் வைத்துப் பூசிக்கப்பட வேண்டியவராக மக்களுக்கு உணர்த்தியது.

தபோவனத்தை ஒழுங்காக நடாத்துவதற்காக உருத்திரபுரத்தில் ஒரு நிர்வாகக் குழுவை திரு.கா. நாகலிங்கம் அவர்கள் ஒழுங்கு செய்தார். உள்ளூரில் வேண்டிய நிதி வசதி கிடைக்காததால் கனடா சென்றிருந்த அதிபர் கா.நாகலிங்கம் அவர்கள் தபோவனத்தின் பராமரிப்புச்செலவு முழு வதையும் தானே ஏற்றுக்கொண்டார். இலங்கை வரும் போதெல்லாம் மாதாஜீயின் தபோவனத் திற்குச்சென்று வழிபட்டு மாதாஜீயின் அருளாசிகளையும் பெற்றுச் செல்வார். தபோவனத்தில் ஏதேனும் தேவைகள் ஏற்படும் பட்சத்தில் அதிபர் அவர்களுக்கு மாதாஜீ அம்மா கடிதம் மூலமாக தெரிவிப்பார். அக்கடிதத்தில் அன்பு மகன் கா. நாகலிங்கம் அவர்கட்கு எனவே விழித்து எழுதுவார். அதிபர் கா. நாகலிங்கம் அவர்கள் தபோவனத்திற்கு மாதாஜீயை தரிசிக்க வரும்போது என் மகன் வாடா என்று தாயன்புடன் கண்ணீர் மல்க வாஞ்சையுடன் வரவேற்பார். மாதாஜிக்கு இயலாமை இருந்த போது அவர் சார்பாக மாதாஜீ சொல்லச்சொல்ல அவற்றைக் கடிதமாக எழுதி அனுப்பும் பொறுப்பில் நான் இருந்தாலும் மாதாஜீயிடம் அடிக்கடி சென்று வந்ததாலும் இவற்றை என்னால் சரியாகக் குறிப்பிட்டு எழுத முடிகின்றது. பேரன்பு மிக்க ஒரு தாய், தனயனுக்குரிய உறவை அவர் களிடம் காணக்கூடியதாயிருந்தது.

கனடாவிலிருந்து மாதாஜீ அவர்களுக்கு மாதந்தோறும் அனுப்பிய பணத்தை மாதாஜீ பெறுவதில் சில அசௌகரியங்கள் ஏற்பட்ட தால் மாதாஜீ அவர்களின் வேண்டுகோளுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிணங்க அதிபர் அவர்கள் எனது பெயரில் பணமனுப்பல்களை மேற் கொண்டார். நான் அவ்வேளையில் கிளிநொச்சியில் தபாலதிப ராக கடமையாற்றியமையால் அதிபரால் அனுப்பப்படுகின்ற ஒவ்வொரு பணமனுப்பல் களுக்கும் ஒரு கடிதமும் மாதாஜீ பெற்றுக் கொண்டதை அவரின் எழுத்துமூலமான உறுதிப்படுத்தலை மாதந்தோறும் அதிபருக் கும் அனுப்பி வந்தேன். இதில் தனது சுகதுக் கங்கள், புதினங்கள் என்பன எல்லாம் பகிர்ந்து கொள்ளப்பட்டது. இந்நடவடி க்கை"மாதாஜீ" சமாதி அடையும் வரை நீடித்தது.

மாதாஜீ அவர்கள் மனதில் சஞ்சலம் ஏற்படும் போதும் இறைபக்தி காரணமாகவும் உண்ணாவிரதம், மௌனவிரதம் போன்ற வற்றை மேற்கொண்டு அழியும் உடலை வருத்திக்கொள்வார். ஒருமுறை ஒரு மாதத்திற்கு மேலாக உண்ணாவிரதத்தை மேற்கொண்டார். அப்போது இவரின் உடலா ரோக்கியம் படிப்படியாகக் குன்றி வந்தது. இதனை அறிந்த அதிபர் அவர்கள் மாதாஜீயை அவதானத்ததுடன் பராமரிக்கும் படியும், உண்ணாவிரதத்தை முடிவுறுத்த விரைவாகச் செயல்படுமாறும் எமக்கு அறிவுறுத்தியதுடன், கிழமைக்கு இரண்டு அல்லது மூன்று கடிதங்கள் மூலம் மாதாஜீக்கும் உண்ணாவிரதத்தை நிறுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுதலை விடுவித்து வந்தார். இதற்குப்பணிந்து மாதாஜீயும் இன்னும் பல அன்பர்களும் வட்டக்கச்சி கிருஸ்ணர் ஆலயம் சென்று உண்ணா விரதத்தை நிறைவுக்குக்கொண்டு வந்தோம்.

அதிபர் கா.நாகலிங்கம் அவர்கள் மாதாஜீயின் உடல்நலம் குன்றாமல் இருப்பதனை எப்பொழுதும் அவதானித்து வந்ததுடன் அவருக்கு தேவையான எல்லா வற்றையும் வாங்கிக்கொடுக்கும் படியும் எமக்குப் பணித்திருந்தார். நாமும் மாதா ஜீயின் தேவையறிந்து யாவற்றையும் செய்து வந்தோம். இந்நிலையில் மாதாஜீ அடிக்கடி சுகவீனமுற்று வைத்தியசாலைக்கு செல்ல வேண்டி இருந்தது. இவ்வேளையில் எல்லாம் மாதாஜீக்கு பெரும் துணையாக இருந்தவர் திரு.கா. நாகலிங்கம் அவர்களாகும்.

அவருக்குரிய அன்றாட செலவைக் கூட திரு.கா. நாகலிங்கம் அதிபர் அவர்கள் அவருக்கு வழங்கும் படி பணித்திருந்தார். இந்நிலையில் மாதாஜீ அன்னையவர்கள் 2003 ம் ஆண்டு தை ஏழாம் திகதி (2003/01/07) மார்கழி சதய நட்சத்திரத்தில் இறைவன் உருத்திரபுரீஸ்வரனின் திருவடி யில் ஒன்றித்து சமாதி நிலையை அடைந்தார். இவ்விடயம் கனடாவில் இருந்த திரு.கா. நாகலிங்கம் அதிபர் அவர்களுக்கும் அப்பொழுது கிளிநொச்சி அரச அதிபராகவும், சிவாலயத் தின் தலைவராகவும் இருந்த திரு.தி.இராசநாயகம் அவர்களுக்கும் (அப்பொழுது இலண்டனில் இருந்தார்) உடன் தெரிவிக்கப்பட்டது. இவர்கள் இருவரின் ஆலோசனைப்படியும் ஊர் மக்களின் ஏகோபித்த தீர்மானத்தின் படியும் உயிர்நீத்த 24 மணி நேரத்தினுள் 08.01.2003 அன்று காலை மகாதேவா ஆச்சிரமத்தின் பிரதமகுரு தவத்திரு கணேசானந்த மகாதேவா சுவாமிகளின் வழிநடத்தலில் 'மாதாஜீ' தவமியற்றிய தபோவன வளாகத்தில்மாதாஜீ பரமானந்தவல்லியின் புகழுடல் சமாதி வைக்கப்பட்டது. இவரின் சமாதி தினத்திலி ருந்து 31 நாட்களுக்குள் இவரின் சமாதியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேல் ஆலயம் அமைக்கப்பட்டு அங்கு சிவலிங்கம் பிரதிஸ்டை செய்யப்பட்டு மாதாஜின் நினைவாலயம் மாதாஜீயின் சமாதி தினத்தின் 31ம் நாள் கும்பாபிஷேகமும் முறையாக நிறைவேற்றப்பட்டது.

இதற்கான செலவுகள் ஏறக்குறைய ஒரு இலட்சத்து எண்பத்தாறாயிரம்(186,000/=) ரூபாவையும் அத்தோடு மாதாஜீயின் இறுதிக்கிரியை செலவு அனைத்தையும் திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்களும் அவரின் குடும்பத்தினரும் பொறுப்பேற்று அத்தொகையை எனக்கு அனுப்பி இருந்தனர்.

சிவாலயத்தின் அயலில் உள்ள இம்மாதாஜீ நினைவாலயத்தில் அதிபர் அவர்களும் அவரின் துணைவியார் அவர்களும் இலங்கை வரும் போதெல்லாம் அயலில் உள்ள மக்களையும் குறிப்பாக மாதர்களை ஒன்றிணைத்து சிரமதானம் செய்தும், பூசைகள் செய்தும், மண்டபத்தில் பஜனைகள் செய்தும் செல்வதை இங்குள்ள அனைவரும் அறிவர். இவ்வாலயத்தில் தினமும் பூஜை செய்யப்படுகின்றது. இப்பூஜையில் தினமும் இக்கிராமத்தின் மக்களின் நல்வாழ்விற்கான வேண்டுதல் மிக முக்கியமாக இடம்பெறுவதை அவதானிக்க முடியும். இப்பூஜைகளை சிவஅன்பர் திரு.வே.தர்மலிங்கம் அவர்கள் இயற்றி வருகின்றார். இன்றுவரை இவ்வாலயத்தின் எல்லா செலவுகளையும் திரு.கா. நாகலிங்கம் அவர்களே செய்து வருகின்றார்.

மாதாஜீயின் சமாதியில் அருளாட்சி அதிர்வுகள் இப்பிரதேசத்தை ஆட்கொண்டிரு ப்பதை இப்பிரதேச வாசிகள் அனைவரும் உணர்கின்றனர். மிகப்பெரிய பணியான இப்பணியை ஒரு அருட்தாய்க்கும் மகனுக்கும் இருந்த அருள் உறவாலும் அன்னையின் தூய பணிகளாலும் ஒழுக்க நடைமுறை யாலும் கவரப்பட்டு அந்த தூய பூரணத்துவம் பெற்ற ஆத்மாவிற்கு எடுக்கப்பட்ட இச்சமாதிக்கோயில் இலங்கை வரலாற்றில் தொடர்ச்சியாகப் பேசப்படும். இலங்கையின் சித்தர்கள் பற்றி ஆராயும் எவரும் மாதாஜீ பரமானந்தவல்லி அவர்களின் சமாதியையும் வரலாற்றையும் தொட்டுச் செல்லாமல் இருக்க முடியாது என்ற அளவிற்கு அன்னை மாதாஜீயை பெருமைப்படுத்தி இருக்கும் அதிபர் கா. நாகலிங்கம் அவர்களின் பணி அவர் "வாழும் போதே வாழ்த்தப்பட" வேண்டிய மிகச்சிறந்த பணியாகும். சுயநலத்தையே உச்சமாகக் கொண்டு வாழும் இந்த சமுதாயத்தில் மாதாஜீ அம்மா முதுமை யுற்றிருந்ததிலிருந்து, சமாதி எய்தி, பின் இன்றுவரை கோயில் பூசைகள், பராமரிப் புக்கள் யாவற்றிற்கும் உரிய செலவுகளை ஏற்று வரும் அதிபர் அவர்களும் அவரின் துணைவியார், பிள்ளைகளும் எந்தவொரு மன உளைச்சலும் இன்றி செலவைச் சேவையாகச் செய்கின்ற அவர்களின் பரந்த மனப்பாங்கை இவ்விடத்தில் குறிப்பிடாமல் விடுவது நன்றி மறந்த செயலாகும். அவர் நீண்டு வாழவும், ஆத்மீகப்பணியிலும், கல்விப்பணியிலும், சமூகப்பணியிலும் தொடர்ந்து அக்கறை காட்டவும் 'மாதாஜீ' அவர்களின் அருளாசி என்றும் அவருக்கு பலத்தைத் தந்து கொண்டிருக்கும்.

நன்றி

இது

மாதாஜீயின் தொண்டர்களில் ஒருவன்

**மா.பேரம்பலம்** J.P



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுந்தீவு இவரூராம் உருத்திரபுரம் வாழ்விடமாம்
இவர் ஊருக்கு தொடர்பில்லா உத்தமனார் பேராசான் நாகலிங்கம்
இவர்பெயருக்குள் நஞ்சிருக்கும் உள்ளத்தில் வெள்ளை மனம்
ஊருக்குள் நான் பார்த்ததில்லை
ஒரு தொண்டன் இவரைப்போல எழுத்தறிவு புகட்டியவர் பக்திமார்க்கம் காட்டியவர்
கூட்டுறவு முதல்கொண்டு சிக்கனமாய்
சேமிக்கும் வாடிக்கை ஊருக்குள் ஊட்டியவர்

# வாழ்நாளில் வாழ்த்திடுவோம்

மாவட்ட அதிபரெல்லாம் அலுவலகம் வந்தாலும்
இவர் வந்து யாம் அறியோம்
கடிதம் தான் பதில்சொல்லும் என அன்று
இவர் பிரியாவிடைக் கூட்டத்தில்
கல்வி அதிகாரி சொன்ன கதை அப்படியே நினைவிருக்கு
ஆளுமையில் நிகரில்லை இவருக்கு

நாவல் மரமேறி அவர் பிள்ளை விழுந்தாலும்
பாவம் அவள் பிள்ளை பெரும்கிளைய விட்டிற்று
சிறு கிளைய பிடிச்சிற்றாள் எனிமேல்
பார்த்தேறும் என சொல்லி கடிந்துரைக்கா
பெண் சமத்துவத்தின் தந்தை நீர்

ஏனப்பா போற நிகழ்விலெல்லாம் தனியாதான் இருக்கின்றீர்
நாலைந்து சனத்துடனே தான் இருமென் என மனையாள் கேட்டாரம்
நாலைந்து சனத்துடன் தான் நான் இருந்தேன் அருகிருந்தோர்
செத்தமாட்டு உண்ணிபோல கழண்டிட்டால்
என்செய்வேன் நான் எண்டாராம்
இது மட்டுமல்ல வாத்தியார் வீட்டிற்குள் வாலிபர்கள்
சென்றதனை யான் அறியேன் பயமில்லை
அத்தனையும் மரியாதை இவர் மீது அவர்கட்கு

ஊரு மாறி போனாலும் உறைபனிதான் வந்தாலும்
உடல் நடுங்கி நின்றாலும் கொண்ட
உடைமாறா உத்தமன் நீர்
கலாசார பொக்கிசம் நீர்

கனடாவில் அவருக்கு ஏலாது ஒரே படுக்கை என்பர்
ஊருக்கு வந்தவுடன் உத்வேகம் கொண்டு இவர்
பெண்டாட்டி பின் இருக்க TVS தன்னில் ஏறி
ஊர்வலம் தான் வந்திடுவார்
தோட்டத்து வாழை எல்லாம் நோட்டமிட்டு களை எடுப்பார்
ஊர் காற்று பட்டவுடன் உற்சாகம் கொண்டிடுவார்.


ஊருக்குள் பேருக்காய் தொண்டுசெய்யும் பலரிருக்க
பேரின்றி ஊருக்காய் உழைத்திட்ட உத்தமன் நீர்
பேருக்காய் அன்றி பெருமனதாய் யாம் இவரை
வாழ்நாளில் வாழ்த்திடுவோம் வாயார
நலத்துடனே வாழியவே நூறாண்டு.

சீராளன்
உருத்திரபுரம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இணையர்களாக...



ஆண் பிள்ளைகளுடன் ...



பெண் பிள்ளைகளுடன் ....



மருமக்களுடன்...



கிராம உறவுகளின் ஒன்று கூடலில்...



உருத்திரபுரம் ப.நோ.கூ. சங்க அரிசி ஆலை அடிக்கல் நாட்டல்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவிற்கு ஓர் வாழ்த்துமடல்

திருமதி மீ. குகநாதன்

அன்னை பெற்ற அரியதோர் வரமாய்
உருத்திரபுரம் உதித்த கா.நாகலிங்கம் ஐயா!
உள்ளம் உம்மை எண்ண
வார்த்தை இல்லை சொல்ல

ஆசானாய் இருந்து அதிபராய் உயர்ந்து
செய்யும் பணியை நயந்து
போட்ட நடையை வளாகமும்
மறக்காதையா

தன் பணி கொண்டு
சமூகத்தின் பிணி கொய்தீர்
ஆற்றுப்படுத்தலின் அடங்காததாகம்
கண்டு
வேற்றுப்படுத்தல் வேரறுந்து
போனதையா

காலங்கள் கழிந்த பின்பும்
ஆற அமர அமர்ந்த பின்பும்
தாய் நாடு விட்டு பிறநாடுபெயர்ந்த
பின்பும்

தன் அகம் கொண்ட நல்லெண்ணம்
பிறர் நலம் எண்ணும் உயர் உள்ளம்
களைக்கவில்லை - போதும் என்று
சளைக்கவில்லை- இன்றும்

சைவமும் தமிழும் இரண்டு
கண்ணெனக்கொண்டு
வாழ்ந்து வரும் உத்தமரே!

எம் எல்லோர்க்கும் உற்றவரே
தொண்டுக் கரத்தை
குடிசை முதல் கோயில் வரை
நீட்டி
ஏழை உதட்டில் இறைவனைக்
காட்டி
நீர் சொல்லும்சேதிதான்
ஊருக்கு மருந்து

கல்விக்கோர் உதவிக்கரம்
தொழிலுக் கோர் ஊக்குவிப்பு
கோயில்கள் தோறும் நற்பணி
என்னவென்று சொல்ல தங்கள்
பணியை
கண்டு கண்டு துள்ள
பெயர் நிலைக்கும்
காலம்தொண்டு
ஆயுள்தனை அளவெடுத்தால்
ஊர் உள்ள மட்டும் தங்கள்
பெயர் தங்கும்
உருத்திரபுரம் உள்ள மட்டும்
உங்கள் பெயர் நிலைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி. சூரியகுமாரி இராசேந்திரம்
முதல்வர்
கிளி / இராமகிருஷ்ண வித்தியாலயம்.


# பன்முகப் பேராளன்

அசைந்தாடி வரும் தென்றலில்
ஆனந்தம் காண்பது போல்
உருத்திரபுரத்தில் ஒரு தென்றல்
சூறாவளியையும் திசை திருப்பும்
ஆலயமரத்தின் விழுதானவர்
நாகலிங்கம் ஐயாவைக் கண்டு
நாணலும் நாணி நிற்கும்
பள்ளிக்கூடக் கதைகள்
பலர் சொல்லக் கேட்டிருந்தேன்
நேரிலும் தான் நேர்மையைக் கண்டு
கண்டிக்கும் வார்த்தை எந்தக்
கணத்திலும் கேட்டதில்லை.

வெண்ணிற ஆடையும்
வெண்ணிற முடியும்
வெள்ளை மனதின்
வெளிப்படை உண்மை
கள்ளமில்லாப் பேச்சு
கனிவான பார்வை

வண்ணம் பல கொண்டு
வடித்தெடுத்த மாணவர்கள்
சொல்லுகையில் புரிந்ததையா
செயந்திரனின் கூர்மை

மாணிக்கப்பிள்ளையாரும்
சக்திபுர முருகனுடன்
உருத்திரபுரீச்சரர் உடனிருந்து
ஊக்கமாய் செய்த பணி
ஊர் சொல்லி ஓய்வதில்லை
உருத்திரபுரத்தில் இது வரலாறு

மனை சிறக்க மக்கள் பெற்று
மனைவியுடன் மருமக்கள்
மகிழ்ந்திருக்க பேர மக்கள்
வளமான வாழ்வு கண்டீர்
வாழ்த்துகிறோம் வாழியவே
உருத்திரபுரத்தில் இன்றும்

உதைபந்தில் உயர்ந்திருக்க
உங்கள் அர்ப்பணிப்பு
உரமாக இருந்ததென்றார்
விருப்புடன் விளையாடுதற்காய்
விடை கேட்க உமை சூழ்ந்து
பேன் எடுத்த கதை சொன்னார்
பெருமையுடன் உமை நயந்தார்
ஊர் கூடிக் கல்வியிலே
உயர்ந்தமைக்கு வகை சொன்னார்
அன்பான கண்டிப்பு
அமைதி தவழ் கருத்துரைகள்
எடுத்தெறிந்த வார்த்தையில்லை
கிள்ளிக் கதை சொன்னதில்லை
வீட்டுப்படலை தட்டி
விரைந் தழைத்துப் பள்ளி சென்று
வீறு நடைபோட வைத்த
வீறாப்பை மறந்தாரில்லை
தமிழுடன் சமயம் சமமாய்
தழைத்திடப் பணிசெய்த

பக்குவம் கண்டு மெச்சுகிறோம்
பல்லாண்டு நீடு வாழ்க

கூட்டுறவும் அரசியலும்
கூட்டிய பொருளாதாரமும்
குவலயத்தில் ஒளி வீசக்
குருவாகிப் பணி செய்தீர்

பன்முகப் பேராளன் நீர்
பெருமை உமக்கல்ல ஊருக்கே
பொருண்மியம் காக்க வைத்த
பெருந்தகையே நீர் வாழ்க.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# துரித வளர்ச்சிகண்ட கிராமம் இன்று சின்னாபின்னமாகியுள்ளது

கா. நாகலிங்கம்

எமது சொந்த நாட்டிலே தமிழன் தன்மானத்துடன் வாழ முடியாது. தமிழன் என்ற ஒரே காரணத்தினால் பல்வேறு வழிகளாலும் அவமதிக்கப்பட்டு துன்புறுத்தப்படுகிறான். வீட்டில் இருந்து புறப்பட்டவன் திரும்பி உயிருடன் வீடு வருவானோ என்ற நிலையிலேயே வாழ வேண்டியிருக்கிறது. இதனால் நாம் புலம்பெயர்ந்து செல்ல வேண்டி ஏற்பட்டது.

இவ்வாறு கூறுபவர் நாற்பது வருடங்களுக்கு மேலாக கிளிநொச்சியில் வாழ்ந்து சமய சமூகப் பணிகளில் பங்காற்றி தற்போது வெளிநாட்டில் குடியேறி இருக்கும் கார்த்திகேசு நாகலிங்கம் கிளிநொச்சி மாவட்டத்தின் குடியேற்ற காலப்பகுதியில் இருந்து ஆசிரியராக, அதிபராக பல காலம் சேவையாற்றி பல சமூக சமய பணிகளிலும் பங்கெடுத்துக் கொண்டவர் இவர்.

இன்று மருந்திற்கும் மனிதரே இல்லாமல் போயிருக்கும் அவரது கிராமத்தைச் சென்று பார்த்து விட்டு திரும்பியவர் அக் கிராமம் சம்பந்தமாகக் கூறுகையில்

அழகிய சிராமமாக உருவெடுத்து வளர்ந்து வந்த உருத்திரபுரம் சீரழிந்து சின்னாபின்னப் பட்டு மனித சஞ்சாரமே அற்று கோரக் காட்சியுடன் எம்மைப் பயமுறுத்துகிறது. காலம் காலமாக வளர்த்து வந்த தென்னை மரங்கள் அடியோடு வெட்டிச் சாய்க்கப்பட்டு வளம் அழிந்து வனமாகி மாறிவருகிறது என்று வேதனையுடன் வெளிப்படுத்திய அவரை அவருடைய பழைய ஞாபகங்களை மீட்டும் நிலையில் சில கேள்விகளைக் கேட்டோம். அவர் தந்த பதில்கள் ஒரு கிராமத்தின் உதயம் அஸ்தமனமாகியதை வெளிப்படுத்தி நின்றன. அவற்றை இங்கே தருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கிளிநொச்சியில் உங்கள் குடியேற்றம் சம்பந்தமாகக் கூறுங்கள்...?**

நான் பசுந்தீவெனும் நெடுந்தீவிற் பிறந்து எனது ஏழுவயதிற் தந்தை தாயாருடன் யாழ்ப்பாணம் கொழும்புத் துறையில் வசித்தேன். ஆரம்பக் கல்வியை நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆரம்பித்து கொழும்புத்துறை இந்துமா வித்தியாலயம் ஸ்ரான்லிக் கல்லூரி கொழும்புத்துறை சாதனா பாடசாலைகளிற் கல்வி பயின்று 1949இல் பரமேஸ்வரா வித்தியாசாலை ஆசிரியர்களால் நடத்தப்பட்ட பண்டித வகுப்பிற் படித்துக் கொண்டிருக்கும் போது ஆசிரிய கலாசாலைப் புகுமுகத் தேர்விற் சித்தியடைந்து 50-51இல் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையிற் பயிற்சி பெற்று 1952 இல் வெளியேறினேன்.

1949 இல் உருத்திரபுரம் குடியேற்றத் திட்டம் ஆரம்பமான போது தந்தை தாயார் அங்கு குடியேறியதால் நானும் அங்கு சென்றேன். பொதுச் சேவையில் சிறுவயதிலேயே ஆர்வம் கொண்ட நான் அங்கு 1952 இலேயே வாசிகசாலை, விளையாட்டுக்கழகம் அமைத்துச் செயலாற்றி வரும் போது கிளிநொச்சி திருநெறிக்கழக நல்லதம்பி வடிவேல் சுவாமி ஆகியோருடன் இணைந்து சமயத் தொண்டுகள் செய்யும் வாய்ப்புக் கிட்டியது.

1952 சரஸ்வதி பூசைத் தினத்தன்று கிளிநொச்சி சைவ வித்தியா அபிவிருத்திச்சங்கத்தினர் ஏழாம் வாய்க்காலில் ஆரம்பித்த இந்து மகா வித்தியாலயத்தில் முதல் ஆசிரியராக எனது ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் ஆசியுடன் ஆரம்பித்து இலங்கையின் பலபாகங்களிலும் அதிபராகக் கடமையாற்றி 1995 இல் ஓய்வு பெற்றேன்.

அத்துடன் ஒரு கூட்டுறவாளனாக 1956 முதல் ஐக்கிய நாணய சங்கம், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், ஐக்கிய நாணய சங்க சமாசம் தேசிய கூட்டுறவுச் சங்கங்களிற் தலைமை ஏற்று நடத்தியதனால் இலங்கை மக்கள் வங்கியின் பொதுச்சபை உறுப்பினராய் இருக்கும் வாய்ப்பும் கிட்டியது. 1952 முதல் 1962 வரை வீரகேசரிப் பத்திரிகை நிருபராகவும் 1957 முதல் 1962 வரை கரைச்சிக் கிராம சபையின் தலைவராகவும் பணிபுரிந்தேன்.

1962இல் பாடசாலைகளனைத்தும் அரசாங்கப் பாடசாலைகள் ஆனதால் அரசியலில் இருந்து விலகிக் கொண்டேன்.

**பல்வேறு சமய சமூகப் பணிகளில் முன்னின்று பணிபுரிந்துள்ளீர்கள் அந்த அனுபவங்கள் பற்றி....**

உருத்திரபுரத்தில் இருந்து 1952ஆம் ஆண்டில் வடிவேல் சுவாமி அவர்களும் நானும் இன்னும் அறுவருமாகக் காட்டினூடே காலை எட்டு மணிக்குப் பிரயாணத்தை ஆரம்பித்தோம். ஒற்றையடிப் பாதை வளைந்து நெழிந்து சென்றது. வானமே தெரியாத இருண்ட காடு பயப்பாட்டினின்று தவறுவதற்காக எல்லோரும் இறைநாமத்தை உரத்துக் கூறியபடி நடந்துசென்றோம். பகல் பதினொருமணியளவில் பழைய கட்டிடத்தூண்கள் போலக் கருங்கற்களைக் கண்டோம். கண்டதும் சுவாமியவர்கள் சிவசிவா என்று சொல்லி தான் கொண்டுவந்த பூக்களை அக்கற்களில் வைத்து இறை நாமத்தை எமக்கெல்லாம் சொல்லித் தந்தார்.

இப்படியே செல்லும் போது பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரத்துண்டு போல் காட்சியளித்த ஒரு பொருளின் மேல் சிலர் ஏறியும் சிலர் கடந்தும் சென்றோம். அப்போது சுவாமியவர்கள் அதன் அசைவைக் காட்டி அது மலைப்பாம்பு என்பதைத் தெளிவுபடுத்தினார். இதுவரை எந்தப் பயமும் அற்றிருந்த நாம் அவ்விடத்தை விட்டு எப்போ அகலுவோம் என்ற மனப்பயத்துடன் காணப்பட்டோம். சுவாமியவர்கள் தாம் காட்டிய பழைய கருங்கற் தூண்கள் தான் உருத்திரபுரம் சிவாலயம் என்பதை உறுதிப்படுத்தி உடனேயே திரும்பிவிட்டோம். அதை நினைக்கும் போதெல்லாம் எம்மை அறியாமலே பயம் ஏற்படும் அதை என்றுமே மறக்க முடியாது.

பிரசித்தி பெற்ற உருத்திரபுரம் சிவாலயத்தில் தர்மகர்த்தா சபையின் தலைவராகப் பணிபுரிந்துள்ளீர்கள் மேற்படி ஆலயத்தின் இப்போதைய தோற்றம் பற்றிக்கூறுங்களேன்?

பிரசித்திபெற்ற உருத்திரபுரம் சிவாலயத்தின் தர்மகர்த்தா சபையின் தலைவராகப் பணிபுரிந்துள்ளீர்கள். மேற்படி ஆலயத்தின் இப்போதைய தோற்றம் பற்றிக் கூறுங்களேன்?

உருத்திரபுரம் சிவாலயம் சோழர் காலத்துக்கு முன்னையது என்பதை அங்குள்ள ஆவுடையார் கல்லுச் சான்று கூறும். இவ்வாவுடையார் சற்சதுர வடிவானதும் பிரம்மா விஷ்ணு உருத்திர பாகங்களை உடையதாகவும் உள்ளது. இன்று சிவாலயங்களில் வட்டவடிவான ஆவுடையார் கல்லே காணப்படுகின்றது. இச் சதுரக் கல்லு இராசராஜேஸ்வரச் சோழன் காலத்தையது என்றே ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

எனவே இவ்வாலயமும் அக்காலத்திலேயே கட்டப்பட்டிருக்க வேண்டும். இதன்பின் வந்த பௌத்தர்களும் கிறிஸ்தவர்களும் இதனைச் சிதைத்திருக்கவேண்டும் 1952 இன் பின் கலைப் புலவர் நவரத்தினம் அரச அதிபர் ஸ்ரீகாந்தா ஆகியோர் யோகர் சுவாமிகளின் தூண்டுதலினால் சிறு ஆலயமாகக் கட்டி கும்பாபிஷேகம் செய்தனர். பின்னர் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு பலரது முயற்சி இருந்தும் இறுதியான தலைவர் தி.இராசநாயகம் அரச அதிபர் காலத்திற் கும்பாபிஷேகம் செய்யப்பட்டதாயினும் இன்றைய போர்ச்சூழல் காரணமாக நித்திய பூசைகள் அற்ற நிலையிற் காணப்படுகின்றது.

1966-67 களில் கிளிநொச்சியில் நடைபெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த திருக்குறள் மகா நாட்டு விழாக் குழுச் செயலாளராகத் திறம்படச் செயலாற்றியுள்ளீர்கள். மேற்படி விழாவில் உங்கள் மனதில் நிறைந்து நிற்கக் கூடிய நினைவுகள் பற்றி...

கிளிநொச்சித் திருக்குறள் மாநாடு தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கா.பொ.இரத்தினம் மற்றும் சகல உபகுழு உறுப்பினர்களின் அயராத ஊக்கமும் எம்மைத் திறம்படக் கடமை செய்ய உதவியது. இலங்கை இந்திய கல்விமான்கள் கிளிநொச்சி விழாவினைப் பெருமைப்படுத்தினர். கிளிநொச்சி மாவட்ட சிறுவர்கள் திருக்குறளை மனனம் செய்ததுடன் 8 வயதுச் சிறுமி கூடச் சொற் பெருக்காற்றிப் பலரதும் பாராட்டைப் பெற்றதன் மூலம் சிறியோர் முதல் பெரியோர் வரை இவ்விழாவிற்பங்கு பற்றி பெருமைப்படுத்தியது இன்றும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் நிறைந்து நிற்கின்றது.

குருகுல நிர்வாகியாகப் பலகாலம் தொண்டாற்றியுள்ளீர்கள் இதுபற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்.

குருகுலம் 1964இல் அப்பு என அனைவராலும் அழைக்கப்படும் அமரர் வே.கதிரவேலு அதிபர் அவர்கள் இந்தியாவில் சர்வோதய அமைப்பு முறையிற் பயிற்சி பெற்று அதன் அடிப்படையில் தனது குடும்பத்தையே ஈடுபடுத்தி ஆதரவற்ற மாணவர்களுக்குச் சுயதொழில் பயிற்சிபெற்று அதன் மூலம் தம் வாழ்க்கையை நெறிப்படுத்தக் கூடியதாக ஆரம்பித்தார். இதற்காக 50 ஏக்கர் நிலத்தில் 30 ஏக்கர் நெற்செய்கை பயிற்சிக்கும் 15 ஏக்கர் மேட்டு நிலப் பயிர்ச் செய்கைப் பயிற்சிக்கும் மின் ஒட்டுப் பயிற்சிக்குத் தனியான இடமும் அச்சியந்திரப் பயிற்சி வெதுப்பகப் பயிற்சி என்பனவும் நடத்தக்கூடியதாகச் சகல அடிப்படை வசதிகளையும் செய்திருந்தார்.

இப்படிப் பல செயற்பாடுகளையும் நெறிப்படுத்திய அப்பு அவர்கள் குடும்பமாகவே இந்தியப் படையினரின் தாக்குதலுக்குட்பட்டு மரணமாயினர். அன்றுவரை அவருடன் உதவியாளராக இருந்த நான் அதைத் தொடர்ந்து நடத்த வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பலரின் உதவியுடன் பகுதி நேர ஊழியராகத் தொண்டு செய்யும் வாய்ப்புக் கிடைத்தது. இங்கு ஆதரவற்றவர்களுடன் மனநோயாளி, வாய்பேச முடியாதவர், கண் தெரியாதவர் போன்றோரும் இருந்தனர். இவர்களுக்குச் சேவை செய்வது மனதுக்கு ஆறுதலைத் தந்தது.

கிளிநொச்சியில் பல பகுதிகளில் மாத்திரமன்றி மலையகத்திலும் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளீர்கள். இக்கால எல்லையில் தங்கள் ஆசிரியப் பணிபற்றி...

மலையக மக்களில் அதிகமான தொழிலாளர் தமது பிள்ளைகள் ஓரளவு கற்றாலே போதும் என்ற எண்ணம் கொண்டவர்களாகவே காணப்பட்டனர். இச்சிந்தனை தற்போது ஓரளவு மாறுபட்டு வருகின்றது. அப் பகுதிகளிலுள்ள செல்வந்தர்களும் வியாபாரிகளும் உத்தியோகத்தர்களும் ஒரு சில தொழிலாளருமே தம்பிள்ளைகள் உயர்கல்வி கற்க வேண்டும் என்று விரும்பினர். தோட்டங்களில் 5ஆம் வகுப்பு வரை ஊர் ஆசிரியரைக் கொண்ட பாடசாலைகளே அதிகம் காணப்பட்டமையால் கல்வி அதிகம் வளர்ச்சியடையவில்லை.

நகரப் புறங்களில் அரசினால் அமைக்கப்பட்ட பாடசாலைகள் காணப்படும். இப்பாடசாலைகளுக்கு மிகத்தூரமான தோட்டங்களிலிருந்தே அதிக மாணவர் வரவேண்டியிருந்தது. சில மாணவர்கள் காலை 4-5 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டு இரண்டு மூன்று மைல் தூரம் நடந்து பஸ் எடுத்துப் பாடசாலை வந்து பிற்பகல் 5-6 மணிக்கே வீடு செல்ல வேண்டியும் இருந்தது. யாழ்ப்பாணப் பகுதி ஆசிரியர் பலர் மாணவர் கல்வியிற் கூடிய கவனம் எடுத்தாலும் சிலர் அதிக லீவு எடுப்பதாலும் விரைவில் இடமாற்றம் பெற்றுச் செல்வதாலும் படிப்பித்தலில் அதிக அக்கறை காட்டுவதில்லை. தற்போது தோட்டப் பாடசாலைகள் அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்றதாலும் அப்பகுதி ஆசிரியர் பலர் அங்கு கடமை புரிவதாலும் ஓரளவு முன்னேற்றம் அடைந்து வருகின்றனர்.

பெரும்பாலான ஆசிசியர்களிடம் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான உச்சரிப்புக்களைக் காண முடிவதில்லை. உதாரணமாக ஒரு ஆசிரியர் 9ஆம் ஆண்டு புவியியல் கற்பிக்கும் போது மலை என்ற சொல்லை விளக்கும் போது இது பெய்யிற மலையல்ல பெரிய மலை என்று கூறியதைக் காணமுடிந்தது. இப்படியான நிலைமாறி மலையக மக்கள் கல்வியில் அக்கறை காட்டி முன்னேற வேண்டும்.

கிளிநொச்சியிற் பாடசாலைகளில் அதிபராய் இருந்த நீங்கள் இம்மாவட்டக் கல்வி வளர்ச்சி பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்.

1950 ஆம் ஆண்டு வரை கிளிநொச்சியில் மக்கள் பரம்பல் மிகக் குறைவாகவே காணப்பட்டது. இரு அரசினர் பாடசாலைகளும் மூன்று சைவ வித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பாடசாலைகளுமே காணப்பட்டன. மாணவரும் குறைவு வகுப்புக்களும் அப்படியே. 50க்குப் பின் பல குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதனாலும் 58ஆம் ஆண்டுக் கலவரத்தின் காரணமாகவும் மக்கள் குடிப்பரம்பல் அதிவேகமாகப் பரவத் தொடங்கியது.

இதன் காரணமாக இருபதுக்கு மேற்பட்ட சமயப் பாடசாலைகளும் ஆரம்பிக்கப்பட்டன. இவற்றிற் பல வசதியான மகாவித்தியாலயங்களாக மாற்றமடைந்ததால் பல்கலைக் கழகங்களுக்கே இங்கிருந்து மாணவர் செல்லும் வாய்ப்புக் கிட்டியது. இத்திடீர் வளர்ச்சி நீடிக்கவில்லை. உள்நாட்டு யுத்தம் காரணமாக பாடசாலைகள் இயங்கமுடியாத நிலையிலும் மாணவர் கல்வியைத் தொடர வேண்டியவர்களாகக் காணப்படுகின்றனர்.

தாங்கள் பிற்காலத்தில் புலம்பெயர்ந்து கனடா சென்றதற்கான காரணம் என்ன என்று கூற முடியுமா?

எமது சொந்த நாட்டிலே தமிழன் தன்மானத்துடன் வாழ முடியாது. பிறநாட்டைச் சேர்ந்தவன் போன்றே ஒரு மாகாணத்தில் இருந்து வேறொரு மாகாணம் செல்ல முடியாதிருக்கின்றது. தமிழன் என்ற ஒரே காரணத்தினால் பல்வேறு தடைகளிலும் அவமதிக்கப்பட்டுத் துன்புறுத்தப்படுகின்றான். வீட்டில் இருந்து புறப்பட்டவன் திரும்ப உயிருடன் வீடு வருவானோ என்ற நிலையிலேயே நாம் வாழ வேண்டி இருக்கின்றது. இக்காரணமே என்னைப் புலம்பெயர வைத்தது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தமது சொந்த நாட்டிற் பற்றுடையவர்களாக இருக்கிறார்களா? இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?

புலம்பெயர்ந்த தமிழர்கள் உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்தாலும் தம் தாய் நாட்டிற் பற்றுடையவர்களாகவே காணப்படுகின்றனர். நாட்டிலே சமாதானம் எப்போ வரும் எப்போ நாடு திரும்புவோம் என்ற மனோநிலை பொருந்தியவர்களாகவே காணப்படுகின்றனர். அதிக தமிழ் மக்கள் வாழும் கனடாவில் உள்ள தமிழர்கள் தாம் வாழ்ந்த கிராமத்தையும் படித்த பாடசாலையையும் மறக்காது அவற்றின் பேரிலே அபிவிருத்திச் சங்கங்கள் அமைத்து அவற்றின் வளர்ச்சியில் அக்கறையுடன் காணப்படுகின்றனர்.

ஆதாரம்
மண்ணின் வேர்கள்
**க.இரத்தினசிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருத்திரபுரம் குடியேற்றத் திட்டமும்

# அதன் வளர்ச்சியும்

- திரு.நா.நாகலிங்கம் -

நாற்திசையும் கடலால் சூழப்பட்ட இலங்கைத்தீவில் ஈழம் என அழைக்கப்படும் தமிழரின் பாரம்பரிய தாயகத்தின் வடபால், யாழ்ப்பாண மாவட்டத்திற்குத் தெற்கிலும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு மேற்கிலும் வவுனியா மாவட்டம் மன்னார் மாவட்டத்திற்கு வடக்கிலும் இந்துமா கடலுக்குக் கிழக்கிலும் அமைந்த மாவட்டமே கிளிநொச்சி மாவட்டமாகும்.

இரணைமடுக்குளம் கட்டுவதற்கு முன் கிளிநொச்சி நகரம் குடிப்பரம்பல் அதிகமற்ற கிராமமாகவே இருந்தது. அப்பொழுது இப்பகுதி வன்னியென்றும் கரைச்சி என்றுமே அழைக்கப்பட்டது. ஊற்றுப்புலம் உருத்திரபுரம் போன்ற கிராமங்கள் இராசதானிகளாக இருந்ததற்கான சான்றுகள் காணப்பட்டாலும்

"ஒல்லாந்தர் போர்த்துகீசர் ஆங்கிலேயர் போன்ற மேல் நாட்டவர்கள் இலங்கை வந்த கி.பி 1505ஆம் ஆண்டுக்குப்பின் இவர்களின் படையெடுப்பாலும் மலேரியாக் காய்ச்சலாலும் மக்கள் செறிவற்றே காணப்பட்டனர்.

மேல் நாட்டார் வருகைக்குப் பின் யாழ் குடா நாட்டில் இருந்த மக்களிற் சிலர் விவசாயம் செய்யும் நோக்கத்துடன் கொழும்புத்துறைத் துறைமுகத்தினூடாகப்"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூநகரிப் பிரதேசத்துக்கும் வடமராட்சிப் பகுதி மக்கள் தட்டுவன்கொட்டி கண்டாவளை துறை முகாங்களினூடாக முரசுமோட்டை கண்டாவளை புளியம்பொக்கணை போன்ற கிராமங்களுக்கும் தென்மராட்சிப் பகுதியில் உள்ளோர் கச்சாயத் துறைமுகத்தினூடாகக் குஞ்சுப்பரந்தன், பரந்தன், கிளிநொச்சி போன்ற கிராமங்களிலும் குடியேறினார். இவ்வாறு குடியேறியோர் ஆனையிறவுக் கடலோரமாகக் குடியிருந்த காரணத்தினாலேயே இப்பகுதிக்குக் கரைச்சி என்ற பெயர் வரக் காரணமாய் இருந்திருக்கலாம். இங்கு வாழ்ந்த மக்களிற் சிலர் விவசாயம் செய்ததுடன் சிலர் மீன்பிடித்தொழிலும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து வந்தனர்.

இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காக யாழ்ப்பாணம் சைவ வித்தியா அபிவிருத்திச் சங்கம் தட்டுவன் கொட்டி, முரசுமோட்டை, புளியம்பொக்கணை ஆகிய கிராமங்களிலே மூன்று சைவப் பாடசாலைகளையும், அரசினால் கண்டாவளை, குஞ்சுப்பரந்தன் ஆகிய இடங்களில் இரு அரசினர் பாடசாலைகளையும் கட்டி உதவினர். இரணைமடுக்குளம் கட்டி முடிக்கப்பட்ட பின் பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி மக்களுக்காக 1929ல் ஒரு ஆரம்பப் பாடசாலையும் ஆனையிறவில் உப்பளம் ஆரம்பித்தபின் ஒரு பாடசாலையையும் அரசினர் கட்டி உதவினர். இதன் மூலம் கரைச்சிப் பகுதியில் மக்கள் வாழ்ந்த பகுதியை அறிந்து கொள்ள முடியும்.

கனகராயன் ஆற்று நீரும் ஏனைய சிற்றாறுகளின் நீரும் சேர்ந்து இரணைமடுக்குளம் ஊடாகப் பரவிப் பாய்ந்து ஆனையிறவுக் கடலேரியில் வீணே விழுவதைக் கண்ட அப்போதைய அரச அதிபர் சேர். வில்லியம் துவைனம் அவர்கள் இரணைமடுக்குளத்தினைக் கட்டுவது சம்பந்தமாக ஓர் ஆய்வறிக்கையினைப் பிரித்தானிய அரசுக்கு அனுப்பி வைத்தார். இதன் அடிப்படையில் நீர்ப்பாசனப் பொறியியலாளரான பார்க்கர் அவர்கள் 1,105000 ரூபாவிற்கு கட்டி முடிக்கலாமெனத் தீர்மானித்தார். 1900ஆம் ஆண்டு இக்குளத்தினைக் கட்டி முடிக்கும் பொறுப்பினை ஏற்ற பொறியியலாளர் திரு. டபிள்யூ. பிறவுண் அவர்கள் மாட்டுவண்டியிற் கிளிநொச்சி சென்றார். அப்பொழுது கரைச்சிப் பிரதேசம் சிறிய அளவு சனத்தொகையைக் கொண்டிருந்தது. அதிஸ்ட வசமாக வழியிலே வெற்றிவேலு என்னும் இளைஞனைச் சந்தித்தார். இவனின் சுறுசுறுப்பும் பேசும் ஆற்றலும் இவரைக் கவர்ந்து விட்டது. குளத்தைக் கட்டுவதற்கான வேலையாட்களை இவர் மூலம் பெற்றுக்கொண்டார். அத்துடன் குளக்கட்டுக்கு உதவியாளராகவும் இருந்தார். இவரே பிற்காலத்திற் கிளிநொச்சிப் பகுதிப் பொலிஸ் விதானையாளராகவும் இருந்ததுடன் முகாந்தரம் என்ற பட்டமும் பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்தார்.

திரு. பிறவுண் அவர்களால் கட்டப்பட்ட குளக்கட்டு வேலை பின்னர் J.S கெனடி என்னும் பொறியியலாளரினால் 1920ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. இக்குளத்தின் மூலம் அதன் அருகே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானாவரியாகக் கமம் செய்தவர்களுக்கே முதலில் நீர் வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1939ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இக்குளத்தின் முதலாவது குடியேற்றத்திட்டம் தற்போது கணேசபுரம் என அழைக்கப்படும் பழைய கொலணியில் ஆரம்பிக்கப்பட்டது. இதில் நூற்றெட்டு வீடுகள் கொடுக்கத் தீர்மானித்தாலும் ஆரம்பத்தில் முப்பைத்தைந்து வீடுகளே கட்டப்பட்டன. அப்பொழுது இரண்டாவது உலக மகா யுத்தமும் ஆரம்பித்ததினால் அரிசித்தட்டுப்பாடும் ஏற்பட்டது. இக்காரணத்தினால் விவசாயிகளுக்கு நல்ல வருமானமும் கிடைத்தது. எனினும் மலேரியாக் காய்ச்சலின் காரணமாகக் குடியேற்றம் மந்தமாகவே நடைபெற்றது. இக்குடியேற்றத்திட்டதில் ஒரு குடும்பத்துக்கு ஐந்து ஏக்கர் வயல் நிலமும் இரண்டு ஏக்கர் வீடு, கிணறுடன் கூடிய மேட்டு நிலமும் வழங்கப்பட்டது. அத்துடன் வாழ்வாதாரத்துக்குத் தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்ட போதும் குடியேற்றம் வெற்றியளிக்கவில்லை.

இக்குடியேற்றத் திட்டம் கண்டிவீதியில் மேற்குப்புறத்தில் புகையிரதப் பாதையின் அருகே அமைக்கப்பட்டதால் கிளிநொச்சி நகரை விஸ்தரிக்க முடியாத நிலை ஏற்பட்டது. இதை அவதானித்த அரசு அடுத்து ஏற்படுத்தும் குடியேற்றத்திட்டங்களைக் கண்டிவீதியில் இருந்து கிழக்குத்திசையிலும் மேற்குத் திசையிலும் இரண்டு மைல் தூரத்திற்கப்பால் அமைக்கத் தீர்மானித்தது.

இதன்பின் இரண்டாவது குடியேற்றத்திட்டமான உருத்திரபுரம் பத்தாம் வாய்க்கால் குடியேற்றத்திட்டத்தைக் கண்டி வீதியின் மேற்குத் திசையிலே ரெயிலர் வீதியின் நான்காம் ஐந்தாம் மைல் தூரத்திற்கிடையில் அமைத்துப் பரந்தன் புதுக்குடியிருப்புத் திட்டமென அழைத்தனர். இக்குடியேற்றத்திட்டத்தில் இருநூற்றுப்பத்து வீடுகள் ஒருமைல் நீளமும் முக்கால் மைல் அகலமும் கொண்ட நீள் சதுர வடிவில் அமைக்கப்பட்டது. வீடுகளைக் கட்டும் போது ரெயிலர் வீதியின் வடக்குப் பக்கமாகக் கணேசபுரத்திற் கட்டப்பட்ட வீடுகளின் அமைப்பிற் கட்ட ஆரம்பித்தனர். 1946ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அங்கு கட்டப்பட்ட பல வீடுகளில் நீர் உட்புகுந்தது. இதனால் அப்பகுதியில் வீடுகளைக் கட்டாது ரெயிலர் வீதியின் தெற்குப் பக்கமாக வீடுகளைக் கட்ட ஆரம்பித்தனர். அத்துடன் வீடுகளின் அமைப்பை மாற்றிச் செலவையும் குறைத்துக் கொண்டனர்.

இங்கு குடியேற்றப்பட்ட குடும்பங்கள் அனைத்தும் அதிக அங்கத்துவம் உள்ள குடும்பங்களாகத் தெரிவு செய்யப்பட்டது. யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்துக் காரியாதிகாரி பிரிவுகளிலிருந்தும் குடியேற்றவாதிகள் தெரிவு செய்யப்பட்டனர். இப்படித் தெரிவு செய்யப்பட்டதனால் இவர்கள் ஒரு வகையில் ஒருவரை ஒருவர் தெரிந்தவராய் இருந்தனர். இதன் காரணமாக ஒரு காரியாதிகாரி பிரிவில் இருந்து வந்தவர்கள் பக்கத்துப் பக்கத்து வீடுகளிற் குடியமர்த்தப்பட்டனர். எனவே அவர்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழும் நிலை ஏற்பட்டது. இக்குடியேற்றத்திட்டம் சாவகச்சேரித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகுதிக்குள் இருந்த காரணத்தினால் அத்தொகுதிப்பாராளுமன்ற உறுப்பினரின் சிபார்சின்படி பழைய கொலணி வீடுகள் போன்று கட்டப்பட்டவை தென்மராட்சியின் காரியாதிகாரி பிரிவில் இருந்தோருக்கே வழங்கப்பட்டன. அவர்களுக்கான வயல் நிலமும் வீடுகளுக்கு அருகருகேயே அமைந்திருந்தன.

ரெயிலர் வீதியின் தென்பக்கத்திற்குக் கட்டப்பட்ட வீடுகள் ஒன்று முதல் நூற்று அறுபத்தாறு வரை இலக்கிமிடப்பட்டு முதலில் யாழ்ப்பாணக் காரியாதிகாரி பிரிவில் இருந்து வந்தோர்க்கும் தொடர்ந்து அளவெட்டி, நீர்வேலி, கோப்பாயில் இருந்து வந்தோர் போன்றவர்களும் ஏனையோருக்கும் வழங்கப்பட்டது. யாழ் குடா நாட்டில் உள்ள முக்கிய கிராமங்கள் அனைத்தும் உருத்திரபுரத்திலும் காணப்பட்டன. வீதிகளின் பெயர்களும் ஊரின் பெயராலேயே அழைக்கப்பட்டன. உதாரணமாகச் சாவகச்சேரிக் குறுக்கு, யாழ்ப்பாணக்குறுக்கு, அளவெட்டிக்குறுக்கு, கோப்பாய்க் குறுக்கு என எல்லா ஊரின் பெயரிலும் வீதிகள் இருந்தன. இதன்பின் ஆரம்பிக்கபட்ட குடியேற்றத்திட்டங்களில் இப்படியான நடைமுறை பின்பற்றப்படவில்லை. இது மாத்திரமன்றித் தாழ்த்தப்பட்டவர் என்று கடைசி வீதியின் அரைப்பகுதியிற் தனியாகக் குடியேற்றப்பட்டனர். சலவைத் தொழிலாளர், முடி திருத்துவோர், மேளம் அடிப்போர் அனைவரும் தனியான ஒரு பகுதியில் குடியமர்த்தப்பட்டனர். சிறுபான்மைத்தமிழர் அமைப்பின் தலையீட்டால் இதன்பின் ஆக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களில் இப்படியான நடைமுறை பின்பற்றப்படவில்லை.

பெரும்பாலும் இப்பிரதேசம் சமதரையாகவும் வண்டல்மண் செறிந்த மணற்தன்மை வாய்ந்த நிலமாகவும் காணப்படுகின்றது. முதலாவது குடியேற்றத்திட்டமான பழைய கொலணியில் கொடுக்கப்பட்ட இரண்டேக்கர் மேட்டுக்காணியின் பின்புறமுள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் தென்னை மரமும் மிகுதியாய் உள்ள நிலத்தில் மா, பலா, போன்ற பழமரங்களும் கமுகு, வாழை போன்றனவும் நட்ட காரணத்தால் பணப்பயிரோ சிறுதானியமோ மரக்கறித்தோட்டமோ செய்ய முடியாது கஸ்டப்பட்டனர். இதை அவதானித்த அரசு உருத்திரபுரம் குடியேற்றத் திட்டத்தில் மூன்று ஏக்கர் மேட்டு நிலமும் நான்கு ஏக்கர் கொடுத்தனர். வீட்டுடன் கூடிய மூன்று ஏக்கர் மேட்டு நிலத்திற் பின்புறத்தில் ஒரு ஏக்கரில் தென்னை நடவென ஒவ்வொரு குடியேற்ற வாசிக்கும் ஐம்பத்து நான்கு தென்னம்பிள்ளை கொடுக்கப்பட்டது. வீட்டோடு சேர்ந்த முன் புறமுள்ள ஒரு ஏக்கரில் நடுவதற்காக வாழை, பலா, மாமரங்கள் சில கொடுக்கப்பட்டதுடன் மிகுதியைக் குடியேற்ற வாசிகளே வாங்கி நடும்படியும் கூறப்பட்டது. அத்துடன் இடையிலே இருந்த ஒரு ஏக்கர் நிலத்திற் பணப்பயிரும் சிறுதானியமும் விளைவிக்கும்படி கூறப்பட்டது. அத்துடன் பயிர்களைப் பார்வையிட்டு ஆலோசனை வழங்கவும் விவசாயப் போதானாசிரியர் ஒருவரும் நியமிக்கப்பட்டார். முன்வேலியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருபுற மூலையில் மாட்டுப்பட்டியும் அமைத்தனர். வாசலுக்கருகில் மாட்டுவண்டி விடவும் கொட்டில் அமைத்தனர்.

தோட்டப் பயிர் செய்ய மண்வெட்டி, கோடாரி, அலவாங்கு, கத்தி போன்றனவும் இலவசமாக அரசு கொடுத்துதவியது. அத்துடன் வயல் உழுவதற்கு ஒரு சோடி எருமைமாடும் ஒரு இரும்புக் கலப்பையும் கொடுக்கப்பட்டது. மேட்டுக் காணியிலும் வயற்காணியிலும் வெட்டப்பட்ட பெரிய மரங்களின் அடிக்கட்டைகளும் புற்றுப்பிட்டிகளும் மண்மேடுகளும் மழை காலத்தில் வெள்ளமோடிய வாய்க்கால்களும் காணப்பட்டன. கட்டைகளைப் பிடுங்கி எரிக்கவும் காணிகளை மட்டப்படுத்தவும் என அரசு ஒவ்வொரு குடியேற்ற வாசிகளுக்கும் சிறு தொகைப் பணத்தை இலவசமாகக் கொடுத்தது. இவை அனைத்தும் ஒழுங்காகச் செய்து முடிக்கப்படுகின்றதா என்பதை பார்வையிட்டு பணம் கொடுக்கும்படி சிபார்சு செய்யவும் ஆலோசனை கூறவும் என நிலஅபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார். குடியேற்றம் செய்யப்பட்ட முதல் ஆறுமதாங்களுக்கும் உணவுக்கான பொருட்களும் கொடுக்கப்பட்டன.

குடியேற்றப்பட்ட முதல் வருடம் சிறுபோக நெற்செய்கைக்கு ஒரு விவசாயிக்கு அரை ஏக்கர் நிலம் சிபார்சு செய்ததுடன் நீர் பாயக்கூடிய ஒருவரது வயலில் எட்டுப்பேர் சேர்ந்து கூட்டாகக் கமம் செய்ய வேண்டும் எனக் கூறப்பட்டது. அத்துடன் விதைப்பதற்குத் தேவையான நெல்லும் கொடுத்தனர். எட்டுப்பேரிடமும் அரசு கொடுத்த மாடும் கலப்பையும் இருந்த போதும் இரும்புக் கலப்பை உழவு தெரியாதவர்கள் வேறு வேலைகள் செய்தனர். இதன் மூலம் எல்லோரும் கூட்டாகச் சேர்ந்து ஒற்றுமையாகச் செய்யும் பழக்கம் உண்டானது. உழுதல், விதைத்தல், நெல் வெட்டுதல், சூடடித்தல், வரம்பு கட்டுதல், நீர் பாய்ச்சல் போன்ற வேலைகள் அனைத்தும் கூலி கொடுக்காமலே செய்தபடியால் நட்டம் ஏற்பட வாய்ப்பிருக்கவில்லை.

ஆரம்பத்தில் நான்கு வீடுகளுக்கு ஒரு கிணறு வீதம் ஒரு குடியேற்றவாசியின் காணியிற் கட்டி அதிற் பக்கத்தில் உள்ள நான்கு குடியேற்றவாசிகளும் உபயோகிக்கும் படி கூறப்பட்டது. காலக்கிரமத்தில் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒவ்வொரு கிணறு கட்ட மானியம் கொடுக்கப்பட்டது.

பாடசாலைக் கட்டிடத்தை மையமாக வைத்து மேற்குப் பக்கமாக உள்ள வீடுகளுக்கு ஒன்று முதல் தொண்ணூற்றொன்பது இலக்கங்களும் கிழக்குப் பக்கமாக நூறாம் இலக்கம் முதல் நூற்று இறுபத்தாறு இலக்கங்களும், வீதியின் வடமேற்குப் பக்கத்தில் அமைத்த வீடுகளுக்கு நூற்று அறுபத்தேழாம் இலக்கத்தில் இருந்து இருநூற்றுப்பத்தாம் இலக்கங்களும் கொடுக்கப்பட்டன. இதனால் வீட்டு இலக்கத்தையும் வீட்டில் உள்ளோரையும் புதிதாக வருவோர் இலகுவாக காண முடிந்தது.

சந்தை, தபாலகம் என்பன போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நிலையங்களும் அமைப்பதற்காக பாடசாலையின் வடக்குப்புறமாகவும் தென்திசையிலும் தொண்ணூறு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. பாடசாலைக்குப் பதினெட்டு ஏக்கர் நிலமும் கொடுக்கப்பட்டது. பிரதான வீதியின் வடக்குப் பக்கமாகக் குடியேற்ற வாசிகளின் ஆடு, மாடு மேய்ப்பதற்காக மேய்ச்சற் தரவையும் ஒதுக்கப்பட்டது. இந்த நிலம் எள்ளுக்காடு என்றே அழைக்கப்பட்டது. உருத்திரபுரத்தின் நான்கு திசைகளும் காடுகளாக இருந்ததனால் மேய்ச்சற் தரவையும் ஒரு பகுதி பற்றைக் காடாகவும் பின்பகுதி இடையிடையே பெரிய மரங்கள் இருந்த காடாகவும் காணப்பட்டது.

உருத்திரபுரம் விரைவாக வளர்ச்சியடைந்ததைக் கண்ட அரசாங்கம் உருத்திரபுரத்தின் கிழக்குப் புறமாக உள்ள காட்டினை வெட்டி நூற்றொன்பது வீடுகளைக் கொண்ட ஒரு குடியேற்றத் திட்டத்தை உருவாக்கத் திட்டமிட்டது. இது இரணைமடுக்குளத்தின் மூன்றாவது குடியேற்றத் திட்டமாகும். இதனை முதலில் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத் திட்டமெனவும் பின்னர் உருத்திரபுரம் குடியேற்றத்திட்டமெனவும் அழைக்கலாயினர்.

இதுனால் முன்னர் உருத்திரபுரத்திற் பொது நிலையங்களுக்கென ஒதுக்கி இருந்த இடத்தை மாற்றி உருத்திரபுரக் குடியேற்றத் திட்டத்துக்கும் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டத்துக்கும் இடையிலே உள்ள தொண்ணூறு ஏக்கர் நிலத்தினையும் பொது நிலையக்காணி என மாற்றிச் சந்தை, விளையாட்டிடம் என்பவற்றுக்கான காணியை ஒதுக்கி மீதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், வைத்தியசாலை, மகப்பேற்று நிலையம் மற்றும் வைத்திய அதிகாரி, மகப்பேற்றுத்தாதி, மருந்து கலவையாளர் ஆகியோர் தங்குவதற்கான விடுதிகளும் உப தபாலகம், மாட்டுப்பண்ணை, சிகரற் புகையிலை பதனிடும் போறணை என்பனவும் கட்டிக் கொடுக்கப்பட்டன. மிகுதிக் காணிகள் ஒருவரும் பாவிக்காமலே கிடந்தன. இதன் முன்புறத்திற் பற்றிமா ஆலயமும் கிறிஸ்தவ கன்னியாஸ்திரிகள் விடுதியும் ஆதரவற்ற மாணவிகள் இல்லமும் அமைக்கப்பட்டது.

எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டத்தில் நூற்றெண்பது வீடுகள் கட்டத் தீர்மானித்த போது எண்பத்தொன்பது வீடுகளே அங்கு கட்டக்கூடியதாய் இருந்தது. மிகுதி இருபது வீடுகளும் உருத்திரபுரத்திற் பொதுச்சேவைக்கென ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தில் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்தின் தொடர்ச்சியான 89ஆம் வீடு முதல் நூற்றெட்டாம் இலக்க வீடு வரை கட்டிக்கொடுக்கப்பட்டது. இவ்வீடுகள் சிவிக் சென்றர் வீடுகள் என்றே அழைக்கப்படுகின்றன.

ஐம்பத்தெட்டாம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாகக் கிளிநொச்சி துரித வளர்ச்சி கண்டது. வடமாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் வசித்த தமிழர்கள் கிளிநொச்சியை நோக்கி வரத்தொடங்கினார்.

இதன் காரணமாகத் தருமபுரத்திலும் தும்புருவில்லிலும் அரசாங்கம் குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்தது. ஏனையோர் அரசாங்கக் காணிகளை அடாத்தாக வெட்டி இரண்டு ஏக்கர் ஒரு ஏக்கர் என்ற அளவிற் துப்பரவு செய்து வீடுகளைக் கட்ட ஆரம்பித்தனர். இதனால் அப்பகுதியில் உள்ள பாதைகள் நேராக இல்லாமலும் பிரயாணத்துக்கு வசதியற்றும் காணப்பட்டது. இப்படி ஏற்பட்ட கிராமங்கள் பல. அவற்றில் சில... கட்டைக்காடு, திருமுறிகண்டி, ஐயனார் புரம், ஜெயபுரம், குமரபுரம், திருநகர், வெட்டுக்காடு, பூநகர் என்பனவாகும். இக்கிராமங்கள் பின்னர் சொந்தக் காணியில்லாது நிரந்தரமாகக் குடியிருக்கின்றனர் என்ற காரணத்தினால் அரசாங்கம் காணிகளை அளந்து, பாதைகளை ஓரளவு நேராக்கி அவர்களுக்கு வதிவிட அனுமதிப்பத்திரம் கொடுத்தது.

இதன் காரணமாக உருத்திரபுரத்திலும் அதன் பக்கங்களிலுள்ள காடுகளிலும் பலர் குடியேறத் தொடங்கினர். விரிவாக்கத்திட்டமென்ற பேரில் உருத்திரபுரத்தின் மேற்குப்புறத்திற் சிவநகர் என்ற கிராமம் உருவாக்கப்பட்டது. அத்துடன் முதலாம் திட்டம், இரண்டாம் திட்டமெனக் குடியேற்றப்பட்டனர். எட்டாம், பத்தாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டத்திற்குப் பொது நிலையங்களுக்கு என ஒதுக்கப்பட்ட காணியிற் கட்டிடங்கள் கட்டப்படாது இருந்த நிலங்களை அக்காலப் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயரைப் பாவித்து அவர்களின் உதவியுடன் எட்டாம் பத்தாம் வாய்க்காற் குடியேற்றவாசிகளின் பிள்ளைகள் இரத்தினம் பண்ணை, ஆனந்தம் பண்ணை என்று பெயரிட்டு அதிற் குடியேறினர்.

விவசாயக் கழகங்கள் பல ஆக்கப்பட்டுப் புதுமுறிப்பிலும் ஒரு பகுதியிற் குடியேறினார். மேய்ச்சற் தரவையாக விடப்பட்ட எள்ளுக்காட்டிலும் குடியேறி அதற்குச் சக்திபுரம் எனப் பெயரிட்டுள்ளனர்.

### பொது நிர்வாகம்

ஆரம்பத்தில் யாழ்ப்பாண அரச அதிபரின் மேற்பார்வையிற் பச்சிலைப்பள்ளி கரைச்சி என்ற காரியாதிகாரி (டீ.ஆர்.ஓ) பிரிவில் உருத்திரபுரம் அமைந்திருந்தது. இதன் கிராம அதிகாரி (விதானை) யாகக் குஞ்சுப்பரந்தன் அதிகாரியே இருந்தார். அக்காலத்திற் கிராம அதிகாரிகளை அக்கிராமத்தின் பொதுமக்களே தெரிவு செய்வர். கிராமத்தலைவர்களுக்குரிய தகுதி உடையோரின் விண்ணப்பங்களை அம்மாகாண அரச அதிபர் ஏற்றுத் தகுதியுடைய விண்ணப்பதாரிகளை அப்பகுதிக் காரியாதிகாரி பொது இடமொன்றுக்கு அழைத்து அங்கு அப்பகுதிக் கிராமமக்களையும் வரச் செய்து பகிரங்கமாக அவர்கள் விரும்பும் கிராம அதிகாரிக்குக் கை உயர்த்தும்படி கேட்டு யாருக்குக் கூடுதலான மக்கள் கையுயர்த்துகிறார்களோ அவரே கிராமத் தலைவராகத் தெரிவு செய்யப்படுவார். ஆனால் அரசாங்கம் பிற்காலத்தில் தானே அவர்களைத் தெரிவு செய்தது. இப்பொழுது கிராமத்தலைவர் என்ற பெயரும் மாற்றப்பட்டுக் கிராம சேவகர் என்றே அழைக்கப்படுகின்றனர். ஆரம்பத்தில் உருத்திரபுரம் பகுதிக்கு ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம சேவையாளரே கடமைபுரிந்தார். இப்பொழுது உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், சக்திபுரம் (எள்ளுக்காடு) என நால்வர் கடமைபுரிகின்றனர்.

கரைச்சிப் பிரதேசத்துக்கென ஆரம்பத்திற் பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கிராம சபையே இருந்தது. இக்கிராம சபையின் எல்லைகள் வடக்கே ஆனையிறவுக் கடலேரியும் கிழக்கே புதுக்குடியிருப்பும் தெற்கே துணுக்காயும் மேற்கே பூநகரியுமாக இருந்தன. பிற்காலத்திற் கிளிநொச்சி மாவட்டம் தனி மாவட்டமாக ஆக்கப்பட்ட போது கிளிநொச்சிக் காரியாதிகாரி பிரிவில் இருந்த துணுக்காய்ப்பிரதேசம், கொக்காவில், பழைய முறிகண்டி என்பன முல்லைத்தீவு மாவட்டத்துடன் இணைக்கப்பட்டன.

உருத்திரபுரம் கிராமம் ஆரம்பத்திற் சாவகச்சேரிப் பாராளுமன்றத் தொகுதியுள் இருந்தது. சாவகச்சேரித் தொகுதி வடக்கே நாவற்குளிக் கடலேரியையும் கிழக்கே முல்லைத்தீவு மாவட்டத்தையும் தெற்கே வவுனியா, மன்னார் மாவட்டத்தையும் மேற்கே கடலேரியையும் எல்லையாகக் கொண்டிருந்தது.

## பாடசாலைகள்

ஆரம்பத்தில் உருத்திரபுரத்தில் மகா வித்தியாலயம் மாத்திரம் இருந்தது. இப்பாடசாலை தான் கிளிநொச்சியில் உள்ள உயர்தர வகுப்புக்களைக் கொண்ட விஞ்ஞானகூடம், விவசாயகூடம், விளையாட்டுத்திடல் அனைத்தும் அமைந்த ஒரே ஒரு பாடசாலையாகும். இதே போன்றே ஒரு பாடசாலை பளையிலும் அமைக்கப்பட்டது. அப்பொழுது ஒன்பதாம் வகுப்புவரை உள்ள பாடசாலைகள் தட்டுவன் கொட்டி, முரசுமோட்டை, கலவெட்டித்திடல், ஆகிய கிராமங்களில் இருந்தன. ஆயினும் ஒன்றிரண்டு மாணவர்களே இப்பாடசாலைகளில் மேல்வகுப்புக்களில் இருந்தனர். உருத்திரபுரத்தில் பிற்காலத்தில் எட்டாம் வாய்க்காலிற் புனித பற்றிமா பாடசாலையும், சிவநகரில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும் புதுமுறிப்பில் அரசினர் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாடசாலைகள் ஆரம்பத்தில் மன்னார் வட்டாரக் கல்வி அதிகாரியின் கீழும் அதன்பின் சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரியின் கீழும் அடுத்துக் கிளிநொச்சி வட்டாரக் கல்வி அதிகாரியின் கீழும் இருந்து வந்தன.

## பிரயாணமும் பாதைகளும்

உருத்திரபுரம் குடியேற்றத்திட்ட ஆரம்ப காகலத்திற் கண்டிவீதி, முல்லைத்தீவு வீதியின் ஒரு பகுதி தவிர ஏனைய வீதிகள் அனைத்தும் கிரவல் வீதிகளாகவே காணப்பட்டன. பெரும்பாலான வீதிகள் இரணைமடுக்குள வாய்க்கால்கள் வெட்டப்பட்ட போது அதிலிருந்து எடுக்கப்பட்ட மண் போடப்பட்டு அதன்மேல் கிரவல் போடப்பட்டிருந்ததால் பாரமான வாகனங்கள் ஓடமுடியாதிருந்தது. உருத்திரபுரத்திற்கு யாழ்ப்பாணத்திலிருந்து வரும் மக்கள் ஏதாவது வாகனத்திலோ அல்லது புகையிரதத்திலோ பரந்தன் சந்தியை வந்தடைந்து சாவகச்சேரியில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரபுரம் வரும் கொடிகாமம் செல்லையா அவர்களது தட்டி வானில் ஏறிக் குஞ்சுப்பரந்தன் சந்தியை வந்தடைந்து பொறிக்கடவை வீதி வழியாக உருத்திரபுரத்தை வந்தடைய வேண்டும். இந்த வான் சாவகச்சேரியிலிருந்து காலை எட்டு முப்பதுக்குப் புறப்பட்டு பதினொரு மணிக்குப் பரந்தனை வந்தடையும். அங்குள்ள தேநீர்க்கடையிற் தேநீர் குடிப்பதற்காக அரைமணி நேரம் நிற்பாட்டப்படும். கொழும்பு செல்லும் புகையிரதத்தில் வருவோர் இங்கு இறங்கிநிற்பர். இவர்களையும் ஏற்றிக்கொண்டுவான் கூழாவடியைப் பன்னிரண்டு மணிக்கு வந்தடையும். அங்கு ஓரிரு கடைகள் இருந்தன. இந்தவான மாணிக்கப்பிள்ளையார் கோயில்வரை சென்று அங்கிருந்து திரும்பிச் டிசன்று கூழாவடியில் நிற்கும். கோவிலுக்கப்பால் மனித நடமாட்டமற்ற காட்டுப்பகுதியாய்இருந்த காரணத்தினால் கோவிலுக்கப்பாற் செல்வதில்லை.பிற்பகல் இரண்டு மணிக்குப் புறப்பட்டு ஐந்து மணியளவிற் சாவகச்சேரியைச் சென்றடையும் ஏனைய நேரங்களில் வருவோர் நடந்தோ துவிச்சக்கரவண்டியிலோ செல்வர்.

பரந்தனுக்கும் பொறிக்கடவை வீதிக்குமிடையில் மழை நீர்பாயும் மூன்று தாம்போதிகள் உண்டு. இதுபோன்று உருத்திரபுரம் கூழாவடிக்கும் மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்துக்குமிடையில் இரு தாம்போதிகளும் உண்டு. கடும் மழை பெய்யும் காலங்களில் வான் முதலாவது தாம்போதியுடன் திரும்பிச் சென்ற விடும்.

1952ல் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டம் கொடுத்ததன் பின் கரடிப்போக்கில் இருந்து உருத்திரபுரம் செல்லும் பிரதான வீதியான ரெயிலர் வீதி சிறிது சிறிதாகப் பாவனைக்கு வரத்தொடங்கியது 55ஆம் ஆண்டுக்குப்பின் சிறிய வாகனங்கள் அவ்வீதியால் ஓடத்தொடங்கின. அதன்பின்னர் படிப்படியாக பஸ் சேவை வளர்ச்சியடைந்து காலை நான்கு மணிக்கு உருத்திரபம் சிவன் கோயிலிருந்து குறிகட்டுவான் துறைமுகம் வரை ஒரு பஸ் சேவை நடைபெற்றது. இதன் பின் பிரயாணக் கஷ்டம் இருக்கவில்லை. காலப்போக்கில் ஒவ்வொரு வீட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்ட துவிச்சக்கரவண்டிகளும் சில வீடுகளில் மோட்டார் சைக்கிள்களும் இருந்தன. உருத்திரபுரத்தைச் சேர்ந்தவர்களும் தனியார் சிற்றூர்திகள் மூலம் போக்குவரவுச் சேவையை நடாத்தினர்.

## வைத்திய வசதி

உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் ஆரம்பித்த காலத்திற் கிளிநொச்சி வைத்திய சாலையில் இருந்து கிழமையில் இருநாட்கள் ஒரு வைத்திய அதிகாரி வரும் ஒழுங்கில் நடமாடும் வைத்தியசாலை ஒன்று இருந்தது. கடும் சுகவீனமுற்றவர்கள் கிளிநொச்சி சென்றே வைத்தியம் செய்ய வேண்டும். 1957ஆம் ஆண்டில் கரைச்சிக் கிராம சபை ஒரு மகப்பேற்று நிலையத்தைக் கட்டிக் கிளிநொச்சி வைத்திய சாலையிடம் ஒப்படைத்தது. அதனருகே மருந்தகம் ஒன்றை அரசினர் அமைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்தியருக்கும் தாதியர் தங்குவதற்கும் இரு விடுதிகள் அமைக்கப்பட்டன. மருந்தின் பாதுகாப்புக் கருதி மருந்துக்கலவையாளர் மருந்தகத்திலேயே தங்கக் கூடியதாக வசதி செய்து கொடுக்கப்பட்டது. மகப்பேற்று நிலையத்துக்கும், உள்ளூரிற் கடமை புரியவும் தாதி ஒருவர் நியமிக்கப்பட்டார். ஆரம்பத்திற் சிங்கள இனத்தவர்களே மருந்து கலவையாளராகவும் தாதியாகவும் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்குத் தமிழ் ஓரளவு தெரிந்திருந்தது.

மலேரியா நோயைத் தடை செய்வதற்காகக் கிழமை தோறும் கிருமிநாசினி எல்லா வீடுகளுக்கும் தெளிக்கப்பட்டது. கிணற்று நீருக்குக் குளோரினும் போடப்பட்டது. கிருமிநாசினிதெளிக்க வரும் மேற்பார்வையாளர் வீடுகளில் காய்ச்சல் இருப்பவர்களின் இரத்தத்தை எடுத்துச் சென்று பரிசோதனை செய்வித்து அடுத்தமுறை வரும்போது நோய் இருப்போருக்கு மருந்தும் கொண்டு வந்து கொடுப்பார். தண்ணீரைக் கொதித்தாற வைத்துக் குடிக்கும்படி கூறுவார். சிறிது காலத்தில் மகப்பேற்று நிலையத்துக்கு தனியான மருத்துவமாது நியமிக்கப்பட்டதுடன் தொலைபேசி இணைப்பும் செய்து கொடுக்கப்பட்டது. கடுமையான நோயாளிகளைக் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல அம்புலன்ஸ் வண்டியை அழைக்க இத்தொலைபேசி உதவியாகவும் இருந்தது.

வைத்திய அதிகாரிக்குக் கட்டிக்கொடுக்கப்பட்ட குடிமனை மருந்தகத்தில் இருந்து சிறிது தூரத்தில் இருந்ததாலும் மழை காலத்தில் மழை வெள்ளம் ஓடும் தாம்போதி ஒன்று குடிமனைக்கும் மருந்தகத்துக்கும் இடையிலே இருந்ததாலும்இரவு நேரத்திற் செல்லும் அவசர நோயாளிகளைப் பார்ப்பதில் ஏற்பட்ட கஷ்டத்தினாலும் வைத்திய அதிகாரி மருந்துக் கலவையாளர் தங்கியிருந்த மருந்தகத்திலேயே அவருக்கும் இருக்க வசதி செய்து கொடுக்கப்பட்டது. 1996 இல் இலங்கையில் ஏற்பட்ட இடப்பெயர்வின் காரணமாக உள்நாட்டிலேயே அகதிகளான உருத்திரபுரம் மக்கள் அயற்கிராமங்களுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். அதன்போது உருத்திரபுரம் மருந்தகமும் இடம்பெயர்ந்தது. 1999ல் மக்கள் மீளக்குடியமர உருத்திரபுரம் வந்தபோது மருந்தகமும் மகப்பேற்று நிலையமும் உடைந்து உபயோகிக்க முடியாத நிலையில் இருந்தது. பின்னர் அவை பொது மக்களின் உதவியுடன் திருத்தப்பட்டு வைத்திய நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் சகல வசதிகளும் கொண்ட புதிய மகப்பேற்று நிலையம் ஒன்று அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றினாற் கட்டிக்கொடுக்கப்பட்டது. இதன் காரணமாகப் பழைய மகப்பேற்று நிலையம் வெளிநோயாளர் மருந்து பெறும் இடமாகவும் மாற்றப்பட்டது.

## ஆலயங்கள்

உருத்திரபுரத்தின் பிரதான ஆலயமான உருத்திரபுரம் சிவாலயம் குடியேற்றத்திட்டம் ஆரம்பித்த காலத்துக்கு முன்னரேயே அழிக்கப்பட்டு காடடார்ந்த நிலையில் சில கருங்கற் தூண்களும் கட்டிட இடிபாடுகளும் காணப்பட்டன. மாணிக்கப் பிள்ளையார் கோயில் பூசாரியாய் இருந்த வேலாயுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி அவர்கள் ஒருநாள் அக்கிராமத்தில் உள்ள வாலிபர்களைச் சந்தித்துத் தான் இரவு கனாக் கண்டதாகவும் அதிலே உருத்திபுரத்தின் மேற்குத் திசையிலே அழிந்த சிவன் கோயிலின் கட்டிடச் சிதைவுகள் கிடப்பதாகவும் அதைப் பார்க்க வரும்படியும் கேட்டுக் கொண்டார். அந்தக்கிழமை ஒருநாள் அவருடன் சேர்ந்து காட்டுப்பாதையூடாக நான்கு மணிநேரம் நடந்து சென்று ஒரு குளத்தினைக் கண்டு சிறிது நேரம் களைப்பாறினர். பின்னர் அங்கிருந்து வடக்குத் திசையிலே சிறிது தூரம் சென்ற போது அங்கே கருங்கற் தூண்கள் கிடந்ததைக் கண்டனர். இவற்றைக் கண்ட பூசகர் இதுதான் சிவாலயமென்று கூறி அங்கிருந்த பாலமரத்தினடியிலே உள்ள கருங்கற் தூணுக்குப் பூசை செய்து திரும்பி வந்தனர். இந்நிகழ்வு உருத்திரபுரம் கிராமம் முழுவதும் பரவியது. கோவிலைக் காணப் பலரும் விரும்பினர். பூசகர் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அவரிடம் வருபவர்களைக் கூட்டிக்கொண்டு அங்கு சென்றதுடன் ஓலைக் கொட்டில் ஒன்று அமைத்து வழிபாடு செய்து வந்தார்.

இதை அறிந்த அப்போது கிளிநொச்சி வீரகேசரி நிருபராய் இருந்தவரும் அகில இலங்கைக் காந்திசேவா சங்க நிர்வாகியுமான திரு.சி.க.வேலாயுதபிள்ளை அவர்கள் இதனை வீரகேசரிப் பத்திரிகையிற் பிரசுரம் செய்தார். இதைக் கண்ட யோகர் சுவாமியின் அடியார்களான யாழ்ப்பாணச் சைவ பரிபாலன சபையினர் யோகர் சுவாமியவர்களுக்கு கூறினர். உடனே யோகர் சுவாமி அவர்களும் தன்னுடைய முடிச்சிலே இருந்த சிறுதொகைப் பணத்தை அவர்களிடம் கொடுத்து நீங்கள் கிளிநொச்சி சென்று அங்கேயுள்ள வடிவேல் சுவாமிகளைக் கண்டு அவரின் உதவியுடன் ஆலயத்தைக் கட்ட ஆயத்தப்படுத்துங்கள் எனக் கூறினார்.

அவர்களும் கிளிநொச்சி வடிவேல் சுவாமி அவர்களின் மாதேவ ஆச்சிரமம் சென்று இதைக் கூறவே ஆச்சிரமத்தில் உள்ளோர் கோயிலடிக்குப் போவதற்கு உழவு இயந்திரம் ஒன்றை ஒழுங்கு செய்ததுடன் உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு.வே.கதிரவேலு, சி.க. வேலாயுதப்பிள்ளை ஆகியோருடன் இன்னும் சிலரையும் சேர்த்துக் காட்டுமரம் ஏற்றும் பாதையூடாகச் சிவநகர் குளக்கட்டை அடைந்து கோயில் இடுபாடுகளைப் பார்த்ததுடன் ஒரு திருப்பணிச் சபையையும் அமைத்தனர். சொற்ப நாட்களிலேயே ஆலயத்தைக் கட்டிக்கும்பாபிஷேகம் செய்ததுடன் நித்திய நைமித்திய பூசைகளைச் செய்யவும் ஒழுங்கு செய்தனர்.

குடியேற்றத்திட்டம் ஆரம்பமான 1949ஆம் ஆண்டில் குடியேற்றத்திட்ட முகாமையாளர் கிருஷ்ணபிள்ளையின் உதவியுடன் உருத்திரபுரத்தின் கிழக்கு எல்லையிலே பிரதான வீதியான றெயிலர் வீதியின் வடக்குப்பக்கத்திலே குடியேற்றத்திட்டத்தைப் பார்வையிடக் கூடியதாக வாசல் அமைத்து மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் உருவாக்கப்பட்டது. பொறிக்கடவை அம்மன் ஆலயம் பழையகாலம் தொடக்கம் இயங்கி வருகின்றது. பாலையடிச்சந்தியிலும் எட்டாம் வாய்க்காற் சந்தியில் உள்ள ஆலமரத்தின் கீழும் உள்ள விநாயகர் ஆலயங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாதை வழியாகச் செல்லும் விவசாயிகளின் காத்தற் கடவுளாகக் காணப்படுகின்றன. இத்துடன் எள்ளுக்காட்டில் ஒரு முருகன் ஆலயமும் கட்டிக் கும்பாபிஷேகம் செய்து திருவிழாச் செய்து வருகின்றனர். புதுமுறிப்பு அலை கரையிற் கற்பக விநாயகர் ஆலயம் கட்டிப் பரிபாலனம் செய்து வருகின்றனர். உருத்திரபுரம் வயற்காணியின் நடுவே நரசிங்க வைரவர் ஆலயமும் உருத்திரபுரத்தின் உள் வீதிகயிற் சிறுசிறு ஆலயங்களும் காணப்படுகின்றன.

கிறிஸ்தவ மக்கள் வழிபடுவதற்காக எட்டாம் வாய்க்காலிற் பற்றிமா ஆலயமும் சிவநகரில் ஒரு ஆலயமும் அமைக்கப்பட்டுள்ளது. எட்டாம் வாய்க்காற் சந்தியில் ஒரு குகைக் கோயிலும் உள்ளது.

### பொதுத்தாபனங்கள்

உருத்திரபுரம், பொதுத்தாபனங்கள் அதிகம் உள்ள கிராமம் என்பதில் அங்குள்ள அனைவரும் பெருமை கொள்ளவேண்டும். காந்தியவாதியான திரு. சி.க.வேலாயுதபிள்ளை என்பவரால் உருவாக்கப்பட்ட அகில இலங்கைக் காந்தி சேவா சங்கம் உருத்திரபுரம் எட்டாம் வாய்காலில் ஆரம்பிக்கப்பட்டுப் பல்வேறு அபிவிருத்தி வேலைகளைச் செய்து வந்தது. அக்காலத்திற் தாய் தந்தையரை இழந்த சிறுவர்களைக் காந்தி நிலையம் பராமரித்ததுடன் தொழிற்கல்வியையும் பாடசாலைக் கல்வியையும் பயிற்றுவித்து வந்தது. அவற்றைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்று நடத்தும் வரை அவரே நடத்தி வந்தார். படித்து விட்டு வேலையற்றிருந்த பெண்களுக்கு உதவியாக நெசவுப்பயிற்சி நிலையம் ஒன்றை உருவாக்கிப் பலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தார்.

சர்வோதய இயக்கத்துடன் இணைந்து மாற்றுத்திட்டத்தின் அடிப்படையிற் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்று கூடி இலங்கையின் பல்வேறு கிராமங்களிலும் சிரமதானப் பணியை மேற்கொண்டார். இதில் முதலாவது வட இலங்கைச் சிரமதானம் உருத்திரபுரம் மகா வித்தியாலய வீதிச்சிரமதானமாகும். இது ஒரு கிழமை நடைபெற்றது. காந்திசேவா சங்கத் தலைமைப் பணிமனை அமைக்கவும் பல மாணவர்களை வைத்துப் பராமரிக்கவும் விவசாயப் பயிற்சி, கைத்தறிப்பயிற்சி ஆகியன நடத்தவும் உருத்திரபுரத்தில் அரசாங்கத்திடமிருந்து நிலம் பெறப்பட்டது. தொண்டமான் அவர்கள் மந்திரியாய் இருந்த பொழுது தும்புக் கைத்தாழிற் கட்டிடமும் கட்டப்பட்டது.

பெண்களுக்கெனத் தருமபுரத்திற் கஸ்தூரிபாய் இல்லத்தையும் பப்படத் தொழிற் சாலையையும் நெசவுக் கைத்தறி நிலையத்தையும் அமைத்தனர். கோணாவிலில் காந்திக்கிராமம் என்ற பெயரில் 105 ஏக்கர் நிலத்தைப் பெற்றுத் தென்னந்தோட்டத்தையும், பயிர்ச்செய்கையையும், மந்தை வளர்ப்பையும் மூன்று ஏக்கர் கொண்ட வீட்டுத்திட்டம் ஒன்றையும் மரவேலைத் தொழிற்சாலையையும் அமைத்தார். அப்பு என்று அனைவராலும் அழைக்கப்பட்ட உருத்திரபுரம் மகா வித்தியாலய அதிபர் அவர்கள் இந்தியா சென்று வாரதாவிற் தொழிற்கல்வி பயின்று குருகுலத்தை 1964ல் ஆரம்பித்து வளர்ச்சி பெறச் செய்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது பற்றி அவர் பற்றிய கட்டுரையிற் குறிப்பிட்டிருப்பதால் இங்கும் குறிப்பிடத்தேவையில்லை என எண்ணுகின்றேன்.

எட்டாம் வாய்க்காலில் "லோங்ஸ்" ஸ்தாபனம் என்ற பெயரிற் கிறிஸ்தவப் பாதிரிமாரால் ஆண்களுக்கான ஆதரவு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் சிவநகரில் நடத்தப்பட்டு வருகின்றது.

பற்றிமா விடுதி என்ற பெயரில் எட்டாம் வாய்க்காலில் கன்னியாஸ்திரிகளால் பெண்களுக்கென நடத்தப்படும் ஆதரவற்றோர் நிலையம் ஒன்றும் சிறப்புற நடைபெற்று வருகின்றது. இங்கு வடமாகாணத்தின் பல பகுதிகளில் இருந்தும் வந்து பாதுகாப்பாகப் படித்து வருகின்றனர்.

மகாதேவ ஆச்சிரமம் என்ற பெயரிற் சைவ மக்களின் வளர்ச்சி கருதியும் பண்ணொடு பாடல் போன்ற திருமுறைகளை நடத்தவும் அறநெறிப் பாடசாலை போன்றவற்றை நடத்தவும் உருத்திரபுர மகாவித்தியாலய அதிபர் விடுதியில் வடிவேல் சுவாமிகள் தலைமையில் மாதாஜி பரமானந்தவல்லி, திரு.த நல்லதம்பி ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டு இப்பகுதி மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும் சமய சம்பந்தமான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தன. பாடசாலை அதிபர் விடுதி வசதியற்றிருந்ததால் உருத்திரபுரம் வைத்தியர் விடுதியிற் சில காலம் நடத்திப் பின் ஜெயந்திநகரிற் தமக்கென ஒரு காணி பெற்றுக் கட்டடங்கள் பல அமைத்துத் தற்பொழுதும் நடைபெற்று வருகின்றது. தற்பொழுது புதுமுறிப்பில் இருபத்தைந்து ஏக்கர் நிலம் அரசினரிடம் பெற்றுப் பல கட்டடங்கள் அமைத்துச் சைவச் சிறுவர் இல்லம் என்ற பெயரில் ஒரு ஆதரவற்றோர் நிலையமும் நடைபெற்று வருகின்றது.

## விளையாட்டுக்கழகங்கள்

உருத்திரபுரத்தில் 1952ம் ஆண்டு அங்குள்ள வாலிபர்கள் பலர் சேர்ந்து வாலிபர் சங்கம் ஒன்றை உருவாக்கி விளையாட்டுடன் அதன் தலைவர் திரு. ஐயாத்துரை அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட நிலத்தில் ஒரு வாசிக சாலையை உருவாக்கி நடைமுறைப்படுத்தினர். சங்கத்துக்கென அரசாங்கத்திடம் நிலம் பெற்று அதில் வாசிகசாலையும் விளையாட்டிடமும் உருவாக்கப்பட்டது. உருத்திரபுரம் மகா வித்தியாலய ஆசிரியர்களும் அரசினர் தொழில் புரிந்த ஊழியர்களும் இளைஞர்களும் மாணவர்களும் விளையாட்டில் பங்கு பற்றினர். 1957ல் உருத்திரபுரத்தில் பொது ஸ்தாபனங்களுக்கென ஒதுக்கப்பட்ட நிலத்தில் விளையாட்டுக்கழகம் என்ற பெயருடன் தினமும் மாலை வேளைகளில் விளையாட்டுப் பயிற்சிகள் நடைபெற்று வருகின்றன. ஆண்டு தோறும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும். வெளியிடங்களில் இருந்து வரும் விளையாட்டுக்கழகங்களுடனும் போட்டியிட்டு, வெற்றி பெற்று, உருத்திரபுரத்துக்குப் பெருமை தேடிக் கொடுத்துள்ளனர். இவ்விளையாட்டுக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பித்துச் சில நாட்களின் பின் முன்னர் வாசிக சாலையும் விளையாட்டிடமும் இருந்த இடத்துக்கண்மையில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் என்ற பெயரில் ஒரு கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக எட்டாம் வாய்க்காலில் சந்திரோதயா விளையாட்டுக்கழகம் என்ற பெயரிலும் ஒரு கழகம் உருவாக்கப்பட்டது.
இம்மூன்று விளையாட்டுக்கழகங் களும் விளையாட்டுக் கழகங்களும் விளையாட்டுடன் மாத்திரம் நின்றுவிடாமல் வாசிக சாலைகளையும் சனசமூக நிலையங்களையும் உருவாக்கிச் சிறந்த சேவை செய்து வருகின்றன. 1996ல் ஏற்பட்ட இடப்பெயர்வின் பின்னரும் கூட 1999இன் இறுதியிற் சிறிது சிறிதாக மக்கள் மீளக் குடியமர்ந்து மேற்படி செயற்பாடுகளை நடத்திவருவது பாராட்டுக்குரியது.

கலையை வளர்க்கும் நோக்கத்துடன் தொழிலாளர்கள் வேலை செய்து ஓய்வாக இருக்கும் போது அவர்களை மகிழ்விக்கச் செந்தமிழ்க் கலாமன்றம் என்ற பெயரில் கலாமன்றத்தை ஆரம்பித்து மாதந்தோறும் கலை நிகழ்ச்சிகள் நடத்தி வந்தனர். முருகேசு குலசிங்கம் அவர்களும் தற்போது கனடாவில் வசிக்கும் கலைஞர் கிருபா கந்தையா அவர்களும் இக்கலா மன்றத்தில் முக்கிய பங்கு வகித்தனர்.

## தபாலகம்

ஒருநாட்டிலுள்ள மக்கள் தம் உறவினருடனோ மற்றவர்களுடனோ தொடர்பு கொள்ளப்பல ஊடகங்கள் இருக்கின்றன. அவற்றில் கடிதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுச் சில நாட்களின் பின்னர் குடியேற்ற அதிபர் காரியாலயம் சென்று தமக்குக் கடிதம் வந்திருக்கிறதா என அறிந்து கடிதங்களை எடுத்துச் செல்வர். இக்கடிதங்கள் பரந்தன் தபாலகத்தில் இருந்து குஞ்சுப் பரந்தன் பகுதிக்குத் தபால் விநியோகம் செய்யும் தபாற் சேவகர் கடிதங்களை இக்காரியாலயத்தில் கொடுத்துவிட்டு இங்கு வைத்திருக்கும் தபாற் பெட்டியில் உள்ள கடிதங்களை எடுத்துச் செல்வார்.

சொற்ப நாட்களுக்குள் உருத்திரபுரம் உபதபாலதிபராக மீசாலையைச் சேர்ந்த தருமலிங்கம் அவர்கள் நியமிக்கப்பட்டார். ஆயினும் தபாலகம் கட்டப்படவில்லை. அக்கால நடைமுறை, தபாலக அதிபராக நியமிக்கப்படுபவர் அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவராய் இருக்க வேண்டும். அவரே தபாலகம் நடத்த வசதியாக ஒரு கட்டிடத்தை ஒழுங்கு செய்ய வேண்டும் . அதற்கமைய ஒரு கட்டிடத்தை அவர் ஒழுங்கு செய்து கொண்டார்.

ஆனால் குடியேற்றத்திட்டங்களை ஆரம்பிக்கும் போது அரசாங்கமே பாடசாலை, தபாலகம் போன்ற பொது நிலையங்களைக் கட்ட வேண்டும். தபாற் சேவகர் ஒருவர் பரந்தன் தபாலகத்தில் இருந்து குஞ்சுப்பரந்தன் தபாலகத்துக்குரிய பொதியையும் உருத்திரபுரம் தபாலகத்துக்கான பொதியையும் கொண்டு வருவார். வரும் வழியில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குஞ்சுப்பரந்தன் தபாலகத்தில் அத்தபாலகத்துக்குரிய தபாற் பொதியைக் கொடுத்துவிட்டு உருத்திரபுரத்திற்கான தபாற்பொதியுடன் உருத்திரபுரம் தபாலகம் வருவார். இப்பொதியில் உள்ள தபால்களை ஒழுங்கு செய்து கடிதங்களை உரியவர்களிடம் கொடுக்க ஒவ்வொரு வீதி தோறும் செல்வார். கடிதங்களை உரியவரிடம் விட்டுத் தபாலகம் வந்து அங்கேயே தங்கி நிற்பார். பிற்பகல் இங்குள்ள தபாற் பெட்டிகளில் உள்ள கடிதங்களை எடுத்து வந்து தபாலக முத்திரை பதித்து தபாலதிபரின் அன்றைய தபாலக கணக்கறிக்கையையும் கடிதங்களையும் உரிய தபாற் பொதியில் இட்டுப் பரந்தன் தபாலகம் கொண்டு செல்வார். போகும் போது குஞ்சுப்பரந்தன் தபாலகத்தில் உள்ள தபாற் பொதியையும் எடுத்துக்கொண்டு பரந்தன் தபாலகம் சென்று உரிய பொதிகளைப் பரந்தன் தபாலகத்தில் ஒப்படைப்பார். தபாலகம் காலை ஒன்பது மணி முதல் பிற்பகல் மூன்று மணி வரையும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஆறு நாட்களும் நடைபெறும். தபால் விநியோகம் திங்கள் முதல் வெள்ளி வரை ஐந்து நாட்கள் மாத்திரம் நடைபெறும்.

எட்டாம் வாய்காற் குடியேற்றத்திட்ட வீடுகள் கட்டப்பட்ட போது உபதபாலகமும் பொது ஸ்தாபனங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டது. இதன்பின் இரு தபாற்சேவர்கள் நியமிக்கப்பட்டு அவர்களே இரு குடியேற்றத்திட்டங்களுக்கும் தனித்தனியாக விநியோகித்தனர். கடிதங்களைப் பரந்தனில் இருந்து கொண்டுவந்து உருத்திரபுரம் தபாலகத்தில் ஒப்படைப்பதும் பிற்பகலிற் கடிதங்களை எடுத்துச் செல்வதும் ஒரு தனி ஊழியரால் செய்யப்படும் இவர் "றண்ணா" என அழைக்கப்படுவர்.

காலம் செல்லச் செல்லத் தபாலூழியரின் தொகையும் கூடியது. தபாலகத்துக்கென ஒரு தொலைபேசியும் இணைக்கப்பட்டது. இதன் காரணமாகத் தந்தி விநியோகமும் நடைபெறத் தொடங்கியது. அத்துடன் சிவநகரிலும் ஓர் உபதபாலகம் ஆரம்பிக்கப்பட்டது.

## கூட்டுறவு

ஆரம்பத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லினைக் கொள்வனவு செய்யவும் நுகர் பொருள்களை விற்பனை செய்யவும் என உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டது. இதிற் கூட்டுறவாளராகக் குடியேற்றவாசிகள் அனைவரும் ரூபா ஐம்பது கட்டி அங்கத்தவராகி அவர்களே அதனை நிர்வாகம் செய்யக்கூடியதாகக் கூட்டுறவு ஆணையாளர் ஒரு உபவிதியையும் அனுப்பிவைத்தார். அத்துடன் ஒரு கூட்டுறவுப் பரிசோதகர் ஒருவரும் மேற்பார்வையாளராகவும் நியமிக்கப்பட்டார். ஆரம்பத்திற் கூட்டுறவு ஆணையாளரின் காரியாலயம் யாழ்ப்பாணத்திலேயே இருந்தது. பின்னர் இச்சங்கம் விளைபொருட் சங்கம் எனவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனவும் பெயர் மாற்றம் பெற்றது. கணேசபுரம் கூட்டுறவுச்சங்கம் நட்டத்தில் இயங்கியதால் அச்சங்கமும் உருத்திரபுரம் சங்கத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக்கப்பட்டது. இக்காலத்திற் கிளிநொச்சிக்கெனத் தனியான கூட்டுறவு ஆணையாளர் நியமிக்கப்பட்டார். உருத்திரபுரம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம் மூன்று நுகர்பொருள் விற்பனைக் கடைகளை உருவாக்கியது. ஒன்று கணேசபுரத்திலும் மற்றையது கூட்டுறவுச் சங்கத்தலைமையகத்திலும் மூன்றாவது கூழாவடியிலும் அமைந்திருந்தது.

அரசாங்கத்தின் புதிய நடைமுறைப்படி கரைச்சிப்பிரிவின் தெற்குப்பகுதியில் உள்ள சங்ககங்களை இணைத்துக் கரைச்சி தெற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனவும் கரைச்சி வடக்குப் பகுதியில் உள்ள சங்கங்களை இணைத்து கரைச்சி வடக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் எனவும் இரு சங்கங்களை (சமாசம்) உருவாக்கினர்.

கரைச்சி தெற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்பொழுது அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் , கரைச்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் , கரைச்சி தெற்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் என மூன்றாகப் பிரிக்கப்பட்டு இயங்கி வருகின்றன.

மக்களின் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு உருத்திரபுரத்தில் 1955ல் ஐக்கிய நாணய சங்கம் ஒன்று உருவாக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஐந்துக்கு மேற்பட்ட ஐக்கிய நாணய சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டபோதும் அவை அனைத்தும் சொற்ப காலத்தில் இல்லாமற் போய்விட்டன. அரசாங்கம் குறைந்த வீட்டுக்கடனை அறிமுகப்படுத்திக் கிராமங்கள் தோறும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கியது. இதனால் முன்னர் இருந்த ஐக்கிய நாணய சங்கங்களும் சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களாகவே இயங்கவேண்டியதாயிற்று.

உருத்திரபுரத்திற் சிகரட் புகையிலைச் செய்கையை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் அங்கு சிகரட் புகையிலைச் சங்கமொன்றை உருவாக்கியதுடன் அங்கு சிகரட் புகையிலை பதனிடும் மூன்று போறணைகளையும் அமைத்துப் பலருக்கு வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆயினும் சொற்ப காலத்துள் இச்சங்கமும் மறைந்து விட்டது.

இளைஞர் சங்கங்கள் உருவாக்கி அவர்களுக்குச் சுயமுயற்சி மூலம் வருமானம் பெறக்கூடியதாக விவசாயக் காணிகளை அனைத்து அங்கத்தவர்களுக்கும் பெற்றுக் கொடுத்த செயலும் மறக்க முடியாததொன்றாகும். கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் மாகாணக் கூட்டுறவு வங்கியிலேயே பணத்தைச் சேமித்துக் கடனைப் பெற்று வந்தன. கூட்டுறவு வங்கிகளை இல்லாமற் செய்யும் நோக்கத்துடன் மக்கள் வங்கியிலேயே கூட்டுறவுச் சங்கங்கள் பணத்தைச் சேமிக்க வேண்டுமென உத்தரவிட்டதுடன் மக்கள் வங்கியில் நாற்பது விதமான பங்குகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தீர்மானித்தது.

## அரசியல்

உருத்திரபுரம் மக்கள் தம்தொழில் சார்ந்த முயற்சிகளில் ஈடுபட்டதுடன் அரசியலிலும் மிகுந்த அக்கறைகாட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கட்சிக் கூட்டங்களில் பலர் எல்லோரையும் கவரக்கூடிய பேச்சாளர்களாகக் காணப்பட்டனர். உள்ளூர் அரசியலிலும் பங்கு கொண்டனர். கரைச்சிக் கிராம சபையிற் தலைவராகவும் உபதலைவராகவும் அங்கத்தவராகவும் இருந்து பெருமை சேர்த்ததுடன் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினராகத் தற்பொழுதும் இருந்து வருகின்றார்.

## சுடலை

ஆரம்பத்தில் உருத்திர மக்களின் சுடலை சிவநகர் ஒற்றைப்பனையடி என்ற இடத்தில் இருந்தது. எட்டாம் வாய்க்காலில் உள்ளவர்கள் கிளிநொச்சியில் உள்ள சுடலையையே பாவித்தனர். 1957ம் ஆண்டுக்குப்பின் புதுமுறிப்பில் சுடலையைக் கரைச்சிக் கிராம சபை இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் ஆக்கிக் கொடுத்தது. இதில் ஒரு ஏக்கரில் இந்து மக்களுக்கும் ஒரு ஏக்கரில் கிறிஸ்தவர்களுக்கும் பாவிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. உருத்திரபுரம் கிழக்கு, உருத்திரபுரம் மேற்கு, சிவநகர், சக்திபுரம் ஆகிய நான்கு கிராம சேவையாளர் பகுதியில் உள்ள மக்கள் இதனை உபயோகிக்கின்றனர். சிவநகரின் மேற்குப் பகுதியில் உள்ளோரும் நீவிற் பகுதியில் உள்ளோரும் சிவநகரில் உள்ள சுடலையை உபயோகிக்கின்றனர்.

## சிறப்பதிகாரிகள்

உருத்திரபுரத்தில் உள்ள பலர் சிறந்த கல்வியாளர்களாய் இருப்பதுடன் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாகவும் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் இலங்கை வங்கியின் அதிகாரியாகவும் கல்விப்பணிப்பாளராகவும் நெற்சந்தைப்படுத்தும் சபை அதிகாரியாகவும் உதவித்திட்டமிடல் அதிகாரியாகவும் இளைஞர் சேவை அதிகாரியாகவும் வைத்தியர்களாகவும் பொறியிலாளர்களாகவும் அதிபர்களாகவும் ஆசிரியர்களாகவும் அரச உத்தியோகத்தர்களாகவும் இலங்கையின் பல பாகங்களிலும் கடமைபுரிந்ததுடன் இப்பொழுதும் கடமைபுரிகின்றனர்.

ஒரு காலத்தில், கரவெட்டியிலும் சாவகச்சேரியிலும் எந்த வீட்டுக்கதவைத் தட்டியும் ஆசிரியர் இருக்கிறாரோ என்று கேட்டால் ஆம் என்று பதில் வரும் என யாழ்குடா நாட்டிற் பலரும் கூறுவர். இன்று உருத்திரபுரத்திலும் இப்படியான பதிலைக் கேட்கமுடியும். இவ்வளவுக்குக் கல்வியாளர்கள் அதிகமுள்ள கிராமம் உருத்திரபுரமாகும்.

## இடரும் இடப்பெயர்வும்

இத்துணை சிறப்புமிக்க கிராமம் 1996ஆம் ஆண்டு ஏற்பட்ட இனப்போராட்டம் காரணமாக உள்ளூரிலேயே இடம் பெயர வேண்டி ஏற்பட்டது. இதனால் 1999ல் மீள்குடியேற வந்தபோது உடைந்த வீடுகளையும் காடடர்ந்த வீதிகளையுமே காணமுடிந்தது. திடீரென இடம் பெயரவேண்டி ஏற்பட்டதால் தமது பாவனைப் பொருட்களையோ வேறு எந்தப் பொருட்களையுமோ எடுத்துச் செல்லாது, தாம் தூக்கிச் செல்லக்கூடிய உடை, உணவுப்பொருட்களையே எடுத்துச் சென்றனர். பின்னர் உடமைகளைப் பார்க்கவும் எடுத்துச் செல்லவும் வந்தவர்கள் அரச படையினரின் துவக்குச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்தனர்.

இதைச் சாட்டாக வைத்து வீடுகளில் உள்ள ஓடுகள் மரங்கள் கதவுகள், யன்னல்கள் போன்ற பெறுமதி மிக்க பொருட்கள் அனைத்தும் களவாடப்பட்டன.எனவே கிளிநொச்சி மீட்கப்பட்டபின் உருத்திரபுரம் வந்தோர் தம் வீடுகளையும் காணிகளையும் வீதிகளையும் திருத்தியே குடியமரவேண்டி ஏற்பட்டது. அவர்கள் இடம்பெயர்ந்தபோது பாடசாலைகள் வைத்தியசாலை போன்ற பொது ஸ்தாபனங்களும் இடம் பெயர வேண்டி ஏற்பட்டது.

இவற்றை நன்கு சீர்செய்யுமுன்பு 2007ல் மறுபடியும் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் மக்களை ஓடஓடக் கலைத்தது. முன்னர் இதுபோன்று திரும்பி வரலாம் என்ற எண்ணத்துடன் வீடுகளின் கதவுகள், யன்னல்கள், கூரைத்தகடுகள் என்பவற்றைக் கழற்றிப் பெரும் செலவுடன் ஏற்றிச்சென்றனர். ஆனால் இந்த யுத்தம் அவர்கள் எண்ணியவாறு வேறோர் இடத்தில் தங்கி இருக்க விடவில்லை. எனவே கொண்டு சென்ற பொருட்களைச் சிறிது சிறிதாக விட்டுவிட்டுத் தமது உயிர்களைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் உற்றாரை, உறவினரை, அயலவரை விமானக்குண்டும் எறிகணையும் கலைத்துக் கலைத்துக் கொலைசெய்ய அவர்களின் பிணங்களுக்கு மேலால் ஓடிச்சென்று முள்ளிவாய்க்காலை அடைந்தனர்.

அங்கும் ஆயிரக்கணக்கான மக்களைஇழந்து மிகுதியானோர் வவுனியாவில் வெறுங்கையுடன் முட்கம்பி வேலியினுள் அகதிகளாக அடைக்கப்பட்டனர். இலங்கையின் பல பாகத்துக்கும் தமது உழைப்பால் உணவு வழங்கிய மக்கள் ஒரு நேரச் சோற்றுக்கே வழி தெரியாது நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டது.


பல நாட்கள் உணவுக்காகக் கையேந்தவைத்து வெறுங்கையுடன் மீள் குடியேற்றம் என்ற பெயரில் அவர்கள் ஊருக்கு அனுப்பி வைத்தனர். பலர் இன்னும் தாம் வாழ்ந்த தமது வீடுகளுக்கே செல்ல முடியாது மீண்டும் அகதிகளாகக் காடுகளிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ளனர். உருத்திரபுரம் கிராமம் பழைய நிலைக்கு எப்போது வருமோ தெரியவில்லை.

கிளிநொச்சியில் படித்த வாலிபர் திட்டமென்ற பெயரிற் கனகபுரத்தில் கோழிப்பண்ணை ஆரம்பிப்பதற்காக 1957ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பதினொரு பேரைத் தெரிவு செய்து, அரச அதிபர். திரு.ம.சிறீகாந்தா அவர்களால் குடியேற்றப்பட்டு, அவர்களுக்கான கோழிக்குஞ்சுகளும் கோழிக்கூடும் வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் ஒரு ஏக்கர் நிலமும் வழங்கப்பட்டது. ஆயினும் இவர்கள் கோழி வளர்த்தலைக் கைவிட்டுத் தோட்டச் செய்கையிலேயே ஈடுபட்டனர். தோட்டச் செய்கையுடன் அரச உத்தியோகங்களிலும் ஈடுபடலாயினர். இதனைத் தொடர்ந்து பதினொரு பண்ணைகள் கொடுக்கப்பட்டுத் தோட்டமும் விவசாயமும் செய்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இரணைமடுக்குளத்தின் கீழான நீர்ப்பாசனக் கிராமங்களும் நில அளவுகளும் | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| இல | திட்ட வகை | கிராமத்தின் பெயர் | வருடம் | வழங்கப்பட்ட வயல் நிலம் (ஏக்கர்) | வழங்கப்பட்ட மேட்டு நிலம் (ஏக்கர்) | மொத்தக் குடும்பம் | மொத்தத் தாழ்நிலம் | மொத்தத் மேட்டு நிலம் | மொ.நிலம் |
| 1 | குளக்கட்டு முன்னே இருந்தோர் | 1ம்,2ம், 3ம், 4 ம | 1936ன் முன் | | | | | | |
| 2 | குடியான்கள் | வரயககால கணேசபுரம் | 1936 | 5 | 2 | 108 | 540 | 216 | 756 |
| 3 | குடியான்கள் | உருத்திபுரம் பீ/8 | 1948 | 4 | 3 | 210 | 840 | 630 | 1470 |
| 4 | குடியான்கள் | உருத்திபுரம் பீ/10 | 1952 | 4 | 3 | 109 | 436 | 327 | 763 |
| 5 | மத்திய வகுப்பினர் | றை ஆறு | 1952 | 9 | - | 87 | 783 | - | 783 |
| 6 | குடியான்கள் | வட்டக்கச்சி | 1953 | 3 | 2 | 305 | 915 | 610 | 1525 |
| 7 | படித்த வாலிபர் | வட்டக்கச்சி | 1953 | 3 | 2 | 89 | 267 | 178 | 445 |
| 8 | குடியான்கள் | முரசுமோட்டை | 1954 | 3 | 1 | 307 | 921 | 307 | 1228 |
| 9 | குடியான்கள் | படிவம்I படிவம் II | 1954 | 3 | 1 | 307 | 921 | 307 | 1228 |
| 10 | குடியான்கள் | படிவம் III | 1954 | 3 | 1 | 307 | 921 | 307 | 1228 |
| 11 | குடியான்கள் | இராமநாதபுரம் | 1955 | 3 | 2 | 465 | 1395 | 930 | 2325 |
| 12 | படித்தவாலிபர் | வட்டக்கச்சி | 1955 | 2 | 3 | 132 | 264 | 396 | 760 |
| 13 | மத்திய வகுப்பினர் | கண்டாவளை | 1955 | 10 | - | 174 | 1740 | | 1740 |
| 14 | மத்திய வகுப்பினர் | திருவையாறு | 1955 | 10 | - | 27 | 270 | | 270 |
| 15 | மத்திய வகுப்பினர் | வெளிக்கண்டல் | 1956 | 5 | - | 22 | 110 | | 110 |
| 16 | மத்திய வகுப்பினர் | குமரிகுடா | 1958 | 10 | - | 20 | 220 | | 220 |
| 17 | மத்திய வகுப்பினர் | வில்சன் வீதி | 1959 | - | 1/2 | 31 | 15 1/2 | | 15 1/2 |
| 18 | மத்திய வகுப்பினர் | பரந்தன் வீதி | 1959 | 10 | - | 268 | 2680 | - | 2680 |
| 19 | மத்திய வகுப்பினர் | கோரக்கன்கட்டு | 1960 | 5 | - | 114 | 570 | - | 570 |
| 20 | மத்திய வகுப்பினர் | பரந்தன் வெளி | 1960 | 10 | - | 93 | 930 | - | 930 |
| 21 | கிராம விஸ்தரிப்பு | உமையாள்புரம் | 1961 | 3 | 1 | 162 | 486 | 162 | 648 |
| 22 | இளைஞர் | திருவையாறு I | 1966 | - | 3 | 102 | - | 306 | 306 |
| 23 | கிராம விஸ்தரிப்பு | வெளிக்கண்டல் | 1966 | 4 | - | 79 | 316 | | 316 |
| 24 | படித்த வாலிப பெண் | திருவையாறு | 1966 | - | 3 | 25 | | 80 | 80 |
| 25 | கிராம விஸ்தரிப்பு | ஊரியான் | 1967 | - | 3 | 35 | | 105 | 105 |
| 26 | கிராம விஸ்தரிப்பு | கோரக்கன்கட்டு | 1968 | 3 | 2 | 297 | 891 | | 891 |
| 27 | இளைஞர் | திருவையாறு II | 1972 | | - | 39 | | 78 | 78 |
| 28 | இளைஞர் | திருவையாறு III | 1972 | | 3 | 266 | | 798 | 798 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | திட்ட வகை | கிராமத்தின் பெயர் | வருடம் | வழங்கப்பட்ட வயல் நிலம் (ஏக்கர்) | வழங்கப்பட்ட மேட்டு நிலம் (ஏக்கர்) | மொத்தக் குடும்பம் | மொத்தத் தாழ்நிலம் | மொத்தக் மேட்டு நிலம் | மொ.நிலம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **கிளிநொச்சியின் குடியேற்றத்திட்டங்களும் அவை ஆரம்பிக்கப்பட்ட காலங்களும்** | | | | | | | | | |
| 1 | கிராம விஸ்தரிப்பு | சிவநகர் | 1957 | 1 1/2 | 1 | 243 | 335 | 243 | 578 |
| 2 | கிராம விஸ்தரிப்பு | ஜெயந்திநகர் | 1958 | 1 1/2 | 1 | 264 | 186 | 282 | 468 |
| 3 | மத்திய வகுப்பு | புதுமுறிப்பு | 1959 | 12 | 6 | 20 | 240 | 120 | 360 |
| | | | | | | | | | |
| **அக்கராயன் குளத்தின் கீழான நீர்ப்பாசனக் கிராமங்களும்** | | | | | | | | | |
| 1 | குடியான்கள் குடியேற்றம் | அக்கராயன் I (ஸ்கந்தபுரம்) | 1962 | 3 | 2 | 332 | 996 | 664 | 1660 |
| 2 | குடியான்கள் குடியேற்றம் | அக்கராயன் III (ஸ்கந்தபுரம்) | 1963 | 3 | 2 | 156 | 468 | 312 | 780 |
| 3 | குடியான்கள் குடியேற்றம் | அக்கராயன் III (ஸ்கந்தபுரம்) | 1964 | 2 | 2 | 112 | 224 | 224 | 448 |
| 4 | மத்திய வகுப்பு | அக்கராயன் III கோணாவில் | 1954 | 10 | 5 | 119 | 1190 | 595 | 1285 |
| 5 | மத்திய வகுப்பு | அக்கராயன்மத்தி | 1971 | 5 | 5 | 150 | 750 | 750 | 1500 |
| 6 | இளைஞர் | கண்ணகைபுரம் | 1974 | | 2 | 144 | | 288 | 288 |
| **வன்னேரிக்குளத்தின் கீழான நீர்ப்பாசனக் கிராமங்களும் நில அளவுகளும்** | | | | | | | | | |
| 2 | குடியான்கள் | வன்னேரிக்குளம் | 1954 | 3 | 3 | 119 | 357 | 357 | 714 |

**1970 ம் ஆண்டின் பின்னரான மலையக மக்களின் புலம்பெயர்வால் உருவான கிராமங்கள்**

உதயநகர் கிழக்கு
உதயநகர் மேற்கு
அம்பாள்குளம்
தொண்டைமான்நகர்
பொன்நகர்
ஊற்றுப்புலம்
செல்வாபுரம்
ஆனந்தபுரம்
பாரதிபுரம்
மலையாளபுரம்
சாந்தபுரம்

**2000 ஆம் ஆண்டின் பின் உள்ளக இடப்பெயர்வு காரணமாக உருவாகிய கிராமங்கள்.**

மாதாபுரம்
அழகாபுரி
அறிவியல்நகர்
சிவன்சோலை
மணியங்குளம்
ஐயனார்புரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடுக்குளமும் நீர்ப்பாசனமும்

'நீர்ப்பாசனம்' என்ற ஒருபதம் இந்த உலகிற்குத் தேவைதானா? என்ற வினா எழும்போது " வானம் பொழிகிறது பூமி விளைகிறது உனக்கு ஏன் வரி " என்ற கட்டப்பொம்மனின் வசனம் மனதில் எழுகிறது.



வானம் பொழிவது

**திரு.கா.நாகலிங்கம்**

ஆண்டாண்டு காலமாகப் பெய்யும் மழை பொழியும் கால நிலைக்கேற்ப விவசாயத்தைச் செய்து பெரும் பலன்களைப் பெற்று வந்தனர். அக்காலத்தில் நீர்ப்பாசத்தின் தேவை அவ்வளவு முக்கியமானதொன்றாகக் கருதப்படவில்லை.

ஆனால் இன்று தொழிற்சாலைகளின் பெருக்கம் எரிபொருள் பயன்பாடு காரணமாக சூழல்மாசடைந்து ஓசோன் படலம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் இயற்கை



என்பது இருந்து இயற்கையின் ஆளுமைக்குட்பட்ட செயலாக வருகிறது. விவசாயிகள் வேண்டும் போதெல்லாம் மழை பொழியும் அதிசயம் அன்றும் நடந்ததில்லை. இன்றும் நடப்பதில்லை.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக தமிழர் விவசாயம் செய்து வருகின்றனர்.



**இளமை நாயகன் நாகலிங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமடைந்து ஒரு வரையறைக்குட்படாமல் வானம் பொழிந்து கொண்டிருக்கின்றது.

" ஆடி விதை தேடி விதை" என்று எமது மூதாதையர் கூற்றின்படி அனைவரும் உழுது நெற்பயிர் விளைவித்துப் பயன்பெற்று வந்தனர். அனால் இன்றைய காலகட்டத்தில் ஆடியில் மழையே இல்லாமற் போய்விடுமிடத்து உழுவதற்கே வாய்பின்றிப் போய்விடுகின்றது. எனவே இக்காலத்தில் பெய்யும் மழையை நீர்த்தேக்கங்களிற் தேக்கிவைத்து அளவான முறையிலே தேவைக்கேற்ப நீர்ப்பாசனம் செய்வது இன்றியமையாததாகின்றது.

இலங்கையில் இனங்காணப்பட்டுள்ள நூற்று மூன்று ஆற்றுவடி நிலங்களில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததும் மிகப்பெரியதுமான ஆற்றுவடி நிலம் 'கனகராயன் ஆற்றுவடி நிலமாகும்' இந்த ஆறு தொண்ணூறு கிலோமீற்றர் நீளமும் 906 சதுர கிலோமீற்றர் நீரேந்து பரப்பையும் கொண்டுள்ளது. இந்த ஆறு சேமமடுக்குளத்தில் ஆரம்பமாகிச் சேமமடுக்குளம் , கனகராயன்குளம், மருதன் குளம் உட்பட அநேக சிறிய குளங்களிலிருந்து நீரினைப்பெற்று , வடக்கு நோக்கி இரணைமடுக்குளம் ஊடாகப் பரவிப்பாய்ந்து, தட்டுவன்கொட்டி ஊரியான் பகுதியை அண்டிய ஆனையிறவுக் கிழக்குக் கடல் நீரேரியிற் சங்கமிக்கின்றது. மழைநீர் இப்படி வீணே கடலுடன் கலப்பதைக் கண்ட அப்போதைய அரச அதிபர் சேர் வில்லியம் துவைனம் அவர்கள் இரணைமடுக்குளத்தினைக் கட்டுவது சம்பந்தமான ஆய்வறிக்கையினை 1879 ஆம் ஆண்டில் இருந்து ஆய்வு செய்து பிரித்தானியா அரசுக்கு அனுப்பி வைத்தார். இதன் அடிப்படையில் நிர்ப்பாசனப் பொறியியலாளரான திரு.பார்க்கர் அவர்கள் 1,105,000 ரூபாவிற் கட்டிமுடிக்கலாம் எனப் பரிந்துரை செய்தார்.

இக்குளத்தினைக் கட்டிமுடிக்கும் பொறுப்பினை ஏற்ற திரு.டபிள்யூ பிறவுண் அவர்கள் 1900 ஆம் ஆண்டு ஒரு மாட்டுவண்டியிற் கிளிநொச்சி சென்றார். அப்பொழுது கரைச்சிப் பிரதேசம் சிறிய அளவு சனத்தொகையைக் கொண்டிருந்தது. அத்துடன் காடடர்ந்த பிரதேசமாகவும் காணப்பட்டது. அதிஷ்டவசமாக வெற்றிவேலு என்னும் இளைஞன் ஒருவனைச் சந்தித்தார். இவனது சுறுசுறுப்பும் வேலையாட்களை வைத்து வேலை செய்விக்கும் ஆற்றலையும் கண்ட பிறவுண் அவர்கள் அவரையும் தனக்கு உதவியாக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். இவ்விளைஞனே பின்னர் கிளிநொச்சியின் பொலிஸ் விதானையாராகவும் இருந்ததுடன் முகாந்திரம் என்னும் பட்டமும் பெற்றுக்கொண்டவர் ஆவார்.

திரு.பிறவுண் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டவேலை திரு.ஜே.எஸ்.கெனடி என்னும் பொறியிலாளரினால் ஆயிரத்துத் தொளாயிரத்து இருபதாம் ஆண்டு நிர்மாணித்து முடிக்கப்பட்டு இருப்பத்திரண்டடி உயர நீரைக்கொள்ளளவாகப்பெறும் நிலைக்குக் கொண்டு வரப்பட்டது.

இக்குளம் கடல் மட்டத்தில் இருந்து 26.7 மீற்றர் ( 89 அடி ) உயரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

40,000 ஏக்கர் அடிநீரைத் தேக்கக்கூடியதாக அமைக்கப்பட்டது. இரணைமடுக்குளத்தின் (கட்டுமானப்பணிகள்) புனரமைப்பு வேலைகள் நான்கு தடவைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

### பௌதீகப் பின்னணி :

வடிகாலின் அமைப்பினையும் விருத்தியினையும் தீர்மானிப்பதிற் பௌதீகப்பின்னணி முக்கிய இடம் வகிக்கின்றது. இவற்றிற் புவிச்சரிதவியல், தரைத்தோற்றம், மண்வளம், காலநிலை , இயற்கைத்தாவரம் என்பன பிரதானமாகக் காணப்படுகின்ற போதும் இங்கு தரைத்தோற்றமும் காலநிலையும் பற்றிச்சுருக்கமாக ஆராயப்பட்டுள்ளது.

### தரைத் தோற்றம் :

தரையின் மேற்பரப்பு அம்சங்களையும் தரையுயர்ச்சி மற்றும் குத்துயர வேறுபாடுகள் பேன்ற வற்றையும் பற்றி ஆராய்வதே தரைத்தோற்றமாகும். கனகராயன் ஆற்றுவடி நிலம் நூறு மீற்றர் உயரத்திற்கு குறைந்ததாகவும் சாய்வினை உடைய தட்டையான மேற்பரப்பையும் கொண்டு காணப்படுகின்றது.

இத்தகைய தரைத்தோற்ற இயல்புக்கேற்ப இவ் ஆறு 90 மீற்றர் உயரப்பிரதேசத்தில் அமைந்துள்ள சேமமடுக்குளத்தில் உருவாகித் தெற்கில் இருந்து வடக்கு நோக்கிய சமவெளி ஊடாகப்பாய்ந்து முப்பது மீற்றர் உயரத்தினுள் இணைந்து காணப்படும் இரணைமடு நீர்த்தேக்கத்தினுள் நிரினைச் செலுத்தி மேலதிக நீர் மூன்று மீற்றரிலும் குறைந்த உயரமுடைய ஆனையிறவுக் கடலேரியினுட் சென்றடைகின்றது.

இரணைமடு நிர்த்தேக்கத்தின் அணைக்கட்டுப்பகுதி மாத்திரமே கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ளது. 106.500 ஏக்கரடி நீரினைத் தேக்கக்கூடிய அதனது ஏனைய பகுதிகள் முல்லைத்தீவு மாவட்டத்தினுள் அமைந்துள்ளது.

### காலநிலை:

காலநிலையைப் பொறுத்தவரையில் வெப்பநிலையும் மழைவீழ்ச்சியும் முக்கிய இடம்பெறுகின்றன. இரணைமடுக்குளப் பிரதேசத்தின் உயர் வெப்பநிலையாகத் தொண்ணூறு பாகை பரனைற்றும் குறைந்த வெப்பநிலையாக ஏழுபத்து மூன்று பாகை பரனைற்றும் நிலவுகின்றன.

மே மாதம் முதற் செப்ரெம்பர் மாதம் வரை அதிக வெப்பநிலை இங்கு காணப்படுகின்றது. கனகராயன் ஆற்றுவடி நிலப்பிரதேசத்திற்கு வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றின் காரணமாக மழை வீழ்ச்சி கிடைக்கின்றது. இக்காற்று வங்காள விரிகுடா ஊடாக வருவதனால் ஈரத் தன்மையைப் பெற்று வரண்ட வலயத்தில் அதனைப்படியச் செய்வதன் மூலம் வடி நிலப்பிரதேசம் முழுவதும் வடகீழ்ப் பருவக்காற்றால் ஒக்ரோபர் மாதம் தொடக்கம் பெப்ரவரி மாதம் வரை மழை வீழ்ச்சியைப்பெறச் செய்கின்றது.

இத்தகைய மழைவீழ்ச்சி கால வெப்பத்தின் காரணமாக வடிநிலப்பிரதேசத்தில் அமைந்து காணப்படும் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுசிறு குளங்களில் நீர்த்தேக்கப்பட்டுச் சிறுசிறு கிளை ஆறுகளினாற் கனகராயன் ஆற்றிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கப்பட்டு நவம்பர் மாத முற்பகுதியிற் பெருக்கெடுத்து ஓடும் கனகராயன் ஆறானது ஏறத்தாழ மூன்று மாதங்கள் வரை ஓடிப் பின் பெப்ரவரி மாதமளவில் நீரின்றி அல்லது ஆற்றின் சில இடங்களில் மட்டும் நீரைக் கொண்டதாகக் காணப்படும். இத்தகைய நிலமைகளே இரணைமடுக்குளப் பிரதேசத்திலும் காணப்படுகின்றது.

1920ஆம் ஆண்டளவில் இரணைமடுக்குள நிர்மாண வேலைகள் குறிப்பிடக்கூடிய அளவில் நிறைவுபெற்ற போதும் இக்குளத்தின் நீரைப்பயன்படுத்தி பயிர் விளைவிப்பதில் பலரும் அக்கறை காட்டவில்லை. இரணைமடுக்குளம் கட்டப்பட்ட காலத்தில் அக்குளத்தின் முன்பக்கதிற் செய்யப்பட்ட வயற்காணிகளில் மானாவாரிச் செய்கையே நடைபெற்றது. அப்பகுதி பரவிப்பாஞ்சான் காணிகள் என்றே அழைக்கப்பட்டன. கனகராயன் ஆறும் திருவையாறும் தங்கு தடையின்றிப் பரவிப்பாய்ந்ததால் இப்பகுதிக்கு இப்பெயர் உருவாகி இருக்கக்கூடும்.

இரணைமடுக்குளம் கட்டப்பட்டதும் 1936 ஆம் ஆண்டளவில் இப்பகுதியில் உள்ள வயற்காணிகள் அனைத்தும் அதனைச் செய்தவர்களுக்கே பகிர்ந்தளிக்கப்பட்டது. இப்பகுதியிலேயே சேர்.பொன் இராமநாதனால் வாங்கப்பட்ட ஆயிரம் ஏக்கர் காணியும் அமைந்திருந்தது. இப்பகுதியில் உள்ள நிலங்களுக்கு இரணைமடுக்குளத்தின் இடதுகரை வாய்க்கால்கள் உதவிபுரிந்தன. இதன் பிரதான வாய்க்காலிருந்து பத்துகிளை வாய்க்கால்கள் மூலம் விவசாயக் காணிகள் அனைத்துக்கும் நீர் வழங்கப்படுகின்றது. பழைய பரவிப்பாஞ்சான் வயல் நிலம் முழுவதும் முதலாம் இரண்டாம் மூன்றாம் வாய்க்கால்களுக்குள்ளே அமைந்திருப்பதாற் பரவிப்பாஞ்சான் வயல் நிலம் முழுவதும் முதலாம் இரண்டாம் மூன்றாம் வாய்க்கால்களுக்குள்ளே அமைந்திருப்பதாற் பரவிப்பாஞ்சான் என்ற கிராமம் மிகக் குறுகியதாக நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு முன்னால் அமைந்திருக்கின்றது.

1936ம் ஆண்டிலேயே இரணைமடுக்குளத்தின் இடதுகரை வாய்க்காலை உபயோகித்துப் பழைய கொலணி என்ற பெயரில் முதலாவது குடியான்கள் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நீர்ப்பாசன விவசாயச் செய்கை முறை இப்பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இக்குடியேற்றதிட்டம் தற்பொழுது கணேசபுரம் என அழைக்கப்படுகின்றது.

இதனை அடுத்து 1950ஆம் ஆண்டளவில் யாழ்குடா நாட்டின் சனத்தொகைப் பெருக்கமும், நிலப்பஞ்சமும் வன்னிப்பிரதேசத்தின் குடியேற்றங்களைத் தூண்டுவித்தன. இதன் காரணமாக இரணைமடுக்குளத்தின் இடதுகரை வாயக்காலைப் பயன்படுத்தி 1950 ஆம் ஆண்டு பத்தாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இப்பகுதியிற் சோழப் பேரரசர் காலச்சிவன் கோயில் காணப்பட்டதால் இப்பிரதேசம் உருத்திரபுரம் என்றே அழைக்கப்படலாயிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைமடுக்குளத்தின் இடதுகரைக் கால்வாயை அடுத்துக் காடாகக் கிடக்கும் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை விருத்தி செய்யமுடியும் எனச் சிந்தித்தபோது இரணைமடுக்குளத்தின் நீர்க் கொள்ளளவை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இதனால் 1951ம் ஆண்டு இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டு மீண்டும் 28 அடியாக உயர்த்தப்பட்டு நீர்க்கொள்வனவு 71,000 ஏக்கர் அடியாக்கப்பட்டது. இதன் காரணமாக 1952ம் ஆண்டில் உருத்திரபுரம் எட்டாம் வாய்க்காற் குடியானவர் குடியேற்றத் திட்டமும் உருவாக்கப்பட்டது.

இரணைமடுக்குளத்தின் வலதுகரை வாய்க்கால் 1952ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டதால் 1953 ஆம் ஆண்டு வட்டக்கச்சி குடியான்கள் குடியேற்றத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. 1954ம் ஆண்டு மூன்றாவது தடவையாக இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டு 30 அடியாக உயர்த்தப்பட்டு அதன் நீர்க்கொள்ளளவு 82,000 ஏக்கர் அடியாக அதிகரிக்கப்பட்டது. இதன் காரணமாக இடதுகரை வாய்க்கால் மூலம் 1954ம் ஆண்டு முரசுமோட்டைக் குடியான்கள் குடியேற்றத்திட்டமும் அதே ஆண்டு வலதுகரை வாய்க்கால் மூலமாக இராமநாதபுரம் குடியான்கள் குடியேற்றத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு இரணைமடுக்குளத்தின் கீழ்க் குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டதால் அதிக மக்கள் குடியேறியதுடன் அதிக கிராமங்களும் உருவாக்கப்பட்டன.

இதனால் இலங்கையில் நெல் உற்பத்தியிற் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டது. கிளிநொச்சி பகுதி மக்கள் தாம் விளைவித்த நெல்லினையாழ் மாவட்டத்துக்கு மாத்திரம் அனுப்பி வந்த நிலை மாறித் தென்னிலங்கைக்கும் அனுப்பி வந்தனர். இதனால் கிளிநொச்சிப் பிரதேசம் இலங்கையின் பல பகுதிகளுக்கும் உணவளிக்கும் பிரதேசமாக வளர்ச்சியடையத் தொடங்கியது.

இரணைமடுக்குளத்தின் குடியான்கள் குடியேற்றத் திட்டங்கள் மாத்திரமன்றி மத்தியதர வகுப்பினருக்கும் காணிகள் வழங்கப்பட்டன.1955 ஆம் ஆண்டளவிற் கண்டாவளைக் கிராமத்தில் (1740 ஏக்கர்) 696 ஹெக்டெயர் தாழ்நிலங்கள் ஒருவருக்குப் பத்து ஏக்கர் வீதமும் 1958 இல் புளியம்பொக்கணையில் இரண்டாயிரம் ஏக்கர் தாழ்நிலத்தை விவசாயம் செய்வதற்கு ஒருவருக்கு பத்து ஏக்கர் வீதமும் மத்திய தரவகுப்பினருக்கு வழங்கப்பட்டது. மேலும் திருவையாற்றில் இரணைமடுக்குளத்தைச் சேர்ந்த பகுதியில் இருநூற்று எழுபது ஏக்கர் நிலம் இருபத்தேழு விவசாயிகளுக்கும் வழங்கப்பட்டது. இத்துடன் இராமநாதன் கமம், புதுமுறிப்புக்குளம் பகுதியிலும் மத்திய தரவகுப்பினர் குடியேற்றத்திட்டங்கள் வழங்கப்பட்டன.

இவை தவிர 1966 ஆம் ஆண்டளவில் இரணைமடு ஏற்று நீர்ப்பாசன வசதியோடு திருவையாறு படித்தவாலிபர் திட்டம் மூன்று கட்டடங்களாக உருவாக்கப்பட்டு 425 இளைஞர்களுக்கு 1275 ஏக்கர் நிலப்பரப்பும், திருவையாறு படித்த பெண்கள் திட்டத்தில் எண்பது ஏக்கர் நிலப்பரப்பு இருபத்தைந்து பெண்களுக்கம் பகிர்ந்தளிக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவையாறு திட்டக்காணிகளுக்கு நீர் வழங்குவதற்காக 1977ஆம் ஆண்டு மீண்டும் நான்காவது தடவையாக இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டு முப்பத்து நான்கு அடியாக உயர்த்தப்பட்டு நீர்க் கொள்ளளவு 106500 ஏக்கர் அடியாக அதிகரிக்கப்பட்டது.

இரணைமடு நீர்த்தேக்கத்தினால் நீர்ப்பாசனம் செய்யப்படும் கனகராயன் ஆற்றின் வடிநிலத்தின் கழிமுகப்பகுதியாக கிளிநொச்சி மாவட்டக் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பிரதேசம் விளங்குகின்றது. இங்கு வருடம்தோறும் பெரும் போகத்தில் மாத்திரம் 38480 மீற்றர் நீளமுடைய பிரதான கால்வாய்கள், 13860 மீற்றர் நீளமுடைய கிளை வாய்க்கால்கள் 156 540 நீளமுடைய வயல் வாய்க்கால்கள் என்பவற்றின் மூலம் 8532 ஏக்கர் பரப்புக்கு நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது.

சிறுபோக காலப்பகுதியில் மானாவாரிச் செய்கை செய்யக்கூடிய நிலப்பரப்பை விட்டுநீர்ப்பாய்ச்சக் கூடிய நிலப்பரப்புகளுக்கு மட்டும் நீர்ப்பாசனம் செய்யப்படுகின்றது. இரணைமடு நீர்த்தேக்க நீரியற் தரவுகள்.

நீர்த்தேக்கத்தின் பெயர் : இரணைமடு
ஆள்கூறு : A/19(8.35x6.57)
நீர்பாசனப் பிரதிப்பணிப்பாளர்
பிராந்தியம் : கிளிநொச்சி
மாவட்டம் : கிளிநொச்சி, முல்லைத்தீவு
நதிப்படுக்கை : கனகராயன் ஆறு
மொத்த நீர்க்கொள்வனவு: 106,500 ஏக்கர் அடி
நீரேந்து பரப்பு : 906 சதுர கிலோ மீற்றர்
விவசாயப் பரப்பளவு: 8954 ஹெக்ரேயர்
நீரேந்து சாய்வு : ஒரு வீதத்திலும் குறைவு
நீர் கொண்டு வரும் ஆற்றின் நீளம்: 58 கிலோமீற்றர்
பிரதேசத்தின் தன்மை : வரண்டது, சிறுபகுதி மத்திமம்

**நீர்த்தேக்கம்**

**பூரண நீர் விநியோக மட்டம்** : 30.3 மீற்றர் (கடல் மட்டத்திலிருந்து 101 அடி)
**அதி உயர் வெள்ள நீர்மட்டம்** : 32.57 மீற்றர் (108.5 அடி)
**பூரணநீர் விநியோக மட்டத்தின்** பரப்பளவு 27680ஹெக்ரேயர்
**உபயோகப்படாத நீர்க் கொள்ளவு:** இல்லை

**அணைக்கட்டு**

மேல்மட்டம் : கடல் மட்டத்திலிருந்து 38.6 மீற்றர் (112 அடி)
மேல்மட்ட அகலம் : 4.02 மீற்றர் (14 அடி)
அதி உயரம் : 13.5 மீற்றர் (45 அடி)
நீளம் : 2955 மீற்றர் (9,850 அடி)
உட்பக்கச்சாய்வு : 1.2 மீற்றர்
வெளிப்பக்கச்சாய்வு: 1.2 மீற்றர்

**வான் :**

இடதுகரை தெளிவான மையக்கிளையின்றும் விலகிச் செல்கின்ற மேலான கதவு: 30.3மீற்றர் (கடல் மட்டத்தில் இருந்து 101 அடி)

வலதுகரை உடைப்புப் பகுதி : இயற்கை கடல் மட்டத்தில் இருந்து 32.1 மீற்றர் (107 அடி)

**துரிசு:**

இடதுகரை கோபுரத் துரிசு : கடல் மட்டத்திலிருந்து 20.1 மீற்றர் (67 அடி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலதுகரை கோபுரத் துரிசு : கடல் மட்டத்திலிருந்து 21 மீற்றர்

**வாய்க்கால்**

பிரதான வாய்க்காலின் நீளம் : 30,480 மீற்றர்
கிளைவாய்க்காலின் நீளம் : 13860 மீற்றர்
பிரிவு வாய்காலின் நீளம் : 8370 மீற்றர்
வயல் வாய்க்காலின் நீளம் : 156540 மீற்றர்

**பொது :**

இறுதியாக புனரமைக்கப்பட்ட ஆண்டு : 1977
விவசாயப் பரப்பளவு (பிரத்தியேம்): 8352.8 ஹெக்ரேயர்
விவசாயப் பரப்பளவு (மதிப்பீடு) : 9400 ஹெக்ரேயர்

நீர்ப்பாசனம் தொடர்பான பிரச்சினைகள் இரணைமடுக்குள நீர்ப்பாசனம் தொடர்பாகப் பல குறைபாடுகள் காணப்படுகின்றன. இதில் மிக முக்கியமானது இரணைமடுக்குளப் புனரமைப்பும் கால்வாய் அபிவிருத்தியும் ஆகும்.

இக்குளத்தின் நீர்க் கொள்ளளவை அதிகரிக்கக் குளக்கட்டினை உயர்த்துதல் மிக முக்கியமானதாகும். 1977 ஆம் ஆண்டிற்குப் பின்னர் நீர்ப்பாசனம் தொடர்பாகஎந்த அபிவிருத்தி முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை. இக்குளத்தின் மூலம் நீர்ப்பாசனம் செய்யப்படும் நீர்ப்பாசன கால்வாய்கள் அனைத்தும் பாதிப்படைந்துள்ளதனை நேடியாக அவதானிக்க முடியும். அத்துடன் இக்கால்வாய்கள் அனைத்தும் மண் கால்வாய்களாக இருப்பதால் அவை தூர்ந்து போய்க் காணப்படுகின்றன. இதனாற் சில இடங்களிற் கால்வாய்களின் ஆழம் குறைவடைவதுடன் அகலம் அதிகரிக்கின்றது. சில இடங்களிற் கால்வாய்கள் முழுவதும் புற்களும் செடிகளும் வளர்ந்துள்ளன. அதனால் நீர் ஓட்ட வேகம் தடைப்படுவதோடு சில இடங்களில் கழிவு தண்ணீர் வாய்கால்கள் மூலம் வெளியேயும் செல்கின்றன. மழை காலங்களிற் பெய்யும் நீரும் சேர்ந்து தாம்போதிகள் ஊடாக வெளியே செல்லும் போது மக்கள் போக்குவரத்து தடைப்படுகின்றது. புற்களும் செடிகளுகளும் நீரை உறிஞ்சிக் கொள்வதால் வாய்க்கால்கள் மூலம் வயல்களுக்குச் செல்லும் நீர் விவசாய நிலங்களுக்குப் போதுமானதாகச் சென்றடைவதில்லை.

அத்துடன் வாய்க்கால்களுக்கு அருகில் வசிக்கும் மக்கள் தமது வீட்டுக்கழிவுப் பொருட்களான குப்பை, கூழங்கள், மிருகக் கழிவுகள் போன்றவற்றைக் கால்வாய்களிலே வீசிவிடுகின்றனர். மேலும் 1990 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையாலும் கால்வாய்கள் பாதிப்படைந்துள்ளன. இராணுவ நகர்வுகள், பதுங்கு குழிகள், காவலரண்கள் போன்றன கால்வாய்களுக்குக் குறுக்காகவும் நெடுக்காகவும் அமைக்கப்பட்டிருந்தன.

அத்துடன் விமானக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுவீச்சுக்களும், செல் தாக்குதல்களும் கால்வாய்களின் கட்டமைப்பினைச் சீர்குலைத்துள்ளன. குறிப்பாக உருத்திரபுரம், முதலாம், இரண்டாம் வாய்க்கால், முரசுமோட்டை, பரந்தன் பகுதிகளில் உள்ள கால்வாய்கள் முழுமையாக இராணுவ நடவடிகடகையினாற் பாதிப்படைந்துள்ளன.

பிரதானமான கால்வாய்கள் உள்ள பகுதிகளிற் புதைக்கப்பட்டுள்ள கண்ணி வெடிகளும் கால் வாய்களின் அபிவிருத்தியை இன்று வரை தடைப்படுத்தி உள்ளன. கால்வாய்கள் மட்டுமன்றி மதகுகள் நீர்த்தடுப்புப் பலகைகள், சுலுசுகள் முதலியனவும் முற்று முழுதாகப் பாதிக்கப்பட்டுள்ளமை நீர்ப்பாசனத்திற் காணப்படும் முக்கிய பிரச்சினையாகும்.

திருவையாற்று இளைஞர் குடியேற்றத் திட்டத்திற்கு நீரை வழங்கி வந்த ஏற்று நீர்ப்பாசனப் பம்பிகள் யாவும் 1988 ஆம் ஆண்டுக்குப் பின்னர் செயலிழந்துள்ளமையும் ஒரு முக்கிய பிரச்சினையாகும். இதுமட்டுமன்றி இரணைமடுக்குள நீர்ப்பாசனத்தோடு தொடர்புடைய ஏராளமான குறைபாடுகளை மேலும் குறிப்பிடலாம்.

எதிர்காலத்திட்டங்கள்

பிரிட்டிஸ் அரசாங்கத்தால் கனகராயன் ஆற்றுவடி நிலப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட இரணைமடுக்குளம் 1900 ஆம் ஆண்டிற் திரு. டபிள்யூ. பிறவுண் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டாலும் 1920 ஆம் ஆண்டு திரு.ஜே.எஸ். கெனடி என்னும் பொறியியளாரால் கட்டி முடிக்கப்பட்டது. தொண்ணூறு கிலோ மீற்றர் நீளமான கனகராயன் ஆற்றை மறித்துக் கட்டப்பட்ட அணை மூலம் இந்நீர்த்தேக்கம் உருவாக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தின் அபிவிருத்தியை முதன்மை நோக்கமாகக் கொண்டிருந்த போதும் வரண்ட வலையத்தின் மிகப் பெரும் வரட்சிப்பகுதியாகிய யாழ்ப்பாணக் குடா நாட்டின் பெரும் திட்டமென வர்ணிக்கப்படும் மகாவலி கங்கை அபிவிருத்தித் திட்டத்துடனும் இதனை இணைப்புச் செய்யும் முன் மொழிவையும் கொண்டிருக்கின்றது.

இலங்கையின் நிலப்பரப்பில் 4000 சதுரமைல், பிரதேசத்தை உள்ளடக்கும் 90000 ஏக்கர் பரப்புக்களை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் மகா வலிகங்கை பாயும் 43 இலட்சம் சதுர அடி நீரை நாட்டின் உலர்வலயத்திற்குப் பயன்படுத்தும் இப்பெரும் திட்டத்துடன் இக்குளம் இணைக்கப்பட்டிருக்கின்றது.

1902 இல் இக்குள வேலைத்திட்ட அறிக்கையானது மகாவலி ஆற்றிலிருந்து கனகராயன் ஆற்றுக்கு ஒருவாய்க்கால் மூலம் நீரைத்திருப்பும் நம்பிக்கையைக் கொண்ட முன்மொழிவும் இணைக்கப்பட்டுள்ளது.

அண்மைக்காலத்தில் நாட்டில் ஏற்பட்ட சமாதான சூழ்நிலையைத் தொடர்ந்து இரணைமடுக்குள நீர்ப்பாசன நடவடிக்கையிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இரணைமடுவில் இருந்து குழாய் மூலம் யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கு நீர் விநியோகம் செய்யும் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்து ஆலோசனை செய்யப்படுகின்றது. அதாவது யாழ்ப்பாணக்குடா நாட்டிற்கான குடிதண்ணீர் உட்பட நீர்த்தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கிளிநெர்சி மாவட்டத்திலுள்ள இரணைமடுக்குளத்திலிருந்து குழாய் மூலம் ஆனையிறவுக் கடலேரியூடாக யாழ்குடாவுக்கு நீரை எடுத்துவந்து விநியோகம் செய்வதற்கான திட்டம் குறித்து ஆலோசனை செய்யப்படுகின்றது.

இத்திட்ட நடைமுறைக்காகச் சுமார் 300 கோடி ரூபா வரை தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பாரிய நீர்ப்பாசனத் திட்டம் சாத்தியமாகும் பட்சத்தில் சில வருட காலத்தில் யாழ்குடா நாட்டு மக்கள் நீர்ப்பிரச்சினை ஓரளவு தீரும் என எதிர்பார்க்கலாம். இத்திட்டம் செயற்படும் போது இரணைமடுக் குளத்தின் கட்டு மேலும் உயர்த்தப்பட்டுச் செப்பனிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தால் குடாநாட்டின் நிலத்தடி நீர்ப்பயன்பாடு குறையும் சாத்தியம் உண்டெனவும் ஆனையிறவு ஊடாக அமைக்கப்படும் நீர்க்குழாய் கொடிகாமத்திலிருந்து பிரிக்கப்பட்டு வெவ்வேறு இடங்களுக்கு நீர்விநியோகம் மேற்கொள்ளப்படுமெனவும் எதிர்காலத்தில் கிணற்று நீரின் தன்மைகள் மாறிவரும் நிலையில் (உவராதல்)இத்திட்டம் அவசியமானதெனவும் கருதப்படுகின்றது.இரணைமடுக்குளத்தில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு தண்ணீர் கொண்டு வரும் திட்டத்தில் முதலாவதாக இரணைமடுக்குளம் ஆழமாக்கப்பட்டுக் குளக்கட்டுக்கள் உயர்த்தப்பட்டு நீர்க்கொள்ளளவை அதிகரிக்க வேண்டும். அத்துடன் குளத்துக்கு வரும் கனகராயன் ஆற்றுநீர் வற்றாது நிரந்தரமாக ஓடக்கூடியதாக முதலிலே மகாவலி ஆற்றுநீரை இணைக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மகாவலி ஆற்றுநீர் ஓடிவரும் பிரதேசங்களில் உள்ள வயல்களுக்கும் போதியதாக இருக்கக்கூடிய வகையில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இல்லாவிடின் இந்தியாவில் கர்நாடகம் ஊடாகத்தமிழ்நாடு வரும் தண்ணீருக்கு ஏற்பட்ட நிலையே இங்கும் ஏற்படலாம். இதனால் கிளிநொச்சி மாவட்ட விவசாய நிலப்பரப்புக்கள் யாவும் நீர்ப்பற்றாக் குறைவால் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படலாம். எனவே கிளி நொச்சி விவசாயிகள் முழுமையாகப் பாதிக்கப்படலாம். 2012 ஆம் ஆண்டு இரணைமடுக்குள நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் குளத்து நீரின் அளவைத் திட்டமிடாது கமம் செய்யவிட்டதால் விவசாயிகள் பலர் நெல்விளைவின் போது நீர் போதாமையால் அவை எரிந்து அதன் மூலம் நட்டம் அடைந்தனர். அது மாத்திரமன்றி ஆடு, மாடுகளுக்கும் நீர் திறந்து விட முடியாத நிலை ஏற்பட்டது. இதனால் பல இடங்களில் தண்ணீர் இல்லாது குடிக்கக்கூட வெளியிடங்களில் இருந்து தண்ணீர் ஏற்றி வந்து கொடுக்கும் நிலை அரசாங்கத்துக்கும் உள்ளூர் ஸ்தாபனங்களுக்கும் ஏற்பட்டது.

இரணைமடுக்குளத்தின் அணைக்கட்டுக் காலத்துக்குக் காலம் உயர்த்தப்பட்டு நீர்ப்பாசனம் செய்யப்படும் பரப்பளவு அதிகரிக்கப்பட்டாலும் இன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல குறைபாடுகளைக் கொண்டே காணப்படுகின்றது. தற்போதைய நிலையிற் கடந்த பல வருடங்களாகக் குளம் புனரமைப்புச் செய்வதற்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீட்டைப் பெருமளவில் மேற்கொள்ளாமல் சிறுசிறு பராமரிப்பு வேலைகளைச் செய்வதற்கு மட்டும் நிதி ஒதுக்கீட்டைச் செய்துள்ளது. இதனால் இடது, வலது கரை வாய்க்கால்களில் உள்ள கட்டுமானங்கள் முழுமையாகப் பாதிப்படைந்துள்ளது.

அணைக்கட்டும் பாதிக்கப்பட்டு வலுவிழந்த நிலையில் உள்ளது. வான் பகுதி மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள நிலையில் நீர் முகாமைத்துவம் எந்தத் திருத்தத்தையும் கொள்ளமுடியாது கணிசமான அளவு நீர் வீண் விரயமாகின்றது. இதனால் எமது வளத்தின் பெரும் பகுதியை நாம் இழந்து கொண்டிருக்கின்றோம்.

---

மாணவர்களே உங்கள் திறமையை வளர்த்துக்கொள்ளுங்கள்...

* முதன் முதலாக தொழில்புரட்சி நடைபெற்ற நாடு - இங்கிலாந்து

* குளோரினிலிருந்து தயாரிக்கப்படும் மருந்து பொருள் - குளோரோ..பார்ம்

* மனிதனுடைய உடல் உறுப்புகளில் வாழ்நாள் முழுவதும் ஆரோக்கியமாக இருப்பது - மூளையில் உள்ள செல்கள்

* எச்.பி.ஜே. பைப்லைன் திட்டமானது எதை கொண்டு செல்ல உருவாக்கப்பட்டது - இயற்கை வாயு

* இத்தாலி நாட்டின் தேசிய மலர் - லில்லி

* மின் விளக்கை கண்டுபிடித்தவர் - ஹம்ப்ளி டேவி

* ஒரு மணி நேரத்தில் 74 கி.மீ வேகத்தில் ஓடுவது - நெருப்பு கோழி

* ஏறும்புகள் உள்ள வகைகள் - 14,000 (அவைகள் ஒரு போதும் உறங்குவதில்லை)

* நயாகரா நீர்வீழ்ச்சியை கண்டுபிடித்தவர் - லூயிஸ் ஹெனபின்

* ஆசியாவில் முதன் முதலாக தொழில் மயமான நாடு எது - ஜப்பான்

* சூரிய குடும்பத்தில் அதிக வெப்பமான கிரகம் - புதன்

* சுறா மீனின் வாழ் நாள் - 20 முதுல் 30 ஆண்டுகள்

* கொசுக்களில் 3500 வகை உள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றிசையும் கடலாற் சூழப்பட்ட இலங்கைத்தீவில் ஈழம் என அழைக்கப்படும் தமிழரின் பாரம்பரிய தாயகத்தின் வடபால் யாழ்ப்பாணமாவட்டத்திற்குத் தெற்கிலும், கிழக்கே முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் வவுனியா மாவட்டத்திற்கு வடக்கேயும், மன்னார் மாவட்டத்திற்கும் கடலுக்கும் கிழக்கிலும் இடைப்பட்ட மாவட்டமே கிளிநொச்சி மாவட்டமாகும்.

# “ஒரு உருத்திரபுரம் வரலாற்றுப் பார்வை”

கிளிநொச்சி மாவட்டம் இயற்கை அன்னை உவந்தளித்த நீர்வளமும் நிலவளமும் ஒருங்கே அமைந்த விவசாய மாவட்டமாகும். இலங்கையின் பாரிய குளங்களில் ஒன்றான இரணைமடுக்குளம் இங்கே அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இக்குளத்தின் மூலம் பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலம் நீர்பாய்ச்சப்பட்டு நெற்பயிர்ச் செய்கைக்கு உட்படுத்தப்படுகின்றது.

இந்தியாவிற்கு தஞ்சை மாவட்டம் நெற்களஞ்சியமாகத் திகழ்வது போலக் கிளிநொச்சி மாவட்டமும் இலங்கைத்தீவில் நெற்களஞ்சியமாகத் திகழ்கின்றது. வடபகுதி மக்களுக்கு அதாவது யாழ்குடாநாட்டு மக்களுக்குச் சோறிடும் நெற்களஞ்சியமாக இம்மாவட்டம் திகழ்கின்றது.

1930 ஆம் ஆண்டளவில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களிற்கு முன் வரலாற்றிற்கு முந்திய காலத்தில் இருந்து கரைச்சிப் பிரிவின் சில பகுதிகளிற் குறிப்பாக முரசுமோட்டை, ஊரியான், கண்டாவளை, கலவெட்டித்திடல், குஞ்சுப்பரந்தன், உருத்திரபுரம் ஆகிய பகுதிகளில் மிகவும் நாகரீகம் மிகுந்த மிகப் பழமையான வதிவிடங்கள் அமைந்திருக்கின்றன. இவை இன்றும் பழைய கமம் என்றே அழைக்கப்படுகின்றன

ஆரம்பத்தில் இலங்கையிற் கடலை அண்டிய பகுதிகளிலேயே மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்திருக்கின்றனர். நீர்கொழும்பு முதல் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருமலை, மட்டக்களப்பு, பொத்துவில் வரை தமிழர்களும் கதிர்காமம், அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி, கொழும்பு வரை சிங்களவர்களும் வாழ்ந்து வந்ததாகப் பழங்காலச் சரித்திரங்கள் கூறுகின்றன.

பின்னர் இப்பகுதிகளின் அரசர்களிடையே ஏற்பட்ட இடம் பிடிக்கும் யுத்தம் காரணமாகவும் வெளிநாட்டவரின் வருகை காரணமாகவும் மக்கள் உள்பிரதேசங்களான அனுராதபுரம் ,பொலநறுவை, கண்டி, இரத்தினபுரி போன்ற பகுதிகளிற் தாம் மறைந்து வாழவும், தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டிக் குடியேறினர். இது போன்றே யாழ்ப்பாணக்குடாநாட்டில் வசித்த மக்கள் குடாநாட்டின் எல்லைக் கடலைக் கடந்து அதன் கரைப்பகுதிகளிற் குடியேறிய காரணத்தால் அப்பகுதிகள் கரைச்சிப்பகுதியென அழைக்கப்படலாயிற்று. இக் கரைச்சிப்பகுதியில் அமைந்துள்ள ஆலயங்கள் மிகப்பழமையானவை.

உருத்திரபுரம் கிராமம்

இக்கிராமங்கள் எல்லாவற்றுக்கும் மிகப்பழமையானது என்பதை பலசான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இக்கிராமம் வரலாற்றுச் சிறப்பு மிக்கச் சிவபூமியாகும். இலங்கையில் பல சிவாலயங்கள் இருந்திருக்கின்றன. தேவாரகாலம் அதாவது நாயன்மார்கள் காலத்திலே அவர்களாற் பாடல் பெற்ற மன்னாரில் உள்ள திருக்கேதீஸ்வரம், திருகோணமலையிலுள்ள கோணேஸ்வரம், பாடல் பெறாத சிலாபத்திலுள்ள முனீஸ்வரம், திருப்புகழ்க்காலக் கதிர்காமம் என்பன பழைய ஆலயங்கள் என்பது வரலாற்றுச்சான்று பகர்பவை. இவ்வாலயங்களின் காலத்திலும் முற்பட்ட காலத்திலேயே உருத்திரபுரம் உருவாகியிருப்பதாக அறிய முடிகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் ஏ, ஒன்பது வீதியிற் காணப்படும் கரடிப்போக்குச்சந்தியில் இருந்து மேற்கு நோக்கிச் செல்லும் ரெயிலர் வீதியின் 3 ஆம் மைல்கல்லின் இருந்து 7ஆம் மைல்கல் வரை வீதியின் இரு புறமும் உள்ள பகுதியே உருத்திரபுரம் ஆகும். இதன் மேற்குப்புற எல்லையிலே மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றுடன் அமைந்திருப்பதே உருத்திரபுரீஸ்வரம் சிவாலயம் ஆகும். இச் சிவாலயம் மிகப்பழமை வாய்ந்த ஆலயம் மட்டுமன்றிக் கிளிநொச்சியின் ஒரே ஒரு சிவாலயம் என்ற பெருமையையும் பெற்றது. இங்கே மனோன்மணி அம்பாள் சமேதரராகத் தக்கனின் யாகத்தை அழித்த உருத்திர மூர்த்தியான சிவன் சாந்தங்கொண்டு மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புக்களுடன் விளங்கிக்கொண்டிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வரலாற்றுப் பெருமையும் தொன்மையும்

தென் இந்தியாவிலுள்ள தஞ்சைப் பிரகதீஸ்வரர் கோயில் போல் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள உருத்திரபுரீஸ்வரமும் கற்றளியும் ஒரு காலத்தில் சிறப்புப்பெற்று விளங்கியதற்கான தடயங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இதன் கிழக்குப்புறமாகவும் பழைய கட்டிடச்சான்றுகள் முறிப்புக்குளத்தின் தென்புறமாக அலை கரைப் பக்கத்திலேயும் ஊற்றுப்புலத்திலும் காணப்படுகின்றன. உருத்திரபுரச் சிவன்கோயில் அந்நியர் ஆட்சிக்காலத்தில் அழிக்கப்பட்டமைக்கான தடயங்கள் இங்கே காணப்படுகின்றன.

இவ்வாலயம் சோழப் பெருமன்னர் காலத்துக்கோ அல்லது அதற்கு முற்பட்டதோ என்பதனை அக்காலத்து லிங்கம் கிடைக்காவிடினும் அப்பகுதியிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டு இச்சிவாலயத்திற் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள ஆவுடையார் கல்லுச் சான்று பகர்கின்றது. இவ்வாவுடையார் கல் சற்சதுர வடிவமானதும் பிரமா, விஷ்ணு, உருத்திரபாகம் என்னும் மூன்று பாகங்களாக அமைந்துள்ளது. இச் சதுர ஆவுடையார் இராசராஜேஸ்வரச் சோழன் காலத்துக்கு முன்புதான் சிவாலயங்களில் வைத்து வழிபட்டு வந்ததாகவும் பிற்பட்டகாலத்தில் வட்டவடிவமான ஆவுடையாரே பிரதிஷ்டை செய்ததாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இதில் இருந்து உருத்திரபுரம் கிராமம் மிகப் பழமை வாய்ந்த கிராமம் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

### குடிப்பரம்பல்

பழமை வாய்ந்த உருத்திரபுரத்தில் வாழ்ந்த மக்கள் அன்னிய ஆட்சியாளரின் படையெடுப்பின் காரணமாகவும், மலேரியா போன்ற ஆட்கொல்லி நோய்களின் காரணமாகவும் காலத்துக்குக்காலம் இருக்கையைத்தக்க வைக்க முடியாமல் மக்கள் இடம்பெயர, நாடுகாடாகவும் மறுபடியும் மக்கள் குடியேறுவதுமாக மாறிமாறிக் குடிப்பரம்பல் ஏற்படலாயிற்று.

போர்த்துக்கேயர் கோட்டையை மாத்திரமன்றி எமது ஆலயங்களையும் அழித்து அங்கு கிடைத்த பொருட்களைக் கொண்டு தம் தேவைகளை நிறைவேற்றினர். ஒரு தேவாலயத்துக்குரிய மணியொன்றைச் செய்வதற்குரிய உலோகத்தினை, இடைச்சிறுவன் ஒருவனால் காட்டப்பட்ட ஓரிடத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த இருபது விக்கிரகங்களை உருக்கிச் செய்ததாகப் போர்த்துக்கேய வரலாற்றாசிரியரான குவெஸ்ரோல் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். உருத்திரபுரீஸ்வரமும் இக் கோயிலைச் சார்ந்துள்ள உருத்திரபுரமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்லாண்டுகளுக்கு முன்பே அன்னியரால் அழிக்கப்பட்ட போது பாதுகாப்புக்கருதி இச்சிவாலயத்திற்குரிய சிவலிங்கம் பொறிக்கடவை அம்பாள் கோயிற் சூழலில் வைக்கப்பட்டிருந்தாகத் தகவல்கள் கூறுகின்றன. இது உருத்திரபுரத்தினது தொன்மையையும் சிறப்பையும் மேலும் உறுதி செய்கின்றது.
வன்னிபெருநிலப்பரப்பை ஆண்ட அடங்காப்பற்று என சிறப்பாக அழைக்கப்படும் வன்னியமன்னர்களது ஆதரவையும் போசிப்பையும் பெற்று உருத்திரபுரமும் சிறப்புற்று இருந்தது. எனினும் இந்நகரம் இதற்கும் காலத்தால் முந்தியதும் தொன்மையான நகரமும் ஆகும்.

உருத்திரபுரத்தினதும் அச்சிவாலயத்தினதும் அழிபாடுகள் யாழ்ப்பாணத்தில் அரசாங்க அதிபராய் இருந்த சேர் வில்லியம் துவைனம் அவர்கள் கனகராயன் ஆற்றுநீரை மறித்துக்கட்டி அந்நீர் கடலுடன் சேர்ந்து வீணாகாமல் இருக்க இரணைமடுக்குளத்தைக் கட்ட ஆய்வு செய்த காலத்தில் அதாவது 1882ஆம் ஆண்டு செப்டம்பர் 02ம் திகதி உருத்திரபுர சிவாலயத்தின் கட்டிட இடிபாடுகள் கண்டுபிடிக்கப்பட்டதுடன் அவை ஆவணப்படுத்தவும் பட்டது.

இரணைமடுக்குளம் ஆரம்பிக்கப்பட்டு முதற்குடியேற்றத்திட்டம் தற்போது கணேசபுரம் என அழைக்கப்படும், அன்றைய பழைய கொலனி 1939ஆம் ஆண்டு 39குடும்பங்களுடன் ஆரம்பிக்கப்பட்டபோதும் மிகக் குறைவானவர்களே வந்து குடியேறினர். ஒருவருக்கு வீட்டுடன் இரண்டேக்கர் வீட்டு நிலமும் ஐந்து ஏக்கர் வயல்நிலமும் கொடுக்கப்பட்டது. அத்துடன் சகலவசதிகளும் செய்து கொடுக்கப்பட்ட போதும் குடியேற்றம் வெற்றியளிக்கவில்லை.

இக்குடியேற்றத்திட்டம் கிளிநொச்சி கண்டி வீதியின் மேற்குப்புறத்திற் புகையிரதப் பாதையின் அருகே அமைக்கப்பட்டதால் கிளிநொச்சி நகரை விஷ்தரிக்க முடியாத நிலை காணப்பட்டது. இதைக்கண்ட அரசினர் அடுத்த குடியேற்றத்திட்டங்களைக் கண்டி வீதியின் மேற்குப்புறமும் கிழக்குப்புறமும் இரண்டு மைல்களுக்கப்பால் அமைக்கத் தீர்மானித்தனர்.

இதன்படி இரண்டாவது குடியேற்றத்திட்டமான தற்போதைய உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் அப்போது பரந்தன் புதுக்குடியிருப்புத்திட்டமென அழைக்கப்பட்டது.
இக்குடியேற்றத்திட்டத்தில் 210 வீடுகள் அமைக்கப்பட்டது. இது 9ஆம் 10ஆம் வாய்க்கால்களை உள்ளடக்கி ஒரு மைல் நீளமும் முக்கால்மைல் அகலமும் உடைய சற்சதுர வடிவில் ஆக்கப்பட்டது. இதனால் வீதிகள் அனைத்தும் நேராகக் காணப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கே குடியேற்றம் செய்யும் குடும்பங்கள் அனைத்தும் அதிகம் அங்கத்தவர்களைக் கொண்டதாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் யாழ்மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவில் இருந்தும் தெரிவு செய்யப்பட்டதுடன் ஒரே காரியாதிகாரி பிரிவில் இருந்து தெரிவு செய்யப்படுபவர் ஒருவரை ஒருவர் ஏதோ ஒரு வகையில் அறிந்தவராக இருப்பர் என்ற காரணத்தினால் அவர்கள் அனைவரையும் பக்கத்து வீடுகளில் குடியிருக்கவும் ஒழுங்கு செய்யப்பட்டது. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது ரெயிலர் வீதியின் வடக்குப்பக்கத்தில் வீடுகளை அமைத்து தென்பகுதியில் நெற்செய்கைக்கு நிலம் ஒதுக்கப்பட்டது. எனவே வடக்கு புறத்தில் சில வீடுகள் கட்டப்பட்ட நிலையில் அப்பொழுது பெய்த கடும்மழை காரணமாக வீடுகட்டும் திசையை தென்புறமாக மாற்றவேண்டி ஏற்பட்டது. இங்கு கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும் பழைய கொலனியில் கட்டப்பட்ட வீடுகளின் அமைப்பில் கட்டப்பட்டன. ஆனால் பின்னர் கட்டப்பட்ட வீடுகள் செலவு குறைவில் சிறிதாகக் கட்டப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவு மக்களும் ஒன்றாகவே குடியமர்த்தப்பட்டனர். உருத்திரபுரம் பகுதி அப்போது சாவகச்சேரித் தொகுதியுள் இருந்தமையால் அவர்களுக்கு முதலிற் கட்டிய பழைய கொலனி வீடுகள் போன்றன கொடுக்கப்பட்டன. பின்னர் முதலாம் இலக்கத்தில் இருந்து யாழ்ப்பாணக் காரியாதிகாரி பிரிவினருக்கு கொடுக்கப்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்திலுள்ள ஊர்ப்பெயர்களில் இவ் வீதிகள் அழைக்கப்படலாயிற்று. உதாரரணத்துக்கு சாவகச்சேரிக்குறுக்கு, யாழ்ப்பாணக்குறுக்கு, அளவெட்டிக்குறுக்கு, கோப்பாய்க்குறுக்கு என எல்லாக்கிராமமும் இங்கும் காணப்பட்டன. அது மாத்திரமன்றித் தாழ்த்தப்பட்ட இனத்தவர் ஒன்றாகவும் தொழில் ரீதியாக வாழ்வோர் தனியாகவும் குடியேற்றப்பட்டனர்.

## புவியியற்தன்மை

பெரும்பாலும் இப்பிரதேசம் சமதரையாகவும் வண்டல்மண் செறிந்த மணற்தன்மை வாய்ந்த நிலமாகவும் காணப்படுகின்றது. பழைய கொலனியில் இரண்டேக்கர் மேட்டுநிலமும், 5 ஏக்கர் வயல்நிலமும் கொடுக்கப்பட்டபோது இரண்டேக்கர் நிலம் வீட்டுடன் சேர்ந்த நிலமாதலால் தென்னை, மா, பலா, கமுகு, வாழை போன்ற மரங்கள் கொடுக்கப்பட்டன. இவற்றை நடப்போதிய நிலம் இல்லாததாற் தோட்டம் செய்ய அவர்களால் முடியவில்லை. இதைக்கண்ட அரசு இரண்டாம் குடியேற்றத்திட்டமான உருத்திரபுரம் குடியேற்றத்திட்டத்திற்கு நான்கு ஏக்கர் வயல் நிலத்தையும் மூன்று ஏக்கர் மேட்டுநிலத்தையும் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேட்டுக்காணி மூன்றேக்கரிற் பின்புறமாக ஒரு ஏக்கர் காணியில் நாட்டுவதற்காகத் தென்னம்பிள்ளை 54ம் கொடுக்கப்பட்டது. வீட்டுடன் சேர்ந்த ஒரு ஏக்கரில் மா, பலா,வாழை என்பன நாட்ட அவை கொடுக்கப்பட்டன. வாழை மரம் குடியேற்ற வாசிகளே பெற்றுச்செய்கை பண்ண வேண்டும். மண்வெட்டி, கோடரி, காட்டுக்கத்தி, அலவாங்கு ஆகிய உபகரணங்களும் உழவுக்காக ஒரு சோடி எருமை மாடும் ஒரு இரும்புக்கலப்பையும் கொடுக்கப்பட்டது. வீட்டுக்காணியின் மத்தியில் உள்ள ஒரு ஏக்கர் நிலத்திற்கு தோட்டம் செய்யவும் , சிறு தானியம் செய்யவும் அறிவிக்கப்பட்டது. மேட்டுக்காணியில் வெட்டப்பட்ட பெரிய மரங்களின் அடிக்கட்டைகளும் மண்மேடுகளும் புற்றுப்புட்டிகளும் காணப்பட்டன. இவற்றைப் பிடுங்கி எரிக்கவும் புற்றுப்புட்டிகள், மண்மேடுகள் ஆகியவற்றை மட்டுப்படுத்தவும் அரசு குறித்த சிறுதொகைப் பணத்தை உதவியது. முதல் விதைப்புக்கு மானியமாக விதைநெல்லும் முதல் ஆறுமாதங்களுக்கும் உணவுக்கான பொருட்களும் கொடுக்கப்பட்டன. முதல் வருட சிறுபோக விதைப்புக்கு அரை ஏக்கர் நிலம் ஒருவருக்குச் சிபார்சு செய்யப்பட்டது. நீர் பாயக்கூடிய ஒருவரது வயலில் எட்டுப்பேர் சேர்ந்து கூட்டாகக் *சமம்* செய்ய அனுமதிக்கப்பட்டது. எட்டுப்பேரிடம் மாடுகலப்பை இருந்தபோதும் இரும்புக்கலப்பை உழவு தெரியாதவர்கள் வேறு வேலைகள் செய்தனர். இதன் மூலம் எல்லோரும் சேர்ந்து கூட்டாகச்செய்யும் பழக்கம் உண்டானது. உழுதல், விதைத்தல், நெல் வெட்டுதல், சூடடித்தல் போன்ற வேலைகள் கூலியில்லாமலே செய்யக்கூடியதாக இருந்தால் நட்டம் ஏற்பட வாய்ப்பிருக்கவில்லை.

ஆரம்பத்தில் நான்கு வீடுகளுக்கு ஒரு கிணறு வீதம் ஒரு காணியிற் கிணற்றைக் கட்டி அதில் நால்வரும் உபயோகிக்கும்படி பணிக்கப்பட்டது. பின்னர் காலக்கிரமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கிணறு அமைக்க உதவிப்பணம் கொடுக்கப்பட்டது.

பாடசாலையை மையமாக வைத்து ஒன்று முதல் தொண்ணூற்றொன்பது வீடுகள் மேற்குப்புறமாகவும் கிழக்குப்புறமாகவும் தெற்குப்புறமாகவும் 100 முதல் 166 வரையுள்ள வீடுகளும் வீதியின் வடக்கே 167 முதல் 210 வரையுள்ள வீடுகளும் அமைக்கப்பட்டன. சந்தை, பொதுநிலையங்கள் கட்டுவதற்காக பாடசாலைக்கு வடக்குப்புறமாக பிரதான வீதி வரையும் தெற்குப்புறமாக இருவீதிகளுக்கு இடைப்பட்ட பிரதேசமுமாகத் தொண்ணூறு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. பிரதான வீதியின் வடக்குப்புறத்திலே தொண்ணூறு ஏக்கர் நிலம் மேச்சல் தரையாகவும் ஒதுக்கப்பட்டது. இதனை எள்ளுக்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என அழைத்தனர். உருத்திரபுரத்தின் நான்கு திசைகளும் காடாக இருந்ததனால் எள்ளுக்காடெனும் மேற்சற்தரையும் பற்றைக்காடாகவே காணப்பட்டது.

உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் மிக விரைவாக வளர்ச்சியடைந்ததைக்கண்ட அரசாங்கம் உருத்திரபுரத்தின் கிழக்குப்புறமாக உள்ள காட்டினை வெட்டி 109 வீடுகளைக் கொண்ட ஒரு குடியேற்றத்திட்டத்தை உருவாக்கினர். இதனை முதலில் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டமெனவும் பின்னர் உருத்திரபுரம் கிழக்கு குடியேற்றத்திட்டம் எனவும் அழைத்தனர். இதன் காரணமாக முன்னர் ஒதுக்கி இருந்த பாடசாலையைச் சுற்றிவிடப்பட்டிருந்த குடிமத்தியை மாற்றி உருத்திரபுரம் குடியேற்றத்திட்டத்துக்கும் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டத்திற்கும் இடையில் உள்ள நிலத்தினை ஒதுக்கித் தபாலகம், மருந்தகம், மகப்பேற்று நிலையம், பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், வைத்தியசாலை விடுதிகள் என்பன கட்டப்பட்டன.

எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டத்தில் 109 வீடுகள் கட்ட இருந்த போதும் 89 வீடுகளே கட்டப்பட்டது. மிகுதி இருபது வீடுகளும் உருத்திரபுரத்தின் பொது சேவைக்கென ஒதுக்கப்பட்டிருந்த நிலத்தில் உருத்திரபுரம் மகாவித்தியாலயத்தின் முன்னால் உள்ள ஒன்பதேக்கர் நிலத்தையும் பாடசாலைக்கென ஒதுக்கிவிட்டு மீதி நிலத்தில் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டத்தின் தொடர்ச்சியான 89ஆம் வீடு முதல் 108 ஆம் வரை கட்டிக்கொடுக்கப்பட்டது. இவ்வீடுகள் இப்பொழுதும் "சிவிக் சென்றர்" வீடுகள் என்றே அழைக்கப்படுகின்றன.

ஐம்பத்தெட்டாம் ஆண்டு இலங்கையிலேற்பட்ட இனக்கலவரம் காரணமாகக் கிளிநொச்சி துரித வளர்ச்சி கண்டது. இதன் காரணமாகவும் இளைஞர்கள் அதிகம் பேர் இருந்ததாலும் விரிவாக்கத்திட்டம் என்ற பெயரில் உருத்திரபுரத்தின் மேற்குப்புறத்திற் குடியேற்றம் ஆரம்பமானது. இவை தற்போது "சிவநகர்" என அழைக்கப்படுகின்றது. இக்குடியேற்றத்திட்டத்தில் உருத்திரபுரகுடியேற்றவாசிகளின் அதிகம் பிள்ளைகளும் உறவினரும் காணப்படுகின்றனர். இத்திட்டம் விரிவாக்கப்பட்டு சிவநகர் இரண்டாம் குடியேற்றத்திட்டமும் ஆக்கப்பட்டது. பொது சேவைக்கென எட்டாம் பத்தாம் வாய்க்காலுக்கு இடைப்பட்ட நிலத்திற் கட்டப்பட்ட பொதுக்கட்டிடங்களுடன் சிகரற் புகையிலை உலர்த்தும் கட்டிடங்களும் மாட்டுப்பண்ணைக்கான கட்டிடமும் கட்டப்பட்டன.

மீதியாகக் கட்டிடங்கள் கட்டப்படாதிருந்த நிலங்களை அக்காலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயரினைப்பாவித்து அவர்களின் உதவியுடன் எட்டாம் பத்தாம் வாய்க்காற் குடியேற்றவாசிகளின் பிள்ளைகள் இரத்தினம்பண்ணை, ஆனந்தம்பண்ணை என்று இரு பண்ணைகளை ஆக்கி அதிற் குடியேறினர்.

இக்காலத்தில் மக்கள் அடாத்தாக குடியேறி அரசாங்கக் காணிகளில் இருந்து அதனைத் தமதாக்கிக் கொண்டனர். இதன் காரணமாக மேச்சற்தரவைக்காக விடப்பட்ட எள்ளுக்காடு என்று அழைக்கப்பட்ட மேச்சற்தரவையும் குடியேற்றத்திட்டமாக மாறித் தற்பொழுது சக்திபுரம் என அழைக்கப்படுகின்றது.

**பொதுநிர்வாகம்**

ஆரம்பத்தில் யாழ்ப்பாண அரச அதிபரின் மேற்பார்வையிற் பச்சிலைப்பள்ளிக்கரைச்சி என்ற காரியாதிகாரி (ஞசுழு)பிரிவில் உருத்திரபுரம் அமைந்திருந்தது. இதன் கிராம அதிகாரியாகக் குஞ்சுப்பரந்தன் கிராமசேவகரே நிர்வகித்து வந்தார். அக்காலத்திற் கிராமாதிகாரிகளை அக்கிராமத்தின் பொதுமக்களே தெரிவுசெய்வர். கிராமத்தலைவர்களுக்குரிய கல்வித்தகைமையுடையோர் விண்ணப்பிப்பர். விண்ணப்பிப்போரின் தெரிவு காரியாதிகாரியால் அப்பகுதி மக்களை ஒரு பொது இடத்திற்கு அழைத்து கையுயர்த்தி யாருக்குக் கூடுதல் வாக்குக்கிடைக்கின்றதோ அவரே கிராமத்தலைவராகத் தெரிவு செய்யப்படுவர்.

ஆனால் அரசாங்கம் பிற்காலத்தில் தானே நேரடியாகத் தெரிவுசெய்தது. கிராமத்தலைவர் என்ற பெயரும் கிராமசேவையாளர் என மாற்றப்பட்டது. குஞ்சுப்பரந்தன் கிராமத்தலைவர் பிரிவில் உள்ள உருத்திரபுரம் கிராமம் உருத்திரபுரம் கிராமசேவையாளர் ஒருவரின் தலைமையின் கீழ் வந்தது. அத்துடன் கிளிநொச்சி கரைச்சி என்ற பெயரில் ஒரு காரியாதிகாரியின் தலைமையிற் கொண்டுவரப்பட்டது. உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் கொடுக்கும்போது 'சேர் கட்சன் துரை ' என்னும் ஆங்கிலேயர் ஒருவரே அரச அதிபராக இருந்தார். அவர் விலகிச் சென்றதும் தமிழர்களே அரச அதிபராக நியமனம் பெற்றனர். வடமாகாண யாழ்மாவட்ட அரச அதிபராய் முதல் நியமனம் பெற்ற அரச அதிபர் சிறீகாந்தா ஆவார்.

உருத்திரபுரம் கிராமசேவையாளர் முதன்முதல் நியமனம் பெற்ற போது அவரின் மேற்பார்வையில் உருத்திரபுரம் கிழக்கு, மேற்கு, புதுமுறிப்பு, எள்ளுக்காடு, சிவநகர், நீவில் ஆகிய பகுதிகள் இருந்தன. பின்னர் படிப்படியாக மாற்றமடைந்து தற்போது உருத்திரபுரத்துக்கு ஒருவரும் எட்டாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்க்காலுக்கு ஒருவரும் சிவநகருக்கு ஒருவரும் எள்ளுக்காட்டுக்கு ஒருவருமாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆரம்பத்திற் பன்னிரண்டு உறுப்பினர்களைக் கொண்ட கிராமசபை ஒன்றே இருந்தது. இந்தக் கிராமசபையின் எல்லை வடக்கே பச்சிலைப்பள்ளியும் கிழக்கே புதுக்குடியிருப்பும் தெற்கே துணுக்காயும் மேற்கே பூனகரியும் இருந்தன. பின்னர் கிளிநொச்சி மாவட்டம் தனியாகவும் முல்லைத்தீவு மாவட்டம் தனியாகவும் நியமிக்கப்பட்ட பின்னர் கிளிநொச்சிக் காரியாதிகாரியின் பிரிவில் இருந்த துணுக்காய்ப்பிரதேசம், கொக்காவில் பழைய முறிகண்டி என்பன முல்லைத்தீவு மாவட்டத்துடன் சேர்க்கப்பட்டன.

உருத்திரபுரம் கிராமம் ஆரம்பத்தில் சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் பிரிவின் கீழ் இருந்தது. சாவகச்சேரித்தொகுதி வடக்கே நாவற்குழிக்கடலேரியையும் கிழக்கே முல்லைத்தீவு பிரதேசத்தையும் தெற்கே மன்னார் வவுனியா பிரதேசங்களையும் மேற்கே கடலையும் எல்லையாகக் கொண்டிருந்தது.

**பாடசாலைகள்**

ஆரம்பத்தில் உருத்திரபுரத்தில் மகாவித்தியாலயம் மாத்திரம் இருந்தது. இப் பாடசாலைதான் கிளிநொச்சியில் உள்ள உயர்தர வகுப்புக்களைக் கொண்ட விஞ்ஞானகூடம், விவசாயகூடம், விளையாட்டிடம் அமைந்த ஒரே ஒரு பாடசாலை. இது போன்ற ஒரு பாடசாலை பளையிலும் அமைக்கப்பட்டது. அப்பொழுது ஒன்பதாம் வகுப்பு வரையுள்ள பாடசாலைகள் தட்டுவன் கொட்டி, முரசுமோட்டை, கண்டாவளை, கலவெட்டித்திடல் ஆகிய இடங்களில் இருந்தன. எனினும் இப்பாடசாலைகளில் ஒன்றிரண்டு மாணவர்களே மேல்வகுப்புகளிற் கற்றனர். உருத்திரபுரத்திற் பிற்காலத்தில் 8ம் வாய்க்காலிற் பத்திமா பாடசாலையும் சிவநகரில் அரசினர் பாடசாலையும் புதுமுறிப்பில் அரசினர் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்ப காலத்தில் மன்னார் வித்தியாதரிசியின் கீழும் அதன்பின் சாவகச்சேரி வித்தியாதரிசியின் கீழும் அதன்பின் கிளிநொச்சி வித்தியாதரிசியின் கீழும் உருத்திரபுர மகாவித்தியாலயம் செயற்பட்டுவந்தது.

**பிரயாணமும் பாதைகளும்**

உருத்திரபுரம் குடியேற்றத்திட்டகாலத்தில் கண்டிவீதி, முல்லைத்தீவு வீதியின் ஒரு பகுதி தவிர ஏனைய வீதிகள் அனைத்தும் கிறவல் வீதிகளாகவே காணப்பட்டன. பெரும்பாலான வீதிகள் இரணைமடுக்குள வாய்க்கால்கள் வெட்டப்பட்டபோது அதில் இருந்து எடுக்கப்பட்ட மண் போடப்பட்டு, அதன்மேல் கிறவல் போடப்பட்டிருந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வரும் மக்கள் ஏதாவது வாகனத்தில் பரந்தன் சந்தியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தடைந்து சாவகச்சேரியிலிருந்து உருத்திரபுரம் வரும் கொடிகாமம் செல்லையா என்பவருக்குச் சொந்தமான தட்டிவானில் ஏறிக் குஞ்சுப்பரந்தன் வந்து பொறிக்கடவை வழியாக உருத்திரபுரத்தை வந்தடைய வேண்டும். இந்த வான் தினமும் காலை 9 மணிக்குச் சாவகச்சேரியிலிருந்து புறப்பட்டு 11 மணிக்குப் பரந்தனை வந்தடையும். அங்குள்ள தேனீர்க்கடையிற் தேனீர் குடிப்பதற்காக அரைமணி நேரம் நிற்கும். காலை கொழும்பு செல்லும் புகையிரதத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து வருவோர் இறங்கிநிற்பர். இவர்களையும் ஏற்றிக்கொண்டு பரந்தன் பூநகரி வீதிவழியாகக் குஞ்சுப்பரந்தன் பொறிக்கடை அம்மன் வீதி வழியாக மதியம் 12 மணிக்கு உருத்திரபுரம் கூழாவடியை வந்தடையும். அங்கு ஓரிரு கடைகள் மாத்திரம் இருந்தன. இந்த வான் மாணிக்கப்பிள்ளையார் கோயில் வரை வந்து வந்த வழியே திரும்பிச்சென்று கூழாவடியில் நின்று மறுபடியும் இரண்டு மணிக்குப் புறப்பட்டுச் சாவகச்சேரி செல்லும். மாணிக்கப்பிள்ளையார் கோயிலுக்கப்பால் மக்கள் நடமாட்டமற்ற காட்டுப்பகுதியாய் இருந்ததால் வான் அப்பாற் செல்வதில்லை.

பரந்தனுக்கும் பொறிக்கடவை அம்மன் கோயிலுக்கும் இடையில் இரு தாம்போதிகள் இருந்ததால் கடும்மழைக்காலத்தில் வான் முதலாவது தாம்போதியுடன் திரும்பிச் சென்றுவிடும். உருத்திரபுரத்திலே இரு தாம்போதிகள் உண்டு. இந்த வானைத் தவறவிட்டோர் அனைவரும் நடந்தே வரவேண்டும். நடந்து வருவோரும் கூட்டமாக ஒன்று சேர்ந்தே வரவேண்டும் காரணம் காட்டுப்பாதை கள்வர் பயம். யாழ்ப்பாணத்திலிருந்து இரவுப்புகையிரதத்தில் வருபவர்கள் நடந்தே வருவர். சிலவேளை குஞ்சுப்பரந்தன் பாடசாலையில் இரவு தங்கி அடுத்தநாட் காலை வருவதும் உண்டு.

1952ல் எட்டாம் வாய்க்காற் குடியேற்றத்திட்டம் கொடுத்தபின் உருத்திரபுரம் ரெயிலர் வீதியான கரடிப்போக்கு உருத்திரபுரம் வீதி சிறிதுசிறிதாகப் பாவனைக்கு வரத்தொடங்கியது. 55ம் ஆண்டுக்கு பின் சிறிய வாகனங்கள் ஓடத்தொடங்கின. அதன்பின்னர் படிப்படியாக பஸ் சேவை வளர்ச்சியடைந்து காலை 4 மணிக்கு உருத்திரபுரம் சிவன்கோயிலில் இருந்து புங்குடுதீவு குறிகாட்டுவான் துறைமுகம் வரை ஒரு பஸ் ஓடியது. இதன்பின் பிரயாணக்கஷ்டம் இருக்கவில்லை. காலப்போக்கில் ஒவ்வொரு வீட்டிலும் ஒன்றுக்கு மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகளும், மோட்டார் சைக்கிள்களும் இருந்தன. உருத்திரபுரத்தைச் சேர்ந்த தனியாரும் சிற்றூர்திகள் மூலம் போக்குவரத்துச்சேவையை நடத்தினர். சிறிய கார்களும் சிலர் வைத்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தியவசதி

ஆரம்பத்தில் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து கிழமையில் இரு தடவைகள் ஒரு வைத்திய அதிகாரி வரும் ஒழுங்கில் நடமாடும் வைத்தியசாலை ஒன்று இருந்தது. கடும் சுகவீனமுற்றவர்கள் கிளிநொச்சி வைத்தியசாலை சென்றே வைத்தியம் செய்விக்கவேண்டும். 1957ம் ஆண்டளவிற் கரைச்சிக் கிராமசபை ஒரு மகப்பேற்று நிலையத்தைக் கட்டிக் கிளிநொச்சி வைத்தியசாலையிடம் ஒப்படைத்தது. அதன் அருகே மருந்தகம் ஒன்றை அரசினர் அமைத்தனர். வைத்தியருக்கும் தாதியர் தங்குவதற்கும் இரு விடுதிகள் அமைக்கப்பட்டன. மருந்தின் பாதுகாப்புக்கருதி மருந்துக் கலவையாளர் மருந்தகத்திலேயே தங்கவைக்கப்பட்டார். மகப்பேற்று நிலையத்துக்கும் உள்ளூர்த்தாதிக்குமாக ஒருவரே நியமிக்கப்பட்டதால் ஒருவரே இரு வேலைகளையும் செய்யவேண்டியதாயிற்று. ஆரம்பத்தில் மருந்துக் கலவையாளரும் மருத்துவத்தாதியும் சிங்கள இனத்தவர்களாகவே இருந்தனர். எனினும் அவர்களுக்கத் தமிழும் ஓரளவு தெரிந்ததால் மக்களிடையே பிரச்சினை ஏற்படவில்லை.

மலேரியாக் காய்ச்சலைத் தடை செய்வதற்காகக் கிழமை தோறும் கிருமிநாசினி எல்லா வீடுகளுக்கும் தெளிக்கப்பட்டது. கிணற்று நீருக்கு "குளோரினும்" போடப்பட்டது. அத்துடன் இரத்தப்பரிசோதனை செய்து நோய் காணப்பட்டவர்களுக்கு மருந்தும் கொடுக்கப்பட்டது. பின்னர் மகப்பேற்று நிலையத்துக்கு தனியான மருத்துவமாது நியமிக்கப்பட்டதுடன் தொலைபேசி இணைப்பும் செய்து கொடுக்கப்பட்டதுடன் கடுமையான நோயாளிகளை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லக் கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து அம்புலன்ஸ் வண்டியை அழைக்க இத் தொலைபேசி உதவியாய் இருந்தது. மருந்துக் கலவையாளர் தங்கியிருந்த மருந்தகத்தில் வைத்தியர் தங்கியிருக்க வசதி செய்து கொடுக்கப்பட்டது. 1996ல் உருத்திரபுரமக்கள் அகதிகளாக உருத்திரபுரத்திலிருந்து பிற இடங்களுக்கு இடம்பெயர்ந்ததால் உருத்திரபுர மருந்தகமும் இடம்பெயர்ந்தது. 1999ல் மீளக்குடியமர வந்தபோது மருந்தகமும் மகப்பேற்று நிலையமும் கிலமடைந்து காணப்பட்டது. பின்னர் அவை திருத்தப்பட்டதுடன் புதிய கட்டிடமொன்றும் கட்டப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தன.

## ஆலயங்கள்

உருத்திரபுரத்தின் புராதன ஆலயமான சிவாலயம் அழிக்கப்பட்டுக் காணப்பட்டது. உருத்திரபுரம் மாணிக்கப்பிள்ளையார் கோயிலிற் பூசகராய் இருந்த வேலாயுதசாமி, தான் கனவிலே உருத்திரபுரம் சிவாலயத்தைக்கண்டதாகக் கூறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ள சில வாலிபர்களுடன் சேர்ந்து கோயில் கிலமடைந்திருந்த இடத்தை நோக்கிக் காட்டுப்பாதையூடாக நான்கு மணிநேரம் நடந்து சென்று கருங்கற்கள் காணப்பட்ட இடத்தைக்கண்டு இதுதான் சிவாலயமென்று அங்குள்ள பாலமரத்தடியில் உள்ள கல் ஒன்றுக்குப் பூசை செய்து திரும்பி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிலரை அழைத்துச்சென்று கொட்டிலமைத்து வழிபாடு செய்து வந்தார். இதையறிந்த அப்பொழுது வீரகேசரி நிருபராக இருந்த அகில இலங்கைக் காந்திசேவா சங்க நிர்வாகி சி.க.வேலாயுதபிள்ளை அவர்கள் இதனை வீரகேசரியிற் பிரசுரம் செய்தார். இதைக்கண்ட யோகர் சுவாமியவர்களின் அடியார்கள் வடிவேல் சுவாமியவர்களையும் சேர்த்து 1955ஆம் ஆண்டிற் கோயிலைக்கட்டிக் கும்பாபிசேகம் செய்து நித்திய நைமித்திய பூசைகளை நடைமுறைப்படுத்திவந்தனர். குடியேற்றம் ஆரம்பமான 1949ஆம் ஆண்டிலேயே உருத்திரபுரம் குடியேற்றத்திட்டத்தின் கிழக்கு எல்லையிலேயே குடியேற்றத்திட்டத்தைப் பார்வையிடும் வகையில் வாயில் அமைத்து மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் உருவாக்கப்பட்டது. பொறிக்கடவை அம்மன் ஆலயம் பழையகாலம் தொட்டே இயங்கி வருகின்றது. பாலையடியிலும் எட்டாம் வாய்க்கால் சந்தி ஆலமரத்தின் கீழும் உள்ள விநாயகர் ஆலயங்கள் அப்பாதை வழியாகச் செல்லும் விவசாயிகளாற் பொங்கல் பூசைகள் செய்து பரிபாலிக்கப்படுகின்றன. நாளடைவில் கட்டிடங்கள் கட்டப்பட்டு பூசைகள் செய்யப்பட்டு வருகின்றன. இத்துடன் எள்ளுக்காட்டில் ஒரு முருகன் கோயிலும் கட்டிக் கும்பாபிசேகம் செய்து திருவிழாவும் செய்யப்படுகின்றது. புதுமுறிப்பு அலைகரையில் கற்பகவிநாயகர் ஆலயம் கட்டப்பட்டு வழிபாடு செய்யப்படுகின்றது. இத்துடன் உருத்திரபுரம் வயல் நடுவே நரசிங்க வைரவர் ஆலயமும் உருத்திரபுரம் உள்வீதிகளிலும் பல சிறு ஆலயங்கள் உண்டாக்கி வழிபட்டு வருகின்றனர். அத்துடன் கிறிஸ்தவ ஆலயமாகப் பத்திமா ஆலயமும் சிவநகரிலும் எட்டாம் வாய்க்காற் சந்தியிலும் இரு குகைக்கோயில்களும் உருத்திரபுரத்தில் உள்ளன.

**பொது ஸ்தாபனங்கள்**

பொது ஸ்தாபனங்கள் அதிகமுள்ள கிராமம் என்பதில் இங்குள்ள அனைவரும் பெருமை கொள்ள வேண்டும். காந்தீயவாதியான திரு.சி.க.வேலாயுதபிள்ளையால் உருவாக்கப்பட்ட அகில இலங்கைக் காந்தீய சேவா சங்கம் உருத்திரபுரத்தில் 1952 ஆம் ஆண்டுமுதல் ஆரம்பமாகிப் பல்வேறு அபிவிருத்தி வேலைகளைச் செய்தது. அக்காலத்திலே தாய் தந்தையற்ற, வசதியற்ற சிறுவர்களைக் காந்தி நிலையம் என்ற பெயருடன் நடத்திப் பல இளைஞர்களுக்குத் தொழிற்கல்வியையும்

பாடசாலைக்கல்வியையும் பயிற்றுவித்து வழிகாட்டி வந்தது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பொறுப்பேற்கும் வரை அவரே நடத்தி வந்தார்.

சர்வோதய இயக்கத்தடன் இணைந்து மாற்றுத்திட்டத்தின் அடிப்படையில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஒன்று கூடி இலங்கையின் பல்வேறு கிராமங்களிலும் சிரமதானப்பணியை மேற்கொண்டார். இதில் முதலாவது வடபகுதிச் சிரமதானம் உருத்திரபுர மகாவித்தியாலய வீதிச் சிரமதானமாகும். இது ஒரு கிழமை நடைபெற்றது. காந்திசேவா சங்கத் தலைமைப் பணிமனை அமைக்கவும் பல மாணவர்களை வைத்துப் பராமரிக்கவும் விவசாயப்பயிற்சி, கைத்தறிப்பயிற்சி ஆகியன நடத்தவும் உருத்திரபுரத்தில் அரசாங்கத்தின் நிலம் பெறப்பட்டது. தொண்டைமான் அவர்கள் மந்திரியாய் இருந்த பொழுது தும்புக் கைத்தொழிற் கட்டிடம் கொடுக்கப்பட்டது.

இச் சங்கம் பெண்களுக்கெனத் தர்மபுரத்திற் கஸ்தூரிபாய் இல்லத்தையும், பப்படத் தொழிற்சாலையையும், நெசவுக் கைத்தறி நிலையத்தையும் அமைத்தது.

கோணாவிலிற் காந்திகிராமம் என்ற பெயரில் 105 ஏக்கர் நிலத்தைப் பெற்றுத் தென்னந்தோட்டத்தையும் பயிர்ச்செய்கையையும் மந்தை வளர்ப்பையும் 3 ஏக்கர் கொண்ட வீட்டுத்திட்டமொன்றையும் மர வேலைத் தொழிற்சாலையையும் அமைத்தார்.

'அப்பு ' என்று அனைவராலும் அழைக்கப்பட்ட உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் திரு.வே.கதிரவேலு அவர்கள் இந்தியா சென்று 'வாரதாக் ' கல்வி பயின்று குருகுலத்தை 1964ல் ஆரம்பித்து வளர்ச்சி பெறச் செய்தார். இங்கு ஆதரவற்ற ஆண் குழந்தைகளையும் பெண்குழந்தைகளையும் அவரும் மனைவியும் பராமரித்து வந்தனர். அவர்களுடன் கண் தெரியாதவர்கள், மனநோயாளர், அங்கவீனர் எனப்பலரையும் பராமரித்து வந்தார். அங்கு வளர்க்கப்பட்ட குழந்தைகள் சுயதொழில் செய்து தம் வாழ்க்கையை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து அதன் வெற்றி கண்டு மன நிம்மதியும் அடைந்தார்.

கைத்தறி செய்வதற்கான பல தறிகளைக் கொண்ட நெசவாலை ஒன்றை அமைத்து அதில் பல மாணவர்களை ஈடுபடுத்தி இதன்மூலம் தமது மாணவர்களுக்குத் தேவையான படுக்கை விரிப்புக்கள், போர்வைகள், துவாய்கள் என்பவற்றைப் பெற முடிந்தது. மிகுதியை விற்பனை செய்வதன் மூலம் தம் தேவைக்கான ஒரு பகுதிப் பணத்தைப் பெற முடிந்தது.

அச்சுக்கூடம் ஒன்றை ஏற்படுத்தி அதில் மாணவர்களுக்குப் பயிற்சியளித்ததுடன் குருகுலத்தின் செலவின் பெரும்பகுதியை இதன் மூலம்

ஈடுசெய்ய முடிந்தது. ஓட்டுத்தொழிலகம் ஒன்றை உருவாக்கி அதிலும் பல மாணவர்களை ஈடுபடுத்தி சுயதொழிலுக்கு வாய்ப்பளித்தார். இந்நிலையம் தமிழீழ யுத்தம் காரணமாக இதற்கான 5மூலப்பொருட்கள் கிடையாமையினால் இதற்கான கட்டிடங்களும் உபகரணங்களும் உபயோகமற்ற நிலையில் உள்ளது.

தொழிலாளர் தம் பிள்ளைகளைத் தாம் வேலைக்குப் போகும் போது அவர்களைப் பாதுகாப்பதற்காகச் சிறுவர் பாதுகாப்பகம் ஒன்றை அமைத்து நெறிப்படுத்தினர். விவசாயப் பண்ணை ஒன்றை உருவாக்கி நெற்செய்யையையும் தோட்டச்செய்கை மூலம் மிளகாய், கத்தரி போன்ற உப உணவுப் பயிர்களையும் பழ மரச்செய்கையையும் உருவாக்க 35 ஏக்கர் நிலத்தை உபயோகப்படுத்தினார். மிளகாய்ச்செய்கை பெரு வருமானத்தைச் சேர்த்துக் கொடுத்ததுடன் சுயதேவைப் பூர்த்தியையும் ஏற்படுத்தியது. இத்துடன் பண்ணைச் செய்கையும் நடைபெற்றதால் தமக்குத் தேவையான பால், தயிர் போன்றவற்றைப் பெறமுடிந்தது. ஐந்து ஏக்கர் தென்னைச்செய்கையும் இடம் பெற்றது. கிராஞ்சியிலும் 25 ஏக்கர் நிலம் இருந்தது. வெதுப்பகம் ஒன்றை உருவாக்கி அதிலும் மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப்பட்டது. ஒருவேளை உணவையும் இதன் மூலம் ஈடுசெய்ய முடிந்தது. மிகுதியை வெளியே விற்பனை செய்ததன் மூலம் ஒரு தொகைப்பணத்தையும் பெறமுடிந்தது.

1988ல் இந்தியப் படையினரின் யாழ்ப்பாணம் இராசவீதித் துப்பாக்கிச் சூட்டில் இவரும் இவரது மனைவியும் இங்கிலாந்திலிருந்து வந்த இவரது மகளும் மருமகனும் அவரது உறவினர் ஒருவரும் மரணமாயினர். மகளின் ஒரு வயதுக் குழந்தை மாத்திரம் உயிர் தப்பியது. இதன் பின்னரும் 1994ஆம் ஆண்டு வரை குருகுல நிர்வாகம் அதனை நிர்வகித்தது. பின்னர் புனர்வாழ்வுக்கழகம் அதனைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

எட்டாம் வாய்க்காலில் 'லோங்ஸ்' ஸ்தாபனம் என்ற கிறிஸ்தவப் பாதிரிமாரால் ஆண்களுக்கான ஆதரவு நிலையம் ஆரம்பிக்கப்பட்டு இன்றும் நடைபெற்று வருகின்றது. இங்கும் பல்வேறு வகையான தொழிற்பயிற்சிகள் நடத்தப்படுகின்றன. பத்திமா மாணவிகள் விடுதி என்ற பெயரில் உருத்திரபுரத்திற் கன்னியாஸ்திரிகளால் நடத்தப்படும் ஆதரவற்றோர் பாதுகாப்பு நிலையம் ஒன்றும் உள்ளது. இங்கு பல இடங்களிலிருந்தும் கிறிஸ்தவப் பெண்பிள்ளைகள் வந்து பாதுகாப்பாக இருந்து கல்வி கற்கின்றனர்.

மகாதேவா ஆச்சிரமம் என்ற பெயரில் சைவ மதத்தைப் போதிக்கும் வகையிலும் பண்ணொடு பாடல் போன்ற இசை நிகழ்ச்சிகளை நடத்தவும் அறநெறிப் பாடசாலை நடத்தவும் உருத்திரபுரம் மகாவித்தியாலய அதிபர் விடுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவேல் சுவாமிகள் தலைமையில் மாதாஜி பரமானந்தவல்லி, திரு.த.நல்லதம்பி ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டு இப் பகுதி மாணவர்களுக்கும் பெரியோர்களுக்கும் சமய சம்பந்தமான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வந்தன. பாடசாலை விடுதி வசதியற்றிருந்ததால் உருத்திரபுரம் வைத்தியர் விடுதியிற் சில காலம் இவ்வாச்சிரமம் நடைபெற்றுப் பின்னர் ஜெயந்திநகருக்கு மாற்றப்பட்டு பல கட்டிட வசதிகளுடன் தற்பொழுதும் நடைபெற்று வருகின்றது. வடிவேல் சுவாமிகள் தமக்குப் பின் ஆச்சிரமத்தின் பொறுப்பாளராகக் கணேசானந்த மகாதேவ சுவாமிகளை நியமனம் செய்தார். இப்பொழுது ஆச்சிரமம் அவரது மேற்பார்வையில் நடைபெறுகின்றது. வறிய சைவ மாணவர்களுக்கான விடுதியை புதுமுறிப்பிலுள்ள தமது சொந்தக் காணியிலும் பெண்களுக்கான விடுதியை ஜெயந்திநகரிலும் நடத்தி வருகின்றனர்.

**விளையாட்டுக் கழகங்கள்**

உருத்திரபுரத்தில் 1952ம் ஆண்டு அங்குள்ள வாலிபர்களைக் கொண்டு வாலிபர் சங்கமொன்றை உருவாக்கி விளையாட்டுடன் தலைவர் திரு.ஐயாத்துரை அவர்களால் அன்பளிக்கப்பட்ட நிலத்தில் ஒரு வாசிகசாலையை உருவாக்கி நடைமுறைப்படுத்தினார்கள். அச்சங்கத்தக்கென அரை ஏக்கர் நிலம் பெற்று அதில் வாசிகசாலையும் விளையாட்டிடமும் உருவாக்கப்பட்டது. உருத்திரபுரம் மகாவித்தியாலய ஆசிரியர்களும் உயர்தரவகுப்பு மாணவர்களும் இவ்விளையாட்டு இடத்தில் பங்கு பற்றினர். 1957ல் உருத்திரபுரம் மத்தியில் உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் என்ற பெயருடன் வருடந்தோறும் விளையாட்டுப் போட்டிகளும், வெளியிட விளையாட்டுக் கழகங்களுடன் போட்டியிட்டு வெற்றியும் பெற்று உருத்திரபுரத்திற்குப் பெருமை தேடிக் கொடுத்தனர்.

சில நாட்களின் பின் முன்னர் வாசிகசாலையும் விளையாட்டிடமும் இருந்த நிலத்துக்கண்மையில் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழகம் என்ற பெயரில் ஒரு கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக உருத்திரபுரம் கிழக்கிலுள்ளவர்கள் சந்திரோதயா விளையாட்டக்கழகம் என்ற பெயரில் ஒரு விளையாட்டுக்கழகத்தை உருவாக்கினர். இம்மூன்று விளையாட்டுக்கழகங்களும் விளையாட்டுடன் மாத்திரம் நின்றுவிடாமல் வாசிகசாலைகளையும் சனசமூக நிலையங்களையும் உருவாக்கிச் சிறந்தசேவை புரிந்து வருகின்றன. 1996ல் ஏற்பட்ட இடம்பெயர்வின் பின்னரும் கூட 1999 இறுதியில் சிறிது சிறிதாக மக்கள் மீளக் குடியமர்ந்து மேற்படி செயற்பாடுகளை நடத்தி வருவது பாராட்டுதற்குரியது. கலையை வளர்க்கும் நோக்கத்துடன் தொழிலாளர்கள் வேலை செய்து ஓய்வாய் இருக்கும் போது அவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்விக்கவும், செந்தமிழ்க்கலாமன்றம் என்ற பெயரில் ஒரு கலாமன்றத்தை ஆரம்பித்து மாதந்தோறும் கலைநிகழ்ச்சிகள் நடத்தி வந்தனர். முருகேசுகுலசிங்கம் அவர்களும் தற்போது கனடாவில் வசிக்கும் கலைஞர் கிருபா அவர்களும் முக்கிய பங்கு வகித்தனர்.

தபாலகம்

ஒரு நாட்டிலுள்ள மக்கள் தம் உறவினருடனோ மற்றவர்களுடனோ தொடர்பு கொள்ளப் பல ஊடகங்கள் இருக்கின்றன. அவற்றிற் கடிதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. உருத்திரபுரம் குடியேற்றத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு சில நாட்களில் குடியேற்ற அதிபர் காரியாலயம் சென்று தமக்குக் கடிதம் வந்திருக்கின்றதா என்று பார்த்து எடுத்துச் செல்வர். இக்கடிதங்கள் பரந்தன் தபாலகத்திலிருந்து குஞ்சுப்பரந்தன் பகுதிக்கு விநியோகிக்கும் தபாற்சேவகர் கடிதங்களைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு இங்குள்ள கடிதங்களை எடுத்தச் செல்வர்.

சொற்ப நாட்களுக்குள் உருத்திரபுரம் உபதபால் அதிபராக மீசாலையைச் சேர்ந்த தருமலிங்கம் என்பவர் நியமிக்கப்பட்டார். ஆயினும் தபாலகம் கட்டப்படவில்லை. அக்கால நடைமுறை, யார் தபாலதிபராக நியமிக்கப்படுகிறாரோ அவரே தபாலகம் நடத்த வசதியான இடத்தைத் தெரிவு செய்ய வேண்டும். ஆனால் குடியேற்றத்திட்டங்களில் அரசாங்கமே அதற்கென ஒரு கட்டடத்தைக் கட்ட வேண்டும் உபதபால் அதிபர் தனியார் வீடொன்றில் அதற்கான இடத்தைப் பெற்றுக் கொண்டார். தபாற்சேவகர் ஒருவர் பரந்தன் தபாலகத்திலிருந்து குஞ்சுப்பரந்தன் தபாலகத்திற்குரிய தபாற்பையையும் உருத்திரபுரம் தபாலகத்துக்கான தபாற்பையையும் கொண்டு வருவர். வரும் வழியிலுள்ள குஞ்சுப்பரந்தன் தபாலகத்தில் அத்தபாலகத்தக்குரிய பையைக் கொடுத்துவிட்டு உருத்திரபுரத்துக்கான பையுடன் வருவர். இப்பையிலுள்ள கடிதங்களை ஒழுங்கு செய்து கடிதங்களை உரியவர்களிடம் கொடுத்துவிட்டுத் தபாலகத்திலேயே தங்கி நின்று பிற்பகல் இங்குள்ள தபாற்பெட்டிகளில் உள்ள தபால்களை எடுத்து வந்து தபாற்பையிற் கட்டித் தபாலக முத்திரையிட்டு அதை எடுத்துக் கொண்டு குஞ்சுப்பரந்தன் தபாலகத்திலுள்ள தபாற்பையையும் எடுத்துக் கொண்டு பரந்தன் தபாலகம் செல்வார். தபாலகம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரையும் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த ஆறுநாட்களும் தொழிற்படும். தபால் விநியோகம் திங்கள் முதல் வெள்ளி வரை ஐந்து நாள் மாத்திரம் நடைபெறும். இரண்டாவது குடியேற்றத்திட்ட வீடுகள் கட்டப்பட்ட போது உபதபாலகமும் பொதுஸ்தாபனங்கள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் கட்டப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் பின் இரு தபாற்சேவகர்கள் நியமிக்கப்பட்டு அவர்களே கடிதங்களை விநியோகித்தனர். கடிதங்களை பரந்தனிலிருந்து கொண்டு வருவதும் 'றண்ணர் ' என்ற ஒருவராற் செய்யப்படும்.

காலம் செல்லச் செல்லத் தபாலூழியரின் தொகை கூடியதுடன் தந்தி விநியோகத்துக்கும் ஊழியர்களின் நியமனம் பெற்றனர். அத்துடன் சிவநகரிலும் ஒரு உபதபாலகம் ஆக்கப்பட்டது.

கூட்டுறவு

ஆரம்பத்தில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் நெல்லினைக் கொள்வனவு செய்யுமுகமாக உற்பத்திப்பொருட் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தை உருவாக்கி அதன் மூலம் விவசாயிகள் நன்மையடைந்தனர். அத்துடன் சில்லறைக் கடையினையும் உருவாக்கினர். பின்னர் இச்சங்கம் பலநோக்குச்சங்கமென மாற்றப்பட்டு கணேசபுரத்தில் உள்ளவர்களையும் இணைத்து ஒரே சங்கமாக உருவாக்கினர். இதன் தலைமையகம் உருத்திரபுரத்தில் அமைந்திருந்தது. இச்சங்கம் மூன்று சில்லறைக் கடைகளையும் உருவாக்கியது. ஒன்று கணேசபுரத்திலும் மற்றையது சங்கத்தலைமையகத்திலும் மற்றையது கூழாவடியிலும் அமைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் புதிய நடைமுறைப்படி கிளிநொச்சிப் பட்டினத்திலுள்ள சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் இணைத்த கரைச்சி தெற்குப் பலநோக்குச் சங்கமென ஆக்கப்பட்டது. இச்சங்கம் தற்பொழுது மூன்றாகப் பிரிக்கப்பட்டு அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், கரைச்சி கிழக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமென அழைக்கப்படுகின்றது.

மக்களின் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு 1955ல் உருத்திரபுரத்தில் ஐக்கிய நாணய சங்கமொன்று உருவாக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து ஐந்துக்கும் மேற்பட்ட ஐக்கிய நாணய சங்கங்கள் உருவாக்கப்பட்ட போதும் அனைத்தும் மறைந்து விட்டன. அரசாங்கம் வீட்டுக்கடனை அறிமுகப்படுத்திக் கிராமங்கள் தோறும் சிக்கன கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கியது. இதனால் இருந்த ஐக்கிய நாணய சங்கங்களும் மேற்படி பெயரில் இயங்க வேண்டியதாயிற்று. சிகரற் புகையிலைச் செய்கையை ஊக்குவிக்குமுகமாக உருத்திரபுரத்திற் சிகரட் புகையிலைச் சங்கமொன்றை உருவாக்கியதுடன் அங்கு சிகரட் புகையிலை பதனிடும் மூன்று தொழிற்சாலைகளை அமைத்துப் பலருக்கு வேலை வாய்ப்பையும் வருமானத்தையும் ஈட்டிக்கொள்ள வழிசமைத்துக் கொடுக்கப்பட்டது. ஆயினும் சொற்ப காலத்தில் இதுவும் பலன் கொடுக்காமல் மறைந்துவிட்டது.

இளைஞர் சங்கங்களை உருவாக்கி இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு விவசாயக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிகளை அனைத்து அங்கத்தவர்களுக்கும் பெற்றுக் கொடுத்த செயலும் மறக்கமுடியாதது.

**அரசியல்**

உருத்திரபுர மக்கள் தம் தொழில் சார்ந்த முயற்சிகளில் ஈடுபட்டதுடன் அரசியலிலும் மிகுந்த அக்கறை காட்டினர். அரசியற் கட்சிக் கூட்டங்களில் உருத்திரபுரத்தைச் சேர்ந்த பலர் பேச்சாளர்களாகக் காணப்பட்டதுடன் உள்ளார் அரசியலிலும் பங்கு கொண்டனர். கரைச்சிக்கிராம சபையில் தலைவராகவும் உபதலைவராகவும் உறுப்பினராகவும் இருந்து உருத்திரபுரத்துக்குப் பெருமை சேர்த்தனர்.

**சுடலை**

ஆரம்பத்தில் உருத்திரபுர மக்களின் சுடலை சிவநகர் ஒற்றைப்பனையடி என்ற இடத்திலிருந்தது. எட்டாம் வாய்க்காலில் உள்ளவர்கள் கிளிநொச்சியிலுள்ள சுடலையையே பாவித்தனர்.

1957 ஆம் ஆண்டுக்குப்பின் புதுமுறிப்பிற் சுடலை தெரிவு செய்யப்பட்டுத் தொடர்ந்து அதையே உபயோகித்து வருகின்றனர். சிவநகரிலுள்ளோர் சிவநகரில் உள்ள காட்டில் நியமிக்கப்பட்ட சுடலையைப் பாவிக்கின்றனர். சிவநகரின் மேற்குப்பகுதியில் உள்ளோரே இதைப் பாவிக்கின்றனர். ஏனையோர் உருத்திரபுரம் சுடலையைப் பாவிக்கின்றனர்.

**உருத்திரபுரத்தில் கல்வி கற்று உயர்பதவி வகித்தோர்**

உருத்திரபுரத்திற் கல்வி கற்றோரில் பலர் பல இடங்களிலும் உயர்பதவிகளில் இருக்கின்றனர்.

திரு. அ. கணபதிப்பிள்ளை அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் புவியியல் விரிவுரையாளராக நீண்ட காலம் பணியாற்றி உள்ளார். யாழ் பல்கலைக்கழகத்திலும் பணியாற்றினார்.

அமரர் வே.நடேசபிள்ளை அவர்கள் அதியுயர் பதவியான உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரியாகக் கடமையாற்றினார்.

திரு.வே.ஐயம்பெருமாள் அவர்கள் இலங்கை வங்கியின் மாவட்ட அதிகாரியாகப் பணியாற்றியுள்ளார்.

திரு.க.விமலதாசன் அவர்கள் இளைஞர் சேவை அதிகாரியாக இருந்துள்ளார்.

திரு.மு.சண்முகராசா அவர்கள் கல்விப்பணிப்பாளராகக் கடமை ஆற்றியுள்ளார். திரு.க.கணேசு, திரு.க.மகேசன் ஆகியோர் நெற்சந்தைப்படுத்தும் அதிகாரியாகவும் உதவித்திட்டமிடல் அதிகாரியாகவும் இருந்துள்ளார்.

ஒருகாலத்திற் கரவெட்டியிலும், சாவகச்சேரியிலும் எந்த வீட்டுக் கதவைத் தட்டியும் ஆசிரியர் இருக்கிறாரோ என்ற கேட்டபின் 'ஆம் ' என்று பதில் வரும் எனக் கூறுவர். இன்று உருத்திரபுரத்திலும் இப்படியான பதிலைக் கேட்கமுடியும். இந்தளவுக்குக் கல்வியாளர்கள் அதிகமுள்ள கிராமம் உருத்திரபுரமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வைத்தியர்கள் பொறியியலாளர்கள் பலரைக் கொண்ட கிராமமாக வளர்ச்சியடைந்து வருகின்றது.

இத்துணை சிறப்புமிக்க உருத்திரபுரம் 1996ஆம் ஆண்டு இடம்பெற்ற இன யுத்தம் காரணமாக உள்ளூரிலேயே இடம்பெயரவேண்டியேற்பட்டது. இவர்கள் மீள்குடியேறி 1999ம் ஆண்டு வந்த போது உடைந்த வீடுகளையும் காடடர்ந்த வீதிகளையுமே காணமுடிந்தது.

திடீரென இடம்பெயரவேண்டியேற்பட்டதாற் தமது பாவனைப் பொருட்களையோ வேறு எந்தப் பொருட்களையுமோ எடுத்துச் செல்லாது முக்கியமானதும் தூக்கிச் செல்லக் கூடியவற்றையுமே எடுத்துச் சென்றனர். பின்னர் உடமைகளைப் பார்க்கவும் எடுத்துச் செல்லவும் வந்தவர்கள் அரச படையினரின் துவக்குச் சூட்டுக்கு இலக்காகி மரணமாயிர். இதைச் சாட்டாக வைத்து வீடுகளிலுள்ள ஓடுகள், மராங்கள், கதவுகள், யன்னல்கள் போன்ற பெறுமதிமிக்க பொருட்கள் அனைத்தும் களவாடப்பட்டன. எனவே கிளிநொச்சி மீட்கப்பட்ட பின் உருத்திரபுரம் வந்தோர் தம் வீட்டு எல்லைகளையே காணமுடியாத வகையிற் காடுமண்டி வீதிகளனைத்தும் மறைவிடமாகக் காட்சியளித்தன. மக்கள் இடம்பெயர்ந்த போது அவர்களது பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள் இடம்பெயரவேண்டி ஏற்பட்டது.

இது நன்கு சீர் பெற முன்பு மறுபடியும் 2007ல் ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் மக்களை ஓடஓடக் கலைத்து முள்ளிவாய்க்காலிற் பல உயிர்களைக் காவு கொண்டு பல உயிர்களை அங்கங்கள் இழக்கச்செய்து கம்பி வேலியுள் அகதிகளாக அடைத்து வைத்து வெறுங்கையுடன் உருத்திரபுரம் அனுப்பி வைத்தனர். இவர்கள் மறுபடியும் தம்மை நிலைப்படுத்த எத்தனை ஆண்டுகள் செல்லுமோ தெரியவில்லை.

**திரு.கா.நாகலிங்கம்**
(முன்னைநாள் அதிபர்)
இல :111.D-10,
உருத்திரபுரம்.

## சிந்திக்க சில வரிகள்....

முயற்சிதான்
வெற்றியின்
முதற்படி அதை அடைய
நீ முன்னூறுமுறை
தோற்றாலும்
முயற்சியை இழக்காதே.

குறிக்கோள் இல்லாத வாழ்க்கை
நேர்மை இல்லாத வருமானம்,
ஒழுக்கம் இல்லாத கல்வி ,
தூய்மை இல்லாத பக்தி,
இவை அனைத்தும் பயன்
விளைவிப்பதில்லை.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஈழத்திருநாட்டின் அறிவுசார் கல்விமான்களையும் புத்திஜீவிகளையும் உருவாக்கிய முக்கிய பங்கு நெடுந்தீவு மண்ணுக்கு உண்டு. அம்மண்ணில் பூத்த தவப்புதல்வன் இளம்பிராயத்திலேயே ஆசிரியர் பணியைச் செய்தவர் ஆசான் நாகலிங்கம் அதிபர் அவர்கள். அந்த மண்ணுக்கு மட்டுமல்ல எமது உருத்திரபுரம் மண்ணுக்கும் பெருமையை சேர்த்தவர்.**




கிளி / மாவட்டத்தில் பழமையும் பெருமையும் வாய்ந்த பகுதிகளில் நன்றாக விளங்குவது. உருத்திரபுரம் சைவ/ கிறிஸ்தவ ஆலயங்கள், பாடசாலைகள் , நன்னீர் கிணறுகள் , விளை நிலங்கள் என்பன எமது கிராமத்தினை அழகுபடுத்துகின்றன.

இக்கிராமத்தில் மேலும் சிறந்த விளங்க எமக்கு கிடைத்த வரப்பிரசாதம் எமது ஆசான் அவர்கள். இக்கிராமத்தின் கல்வி , சமயம் , தமிழ்மொழி, சமூக வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். நல்ல தந்தையாகவும், ஆசிரியராக, அதிபராக, தலைவராக, நீதி, நேர்மை நடுநிலமையுடன் அனைவரையும் வழிநடத்தியவர்.

"தோன்றிற்"புகழோடு தோன்றுக என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து வருபவர். பார்ப்பதற்கு எளிமையாகவும், பழகுவதற்கு இனிமையாகவும், சூடான வார்த்தைகளையோ, கோப வார்த்தைகளையோ பேசாதவர். குரலை உயர்த்தி பேசியதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடையாது. வெள்ளை நிறம் , வெள்ளைக் கேசம் , வெள்ளை உடைகள், வெள்ளை உள்ளம் இவர்தான் எமது ஆசான் திரு.கா. நாகலிங்கம் அதிபர். அவர்களின் விம்பம் கண்களை மூடி அவரை நினைத்தால் இவ் விம்பம் தோன்றும்.

கள்ளமில்லா சிரிப்பு அன்பான வார்த்தை பெரும் தன்மையில்லா குணம் எவரையும் ஊக்குவிக்கும் தன்மை அவரின் உள்ளம் முகத்தில் தெரியும். அவர் பேசிக்கொண்டு இருக்கும் போது அதை எவ்வளவு நேரமும் கேட்டுக்கொண்டு இருக்கலாம்.

வெளிநாட்டில் வாழக்கூடிய நிலையிருந் தும் எமது மண்ணில் பற்றுக்காகவும் , சமூகத்தின் பற்றுக்காகவும் , எமது கிராமத்தின் வாழ்ந்து தொண்டாற்றிக் கொண்டு இருக்கின் றார். உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதருக் கும் தானும் வாழ்ந்து பிறரையும் வாழவைக்க வேண்டும் என்பதற்கு உதாரணம் எமது ஆசான் அவர்கள். அவர் வாழ்ந்த கிராமத்தில் நாமும் வாழ்கின்றோம் என்பதில் பெருமை அடைகின்றேன். யாராவது காணும் போது தம்பீ நீர் எந்த இடம் கிளிநொச்சியில் உருத்திர புரம் பகுதி அப்ப நாகலிங்கம் மாஸ்டரைத் தெரியுமா என்று பல ஆயிரம் பேர் என்னிடம் கேட்டுள் ளார்கள். அவ்வளவுக்கு ஓர் அடையாளமாக விளங்கும் உன்னத மனிதர். அவருக்கு பாராட்டு விழா நடாத்த எமது கிராமம் முன் வந்திருப்பது சாலாப்பொருத்த மானது. பாராட்டு விழாக்குழுவினருக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள் தங்களிடம் ஒரு கோரிக்கையை வைக்க விரும்புகின்றேன். எனது ஆசானின் பெயரில் ஒரு மண்டபத்திற்கு அல்லது வீதிக்கு அல்லது நூல் நிலையத்திற்கு பெயர் வைக்க வேண்டுமென விரும்பு கின்றேன்.

பாராட்டு விழாக்காணும் ஆசான் நீண்ட காலம் நீண்ட ஆயுளுடன் இனிதே வாழ வாழ்த்துவதுடன் தங்களிடமும் ஒரு வேண்டு கோல் வைக்க விரும்புகின்றேன். தாங்கள் பெற்ற ஆற்றல், அறிவு அனுபவங் களின் புத்தகமாக வெளியிட்டு எமது அடுத்த சந்ததி யினர் பயன்பெற உதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இன்னும் எழுத எனக்கு நிறைய நினை வுகள் உள்ளன. நேரம் போதாது, பக்கமும் போதாது தாங்களும், கோயில்கள், கூட்டுறவுச்சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், சன சமூக நிலையங்கள், பாடசாலை இந்துக்கல்லூரி, பெற்றோர்கள், மாணவர்கள் உங்கள் வீட்டாரும், உற்றாரும், என எல்லாவற்றையும் எழுத பக்கங்கள் போதாது. உங்கள் பணி மேலும் தொடர வாழ்த்தி வணாங்குகின்றேன்.

தாங்கள் மாணவர்
**துவார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதாஜீ தபோவனமும், சமாதி கோவிலும்

உருத்திரபுரம் பற்றிமா பாடசாலையின் கொத்தணி முறைபற்றி...





உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தில்....



இளைப்பாறும் போது கல்விப்பணிப்பாளர் கந்தசாமி தங்கப்பதக்கம் அணிகிறார்.



இந்துக்கல்லூரியில் அப்புஜீயின் அஞ்சலி நிகழ்வின் போது ...



பிரதம விருந்தினராக...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவால் நாட்டுயர்வு கண்ட பெரியார்



**நன்றே செய்திடவேண்டும் அதை இன்றே செய்திடவேண்டும் என்பதற்கமைய பிறர் நலம் பேணிவாழும் பண்புடமை கொண்டவர் திருவாளர் கா. நாகலிங்கம் அவர்கள் இவர் பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்தவ வானிலும் நனிசிறந்தனவே என்ற வாக்கிற்கமைய வாழ்ந்து கொண்டிருப்பவர் மட்டுமல்ல, பிறப்பிடமாய் இருப்பினும் வாழ்விடமாக இருப்பினும் சென்ற இடமாக இருப்பினும் எப்படியும் வாழலாம் என்பதை விடுத்து மனித விழுமியங்களை பேணி இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்ந்துகொண்டிருப்பவர்.**

வாட்டமுறா கூட்டுறவுப்பயிர் வளர்த்த
கூட்டுறவாளன் பல்லாண்டு கூறிடுமே.

இவர் யாழ் நகரின் வடபாலமைந்த சப்ததீவுகளில் ஒன்றானதும் சமுத்திரத்தில் பிரசித்திபெற்றதுமான பசுந்தீவென்னும் நெடுந்தீவில் பிறந்து வளர்ந்து கல்வி கற்று வரும் இளம்பராயத்திலேயே பொதுப்பணிகளிலும் கல்வி வளர்ச்சிக்கும் அயராது பாடுபட்டார். அக்காலங்களில் அந்திய காலச்சங்கங்கள் சகாய நிதிச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு அமைப்புக்களை உருவாக்கியும் உள்ளார். காலப்போக்கில் 1950தாம் ஆண்டுகளில் உருத்திரபுரம் குடியேற்றத்திட்டத்தில் குடியமர்ந்து வாழ்விடத்தை அமைத்துக்கொண்டார்.

அக்காலத்தில் காடாய்க் கிடந்த அக்கிராமம் களனியாக்கப்பட்டு மக்கள்குடியேற தொடங்கியதும் கல்வியே கருந்தனம் என முழுமூச்சுடன் செயற்பட்டு கல்விச் சாலைகளை நிறுவி கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டதுடன் ஆன்மீகத் துறையிலும் கிராம அபிவிருத்தித் துறையிலும் ஆரம்ப கர்த்தாவாகச் செயற்பட்டு என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதற்கு அமைய கிராமத்தின் நலன் உரிமைகளை பெறும் வகையில் முன்னின்று செயலாற்றினார். காடு நாடாகி நாடு வீடுகளாகி மக்கள் குடியேற்றம் அபிவிருத்திகளைத் தொடங்கியதன் விளைவாக கூட்டுறவின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை அதன் முக்கியத்துவம் என உணரப்பட்டமையால் உருத்திரபுரத்தில் கூட்டுறவு நிறுவனங்களை ஆரம்பிப்பதில் ஆரம்ப கர்த்தாவாக இருந்து செயற்பட்டார். அப்போது பண்டகசாலை கூட்டுறவு அமைப்பு நடைமுறையில் இருந்தது. அக்காலத்தில் கிளிநொச்சி யாழ் மாவட்டத்துடன் இருந்தமையால் யாழ் மாவட்டமாகவே கருதப்பட்டது. அந்த அடிப்படையில் தென் யாழ் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தை வியாபார முகவராகக் கொண்ட உருத்திரபுரம் கூட்டுறவுச் சங்கம் தனிச்சங்கமாக பதிவுபெற்றது. அப்போதைய சங்கத் தலைவராக திருவாளர் நாகலிங்கம் ஐயா அவர்களே தெரிவாகி சிறந்தமுறையில் செயற்பட்டதுடன் அங்கு கூட்டுறவுக்கான உதயம் உருவானது.

தலைவரின் வழிநடத்தலாலும் நிர்வாகத் தினரின் செயற்திறனாலும் அங்கத்தவர் களின் ஒத்துழைப்பாலும் சங்கம் துரித கதியில் பாரிய நிறுவனமாக உருவெடுத்ததுடன் நெல் கொள்வனவு சந்தைப்படுத்தல் மற்றும் நுகர்ச்சி விவசாய உள்ளீடுகள் விநியோகம் போன்றவற்றை தலைவர் தமது நேரடி மேற்பார்வையில் நடாத்தி வெற்றி கண்டதற்கமைய தேவையான ஆளணிகளை நியமிக்க வேண்டிய தேவை காணப்பட்டது.

" எதனை எவன் முடிப்பான் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல்"

என்ற பொய்யாமொழிக்கமைய தகுதியான பணித்தொகுதி நியமிக்கப்பட்டு தலைவரின் அயரா முயற்சியால் பாரிய கட்டடங்களும் பெருந்தொகை நிதித்தேட்டமும் உருவாக்கப்பட்டு அங்கத்துவ பொதுசன சேவை விரிவுப்படுத்தப்பட்டதுடன் மேலும் உருத்திரபுரம் பகுதியில் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒன்று பதிவுபெற்றது.

"எல்லோரும் இன்புற்றிருக்க வழி காண்பதே அன்றி வேறொன்றறியேன் பராபரமே" என்ற தாயுமானவர் வரிகளுக்கேற்ப எல்லா மக்களும் கூட்டுறவில் ஒன்றுபட வேண்டும். கூட்டு ஒத்துழைப்பின் மூலம் சமூக வளர்ச்சியை பெற முடியும் என்று அயராது பாடுபட்டு சமூக ஏற்றத்தாழ்வுகளுக்கு சாவு மணி அடித்து எல்லோரும் ஒருவருக்காகவும் ஒருவர் எல்லோருக்காகவும் உழைக்க வேண்டும் என்ற கூட்டுறவு தத்துவத்தை அடிமட்ட மக்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற நோக்குடன் முதன்முதலாக உருத்திரபுரத்தில் ஐக்கிய நாணய சங்கத்தை உருவாக்கி மிகவும் திறம்பட செயற்படுத்தினார். அவரின் செயற்திறனால் இன்றும் செயற்திறனுள்ள சங்கங்கள் உருத்திரபுரத்தில் இயங்கு கின்றன. இவர் ஓர் ஆசிரியராக இருந்தும் கூட்டுறவின்பால் இவரது நாட்டம் மேலோங்கி யிருந்தமை மறுக்க முடியாத ஒன்றாகும்.

விசேடமாக திருவாளர் நாகலிங்கம் ஐயா அவர்களில் எம்மால் காணக்கூடிய பண்பு என்னவெனில் சமூகத்திற்கு நன்மை பயக்கும் செயற்பாடாக இருக்குமாயின் அவரது சிந்தனைக்கு அது சரியெனபடுமாயின் எந்த வகையிலும் அதை அடைந்தே தீரும் செயற்திறனுக்கு அவரே உதாரணம் ஆகும். எந்த விடயத்தையும் நிதானமாகச் சிந்தித்து திறமையோடு செயற்படுவதுடன் பொறுமை யுடன் விட்டுக்கொடுக்கும் பண்பும் உடையவர் எனினும் சமூகத்திற்கோ, தனி நபருக்கோ அநீதி இளைக்கப்படுமென காண்பாராகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திடமாக எதிர்க்கும் சக்தி மிக்கவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. கூட்டுறவு சட்ட விதிகளை யும், பொதுச்சட்டங்களையும் நன்கு படித்து பரீட்சயமாக்கி வைத்திருக்கும் இவர் சம்பிரதாய நடவடிக்கைபோல் கூட்டுறவுச் சங்க நடவடிக்கைகளை நகர்த்திச் செல்லும் ஆற்றல் மிக்கவர். இவர் எல்லா நடவடிக்கைகளும் சட்டத்தின் அடிப்படையானதாகவே அமையும் இதை அனேகர் அறிந்திருப்பதில்லை. இவரது கூட்டுறவு வாழ்க்கையில் எத்தனையோ சட்ட வல்லுனர்களும், தடுமாறிப்போன பல சந்தர்ப்பங்கள் உண்டு. கூடும் உறவே கூட்டுறவு என்று ஒன்றாய் வாழவேண்டும். கூடிய பின்பு குற்றம் காணும் கொள்கையை விட வேண்டும் என்ற வாக்குக்கு அமைய கூட்டுறவு முறைமைக்குள் சகல மக்களையும் இணைத்து செயற்படுத்த அங்கத்துவத் தொடர்புகள் ஏற்படுத்தி கூட்டுறவு அங்கத்துவ கல்விப்பயிற்சி கொள்கை விளக்கங்களை தேவைக்கேற்ப செயற்படுத்தி வேற்றுமைக் குள் ஒற்றுமைக்காணும் பொறிமுறைகளை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டார். மேலும் 1972ம் ஆண்டு கூட்டுறவு மறுசீரமைப்பின் பின் கிராம ரீதியான சிறிய சங்கங்களின் செயற்பாடுகள் ஒருமுகப்படுத்தப்பட்டு பிரதேச ரீதியான ஆரம்ப சங்கங்களை உருவாக்கி பதிவுபெற்று அத்தாய்ச் சங்கத்தின் கிளைகளைக் கிராமிய ரீதியான சங்கங்கள் இணைக்கப்பட்டதுடன் பழைய பண்டகசாலை கூட்டுறவு முறைமை மாற்றப்பட்டு பல நோக்கு கூட்டுறவுச்சங்க முறைமை சட்ட ரீதியாக நடைமுறைக்கு வரலாயிற்று. அப்போது நிர்வாக அலகுகள் யாவும் ஆரம்ப சங்கத்தில் இருந்து கிளைச் சங்கங்களை நிர்வகிக்கும் முறைமை ஏற்படுத்தப்பட்டது. அதன் விளைவாக தென்.யாழ் பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் என்ற முகவர் அமைப்பு பதவியிழந்ததுடன் கரைச்சிதெற்கு மற்றும் கரைச்சிவடக்கு, பூநகரி, பச்சிலைப்பள்ளி என்ற பிராந்திய அமைப்புக்களின் பெயருடன் பலநோக்கு கூட்டுறவுச்சங்கங்கள் நடை முறைக்கு வந்தன. இச் செயற்பாட்டினால் கரைச்சிதெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் பாரிய அளவிலான செயற்பாடு எல்லைப் பரப்பை உள்ளடக்கிய பகுதியாக மாறியது. கிழக்கே கல்மடு, இராமநாதபுரத்தையும், மேற்கே குஞ்சுப்பரந்தனையும்,வன்னேரி யையும், தெற்கே கோட்டைகட்டியகுளம், முறிகண்டியையும் கொண்ட பாரிய பரப்பள வைக் கொண்ட சங்கமாக 47 கிளைகளைக் கொண்ட அமைப்பாக மாறியது. அப்பொழுது கரைச்சிதெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் பதவிக்கான ஆரம்ப அங்கத்தவராக திருவாளர் நாகலிங்கம் ஐயா அவர்கள் செயற்பட்டு பதிவு விண்ணப்பத்திலும் ஒப்பமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. முதலாவது இயக்குனர்சபையில் இயக்குனர் சபை உறுப்பினராகவும் காலப்போக்கில் பல தடவைகள் தலைவராகவும் சேவையாற்றி யுள்ளார். அவரது சேவைக்காலத்தில் சாதி, சமூக, சமய, பிரதேச அரசியல் வேறுபாடுகள் தலைதூக்கவிடாது நடைமுறைச்சாத்தி யமானதும் நேர்மையானதுமான நிர்வாக இயந்திரத்தை நடைமுறைப்படுத்தி வெற்றி கண்டனர்.

தனது நிர்வாகக் காலத்தில் தவறுகள் மோசடிகள், முறைகேடுகள் என்பவற்றிற்கு உடன் நடவடிக்கை எடுப்பதில் தயங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதில்லை. குறிப்பாக பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிளைகளில் சோர்வுகள் ஏற்படுத்தும் தரப்பினர் திருந்தி வாழும் பொறிமுறையை ஏற்படுத்தி சங்கச் செயற்பாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்திய முதலாவது தலைவர் என்பதை யாரும் மறுக்கமுடியாது- சோர்வுகள் ஏன் எவ்வாறு ஏற்படுகின்றன.

இதில் யார் பொறுப்பானவர்கள் இவற்றில் வற்றல், வழுக்கல், செத்தல், சிதறல், எலி, கறையான் என்ற போலிச்சாட்டுகளுக்கு சாட்டை அடி கொடுத்து சீரான முறையில் மக்களுக்கு உரிய சேவையை கிளைகள் மூலம் ஆற்றுவதை கவனமாக இருந்து செயற்பட்டவர். இப்போலி குற்றச்சாட்டுகளை மறுத்தலித்து தானே பொறுப்பெடுத்து நுகர்ச்சிக்கிளையை பரீட்சாத்தமாக நடாத்தி வெற்றி கண்டு நேர்மையை நிலை நாட்டியதுடன் கூட்டுறவில் திருடர்களை திருத்தியவர் என்ற பெருமையும் அவரைச்சார்ந்ததே. எது எவ்வாறு இருப்பினும் சுயநலவாதிகள், மோசடிகாரர்கள் பதவி மோகம் கொண்டோர் சங்க நிர்வாகத்தை தமது தேவைப்பயன்பாட்டிற்கு திசை திருப்ப எத்தணிப்போருக்கும் தேவையான இடத்தில் சரியான சந்தர்ப்பத்தில் உரிய முறையில் 'போற்றுவோர் போற்றட்டும் தூற்றுவோர் தூற்றட்டும்' அவரோடு இருக்கட்டும் என்ற வகையில் தனக்கு எது சரியெனப் படுகின்றதோ அதை தனியாக நின்றும் கூட சாதித்த பல சந்தர்ப்பங்களும் அவரது வாழ்வில் உண்டு. காந்தியடிகள் கூறிய வாக்குப் போன்று "கூட்டுறவு என்ற ஆலயத்திற்குள் நுழையும் போது அரசியல் என்ற செருப்பை கழற்றிவிட்டு வாருங்கள்" என்றாற் போன்று அவரது நிர்வாகத்தில் அரசியல் ஆதிக்கம் எடுபடவில்லை. அவர்களின் நிர்வாகத்தில் அரசியல் வாதிகள் அடங்கிப்போனார்கள் அல்லது ஆற்றுப்படுத்தப் பட்டார்கள் என்பதே ஆகும்.

திரு. நாகலிங்கம் அவர்களது புத்திக்கூர்மையாலும் அனுபவத்தாலும் முயற்சியாலும் கூட்டுறவு அமைப்பில் உள்ள நெளிவுசுளிவுகள் ஓட்டை ஒழிவுகள் சாதாரண அங்கத்தவர் தொட்டுபணியாளர், இயக்குனர் என்பவரது நடத்தைகள் பலம் பலவீனங்களை முற்றாக அறிந்தவராக இருந்ததுடன் இலங்கையில் கூட்டுறவு அமைப்பில் கூட்டுறவு சட்டத்தின் வலு எவ்வளவு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அங்கத்தவரின் ஜனநாயக முறைமை சம்பந்தமான சாதக பாதக நன்மைகளை உரிய துறையினருக்கு உரிய வகையில் தெரியப்படுத்த தயங்கியது கிடையாது.

கூட்டுறவுச் சங்கத்தின் உரிமையாளர் அங்கத்தவரே என்ற கூட்டுறவு கொள்கைக்கு அமைய தனது நிர்வாக காலத்தில் அங்கத்தவராக இயக்குனர் சபை, பொதுச்சபை என்பனவற்றிற்கு பொறுப்புக்கூறும் பொறுப்பு தன்னிடமே உள்ளது என்ற கட்டுப்பாடுகளுக்கு அமைய நேரகாலம் பாராது ஓய்வொளிச்சலோ, சிரமமோ பாராது சங்கத்தின் எல்லா கிளைகளையும் நேரடியாகச் சென்று அடிக்கடி கண்காணித்து வரும் நடைமுறை அவரிடம் இருந்தது. எல்லா நிர்வாக கூட்டமைப்பும் இருந்தும் ஊற்றுவான் ஊற்றினால்தான் காய்க்காத மரமும் காய்க்கும் என்ற வாக்குக்கமைய ஆண்மையிலும் அறிக்கை வலுவானது என்றார் போன்று சகல கிளைகளுக்கும் சென்று நட்பு ரீதியாக பணியாளர்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணுகி ஒரு தரச்சுற்று நடவடிக்கையை மேற்கொள்வார். நேரடியாக அறிவதுடன் பணித்தொகுதியிடம் நேரடியாக சாதக பாதக தகவல்களை பெற்று நடைமுறைப்படுத்தும் தந்திரோபாய முகாமைமுறை அவருக்கு கைவந்த கலையாக அமையப்பெற்றது. இவர் கிளைகளுக்குச் செல்லும் போது ஒரு சிறிய சிவப்பு நிற துவிச்சக்கரவண்டி வெள்ளை உடை மிக கம்பிரமான ஓட்டம், உருத்திரபுரத் திலிருந்து அம்பலபெருமாள்குளம் கிளையில் காலை 8.30 க்கு சங்கக் கிளை வாசலில் நிற்கும் பல சந்தர்ப்பங்களை அவரது நிர்வாகத் தில் பணிபுரிந்த பணித்தொகுதிகளுக்கு நன்கு தெரியும்.

திருவாளர் நாகலிங்கம் ஐயா அவர்கள் கூட்டுறவில் பல பணியாளர்களை பல அங்கத்தவர்களை, பல இயக்குனர்களை, உறுப்பினர்களை நல்வழிப்படுத்தி நல்லவர் களாக வாழ வழி வகுத்துக் கொடுத்துள்ளமை மறக்கமுடியாத நிகழ்வுகள் ஆகும்.

தனது நிர்வாகத்திறனாலும், அறிவின் முதிர்ச்சியாளும் சங்க நடவடிக்கைகளின் பணித்தொகுதிகளோ அல்லது வேறு சில பிற சக்திகளாலோ நிர்வாகத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் பட்சத்தில் இம்மியளவுகூட கலக்கமோ, உணர்ச்சிவசப்படுவதோ, ஆரவாரப்படுவதோ கிடையாது. மிகவும் அமைதியாகவும் அவதானமாகவும் ஆழமாக வும் ஆய்வு செய்து மிகத் துல்லியமாக விலக்கல்களையும் முரண்பாடுகளையும் அதன் காரணிகளையும் கண்டறிந்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஓர் செயல் வீரராவார். இவர் தலைமை ஆசிரியராக மிகத் தூரமான மாகாணங்களில் கடமையாற்றினாலும் நிர்வாக ரீதியான சங்கத்தின் உரிய நிகழ்வுகளுக்குரிய காலத்திற்கு முன்பே சமூகமளிக்கும் பண்புடை யவராவார்.

பனையின் மேல் வற்றிய ஓலை சலசலக்கும் எஞ்ஞான்றும் பச்சோலை இல்லை ஒலி என்பது போல வாய்த்தர்க் கமோ சலசலப்போ அற்றவர் என்பதுடன் வள்ளுவர்வாக்கிற்கமைய

"சொல்லுக சொல்லை பிறிதோர் சொல். அச்சொல்லை
வெல்லும் சொல்லிண்மை அறிந்து"

என்றாப்போல சந்தர்ப்பம் சூழ்நிலையை கருத்தில்கொண்டு இரத்தினச்சுருக்கமாக வார்த்தைகளை அளந்து பேசும் ஆற்றல் மிக்கவராகவும் இவர் தனது கூட்டுறவு சேவையில் எல்லோரும் இன்புற்றிருக்க வழி கண்ட ஓர் சிறந்த கூட்டுறவாளர் திரு.நாகலிங்கம் ஐயா அவர்கள் தனது நிர்வாக காலத்தில் பல தடவைகள் மாவட்ட கூட்டுறவு 2ம் படி அமைப்புக்களாக மாவட்ட கூட்டுறவு மற்றும் கிளி/ மாவட்ட/ சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திலும் காலத்துக்குக் காலம் தலைமை வகித்தும் நிர்வாக உறுப்பினராகவும் செயற்பட்டு 2ம் படி அமைப்புக்களையும் அபிவிருத்தி செய்துள்ளார்.

– சு. கணபதிப்பிள்ளை –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி பகிர்கின்றோம்

பன்முக வியாபன் திரு.கார்த்திகேசு நாகலிங்கம் அதிபர் அவர்களை வாழும்போது வாழ்த்துதல் நிகழ்வின் மூலம் வாழ்த்துவதற்காக வந்திருக்கின்ற அன்புள்ளம் கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவிப்பதில் பெருமை அடைகின்றோம்.

வாழும் போதே வாழ்த்தும் மலருக்கு ஆசிச்செய்திகள், வாழ்த்துச் செய்திகள், ஆக்கங்களை அளித்துதவிய பெருந்தகைகளே அனை வருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதில் உவகை அடைகின்றோம்.

இவ்விழாவினைச் சிறப்புற நடாத்தத் திட்டமிட்டு குறுகிய நாட்களினுள் சிறப்பாகச் செய்து முடித்திருக்கும் உருத்திரபுரம் அபிவிருத்திக் கழக உறுப்பினர்களுக்கும் , பூரண ஆதரவு தந்து ஒத்துழைத்த உருத்திரபுரம் வாழ் மக்களுக்கும் எமது சிரந்தாழ்ந்த வணக்கங்கள் உரியன.

விழாவை நடாத்த தேவையான நிதியின் பெரும் பகுதியை எமக்கு தந்துதவிய டாக்டர் த.சத்தியமூர்த்தி அவர்களுக்கும் சிறுதுளி பெருவெள்ளமாக தேவையான நிதியை தந்துதவிய இப்பகுதிவாழ் பொதுமக்களுக்கும், திரு.கா.நாகலிங்கம் அதிபர் அவர்களின் மாணவர்களுக்கும் எம் சிரந் தாழ்ந்த நன்றிகள் உரியன.

அத்தோடு குறுகிய காலத்தில் இம் மலரினை அழகாக அச்சிட்டுத் தந்துதவிய வேழன் அச்சக முகாமைக்கும், பணியாற்றும் அனைவருக் கும் எம் மேலான நன்றிகள் உரியன. தம்மாலான உதவிகளை நல்கி யோரில் யாராவது நன்றி தெரிவிக்க தவறவிட்டிருப் பின் யாவர்க்கும் கரம்கூப்பி நன்றி தெரிவித்து நிறைவுசெய்கின்றோம்.


நன்றி

உருத்திரபுரம் அபிவிருத்திக் கழகமும்,
மலர்க்குழுவினரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org